IIIT

# இறைதூதர் காலத்து மதீன சமூகம்

## அதன் தன்மைகளும் அமைப்பும்

பாகம் 01



கலாநிதி அக்ரம் ளியா அல்-உமரீ

# இறைதூதர் காலத்து மதீன சமூகம்

பாகம் 1

அதன் தன்மைகளும் அமைப்பும்

**கலாநிதி அக்ரம் ளியா அல்-உமரீ**

# IRAI THOOTHAR KAALATHTHU MATHEENA SAMUGAM

VOL 1

ATHAN THANMAIKALUM AMAIPPUM

Tamil translation of
Madinan Society at the Time of the Prophet
Part 1
Its Characteristics and Organization
by
Dr. Akram Diyã' al 'Umari

Originally published by
The International Institute of Islamic Thought
555 Grove Street
Herndon, Virginia 22070-4705, U.S.A.

ISBN 978-955-8398-55-5

TReprint (2018) by
*Fuzin Texts*
23/3, Market Road, Dharga Town - 12090, Sri Lanka
Printed by: Millennium Graphics, Maharagama
Tamil © Abd-al-Jabbar Muhammad Zaneer (2008)

# இறைதூதர் காலத்து மதீன சமூகம்

*பாகம் 1*

*அதன் தன்மைகளும் அமைப்பும்*

*கலாநிதி அக்ரம் ளியா அல்-உமரீ*

*அரபு மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியீடு*
*இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்*
*555 குரோவ் வீதி, ஹர்ன்டன், வர்ஜீனியா 22070-4705*
*ஐக்கிய அமெரிக்கா*

*மீள் பதிப்பு (2018)*
*Fuzin Texts*
*23/3, மார்கட் வீதி, தர்கா நகர் - 12090, ஸ்ரீ லங்கா*
*அச்சிட்டோர்: மில்லேனியம் க்ராபிக்ஸ், மஹரகம*
*தமிழாக்கமும் பதிப்புரிமையும்: அப்த்-அல்-ஜப்பார் முஹம்மத் ஸனீர் (2008)*

# பொருளடக்கம்


பதிப்புரை ........ i

முன்னுரை - கலாநிதி அக்ரம் அல் உமரீ ........ iii

அறிமுகம் - கலாநிதி காலித் யஹ்யா ப்ளௌன்கின்ஷிப் v

இஸ்லாமிய ஆரம்பகால வரலாற்றினை எழுதுவதற்கான முறைமை குறித்த ஓர் அறிமுகம் ........ xvii

அத்தியாயம் I - வரலாற்றில் இஸ்லாமிய அணுகு முறையின் பொது அம்சங்கள் ........ 1

அத்தியாயம் II ஹதீஸ் வல்லுனர்களது விதி முறைகளைப் பிரயோகிப்பதில் நெகிழ்வுத் தன்மையின் அவசியம் ........ 25

அத்தியாயம் III - இறைதூதர் காலத்து மதீன சமூகம் ஹிஜ்ராவின் முன்னைய மதீன சமூகம் ........ 57

அத்தியாயம் IV - மதீன சமூகத்தில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கம் ........ 65

அத்தியாயம் V - ஹிஜ்ராவும் மதீன சமூக அமைப்பில் அதன் தாக்கமும் ........ 71

அத்தியாயம் VI - நபிகள் (ஸல்) அவர்கள் காலத்தின் முஆகா முறை ........ 81

அத்தியாயம் VII - விசுவாசமே மானிட பிணைப்பின் அடிப்படை ........ 95

அத்தியாயம் VIII - அன்பே மதீன சமூகத்தின் அத்திவாரம் ........ 101

அத்தியாயம் IX - செல்வந்தரும் வறியோரும் சமானமாக ஒன்றுபட்டு உழைத்தல் ........ 107

அத்தியாயம் X - மதீன சாசனம் பிரகடனமாதல் ........ 127

அத்தியாயம் XI - யூதர்கள் ஒப்பந்தத்தை முறித்தலும் மதீனாவிலிருந்து வெளியேற்றப்படலும் ........ 167

அத்தியாயம் XII - கைபரும், ஹிஜாஸில் எஞ்சியிருந்த யூத தலங்களும் கைப்பற்றப்பட்டமை ........ 193

## பதிப்புரை

பேராசிரியர் அக்ரம் ளியா அல்-தீன் அல்-உமரீ அவர்களின் இறை தூதர் காலத்து மதீன சமூகம் பாகம் I - அதன் தன்மைகளும் அமைப்பும் எனும் நூலை வாசகர்கள் முன் வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். அறபு மூலத்தில் المجتمع المدني في عهد النبوة எனும் தலைப்பில் இரண்டு பாகங் களாக வெளிவந்தது மூல நூல்.

மூல நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் ஏராளமான அரபு மூல ஆதார நூல்களை அடிக்குறிப்புகளாகக் காட்டிச் செல்வார் பேராசிரியர் அல்-உமரீ. அவற்றைத் தமிழ்ப் பதிப்பில் நாம் தவிர்த்துள்ளோம். இந்த நூலில் பொதிந்துள்ள விடயங்கள் குறித்து மேலும் விவரங்கள் திரட்டிக் கொள்ள விழைவோர் அரபு மூல நூலைக் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். அண்மையில் வெளிவந்துள்ள பேராசிரியரின் السيرة النبوية الصحيحة நூலினுள் முன்னைய நூலின் இரண்டு பாகங்களும் அடங்கியுள்ளன.

அரபு மொழியில் வழங்கும் பெயர்கள் தமிழ் உச்சரிப்பின் போது சிதைந்து போய் விடாதிருக்கவென அவற்றை இயன் றளவு அரபு மூலத்திலேயே அடிக்குறிப்புகளாகத் தந்துள் ளோம். அரபு மொழி வாசகங்களைக் கணணிப் பதிவு செய்து தந்தவர், அஷ்ஷெய்க் எஸ். ஏ. புஹாரி (தோப்பூர்). அச்சுக்காக இந்த நூலைக் கணணிப் பதிவும், செப்பமும் செய்து தந்தவர் ஹாபிஸ் இஸ்ஸதீன். இருவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகள்.

பத்து வருட கால இடைவெளியின் பின், பலரது வேண்டு கோளுக்கிணங்க இதன் மீள் பதிப்பு வெளியாகின்றது.

எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய வல்ல அல்லாஹ் அருள் பாலிப்பானாக.

டிசம்பர் 2018

**Fuzin Texts**

## முன்னுரை
## கலாநிதி அக்ரம் ளியா அல்-உமரீ

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவன் ஒருவனே புகழனைத்துக்கும் உரியவன். அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தார், தோழர்கள், இறுதிநாள் வரை அன்னாரின் தூதினை நிலைநிறுத்த முனைவோர் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் ஏற்படுவதாக.

இந்த ஆக்கத்தின் பணியில் நீண்ட காலங்களை நான் கழித்திருக்கின்றேன். இதனைச் செப்பனிடும் பணியிலும், கூடிய காலங்கள் கழிந்துள்ளன. வரலாற்று அறிவிப்புகள் மீது, ஹதீஸ் வல்லுனர்களினது திறனாய்வு முறைகளைப் பிரயோகம் செய்து காண்பதே எனது முனைவு. அல்லாஹ்வின் அருளால் அந்த முயற்சி பயன் அளிப்பதாயுள்ளது. எவ்வாறாயினும் ஸீறா அல்-நபவிய்யாவின் அனைத்து அங்கங்களையும், நேர் வழியைத் தேர்ந்து கொண்ட கலீபாக்களின் காலங்களையும் இதே அணுகு முறையைப் பிரயோகம் செய்து காண வேண்டியது அவசியம். முழுநேர, நீண்டகால உழைப்பினை அவாவி நிற்பது அத்தகு முயற்சி. இது விரைவில் நனவாக வேண்டும் என்பது எனது அவா.

இஸ்லாமிய வரலாற்று ஆய்வாளர்களும், மாணவர்களும் இந்த ஆக்கத்தை நன்கு கற்க வேண்டும். நுணுக்கமான பரிசீலனைகளில் ஈடுபட வேண்டும். தங்களது ஆலோசனைகளை எமக்கு வழங்க வேண்டும். அவர்களது கருத்துக்களுக்கு நாம் நன்றிக் கடன் கொண்டோராயிருப்போம்.

இப்போதுதான் நாம் வரலாற்று விவரணங்கள் மீது ஹதீஸ் வல்லுனர்களின் முறைமைகளைப் பிரயோகம் செய்துகாணும் ஆரம்பப் பாதவடிகளை வைத்துள்ளோம். மிகவும் கடினமான ஒரு முயற்சி இது. இதற்கு ஹதீஸ் சொற்பிரயோகங்கள் குறித்த துல்லியமான விளக்கம் இருக்க வேண்டும். மேலும், வரலாற்று அறிவிப்புகளை நன்கு விளங்கி, நெகிழ்ச்சி தேவையான

தருணங்கள் குறித்த தெளிவினைக் கொண்டிருக்க வேண்டும்.

ஹதீஸ், அல்-மகாஸீ, ஸீறா ஆகிய துறைகளிலான நூல் களில் காணப்படும் வரலாற்று விவரணங்கள், அறிவிப்புகள் குறித்து முதுமானி, கலாநிதிப்பட்டங்களை ஆசித்துச் செய்யப் பட்டு வரும் ஏராளமான ஆய்வுகளுக்கான ஆலோசனைகளை வழங்கி அவற்றை மேற்பார்வை செய்யும் பணியில் நான் ஈடு பட்டு வந்துள்ளேன். இந்த ஆய்வுகள் அனைத்தினதும் ஒரே நோக்கம் நபிகள் (ஸல்) அவர்களது வாழ்வு குறித்துக் கிட்டி யுள்ள அனைத்து விடயங்களையும் பரிசீலித்துக் காண்பதாகும். சில ஆய்வுகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியன தொடர்கின்றன.

எந்த ஒரு புதிய முனைவும்,ஆய்வும் பல்வேறு பிரச்சினை களை எதிர்கொள்வது இயல்பு. அத்துணைக்கும் மத்தியில் மதீனாவின் இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் பட்டப் பின் படிப்புத் துறையில் நாம் மேற்கொண்டுள்ள இந்த ஆய்வுகள், இற்றை வரையிலான ஸீறா ஆவணப்படுத்தல் முயற்சியில் பாரியதொரு சாதனையென்றே கொள்ள வேண்டும். இந்த முயற்சிகளை மேலும் வளர்த்தெடுத்தல்அவசியம். அதன் மூலம் ஸீறாவின் பல்வேறு அங்கங்களும் பூரணமான வரலாற்று அறிவிப்புகளுடன், இஸ்லாமிய கோட்பாடுகள், நோக்கங்கள், அதன் விசேட இயல்புகள் என்பனவற்றுக்கு இயைய ஆவணப்படுத்தி எடுக்கப்பட வேண்டும்.

எண்ணங்கள் அனைத்தையும் சூழ்ந்திருப்பவன் அல்லாஹ்வே. அவனே நேர்வழி நடத்திச் செல்பவன்.

*கலாநிதி காலித் யஹ்யா ப்ளென்கின்ஷிப்*

# *அறிமுகம்*

*'இறை தூதர் காலத்து மதீன சமூகம்' எனும் இந்த நூல் இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாறு குறித்து வழங்குகின்ற பங்களிப்பு புதியது; பெறுமதி மிக்கது. இஸ்லாமிய கற்கையில் ஈடுபாடு கொண்டுள்ள மேலைத் தேய அறிஞர்களும், முஸ்லிம் உலகில் அவர்களது சகாக்களாக அமைந்தோரும் கொண் டுள்ள பல கருதுகோள்களுக்குச் சவால் விடுப்பதாகவும் இது தோற்றுகின்றது.*

*பேராசிரியர் உமரீயின் இந்த ஆக்கம் முக்கியமான ஒரு விடயத் தை எமக்குக் காட்டித் தருகின்றது. மேலை நாட்டு வரலாற்று அறிவியல் எதிர்கொண்டுள்ள பாரிய பிரச்சினையொன்று பற்றியது அது. இஸ்லாமிய வரலாற்றைக் கையாள்வதிலான முறைமைதான் அப்பெரும் பிரச்சினை.*

*மேலை நாட்டு வரலாற்றுப் பாரம்பர்யங்கள் மெய்ப்பொருள் ஆய்வின் உயரிய தரங்களைப் பிரயோகம் செய்வனவாக, உண்மையின் தேட்டத்தையே நோக்கமாகக் கொண்டனவாக அமைந்துள்ளன என்றே உரிமை கோருகின்றன. என்றாலும் கூட இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாறு பற்றிய அதன் அணுகு முறையைக் காணும் போது நாம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. முதலாவதாக, ஏனைய மத பாரம்பர்யங்கள் பற்றி, குறிப்பாக யூத-கிறிஸ்தவ மதங்கள் பற்றி, ஏற்கனவே ஐரோப்பா கொண்டிருந்த ஐயங் களும் அவலங்களும் நிறைந்த கருத்துத் தடங்களிலிருந்தே இஸ்லாமும் நோக்கப் படுகின்றமை. இரண்டாவது, முஸ்லிம் களுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவி வரும் குரோத உணர்வுகள். அடுத்து, செல்வாக்கு மிக்க சில அறிஞர்களது சொந்த, தனிப்பட்ட காழ்ப்புணர்வுகள். இவை அனைத்தும் இணைந்து இஸ்லாமிய வரலாறு குறித்த மேலைத்தேய கண்ணோட்டத்தைப் பழுதுறச் செய்துவிட்டன. இதனால் மேலைத் தேயம் அல்லாத வரலாறுகள் குறித்து*

இயற்றப்பட்டுள்ள மேற்கத்திய வரலாறுகளையும் , இஸ்லா மிய வரலாறு குறித்து மேலைத் தேயம் கொண்டுள்ள உணர்வு களையும் ஒப்பீடு செய்து காணும் ஒருவர், இரண்டனுக்கும் இடையில் பாரிய இடைவெளிகளும் தர வேறுபாடுகளும் நிலவுவதைக் கண்டு கொள்வர்.

இதற்கும் மேலாக, மேலைத்தேய அறிஞர்கள் எதிர் கொண் டிருக்கும் சில நிர்ப்பந்தங்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள், இடையறாது ஏதேனும் புதிய ஆக்கங் களை உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டியவர்களாயுள்ளார் கள். அவை, ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ளனவற்றை விட வித்தியாசமானவையாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அவை போற்றுதலுக்கு உள்ளாகும். இத்தகு நிலைமையின் காரணமாக, இஸ்லாமிய கற்கைகளைப் பொறுத்தளவில், அறிவியல் தரங்களுக்குப் பெரும் இழுக்குக் கற்பிப்பனவாக அமைந்த, கற்பனாவாத, யதார்த்தத்துக்குப் புறம்பான ஏராளமான கருத்தோட்டங்கள் உலா வரத் தொடங்கின.

இதனால் நபிகள் (ஸல்) அவர்கள் காலத்து மதீன சமூகம் குறித்து மேலைத்தேய அறிஞர்கள் தரமான ஆக்கங்கள் எத னையும் தரவில்லை எனக் கூறுவதாக அமையாது. என்றாலும், மிகச் சிறந்த ஆக்கங்கள் கூட, ஏற்கனவே மனத்துள் பதிந்து விட்ட இரு பெரும் கருதுகோள்களின் செல்வாக்குக்கு உட் பட்டனவாகவே காணப்படுகின்றன. இவையிரண்டும் முஸ் லிம் அணுகு முறைக்கு முற்றும் முரணாக அமைந்துள்ளமை ஒரு புறமிருக்க, அறிவியல் முறைமையைப் பொறுத்தும் கூட, ஐயங்களும், பலவீனமும் பொதிந்தனவாயுள்ளன.

ஒன்று வரலாற்று நாயகர்கள் அனைவரது முனைவுகளுக்கும் லௌகிக நோக்கங்கள் கற்பிக்கப்படுகின்றமை. இது வரலாற்று யதார்த்தங்களை விட கருதுகோள் கற்பிதங்களைக் கொண்ட தாக அமைந்து விடுகின்றது. வேற்றுப் பிரதேசங்களிலும் வேற்றுக் காலங்களிலும் வாழ்ந்து வந்துள்ள மக்கள், மேலைத் தேயத்தில் காணக் கிடைக்கும் சிந்தனைகளுக்கு முற்றும்

*மாற்றமான சிந்தனைகளைக் கொண்டிருக்கலாம் என்ற நிலையை, அந்த மெய்ம்மையை இது மறுத்துரைக்கின்றது. ஆதலால், ஆரம்ப கால இஸ்லாமிய படையெடுப்புகள் (புதூஹாத்) எல்லாம் யுத்தப் பொருட்களைக் கைப்பற்றிக் கொள்ளும் அவாவினால் உந்தப்பட்டனவே என்றுதான் காட்டப்படுகின்றது. நிச்சயமாகக் குர்ஆன் கூறுவது போல, யுத்தப் பொருட்களை ஈட்டிக் கொள்வதும் யுத்தத்தில் பங்கு கொண்டோரின் ஒரு நோக்கமாக இருந்திருப்பினும் கூட, அதுதான் பிரதான நோக்கம் எனக் கற்பிதம் செய்து காட்ட முனைவது, இஸ்லாத்தின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளாது விடுவதாகும்: "அல்லாஹ்வுடைய மார்க்கம் உறுதியாக நிலைபெறச் செய்வது" (2:193, 8:39) என்பதுவே அது. மிக்க வறுமைப்பட்ட, யுத்தப் பொருட்கள் ஏதும் கிட்ட முடியாத, ஸாபூலிஸ்தான் முதலாய மலைப்பாங்கான பிரதேசங்களுக்கு படையின் மேல் படைகள் என அனுப்பிய இஸ்லாமிய உமையா கலீபாக்கள் கால முனைவுகளில், லௌகிக லாபங்கள் குறித்த எதிர்பார்ப் புகள் ஏதும் இல்லாமையே மிக்க நேர்மையான உள்ளத் தோராக ஆரம்ப கால முஸ்லிம்கள், அல்லாஹ்வின் பாதையை நிலை நிறுத்தும் நோக்கினராக முன் சென்றமையைக் கண்டு கொள்ள முடிகின்றது.*

*இரண்டாவது கருதுகோள், மேலைத்தேய அறிஞர்களுக்கும், முஸ்லிம் நிலைப்பாட்டுக்கும் இடையிலான வேறுபாட்டில் முன்னதைவிட முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் நோக்கங்கள் பற்றிய ஊகங்கள் அல்ல அது; வரலாற்று நிகழ்வுகள் குறித்த மூலாதாரங்கள் பற்றியது. இந்த முரண்பாடு இரண்டு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. ஒன்று ஹதீஸின் அதிகார பூர்வ தன்மை; அடுத்தது, வரலாற்று மூலாதாரம் என்ற அடிப்படையில் அதன் ஏற்புடைமை. நபிகள் (ஸல்) அவர்களின் மதீன காலத்தைப் பொறுத்து இது மிக்க முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் ஹதீஸின் பாரிய அளவினவானவை மதீன காலத்தனவாகவே அமைந்துள்ளன.*

பின்னைய காலத்திலேயே சேகரம் செய்து பதியப்பட்டமை, வாய் வழியாகவே நீண்ட காலம் வழங்கி வந்தமை என்பன காரணமாக மேலை நாட்டு ஆய்வாளர்கள், பின்னைய காலங்களில் ஆன ஒரு கற்பிதத் தொகுப்பே இது எனக் கொண்டு ஹதீஸ் தொகுப்புகளை நிராகரித்து விடலானார்கள். அதனால், மத்திய காலங்களில் வெவ்வேறு ஹதீஸ்களின் மெய்ம்மைகளையும் தரங்களையும் நிர்ணயம் செய்வதற்காக ஆரம்ப முஸ்லிம் அறிஞர்கள் வகுத்திருந்த சீரிய திறனாய்வு முறைகளும் கூடநிராகரிப்புக்குள்ளாகின. நவீன காலங்களில் கிடைக்கக் கூடியனவாகவிருந்த புதிய ஆய்வு உபகரணங்கள் பண்டைய முஸ்லிம் அறிஞர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை என்பது உண்மையே. எவ்வாறாயினும், அவர்களது ஆய்வு முறைகளையும், அவற்றின் மூலம் கிட்டியுள்ள பயன்களையும் முற்று முழுவதாக நிராகரித்து விடுவதென்பது முறைகேடான வொரு செயலாகும். அவர்களது ஆய்வுகளின் பயனாக லட்சக் கணக்கான ஹதீஸ் அறிவிப்புகள் புடைத்துப் பதர் நீக்கி எடுக்கப்பட்டன. இறுதியில் ஏற்புக்குரியனவாக - ஸஹீஹ் ஆனவையாகக் கொள்ளப்பட்டன மிகக் குறைந்த தொகை யினவே.

மேலைத் தேசங்களில் பின்னைய காலங்களில் வளர்த்தெடுக் கப்பட்ட வரலாற்றுத் திறனாய்வு முறைகளின் அறிமுகத் துக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே முஸ்லிம் அறிஞர்கள் அவற்றைத் தமது ஹதீஸ் திறனாய்வு முறைகளில் பிரயோகம் செய்திருந்தமையைக் காண முடிகின்றது. இரு முறைமைகளும் நோக்கில் ஒன்றுபட்டனவாகவே அமைந் திருக்கின்றன: உண்மையைக் கண்டு கொள்வதே அது. தமக்குக் கிட்டக்கூடிய அறிவிப்புகளை நம்பிக்கைக்குரிய மூலங்களின் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமாயின் மட்டுமே முஸ்லிம் அறிஞர்கள் அவற்றை ஏற்புக்குரியனவாகக் கொண்டிருந்தனர். இதே கருமத்தையே மேலைத்தேய வரலாற்றுத் துறையும் ஆற்றி வருகின்றது. இதனை Herodotus, Thucydides அல்லது Tacitus அறிவிப்புகள் மீது பிரயோகமாகி வரும் ஆய்வுகளில்

நாம் கண்டு கொள்ளலாம். முஸ்லிம் அறிஞர்கள் சில தவறுகள் இழைத்துள்ளார்கள் என்பதற்காக அவர்களது முறைமைகள் ஏற்கப்படக் கூடியனவல்ல எனக் கொள்வதோ, அவற்றை இகழ்ச்சிக்குரியனவாகக் கொள்வதோ தகுமான கருமங்களல்ல. சில விடயங்களை அவதானிக்கும் போது பழம் முறைகள் எத்துணை பொருத்தமானவையாயுள்ளன எனக் காண முடிகின்றது. உதாரணமாக, J. Wellhausenஉட்பட அவரின் பின் வந்த L. Cetani, C. Brockelmann, Erling L. Petersen முதலாய பல அறிஞர்கள், ஹதீஸ் புனைந்துரைப்புகளுக்குப் பெயர் பெற்றிருந்த ஸைப் இப்ன் உமர் அல்-உஸையிதீயின் அறிவிப்புகளைமிகத் தீவிரமாகக் கண்டித்துரைப்பர். என்றாலும் அவை பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே அபூ முஹம்மத் அப்த் அல்-ரஹ்மான் இப்ன் அபீ ஹாதிம் அல்-ராஸீ (ம. ஹி327), முஹம்மத் இப்ன் ஹிப்பான் (ம. ஹி354), அபூ அப்த் அல்லாஹ் முஹம்மத் இப்ன் அஹ்மத் அல்-தஹபீ (ம.ஹி748), அஹ்மத் இப்ன் அலீ இப்ன் ஹஜர் அல்-அஸ்கலானீ (ம. ஹி852) முதலாய முஸ்லிம் அறிஞர்களது கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தமையைக் கண்டுகொள்ள முடிந்தது. ஸுன்னி சாரரின் மனங்குளிரச் செய்யும் அல்-உஸையிதீயின் அறிவிப்புகள் ஸுன்னி அறிஞர்களாலேயே தீவிரமாகக் கண்டிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸஹீஹ் ஹதீஸ் கிரந்தங்களாக அமைந்த ஆறு தொகுப்புகளிலும், குறிப்பாக புஹாரி, முஸ்லிம் தொகுப்புகளில் முஸ்லிம்கள் கொண்டுள்ள உறுதி வெளிப்படையானது. இது ஒரு புறம் இருக்க, நபிகள் (ஸல்) அவர்களது வாழ்வு குறித்து கிட்டக் கூடிய வரலாற்று ஆக்கங்கள், அத்தொகுப்புகள் போலவே பழமையானவையாக, சில போது அவற்றை விடவும் பழமையானவையாக அமைந்துள்ளமையை நாம் காணலாம். முக்கியத் துவம் வாய்ந்தனவான ஐந்து வரலாற்று நூல்களும் அற்றின் கால வரன் முறையின் படி வருமாறு: அல்-வாகிதீ (ம. 207/823); இப்ன் ஹிஷாம் (ம. 218/834); இப்ன் ஸஅத் (ம.230/845); அல்-பலதூரி (ம.279/892); அல்-தபரீ (ம. 311/923). இந்த வரலாற்று ஆக்கங்கள் இயற்றப்பட்டமையின் சம காலத்

தனவே அல்-புஹாரீ (ம. 256/870), முஸ்லிம் (ம. 261/875) ஆகியோரின் தொகுப்புகள். இவற்றிற்கும் முந்தியன மாலிக் (ம. 179/794), இப்ன் ஹன்பல் (ம. 241/855) ஆகியோரின் தொகுப்புகள்.

ஆக நம் மத்தியில் இரு வகை ஆதாரங்கள் இருக்கின்றன. ஒன்று, வரலாற்று ஆக்கங்கள். மற்றது ஹதீஸ் தொகுப்புகள். பின்னையன ஒரே அறிவுத் துறையைச் சார்ந்த அறிஞர்களால் தொகுக் கப்பட்டன; ஆதலால் அவை கோட்பாட்டு வெளிப் பாட்டுக்குச் சார்பானவை எனக் காரணங் கற்பித்து மூலா தாரங்கள் என்ற வகையில் முன்னையதுக்குச் சார்பாக நாம் ஏதும் பகுப்புகள் செய்து கொள்ளலாமா என்பது ஐயத்துக் கிடமான ஒரு விடயமாகவே உள்ளது. மாறாக, அறிவிப்பாளர் வரிசைகள் பற்றிய பரிசீலனைகள் மூலம் வரலாற்று விவரணங் களது தகைமைகளின் தரங்களைக் காட்டித் தர முனைகின்றன ஹதீஸ் கிரந்தங்கள். இதனால் தவறுகள் முற்று முழுதாகக் களையப் பெற்று விட்டன என நாம் கூறிவிட இயலாதாயினும் கூட, வரலாற்று மூலங்கள் என்ற வகையில், நிச்சயமாக அவை கவனத்தில் கொள்ளப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட வேண் டியனவாக அமைந்து விடுகின்றன. உண்மையில், திறமான, பூரணமான இஸ்னாத்-அறிவிப்பாளர் வரிசைகளுடனான அறிவிப்புகளைப் பரிசீலிப்பது பொருத்தமே. ஏனெனில், மூலங்கள் பற்றிய பரிசீலனைக்கு இவை மிக இலகுவாக உட்படுத்தப்படக் கூடியன.

இந்த ஆக்கத்தின் மூலம் பேராசிரியர் அல்-உமரீ, வரலாற்று மூலம் என்ற தரத்தில் ஹதீஸ்களுக்கு உரியதோர் இடத்தை நிறுவுகின்றார். அதன் மூலம் நபிகள் (ஸல்) அவர்களது காலம் பற்றிய கற்கைக்குப் புதியதொரு பரிமாணத்தை அவர் கொடுத்திருப்பதைக் காண உள்ளத்தில் மகிழ்ச்சி ததும்பு கின்றது. மத்திய கால முஸ்லிம்கள் செய்து வந்தது போல அல்-உமரீ ஒவ்வோர் அறிவிப்பினதும் தகைமையை அதனதன் அறிவிப்பாளர் வரிசைகளது தரத்தின் பரிசீலனையுடன் நிறுவிச் செல்கின்றார். இதனை முதலில் புஹாரீ, முஸ்லிம்

முதலாய, ஸஹீஹ் எனக் கொள்ளப் பெற்றிருந்த ஆதார பூர்வ தொகுப்புகள் மீது சார்ந்து இருப்பதன் மூலம் சாதிக்கின்றார் அவர். ஸஹீஹ் அல்-புஹாரீயின் ஏராளமான அறிவிப்புகள், குறிப்பாக அல்-மகாஸீ பற்றியன, வரலாற்று அறிவிப்புகளாக அமைந்திருக்கின்றன. இதற்கும் மேலாக அல்-உமரீ மேலும் பல ஹதீஸ் தொகுப்புகளையும், வரலாற்று ஆவணங்களையும் கலந்து கொள்கின்றார். அறிவிப்புகளின் தகைமைகளது பரிசீலனைக்காக அறிவிப்பாளர்களது தரங்கள் பரிசீல னைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதற்காக மத்திய கால ரிஜால் நூல்களைக் கலந்து கொள்கின்றார். ரிஜால் நூல் களிலான அவரது அவதானிப்புகள் இந்த ஆக்கத்தில் பரவ லாகக் காணப்படுகின்றன. இவை மூலம், நிகழ்வுகள் குறித்துக் கிட்டும் விவரணங்களுள், மிக்க ஏற்புக்குரியவற்றை நிறுவ முனைகின்றார் அல்-உமரீ.

மதிப்புக்குரிய பேராசிரியரின் இஸ்லாமிய வரலாற்றியல் அடிப்படையில் முஹம்மத் (ஸல்) அவர்களது காலத்து மதீன சமூகம் என்ற ஆக்கம் இரண்டு பாகங்களிலான, இரண்டு நூல்களாக அமைந்துள்ளது. முதலாவது நூல் ‘அதன் தன்மை களும் அமைவும்’ என்ற துணைத் தலைப்புடன் வெளியாகி யுள்ளது. இது பல்வேறுபட்ட விஷயங்களை, ஒழுங்குற அமைக்கப்பட்ட பல அத்தியாயங்களுள் அமைத்துத் தருகின் றது. ஆரம்ப இரு அத்தியாயாங்களும் ஸீறா, ஹதீஸ் என்பன மீது பிரயோகம் செய்யப்படக் கூடிய வரலாற்று முறைகளை விவரிக்கின்றன. ஹதீஸ் திறனாய்வு முறைகளை வரலாற்று ஆக்கங்கள் மீது பிரயோகம் செய்து கண்டாலும் கூட, இந்தக் கோட்பாடுகளை வரலாற்று விவரணங்கள் மீது பிரயோகம் செய்வதில் நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுவதன் அவசியத்தையும் அங்கீகாரம் செய்வார் அல்-உமரீ. ஏனென்றால், வரலாற்றின் பிரதான நிகழ்வுகளை யேனும் புனர்நிர்மாணம் செய்து காண, ஸஹீஹ், ஹஸன் ஹதீஸ் மாத்திரமே போதுமானவையாக இல்லாதிருப்பது தான். ஆக, அவரது கருத்தில், பலவீனமான அறிவிப்புகள்

மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், அவை, சட்டவியல், ஒழுக்க நெறிகள் பற்றிய விடயங்களுக்காக மேற்கோள் காட்டப்படக் கூடாது. அவற்றிற்கு ஏற்புடையன, ஸஹீஹ், ஹஸன் ஹதீஸ்களே.

ஆதார பூர்வ அறிவிப்புகள் போதியளவு கிட்டாமை, பலவீனமான அறிவிப்புகளிடையே காணப்படும் முரண்பாடு கள் என்பன காரணமாக ஸீறாவின் சில நிகழ்வுகள் குறித்து கருத்து ஒருமைப்பாடுகள் ஈட்டிக் கொள்வது சிரமமாக இருக் கும். இத்தகு கட்டங்களது உரையாடல்களின் போது தான் அல்-உமரீயின் அறிவு நுணுக்கம் பிரகாசிக்கின்றது. அதன் போது, பல தரப்பட்ட மூலங்களிலிருந்து அவர் ஆதரவு தேடிக் கொள்கின்றார். இறுதியில், பொதுவாக அறியப்பட்டிருக்கும் நிகழ்வு குறித்த விவரங்களுக்கு முற்றும் மாற்றமான விவரங்களை முன் கொண்டு வருகின்றார் அவர். முஸ்லிம் அறிஞர்கள், எவ்வளவு துல்லியமாக, புற வய அடிப்படையில் பிரச்சினைகளை அணுகினார்கள், எத்துணை சிறந்த அறி வியல் தரங்களை ஈட்டிக் கொண்டிருந்தார்கள் எனக் காட்டித் தருகின்றார்.

இதன் மத்திய அத்தியாயங்கள் ( III முதல் X வரை) மதீனாவின் ஆரம்ப முஸ்லிம் வாழ்வமைப்பின் பல்வேறு அங்கங்களையும் பரிசீலிக்கின்றன; சில சிறப்பான, முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தெளிவுறுத்தப்படுகின்றன. பரஸ்பர சகோதரத் துவம் (முஆகாஹ்), பள்ளி வாசலில் வாழ்ந்து வந்த வறிய முஸ்லிம்கள் (அஹ்ல் அல்-ஸுப்பாஹ்), மதீன சாசனம் என அறியப்பட்டுள்ள ஆவணம் என்பன குறிப்பிடத்தக்கன. இந்த அத்தியாயங்களில் அல்-உமரீயின் கைவண்ணம் ஒளி வீசு கின்றது.

முஆகாஹ்வின் அடிப்படை நோக்கம், மக்காவிலிருந்து புலம் பெயர்ந்து வந்தவர்களை (முஹாஜிரூன்) மதீன வாசிகளுடன் (அன்ஸார்) ஒரு பந்தத்துக்குள்ளாக்கி வைப்பதே எனக் காட்டித் தருவார் பேராசிரியர். அதன் மூலம் ஹிஜ்றாவின்

பின்னர் ஏற்படுத்தப்பட்டனவென இதுகாலவரை அறியப் பெற்றிருந்த சில பந்தங்கள் (உதாரணமாக, நபிகள் (ஸல்) அவர்களுக்கும் அலீ (ரலி) அவர்களுக்கும் இடையிலான சகோதர பந்தத்துவம் முதலியன) அவ்வாறு நிறுவப் பெற்றன வல்ல என அவர் காட்டித் தருகிறார்.

அஹ்ல் அல்-ஸுப்பாஹ் பற்றிய விடயத்தில் அபூ நயீமின் (ம. 430/1039) ஹில்யத் அல்-அவ்லியா வில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலை வைத்து, இது வரை அறியப்பட்டிராத சிலரது பெயர்களும் அதனுள் அடங்கியுள்ளமையை நிறுவு கின்றார். இதன் மூலம் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வானது பின் னைய காலத்தியதொரு கற்பிதம் எனும் கருத்துகளை முன்வைக்கும் கீழைத்தேயவியலாளர்களது அபிப்பிராயங்கள் மறுத்துரைக்கப்படுகின்றன.

மதீன சாசனம் பற்றிய தனது ஆய்வில், யூதர்களுடனும், யூதர்களல்லாதோருடனும் எனச் செய்து கொள்ளப்பட்ட இரு வேறு ஒப்பந்தங்களை மிகத் துல்லியமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார், அல்-உமரீ.

கடைசி இரண்டு (XI - XII)அத்தியாயங்களிலும் யூதர் களுடனான பிரச்சினைகளையும் மதீனாவிலிருந்து அவர்கள் இறுதியாக வெளியேற்றப்பட்டமையையும் விவரிக்கிறார் பேராசிரியர். மரபு ரீதியாக ஏற்கப்பட்டுள்ள விவரணங்களே இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. பனூ கைனுகாவின் வெளி யேற்றம், பனூ குரைளாவின் சிரச்சேதம் என்பனவற்றை மறுத் துரைக்கும் முனைவுகள் அண்மைக் காலங்களில் நிகழ்ந்து வருகின்றன. அத்தகு முனைவுகளை ஏற்காது விடுகின்றார் அல்-உமரீ.

இதன் இரண்டாம் நூல் ‘முஷ்ரிகூனுக்கு எதிரான ஜிஹாத்’ எனும் துணைத் தலைப்புடன் வெளிவந்துள்ளது. இது முழு வதும் நபிகள் (ஸல்) அவர்களின் இராணுவ நடவடிக்கைகள் (மகாஸீ) குறித்ததாக அமைந்துள்ளது. மதீன காலத்தின் அரசியல் நடவடிக்கைகள் பலவற்றையும் கூட இது உள்ளடக்

குகின்றது. இதற்குக் காரணம், ஸீறாவின் ஆரம்ப கர்த்தாக்கள் இந்த இராணுவ நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே தமது கால வரை முறைகளை அமைத்திருந்தமையாகும்.

வரலாற்று முறைமை பற்றிய சிறியதோர் அறிமுக அத்தியாயத்தில், அல்-உமரீ, மரபு ரீதியான ஹதீஸ் திறனாய்வு முறைமையையும், மேலைத்தேய முறைகளிலிருந்து வரைந்து கொள்ளப்பட்ட திறனாய்வு முறைகளையும் இணைத்துக் காணக்கூடிய ஓர் ஏற்பாட்டின் தேவை குறித்துப் பேசுகிறார்; இஸ்லாத்தில் ஜிஹாத் பற்றிய கோட்பாடு குறித்துப் பேசிய பின்னர், இராணுவ நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டுகின் றார். அவை ஒவ்வொன்று குறித்தும் கிடைத்துள்ள அறிவிப்பு களின் தகைமைகளை மதிப்பீடு செய்து ஒவ்வொன்றன் போதும் நிறுவப்பெற்ற இஸ்லாமிய சட்டம், ஒழுக்க நெறி என்பனவற்றைக் காட்டித் தருகின்றார் அல்-உமரீ. இரண்டாம் நூல் முழுக்க, அறபு கோத்திரங்களுக்கும், பைஸாந்தியருக்கும் எதிரான நபிகளாரின் நடவடிக்கைகள் குறித்து மட்டுமே பேசுகின்றது. யூதருக்கெதிரான நடவடிக்கைகள் முன்னைய நூலில் அமைந்துள்ளன.

அல்-உமரீயின் ஆக்கத்தின் வசீகரமிக்க ஓர் அம்சம், மூலாதாரங்களை அவர் பயன்படுத்திக் கொள்ளும் அழகும், பக்குவமும். அவரது நூல் நிரலிலும் குறிப்புகளிலும், நாம் ஏற்கனவே குறிப்பிட்ட, வரலாற்று நூல்களாக அமைந்த ஸீறா ஆக்கங்கள் மட்டுமன்றி ஏனைய பல ஆக்கங்களின் நிரலையும் கண்டு கொள்கின்றோம். மதீன காலத்து வரலாற்றின் மீது போதிய விளக்கம் தருவதற்காக, கிட்டும் போதெல்லாம் அவர் குர்ஆனிலிருந்து மேற்கோள்கள் காட்டுகின்றார். ஏராளமான பல ஆதார நூல்கள் தற்போது இழக்கப்பட்டுவிட்டன. என்றாலும் அவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அரிய பல விவரங்களைத் தம்முள் பொதிந்து கொண்டுள்ளன ஹதீஸ் தொகுப்புகள். இந்த விவரங்கள் மீது அல்-உமரீ கொண்டுள்ள ஆளுமை பிரமிப்பூட்டுவது. உமரீ பரவலாக மேற்கோள் காட்டும், இப்ன் ஹஜர் அல்-அஸ்கலானீயின் பாரிய கிரந்தமான

பத்ஹ் அல்-பாரியைப் பொறுத்து இது மிக்க பிரத்தியட்சம். பொருட்படுத்தப்படாது விடப்பட்டுள்ள பல வரலாற்று மூலாதார நூல்களிலிருந்தும் இவர் ஆதாரங்கள் தந்து செல் கின்றார். இப்ன் கஸீர், மிக்க ஆரம்ப காலத்து முக்கியத்துவம் வாய்ந்த கலீபா இப்ன் கையாத் (ம.240/854) ஆகியன குறிப் பிட்டுக் கூறப்பட வேண்டியன. அல்-வாகிதீயின் பலவீனங்கள் பல கட்டங்களில் எடுத்துக் காட்டப்படுகின்றன. மிக்க ஆரம்ப கிரந்த கர்த்தாக்களுள் ஒருவராக இருந்தும், அல்-வாகிதீ விடயங்களுக்குப் புறம்பான விவகாரமிக்க விவரங்களுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். வாகிதீயின் மாணவரான இப்ன் ஸஅத், தனது ஆசிரியரின் பலவீனங்களை நன்கு உணர்ந்தவராக, அவற்றிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றமையைக் காட்டித் தருகிறார் அல்-உமரீ.

வாசகர்கள் பேராசிரியர் அல்-உமரீயின் ஆக்கத்திலிருந்து பெரும் பயன்கள் ஈட்டிக் கொள்ள இயலும் என்பதில் ஐயங் கள் இல்லை. மத்திய கால முஸ்லிம் அறிஞர்கள் நம்பிக்கைக் குரியன எனக் கண்டுள்ள அறிவிப்புகள் கொண்டு துல்லிய மான ஒரு வரலாற்றினை அமைத்தக் கொடுக்க அவர் முனை கின்றார். அத்துடன் அவர்களது பரவலான, நுணுக்கமான முறைமைகள் கொண்டு எந்த அறிவிப்புகள் கூடுதல் நம்பிக் கைக்குரியன எனக் காட்டித் தருகின்றார். இவ்வாறானதோர் அணுகு முறையை இப்போதைய கால கட்டங்களில் கண்டு கொள்வது இலகுவான ஒரு கருமமல்ல. பேராசிரியரின் விவரணங்கள், அவற்றின் பொது அமைப்பில், மரபு ரீதியான ஸீறா விவரணங்களை ஒத்தனவாகவே தோன்றினாலும் கூட, அவர், பலங்குன்றிய அறிவிப்புகளை ஒதுக்கி அல்லது அவற்றை அடிக்குறிப்புகளாக அமைத்து விடுவதன் மூலம் நிகழ்வுகளை இலகுபடுத்தித் தருகின்றார். அதன் மூலம் மிக்க வலுவான, நன்கு ஆதாரப்படுத்தப்பட்ட அறிவிப்புகளையே அவர் தந்து செல்கின்றார்.

# இஸ்லாமிய ஆரம்பகால வரலாற்றினை எழுதுவதற்கான முறைமை குறித்த ஓர் அறிமுகம்.

இற்றைக்கு சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்து முஸ்லிம் அறிஞர்களது கவனத்தை ஈர்த்து வந்துள்ள முக்கிய மான விடயங்களுள் ஒன்று, இஸ்லாமிய வரலாறு. வரலாற்றின் இயக்கம், பரிமாணம் என்பன குறித்த இஸ்லாமிய கண்ணோட் டங்களுக்கு இயைந்ததாக இஸ்லாமிய வரலாறு மீள எழுதப் பட வேண்டும் என கருத்துகள் தெரிவித்தனர் அந்த அறிஞர் கள். மேலும் இஸ்லாமிய வரலாற்றுக் கற்கையானது ஹதீஸ் வல்லுனர்களது முறைமைகளின் அடிப்படையில் மேற்கொள் ளப்பட வேண்டும் என்பதும் அவர்களது எண்ணமாயிருந்தது.

சிரமங்கள் மிக்கதொரு பணி இது. இவ்வாறான பணியினை மேற்கொள்ள விழைவோர்க்கு ஆலோசனைகள் வழங்குவது கூட மிக்க சிரமமான ஒரு கருமமே. ஏனெனில் இத்தகு முனைவில் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள பிரச்சி னைகள் ஏராளம். முதலாவது பிரச்சினை காலப்பரப்பு - பதி னான்கு நூற்றாண்டு காலப் பரப்பினைக் கொண்டது இஸ் லாமிய வரலாறு. அத்தோடு இணைந்தது, அது கொண்டுள்ள புவியியல் பரப்பு. அடுத்தது மூலாதாரங்கள் சம்பந்தப்பட்டது. கிட்டும் மூலாதாரங்கள் பல்வகைப்பட்டனவாக உள்ளன. நீண்ட தொரு காலப்பரப்பினவான மூலாதாரங்கள் ஒழுங்கு படுத்தப் பெற்றிருந்த கிரமங்கள் வித்தியாசப்பட்டன; ஒவ் வொரு கால கட்டங்களில் மேலெழுந்து நின்ற விவகாரங்களும் வித்தியாசப்பட்டன. இவற்றிற்கும் மேலாக நிற்பது உண்மை யைத் தேர்ந்து கொள்வதில் உள்ள சிரமங்கள். ஏனெனில் ஆரம்ப காலத்திருந்தே அரசியல் ரீதியாக உண்மைக்குப் புறம்பான கற்பிதங்கள் தோற்றம் பெற்று விட்டன. தொடர்ந்து வந்த காலங்களில் அத்தகு கற்பிதங்கள் சமூக, பொருளாதார, அறிவியல் துறைகளுள்ளும் ஊடுருவி விட்டன. இருபதாம்

நூற்றாண்டிலோ, அடிப்படை நம்பிக்கைகள், கோட்பாடுகள், ஷரீயா துறை ஆகியனவற்றிலும் கூட, முன்னையவற்றிலும் தீவிரமான பொய்க் கற்பிதங்கள் தமது செல்வாக்கைப் பதித்து வந்தமையைக் கண்டுகொள்ள முடிந்தது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து இஸ்லாமிய வரலாற்று இயக்கத்தின் நோக்கங் கள் பற்றிய பரிமாணங்களில் பாரிய பாதிப்புகளை விளைவித் துள்ளன.

ஆக, நான் எனது முனைவுகளை இஸ்லாத்தின் மிக்க ஆரம்ப காலத்தின்னை மீள அமைத்துத் தருவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ள விழைகின்றேன். ஆரம்ப கால கட் டம் என நான் கருதுவது, ஸீறாவினதும், நேர்வழியைத் தேர்ந்து கொண்ட கலீபாக்களதும் காலம் ஆகும். முஸ்லிம் களின் நோக்கங்களை நெறிப்படுத்தியமைப்பதில் விசுவாசம் பாரிய பங்களிப்புச் செய்தது, இதன் போது தான். மேலும் இக்கால கட்டத்தில் தான் இஸ்லாத்தின் அடிப்படைப் போத னைகள் அனைத்தும் உண்மையாகவே அமுல் செய்யப்பட் டன. எமது கால சமூகங்களில் நாமெல்லாம் பிரதி செய்து காண முனைவதும், எமது இலட்சிய அமைப்பாக நாம் கொண்டிருப்பதும் இஸ்லாத்தின் ஆரம்ப கால கட்டம் ஆகும்.

எமக்கு மூல ஆதாரங்களாக விளங்குபவை, நிகழ்வுகளை அறிவிப்புச் செய்யும் முறையையே கைக் கொள்கின்றன. அந்த அறிவிப்புகள், அறிவிப்பாளர் வரிசைகளையும் பொதிந்தன வாகவே உள்ளன.

இந்த ஆக்கத்தில் வரலாற்றினை விளங்கிக் கொள்வது குறித்த இஸ்லாமிய பரிமாணத்தின் சில அம்சங்கள் விவரிக்கப்படும். பின்னர் வரலாற்று ஆய்வின் முறைமை, முஸ்தலாஹ் அல்-ஹதீஸ் கோட்பாடுகளுக்கியையக் கலந்துரையாடப்படும்.

இவற்றிற்கு முன்னமாக, இஸ்லாமிய வரலாறு, முஸ்லிம் அறிஞர்களால் எழுதப்பட வேண்டுவதன் அவசியத்தை நான் வற்புறுத்துவேன். ஏனைய சமூகங்களதும் நாடுகளதும்

வரலாறுகள், ஏனையோரின் உதவிகள் கிட்டியிருப்பினும் கூட, அவ்வவற்றைச் சார்ந்தோரால் எழுதப்பட்டுள்ளன. அது போல, எமக்காக நாமே இஸ்லாமிய வரலாற்றினை எழுதுவதன் பொறுப்பினை ஏற்க வேண்டும். எமது நாகரிகம், இலட்சியங்கள், பெறுமானங்கள் குறித்த கோட்பாடுகளுக்கு இயைய நாம் எம்மைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். வெளியாரின் பங்களிப்புகள் அதற்குக் கிட்டலாம். என்றாலும், அவற்றின் செல்வாக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். பிறரது பங்களிப்புகள் எமது வரலாற்றுக் கோட்பாட்டின் பிரதான அம்சமாக விளங்குதல் தகாது; அத்துடன் எமது பாரம்பர்யங்களை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டும் ஒரே சாதனமாக அது அமைந்து விடுதலும் கூடாது.

உண்மையில் நிகழ்ந்துள்ளது தான் என்ன? விளைந்துள்ளன அனைத்தும் எமது நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாற்றமான நிகழ்வுகளே. முஸ்லிம் உலக நாகரிகம் எந்தளவு பின் தங்கிய தாக அமைந்து விட்டதென்றால், தனது சொந்த வரலாற்றையே சரிவரக் கணிப்பீடு செய்து ஆவணப்படுத்திக் கொள்ள இயலாத பரிதாபகர நிலைக்கு அது தள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம் உலகின் வரலாற்றுக் கற்கை குறித்த கரிசனை கொண்டுள்ளோரின் பெரும்பான்மையினர் தெளிவான இரண்டு குழுவினராக அமைந்துள்ளனர். ஒரு சாரார், தமது இஸ்லாமிய பாரம்பர்யங்கள் குறித்து மனங்கசந்து போயுள்ளோர். முஸ்லிம் பிரதேசங்களில் காணக்கிட்டும், சமூக, கலாச்சார, பொருளாதார பின்னடைவுக்கெல்லாம் காரணம் அதுவே எனக் கொண்டுள்ளோர் அவர்கள். பாலஸ்தீனில், ஸயோனிஸச் சக்திகளிடம் தொடர்ந்து தோல்விகள் கண்டு வருவதற்கும் இந்தப் பாரம்பர்யங்களையே அவர்கள் காரணமாய்க் கொள்வர். இத்தகு முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள், நிகழ் காலத்தையும், கடந்த காலத்தையும் முற்று முழுதாகப் பிரித்தமைத்து விட வேண்டும் என வாதாடுவர். அவர்களது கருத்தில், எமது நவீன தலைமுறையினர், இஸ்

லாத்திலிருந்தும், தமது நாகரிக - பண்பாட்டுப் பாரம்பர் யங்கள் அனைத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டு விட வேண்டும்.

இரண்டாவது சாரார், வரலாற்றுக் கட்டுரைகள் வரைந்து கொண்டிருக்கும் வெறும் எழுத்துத் துறையினர். எவ்வித ஆக்கத்திறனும் இல்லாத கட்டுரைகளை, கீழைத்தேயவியலா ளரின் மொழி பெயர்ப்புகளையே பெரிதும் சார்ந்தவர்களாக வடிப்பவர்கள் இவர்கள். சுயமாக எந்த ஒரு பரிசீலனையையும் அவர்கள் மேற்கொள்ள மாட்டார்கள்; மூலாதாரங்களைத் தேட மாட்டார்கள்; சொந்த கருத்துகளை முன்வைக்க மாட் டார்கள்; கீழைத்தேயவியலாளர்கள் விதைக்கும் நச்சு எண்ணங் கள் முஸ்லிம் சமூகத்தினுள் ஊடுருவுவதற்குத் தமது எழுத்தாக் கங்கள் தக்கதோர் ஊடகமாக அமைவதன் தீங்குகளைக் கூட அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள்.

இவ்வாறான ஒரு நிலைமை - இஸ்லாமிய வரலாற்றினை உதா சீனம் செய்து வரும் தன்மை - மேலும் உக்கிரமடைந்து செல்வதற்கு, முஸ்லிம் உலகின் அறிவியல் இயக்கம் கொண் டுள்ள பலவீனஸ்திதி, சர்வதேச ரீதியாகப் பல்கிப் பெருகி வரும் சிந்தனைகளுக்கு ஈடுகொடுத்து நிற்க இயலாமை என்பன துணை பயந்து வருகின்றன. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத் திலிருந்து தொடர்ந்து வரும் கிழக்கு - மேற்கு கலாச்சாரச் சமமின்மையின் பிரதிபலிப்பு இது. பத்தொன்பதாம் நூற் றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங் களிலும், முஸ்லிம் அறிஞர் எவராலும் இயற்றப்பெற்ற பெறு மதி மிக்க வரலாற்று ஆக்கம் எதனையும் கண்டுகொள்ள இயலவில்லை. ஆக, இக்காலவளவில் முஸ்லிம் எழுத்தாளர் கள் முன்வைத்துள்ளன எல்லாம் கீழைத்தேயவியலாளர் தம் ஆக்கங்களதும், கருத்துகளதும், கண்ணோட்டங்களதும் பிரதிபலிப்புக்களாகவும் எதிரொலிகளாகவுமே அமைந்து கிடைக்கின்றமை வியப்புக்குரியதல்ல.

ஆகவே, இஸ்லாத்தின் தூய்மையான விசுவாசியராக, முஸ் லிம்களின் சமகால தலைமுறையினரை அவர்களது விசுவாசங் கள், பாரம்பர்யங்களுடன் நெருக்கி அமைக்கும் பணியில்

அயராது உழைத்து வருவோர், வரலாற்று ஆய்வு சம்பந்தமான தமது கடப்பாடுகளைச் சரிவர நிறைவேற்றி வைக்க வேண்டியவர்களாயுள்ளனர். அவர்களே இஸ்லாமிய வரலாற்றினதும், சமூகத்தினதும் உண்மையான குறிக்கோள்களைப் பரவச் செய்யும் பணியினை ஆற்றக் கூடியவர்களாக உள்ளனர். சத்திய விசுவாசத்தின் சுவையை உணர்ந்தவர்கள் அவர்கள்; தமது அன்றாட வாழ்வமைப்பிலேயே அதன் செல்வாக்கினைக் கண்டு அனுபவித்தவர்கள்; முஸ்லிம் நடவடிக்கைகளின் நோக்குகளையும் போக்குகளையும் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள். இஸ்லாமிய வரலாற்றின் செல்நெறிகளையும், இயக்கத்தையும் அனுமானித்துக் கொள்ளும் தகைமை நிரம்பப் பெற்றவர்கள் அவர்கள்.

பிரபஞ்சம், வாழ்வு, மானுடம் என்பன குறித்த இஸ்லாமிய புரிந்துணர்வின் அடிப்படையிலிருந்து எழுவதே வரலாறு பற்றிய இஸ்லாமிய பரிமாணம். அதன் அத்திவாரங்களாக அமைந்தன: இறைவன்; அவனது வேதங்கள்; அவனது தூதர்கள்; மறுமை; விதி; நன்மை, தீமை அனைத்தும் அல்லாஹ்வின் பக்கல் இருந்து வருவனவேயன்றி அல்ல என விசுவாசம் உறுதி பெற்றிருக்கின்றமையாம். ஆக, இஸ்லாமிய வரலாற்றுப் பரிமாணம் ஆனது இஸ்லாமிய அடிப்படை விதிகளின் வட்டத்துக்கு வெளியே காணப்படுவதல்ல. மதீனாவின் ஆரம்ப முஸ்லிம் சமூகத்தில் தெளிவுறக் கண்டு கொள்ளக் கூடியதாயிருந்த மானுட ஒழுக்க நெறிகளை உந்துவித்த குறிக்கோள்களின் அடிப்படையில் உருவானதே அது.

பொதுவான அகிலத்துவ வரலாற்றையும், இஸ்லாமிய வரலாற்றையும் பிரித்துக் காட்டுவனவாக அமைந்தன தெய்வீக இடையீடும், அருளுமாகும். ஆக இஸ்லாமிய வரலாற்றைத் தனியே பிரித்துக் காண முடியுமாக இருக்கின்றது. அந்தத் தனித்துவத்தின் தன்மையை விளங்கவும், அதன் பயன்களை ஈட்டிக் கொள்ளவும் அடிப்படைத் தேவை உண்மையான ஈமானிய அம்சங்களைக் கொண்டிருப்பதாகும். இஸ்லாமிய வரலாற்றினை லௌகிக காரணங்கள் கொண்டு விளக்குதல்

இயலாது. மார்க்ஸிய சிந்தனையில் போல மானுட வரலாற்றின் இயக்கத்துக்கு உந்துதல் அளிப்பது உற்பத்திக் காரணிகள் முதலாய உலோகாயுத கற்பிதங்கள் என்ற நிலைப்பாடு இதில் இல்லை. அன்றி, மேற்கத்திய சிந்தனையில் போல, புவியியல், அமைப்பு, சுவாத்தியம், பொருளாதாரம் முதலான வெளிச் சக்திகளே வரலாற்றின் போக்கினை நிர்ணயம் செய்கின்றன என்ற கருதுகோள்களுக்கும் இதில் இடம் இல்லை. இறை நியதிகளின் வரம்புகளுக்கு உட்பட்டு, சமூக, வரலாற்று மாற் றங்களைக் கொண்டு வருவதற்கென மனிதன் கொண்டுள்ள பொறுப்புகளையே இஸ்லாமிய நிலைப்பாடு வலியுறுத்து கின்றது.

இஸ்லாமிய விளக்கம் இனச் சார்பு கொண்டதாக அமைதலும் இயலாது. மனிதருள் குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டும் உரிமை கொண்டாடுவதற்காக அமைந்ததல்ல அது. ஒவ்வொருவரும் தாம் தாம் அளிக்கக் கூடிய பங்களிப்புகளுடன் கூடியதாக அனைத்து மக்களதும் பொறுப்புகளை அங்கீகாரம் செய்வதுதான் இஸ்லாமிய நிலைப்பாடு.

மேற்கண்ட கருத்துகள் அனைத்தும் கூடிய விளக்கத்தை அவாவி நிற்பன. இந்த ஆக்கத்தில் அதற்குப் போதிய இடம் இல்லை. எவ்வாறாயினும் அவற்றுள் சிலவற்றை மேலோட் டமாகவாவது கண்டு செல்ல நான் முனைவேன். பின்னைய சந்தர்ப்பங்களில் நாம் அவற்றை விரிவாய்க் காணலாம்.

# I

# வரலாற்றில் இஸ்லாமிய அணுகு முறையின் பொது அம்சங்கள்

## குர்ஆனில் தீர்க்கமாகக் குறிக்கப்பட்ட மெய்ம்மைகள்: மானிட விசுவாசத்தின் மூலம் தவ்ஹீத் - ஷிர்க் அல்ல.

ஆதம் (அலை)[1] அவர்களது காலம் முதல் 'தவ்ஹீத்'[2] தான் வழக்கில் இருந்தது - ஷிர்க் தோற்றம் பெறும் வரை. அல்லாஹ் குர்ஆனில் கூறுகின்றான்: "(ஆரம்பத்தில்) மனிதர்கள் (அனைவரும் ஓரிறை நம்பிக்கையுள்ள) ஒரே சமுதாயத்தவராகவே இருந்தனர். பிறகு, அல்லாஹ் தூதர்களை நன் மாராயங் கூறுவோராகவும், அச்சமூட்டி எச்சரிப்போராகவும் (அவர்களின் பால்) அனுப்பி வைத்தான்" (2: 213)[3]. அதாவது மானிட வர்க்கம் ஒரே சமூகமாக (உம்மா[4]வாக), தூய்மையான

---

1. (அலை): 'அலைஹிஸ்ஸலாம்' என்பதன் சுருக்கம். 'அவர்கள் மீது அமைதி உண்டாவதாக' என்பது பொருள். நபிகள் (ஸல்) தவிர்ந்த ஏனைய இறை தூதர்களது நாமங்கள் மொழியப்படும் போது உரைக்கப்படுவது.

2. தவ்ஹீத் : ஓரிறைக் கோட்பாடு. அனைத்தையும் படைத்து, காத்து, பரிபாலிக்கின்ற இறைவன் ஒருவனே என விசுவாசித்தல். தவ்ஹீதுக்கு எதிரானது ஷிர்க்: ஏக இறையோனுக்கு, (அல்லாஹ்வுக்கு) இணை கற்பித்தல்.

3. குர்ஆனின் தமிழ் மொழி பெயர்ப்பு வாசகங்கள் அல்லாமா ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களின் தர்ஜுமதுல் குர்ஆன், மௌலானா எம். அப்துல் வஹ்ஹாப், மௌலவி கே. ஏ. நிஜாமுத்தீன் மன்பயீ, மௌலவி ஹாபிழ் ஆர். கே. அப்துல் காதிர் பாகவி, ஆகியோரின் திருக்குர்ஆன் தர்ஜமா (மாஹின் வெளியீடு) பதிப்புகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.

4. உம்மா: கோட்பாடு, சட்டவியல், மதம், கூட்டு மனப்பாங்கு, ஒழுக்கவியல், கலாச்சாரம், பண்பாடு, கலைகள் என்பவற்றால் தனியாக அடையாளம் காணப்படும் சமூகம்.

*தவ்ஹீதையே தனது மதமாகக் கொண்டு விளங்கியது. மானிட வர்க்கம் தவ்ஹீதைப் புறக்கணித்து அதிலிருந்தும் பிறழ்ந்து செல்லவே, அவர்களை மீளவும் தவ்ஹீதின் பால் வழி நடாத்த இறைவன் நபிமார்களை அனுப்பினான். குர்ஆனில் நன்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு விஷயம் இது. ஆனாலும், நாம் பண்டைய வரலாறுகள் பற்றிய நூல்களைக் காணும் போது முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் குர்ஆனின் கூற்றுக்கு மாற்ற மான கருத் துக்களைக் கூறுவதையே காண்கின்றோம். மானிட வர்க்கத்தின் ஆரம்ப சமயச் சிந்தனை, மிருகங்கள், மரங்கள், இயற்கைச் சக்திகள் முதலியனவற்றை வணங்குவதாகவே அமைந்திருந்ததாகவும், பின்னர் அறிவின் பரிணாம வளர்ச் சியின் காரணமாக மனிதன் தவ்ஹீதை அடைந்து கொண்டான் எனவும் இவர்கள் காட்டித் தருவர். பிர்அவ்ன்அக்னதோன்[5] தான், ஆரம்ப ஓரிறை வணக்கஸ்தன் எனக் கொள்ளும் இவ்வரலாற்றாசிரியர்கள், ஏனைய எகிப்திய தெய்வங்கள் அனைத்தையும் புறக்கணித்து, சூரியனை மட்டுமே வணங்க வேண்டுமென அவன் ஆணை பிறப்பித்தமையை அதற்குக் காரணமாகக் கற்பிப்பர். இத்தகு தவறான வாதத்துக்கு இரண்டு காரணங்கள் உள்ளன:*

*1. சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் தெய்வீக வெளிப் பாடாக விளங்கும் வஹீயின் ஆதாரபூர்வ தன்மையையும், நபித்துவத்தையும் நிராகரிப்போராயுள்ளனர். பல் தெய்வ வணக்கமாகவே சமய நம்பிக்கைகள் உருவெடுத்துப் பின்னர் மானிட முனைவுகளின் காரணமாக அது தனியோர் இறை வன் மீதான நம்பிக்கையாகப் பரிணாமம் பெற்றது என்றே அவர்கள் கொள்வர். மானுடரின் அறிவியல், பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியின் பயனாக விளைந்தது இது என்பது அவர்களது நிலைப்பாடு.*

*2. முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள், டார்வினின் பரிணாமக் கோட்பாட்டின் செல்வாக்குக்கு ஆளானவர்களாய், அவரது பரிணாமக் கோட்பாட்டுச் சிந்தனையையும் உயிரின தோற்*

5. الفرعون اخناتون

*றுதல் பற்றிய கருத்துக்களையும் சமய சிந்தனை பற்றிய விவகாரத்திலும் ஏற்றிப் பார்க்கலாயினர்.*

*ஒரு முஸ்லிம் வரலாற்றாசிரியர் வரலாறு குறித்து எழுதும் போது, மானிட வரலாறு பற்றிய குர்ஆனீய கோட்பாடுகளை ஒன்றிணைத்து, அவற்றைத் திறம்படக் கடைப்பிடிக்க வேண் டியவராகின்றார். இத்தகைய குர்ஆனீய கோட்பாடுகளுக்கு முரணான சித்தாந்தங்கள் எதனையும் அவர் எதிர் கொள்வா ராயின், அவை நிறுவப்பட்ட மெய்ம்மைகளாகவன்றி வெறும் சித்தாந்தங்களாக மட்டுமே இருக்கும் நிலையில் அவற்றை மறுத்துரைக்க வேண்டியவராகின்றார் அவர்.*

*எவ்வாறாயினும், பண்டைய வரலாறு பற்றிய ஊகங்கள் அனைத்தும், தொல்பொருள் ஆய்வுகளது முடிவுகளின் பிரகாரமே பிரஸ்தாபிக்கப்படுகின்றன. பண்டைய வரலாறு பற்றிய எமது அறிவில் காணக்கிட்டும் பாரிய இடைவெளி களை நிரப்ப, அத்தகு முயற்சிகள் மூலம் கிட்டும் வரையறை களுக்குள்ளான விவரங்கள் போதுமானவையாக இல்லை. முஸ்லிமல்லாத ஒரு வரலாற்றாசிரியர், இத்தகு தொல்பொருள் ஆய்வுகளின் முடிவுகள் தவிர்ந்த வேறு எதனையும் தனது ஆய்வுகளுக்குத் துணையாகக் கொள்ள இயலாதிருக்க, முஸ்லிம் வரலாற்றாசிரியரோ குர்ஆனில் தங்கியிருக்க இயலு மானவராகின்றார்: இதற்கு முன்னும் சரி, இதற்குப் பின்னும் சரி, "உண்மைக்கு மாறான யாதொரு விஷயமும் (திருக் குர் ஆனாகிய) இதனை (அணுகவே) அணுகாது"(41:42). குர்ஆன் மட்டுமே மாற்றங்களுக்கு உள்ளாகாத, எவரது இடைச் செருகல் களுக்கும் ஆளாகாத வேத நூல். இறைவன் அவனது நூலைப் பாதுகாப்பதற்கு முஸ்லிம்கள் மீது பாலித்த மாபெரும் அருட் கொடை இது. இறைவனின் வாசகங்கள் என்ற உறுதி உள்ளத் தில் உறைந்தவர்களாக, முஸ்லிம்கள் காலாகாலமாக, குர்ஆன் எவ்வாறு அருளப்பட்டதோ அதே மாதிரி ஓதி வருகின்றார் கள். இந்த மனோ உறுதியானது, அவர் களது ஆன்மா, சிந்தை, நடைமுறை, பழக்க வழக்கங்கள்-அனைத்திலுமே ஆழ்ந்த தாக்கங்களை ஏற்படுத்தி வைத்துள்ளது. முஸ்லிம்களது*

சமூகம், நாகரிகம் ஆகியனவற்றின் இயல்புகளிலும் இது பாரிய செல்வாக்குகளைப் பதித்துள்ளது. இவ்வாறானதோர் அருளை முஸ்லிம் உம்மா தவிர்ந்த வேறு எந்த ஒரு சமூகமும் ஈட்டிக் கொண்டதில்லை.

## இஸ்லாத்தின் ஆரம்பகால முஸ்லிம்களின் நடைமுறை களது நோக்கங்கள்

அடிப்படை விசுவாசமும் கோட்பாடுகளும் ஆழமாகப் பதிந்த இஸ்லாமிய சமூகமொன்றன் மக்களது நடைமுறை களதும் மனப்பாங்குகளதும் நோக்கமாக அமைவது அல்லாஹ்வை மகிழ்வித்து, மறுமையில் அவனது கருணையை ஈட்டிக் கொள்வதாகும். சிறந்த முஸ்லிம் விசுவாசியர் தம் நடைமுறைகளுக்கு வேறு நோக்கங்கள் ஏதும் கற்பிக்கமாட் டார். தனது நடவடிக்கைகள் அனைத்தினதும் தனியொரு நோக்கமாக அமைய வேண்டுவது, அல்லாஹ்வின் மகிழ்வை ஈட்டிக் கொள்வதே என்பதில் உறுதியாக இருக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமாக இருக்கின்றது. அது எந்தவொரு சமூக, பொருளாதார, அரசியல் நடவடிக்கையாயினும், தனிப்பட்ட சுய தூய்மை யாயினும், ஜிஹாத் பற்றியதாயினும் சரியே. இறைவனைத் தவிர்த்து வேறு எதனையும் தன் நோக்கத்தில் இணைத்துக் கொள்ளக்கூடுமாயின் தனது முனைவுகள் அனைத்தும் வியர்த்தமாகி விடுகின்றன என்பதனை ஒரு முஸ்லிம் நன்கு அறிவார் - ஹதீஸில் கூறப்படுவது போல: இறைவனையே நோக்காகவும், அவனுக்காகவுமே செய்யப்படாத எந்த ஒரு கருமத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான். இன்றைய கால கட்டத்தில் கூட ஏராள மான தூய உணர் வுள்ள முஸ்லிம்களது வாழ்வினையும், நட வடிக்கைகளையும் இத்தகைய சிந்தனையே வழி நடாத்துவதை நாம் காணக் கூடியதாயிருப்பின், உன்னதமான சமூகத்தோராக விளங்கிய நபித் தோழர்களதும், அவர்களைத் தொடர்ந்து வந்தோர் (தாபியூன்)களதும் தலைமுறைகளில் அது எத்தகைய செல்வாக்கினைப் பதித்திருக்கக் கூடும்?

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திய சமூகத்தோரது கல்வி, இதயத்தூய்மை, சிந்தையின் சீர்மை, சமய விசுவாசத்தின் நேர்மை, இறைவனை மட்டுமே வணக்கத்திற்குரியவனாக ஏற்றிருந்தமை முதலியவற்றில் இஸ்லாம் பதித்திருந்த செல்வாக்குக் குறித்து நாம் அறிந்து கொள்ளக் கூடுமாயின், இராணுவ நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டமை (அல்-புதூஹ்[6]: வெற்றி கொள்ளல் அல்லது ஏனைய பிரதேசங்களைத் திறந்து விடுதல்)யானது அடிப்படையில் எவ்வித லௌகிக லாபங்களையும் கருதியதாக அமையவில்லை என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். மாறாக, இஸ்லாத்தினைப் பரப்பி வைத்தல், புதிய பிரதேசங்களில் அதனை நன்கு வேரூன்றச் செய்தல், கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை ஒழுங்குற நிர்வகித்தல் என்பனவே அவர்களது கருத்தைக் கவர்ந்திருந்த விஷயங்கள். புதிய பிரதேசங்களிலான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணல், எழக்கூடிய வேறும் பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு இயைய முடிவுகள் வழங்கல் என்பனவே அவர்களது சிந்தனைகளுக்கு உந்துதல் அளித்து வந்தன. கைதானீ உட்பட ஏனைய கீழைத்தேய வியலாளர்கள் பலர் கூறுவது போல, புதிய பிரதேசங்களது மக்கள் மீது மேலாதிக்கம் செலுத்துவதோ, அவர்களது செல்வங்களை அபகரிப்பதோ, பாலை நில வாழ்வின் கடூரங்களிலிருந்து தப்பிச் சென்றுவிட முனைவதோ முஸ்லிம்களது நோக்கங்களாக இருக்கவில்லை.

பாரசிகத் தலைவனான ருஸ்தும் என்பாரின் அரசவையை ரபீஇ இப்ன் ஆமிர் சென்றடைந்தமையை விவரிப்பார் அல்-தபரீ. ருஸ்தம் வினவினார்: "எதற்காக நீர் இங்கு வந்தீர்?" ரபீஇ கூறினார்: "இறைவன் எம்மை அனுப்பினான். மானுடரை வணங்குவதை விட்டு, இறைவனை மட்டுமே மக்கள் வணங்கவென அவன் யாருக்கு வழிகாட்ட விரும்புகின்றானோ அவர்களை வழி நடாத்த; இந்த உலகின் குறுகலான அடக்குமுறை

6. الفتوح

*அக்கிரமங்கள் மிக்க சூழலிலிருந்து பரந்து விரிந்த சுவனத்தை நோக்கி அவர்களுக்குப் பாதையமைத்துக் கொடுக்க; ஏனைய மதங்களின் அநீதங்களிலிருந்து இஸ்லாத்தின் நீதமான முறைகளை நோக்கி அவர்களை நெறிப்படுத்த; அவனே உரு வாக்கிய அவனது மதத்துடன், அம்மக்களை அவனை நோக்கி அழைக்க எம்மை அவன் இங்கே கொண்டு வந்திருக்கின்றான்."*

*முஸ்லிம்களின் பிரதிநிதியாக அமைந்த ரபீஇ இப்ன் ஆமிர் பாரசிகருக்குக் கூறியன அவரது தனிப்பட்ட உணர் வுகள் மாத்திரமல்ல. முஸ்லிம் தலைமைத்துவத்தினதும் முஜா ஹிதீன்களில் பெரும்பாலானவர்களது சிந்தைகளில் இருந்தனவற்றினதும் வெளிப்பாடாகும் இது. இதனால் படை யெடுப்புகளில் பங்கு பற்றிய நாடோடி அரபிகளில் சிலர், ஜிஹாத் மீதான தமது ஆர்வத்துக்கும் மேலாக, லௌகிக நலன்கள், யுத்தப் பொருட்கள் மீதான அவா என்பனவற்றால் ஈர்க்கப்படிருக்கவில்லை எனக் கூறிவிட முடியாது. என்றா லும், இந்த நாடோடி அரபிகள், இயக்கத்தின் தலைமைத்துவத் தையோ, அல்லது அதனை இயக்குவித்து வந்த ஜீவ சக்தியை யோ பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக அமையவில்லை. இதனை நாம் கூற வேண்டியது அவசியம். ஏனெனில் முஸ்லிம் சமூகமானது ஒரு மானிட சமூகமே. அதனுள் இறைவனை மட்டுமே நாடி, அவனுக்காக மட்டுமே கருமமாற்றும் உயர் ஒழுக்கவியல், ஆன்மீக நோக்குகளுடன் கருமமாற்றும் உயர் குழாத்தோர் இருந்தனர். இறைவன் மகிழ்வை மட்டுமே நாடிய அவர்கள், தமது கருமங்கள் அனைத்தையும் அதனை நோக் கியதாகவே ஆற்றி வந்தார்கள். என்றாலும், தம்மை முஸ்லிம் கள் எனக் கோரி உரிமை பாராட்டிக் கொள்ளத் தேவையான ஆகக் குறைந்தளவிலான தரங்களை மட்டுமே கொண்டிருந்த தாழ் குழாத்தோரும் முஸ்லிம்கள் மத்தியில் இருக்கவே செய் தனர்.*

*நாம் தெளிவுற அறிந்து கொள்ள வேண்டிய மற்றொரு விஷயமும் உள்ளது. இறைவன் நபிகளாருக்குக் கூறியவற்றை அன்றாடம் கடைப்பிடித்து வரும் ஒரு முஸ்லிமாலேயே,*

*இஸ்லாத்தின் ஆரம்ப கால கட்டத்து வரலாற்றின் போக்கு பற்றிய விளக்கங்களைச் சரிவர ஈட்டிக்கொள்ள முடியும் என்பதாகும் அது. அல்லாஹ் கூறினான்: "நீங்கள் கூறுங்கள்: 'நிச்சயமாக, என்னுடைய தொழுகையும், என்னுடைய (மற்ற) வணக்கங்களும், என் வாழ்வும், என் மரணமும் உலகத்தாரை படைத்து வளர்த்து பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை. அவனுக்கு யாதொரு இணையுமில்லை; (துணையுமில்லை). இவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன். ஆகவே அவனுக்கு வழிப்பட்டவர்களில் நான் முதன்மையானவன்'."(6:162-3).*

*அவ்வாறான ஒரு முஸ்லிமின் சிந்தையும் உணர்வுகளும் தான் குர்ஆன், ஸுன்னாஹ்வினால் செப்பம் செய்யப் பெற்றிருக்கும். தனது பண்பியல்புகளில் எத்தகைய தாக்கத்தை அவை ஏற்படுத்தியுள்ளன; தனது அன்றாட நடவடிக்கைகள் எவ்வாறு அவற்றால் நெறிப்படுத்தப்பட்டுள்ளன என்பனவற்றை உணர்ந்தவராக இருப்பார் அவர்.*

*இதனால்தான் மேலை நாட்டாரும், கீழைத்தேயவியலாளர்களும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்து முஸ்லிம்களின் நடவடிக்கைகளுக்கான உண்மையான நோக்கங்களை விளங்கிக் கொள்ள இயலாதவர்களாகத் தவறுகள் இழைத்துள்ளனர். உதாரணமாக, பிரசித்தம் வாய்ந்த கீழைத்தேயவியலாளரான ஹென்றி லெமன்ஸ், பனூ ஸாஇதாவின் ஸகீபா[7] பற்றிய நிகழ்வினை விவரித்துப் பேசுவதனை எடுத்துக் கொள்ளலாம். ஷூறா முறைமை பிரயோகமான ஆரம்ப உதாரணங்களில் ஒன்றான இந்நிகழ்வு - பெரும்பான்மையினர் சிறுபான்மையினரால் இணங்க வைக்கப்பட்ட சம்பவம் அவரது விவரணங்களில் முற்றும் உண்மைக்குப் புறம்பானதாக அமைந்து விட் டது. அவரது 15-ம்,16-ம் நூற்றாண்டுகளது பிரான்சிய அரசவையின் சதி நடவடிக்கைகளின் நினைவுகளை மீளக் கொணர்ந்து, அதே காரணங்களையே*

*7. நபிகள் (ஸல்) அவர்களது மறைவின் பின்னர் கலீபா ஒருவரைத் தேர்ந்து கொள்ளவென தோழர்கள் பனூ ஸாஇதாக்களின் மண்டபத்தில் கூடியமை.*

ஸகீபாவின் மீதும் ஏற்றிக் காணச் செய்துள்ளது. அவரைப் பொறுத்த அளவில் அபூபக்ர், உமர், உஸ்மான் ஆகியோர் கூடித் தீட்டிய ஒரு சதியின் பிரதிபலனே ஸகீபாவில் கண்டு கொள்ளப்பட்ட தீர்மானம்; பனூ ஸாஇதாவின் ஸகீபாவில் காலிபாத்தைக் கைப்பற்றி அம்மூவரும் ஒருவர் பின் ஒருவராக ஆள்வது என ஏற்பாடு செய்து கொண்டனர்.

கீழைத்தேயவியலாளர்களின் ஆக்கங்கள் ஏராளம். தரத்திலும், தகைமையிலும் அவை வேறுபட்டன. சமய - இன காழ்ப்புணர்வுகளின் பிரஸ்தாபத்திலும் அவை பல்தரத்தன. எவ்வாறாயினும், இந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ள அறிஞர்கள் இஸ்லாத்திலிருந்தும் மிகவும் சேய்மைப்பட்ட சூழல்களிலேயே வாழ்ந்து வந்துள்ளனர். அவை, தமக்கேயுரிய சித்தாந்தங்களையும், கலாச்சார - பண்பாட்டுப் பாரம்பரியங் களையும் கொண்டன. அத்தகு பின்னணியில் வாழ்ந்து வரு வோர்க்கு இஸ்லாத்தைப் புரிந்து கொள்தல் என்பது சிரம மானதொரு கருமம். ஆக, முஸ்லிம்களது தனிப்பட்ட, கூட்டு, சமூக நடவடிக்கைகளின் பின்னணியிலான உண்மையான காரணங்களை விளங்கிக் கொள்ள அவர்களால் இயல் வதில்லை. இஸ்லாமிய வரலாற்று விவரணங்கள் செய்யும் தமது முனைவுகளின் போது, ஐரோப்பிய வரலாற்றிலிருந்து சமானமான நிகழ்வுகளைக் கண்டு கொள்ளவே அவர்கள் விழைகின்றனர். இரு வரலாற்றுப் பாரம்பரியங்களதும் இயல்புகளில் காணப்படும் முற்று முழுதான வித்தியாசங் களைக் கிரகித்துக் கொள்ள அவர்கள் தவறிவிடுகின்றார்கள்.

நாம் மனதிலிறுத்திக் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயத்தையும் கண்டு செல்வோம். ஐரோப்பியர் தமது நிலைப்பாட்டிலிருந்தே - அதாவது, இராணுவ, தொழில் நுட்ப மேலாண்மை பெற்றுள்ள ஒரு நிலைப்பாட்டிலிருந்தே - உலகத்தை நோக்குவது, அவர்களால்தவிர்க்க இயலாத ஒரு கருமம் என்பதே அது. எனவே சாதகங்களாக அமைவன அனைத்தும் அவர்களைச் சார்ந்தனவாகவும், பாதகங்களாக அமைவன அனைத்தும் பிறரைச் சார்ந்தனவாகவுமே அவர்

*களால் சித்தரிக்கப்படுகின்றன. ஆர்னல்ட் டோயின்பீ உலக வரலாறு எழுதும் போது, இஸ்லாத்தின் வரலாற்றுக்கு மிகச் சிறியதோர் இடமே ஒதுக்கியிருந்தார். உலக வரலாற்றுக்கு இஸ்லாம் அளித்துள்ள பங்களிப்புகளை எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியதாக அமைவதல்ல அது.*

*கீழைத்தேயவியலாளரின் ஆக்கங்களில் காணப்படும் பாரிய பலவீனம் இஸ்லாம் குறித்த தெளிவானதொரு விளக்கம் அவற்றில் காணப்படாமையாகும். இஸ்லாத்தின் உண்மையான ஆன்மா முஸ்லிம் சமூகத்தின் மீதும், அதன் வரலாற்றுப் போக்கிலும் கொண்டிருந்த செல்வாக்கு என்பன பற்றிய கிரகிப்பு அவற்றுள் இல்லை. இவைதான் கீழைத்தேய வியலாளரது ஆக்கங்களை ஏற்றுக் கொள்ளவோ, அங்கீகாரம் செய்யவோ எமக்குத் தடைகளை விதித்து வருகின்றன. இஸ்லாமியக் கோட்பாடுகளின் அமுலாக்கம் தெட்டத் தெளிவாகப் பிரதிபலிப்பதாயமைந்த, ஸீறாவினதும், நேர்வழி சென்ற கலீபாக்களதும் காலகட்டங்கள் பற்றிய விவரணங்கள் இங்கு குறிப்பிடத்தக்கன.*

## *நாகரிகங்களின் மதிப்பீடு*

*ஒரு நாகரிகத்தை அதன் லௌகிக சாதனைகளைக் கொண்டு மட்டும் ஒரு முஸ்லிம் வரலாற்றாசிரியர் மதிப்பிடல் செய்யார். எந்த அளவுக்கு இறைவன் தன் படைப்புகளுக்கு நியதி செய்த இலக்குகளை அது எட்டிக் கொண்டுள்ளது என் றும் காண முனைவார் அவர். அல்லாஹ் கூறினான்: "ஜின்னை யும் மனிதனையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை" (51: 56).*

*ஆக, உன்னதமான ஒரு நாகரிகமானது சமூகத்தின் எந்த ஒரு நிறுவனத்தினதும் தடைகள் இன்றி, மானிடர் இறை வனை மட்டுமே வணங்கவும் அவனது நியமங்களையே தமது அனைத்துக் கருமங்களிலும் நெறி பிறழாமல் கடைப்பிடித் தொழுகவும் தேவையான அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார, லௌகிக சூழலொன்றனை அமைத்துக் கொடுப்*

பதாக இருத்தல் வேண்டும். அதன் நிறுவனங்கள், சமய விசுவாசங்களுக்கும் நடைமுறைகளுக்கும் இடையே முரண்பாடுகள் எதனையும் இழைக்க அனுமதித்தல் கூடாது. அகிலங்கள் அனைத்தினதும் பரிபாலகனான அல்லாஹ்வின் மீதான தமது கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்தும் மானிடர் பிறழ்ந்து செல்லும் வகையில் அழுத்தங்கள் எதனையும் கொண்டு வருதலும் தகாது. ஒரு நாகரிகமானது அதன் விஞ்ஞான, இலக்கிய, கலைத்துறைகளில் பெரும் முன்னேற்றங்கள் கண்டிருக்கலாம்; கட்டடங்கள், தளபாடங்கள், ஆடைகள், உணவு வகைகள் முதலாய அனைத்திலும் அடையக்கூடிய உயர் தரங்கள் அனைத்தையும் எட்டியிருக்கலாம்; லோகாயுத அபிவிருத்தியின் உச்சங்கள் அனைத்தையும் அடைந்து கொண்டிருக்கலாம். என்றாலும் கூட, ஏக இறையோனை மட்டுமே வணங்கி, ஷரீயாவில் நியதி செய்யப்பட்ட அவனது கட்டளைகளைப் பின்பற்றி ஒழுகக்கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதில் அது தவறுகள் இழைக்கக் கூடுமாயின், ஒரு முஸ்லிம் வரலாற்றாசிரியரின் நோக்கில் அந்த நாகரிகம் இன்னமும் பிற்போக்கானதாக, குறைகள் நிறைந்த தொன்றாகவே தோற்றும்.

இஸ்லாமிய நாகரிகம் பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. அதன் லௌகிக சிந்தனைகள் நிச்சயமாக அதன் ஆரம்ப கால கட்டங்களில் ஈட்டிக் கொள்ளப்பட்டனவல்ல. அவை நிலை நிறுத்தப் பெற்றது ஹிஜ்ரி மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளிலேயே. ஆக, மேலை நாட்டு ஆய்வாளர் எடம் மீதெஸ்இன் கருத்தில் ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டுதான் இஸ்லாமிய நாகரிகத்தின் உன்னதமான காலமாகத் தோற்றுகின்றது. ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டின் முஸ்லிம்களது ஒழுக்கலாற்றை ஒப்பீடு செய்து காணின், முதலாம் நூற்றாண்டின் முஸ்லிம்களது நடவடிக்கைகள் நிச்சயமாக ஷரீயாவின் போதனைகளுக்கு இயைந்தனவாக அமைந்திருந்தமை நன்கு புலனாகும். இதனையே அல்லாஹ்வின் தூதர் (ஸல்)[8] அவர்கள்

8. (ஸல்): 'ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்' - அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக. நபிகள் முஹம்மத் (ஸல்) அவர்களது பெயர் குறிப்பிடப்படும் போதெல்லாம் அல்லது அன்னார் அல்லாஹ்வின் தூதராகக் குறிப்பிடப்படும் போதெல்லாம் உரைக்கப்படுவது.

குறித்தார்கள்: "தலைமுறைகளில் சிறந்தது எனது தலைமுறை யாகும்; அடுத்து வருவது அடுத்து இருக்கும்; அதன் பின்னர் வருவது அதனை அடுத்து இருக்கும்."

இந்த அணுகு முறை, இந்த தர்க்கம், முஸ்லிமல்லாத வரலாற்றாசிரியர்களால் கிரகித்துக் கொள்ள இயலாத ஒன் றாக இருக்கின்றது. ஏனென்றால், அவர்கள் ஏற்றிருப்பது மேலைத்தேய நாகரிகத்தின் வகைப்படுத்தலையும், பெறு மானங்களையுமே. ஆனால், மேலைத்தேய பெறுமானங்கள், வகைப்படுத்தல், கோட்பாடுகள் ஆகியவற்றின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டுக் கொண்டுள்ள முஸ்லிம் வரலாற் றாசிரியர்களுக்கோ, விவகாரங்கள் அனைத்தும் மிகத் தெளி வாக அமைந்துள்ளன. சமகால முஸ்லிம் உலகின் எல்லாப் பாகங்களிலும் பிரத்தியட்சமாகி வரும் நவீன இஸ்லாமிய புரிந்துணர்வும், எழுச்சியும் காரணமாக முஸ்லிம்கள் இந்தப் புதிய பரிமாணத்தை இலகுவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இதன் விளைவுகளில் ஒன்று தான், வாலிப முஸ்லிம் தலைமுறையினர், மேலைத்தேய நாகரிகத்தின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டுள்ளமை. இஸ்லா மும் ஈமானும் அவர்களுள் சுய நம்பிக்கையையும், சுதந்திர உணர்வையும், உயர் நோக்குகளையும், சிந்தனா ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் ஊட்டி வளர்த்துள்ளன. முக்கியத்துவம் வாய்ந்ததொரு வளர்ச்சி இது. ஏனெனில், இறைவன் நாடக் கூடுமாயின், நவீன இஸ்லாமிய நாகரிகம் ஒன்றனைக் கட்டியெழுப்ப முதன் முதல் வைக்கப்பட வேண்டிய பாதவடி இதுவாகும்.

## சமாதானம் கற்பித்தலும் நியாயங் கூறலும்

மேற்குலகத்துக் கலாச்சார ஆக்கிரமிப்பின் காரணமாக எமது சிந்தையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மனோவியல், சிந்தனாவாத அழுத்தங்களின் பிரதிபலனே இது. இதன் காரணமாகவே சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் இஸ்லாத் தில் ஜிஹாத் அல்லது இஸ்லாமிய படையெடுப்புகள் (புதூஹ் அல்-இஸ்லாமிய்யா) குறித்துப் பேசும் போது அவற்றுக்காச்

சமாதானம் கற்பிக்க முனைவதோடு வருத்தங்கள் தெரிவிக் கவும் விழைகின்றார்கள். அரேபிய தீபகற்பத்தை ரோம, பாரசிக ஊடுருவல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள எடுக் கப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகளாகவே அவற்றைக் காட்ட அவர்கள் முனைகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் இராணுவ நடவடிக்கைகள் கூட இவ்வாறான சமாதானங் கற்பிக்கும் விவரணங்களிலிருந்தும் தப்பிக் கொள்ள இயல வில்லை. மதீன நகரைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மேற்கொள்ளப் பட்டனவாகவே அவை சித்தரிக்கப்படு கின்றன. பேராசிரியர் முஹம்மத் ஷிப்லி அல்-நுஃமானியின் ‘ஸீறா’ கூட, அதன் சிறப்பியல்புகளின் மத்தியிலும் இதே தவற்றை இழைத்திருப்பது கண்கூடு.

நன்கு அறியப்பட்டனவும், போதிய சான்றுகளைக் கொண்டனவுமாக அமைந்த சில நிகழ்வுகளைக் கூட சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் நிராகரித்து விடுகின்றார்கள். ஏனெனில் அவற்றுக்காகச் சமாதானம் கற்பிக்கும் காரணங் களை அவர்களால் கண்டுகொள்ள இயலாது போயுள்ளது. உதாரணமாக இத்தகு ஆசிரியர் ஒருவர், பனூ குறைளாவின் போராளிகள் கொல்லப்பட்டமை குறித்த இப்ன்-இஸ்ஹாக் கின் அறிவிப்புகளை ஏற்க மறுக்கின்றார் - இந்த அறிவிப்புகள், ஹதீஸ், ஸீறா, வரலாற்று நூல்கள் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ள நிலையிலும் கூட. அவர்கள் கொல்லப்பட்டமை யின் நியாயத்தினை அவர் ஐயங் கொண்டுள்ளார் போலத் தெரிகின்றது. வரலாறு பற்றிய இஸ்லாமிய கோட்பாடு சமா தானங் கற்பிப்பதல்ல. அல்லது தற்பாதுகாப்பு நியாயங்களை முன்வைப்பதுமல்ல. இஸ்லாம் தான் சத்தியம்; அதற்கு முர ணான அனைத்தும் தப்பானவை என்பதே அதன் நிலைப்பாடு. இஸ்லாத்தில் இறைவன் நியமம் செய்த அத்தனையும் சரியானவையாகும் - அது ஜிஹாத் ஆக இருக்கலாம்; அல்லது வேறு எந்தவொரு விஷயமாகவும் இருக்கலாம். அவற்றிற்குச் சமாதானங்கள் கற்பித்தலோ, நியாய வாதங்களை முன் வைத்தலோ ஏற்புடைத்தாக மாட்டா. வரலாற்று நிகழ்வுகள்

சில, இருபதாம் நூற்றாண்டில் மேலாதிக்கம் செலுத்தும் மேற் கத்திய சிந்தனையாளர்களுக்கு விந்தைகள் நிறைந்தனவாக, ஏற்புக்கு இயையாதனவாக இருக்கலாம். அதற்காக, அவர் களது கோட்பாடுகளுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் இயைந்து செல்ல வேண்டும் எனக் கொண்டு நாம் இஸ்லாத் தையோ, வரலாற்றையோ திருத்தியமைத்தல் கூடாது. ஒரு கால கட்டத்தில் மக்களுக்கு விருப்பான விஷயங்கள், வேறொரு கால கட்டத்திய மக்களுக்கு விருப்பில்லாதனவாக, வெறுப் பானவையாகக் கூட அமையலாம். ஒரு பிரதேசத்திய மக் களுக்கு நலம் பயப்பதாகத் தோற்றும் ஒரு விஷயம், வேறொரு பிரதேசத்தவர்களுக்கு கேடு விளைப்பதாகத் தோற்றலாம். எந்த ஒரு விஷயத்தையும் மதிப்பிடவோ. தீர்ப்புக்குள்ளாக் கவோ வல்லமை படைத்தவன் இறைவன் மட்டுமே. இதையே இறையோனின் ஷரீயா நியதிகள் பிரதிபலிக்கின்றன. வெறும் மானிடப் பிறவிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் , அவாக்கள், அபிப்பிராயங்கள் மூலம் உண்மையான நியாயத் தீர்ப்புகளை ஈட்டிக் கொள்தல் இயலாது. அவனது நியமங் களில் வெற்றி காண்பவன் இறைவன் மட்டுமே.

## வரலாற்று எழுத்தியலில் ஷர்'இ சொற்பிரயோகங்கள்

இஸ்லாமிய வரலாற்றை இஸ்லாமிய நோக்கில் எழுத விழைவோர் சட்டவியல் (ஷர்'இ) சொல் வழக்குகளைக் கையாள்வது அவசியம். ஷர்'இ சொல் வழக்காறுகள் தெளி வான, குறிப்பான கருத்துக்களைத் தம்முள் பொதிந்துள்ளன. மானுடரையும் நிகழ்வுகளையும் மதிப்பீடு செய்யும் இஸ்லா மிய நியாயவியல் கோட்பாடுகளில் முக்கியத்துவமான பங்கை ஈட்டிக் கொண்டுள்ளன அவை. உதாரணமாக, குர்ஆன் மக்களை மூன்று பிரிவினராக வகைப்படுத்துகின்றது: முஃமின் (விசுவாசி), காபிர் (அவிசுவாசி), முனாபிக் (வஞ்சகர்). இதில் ஒவ்வொரு சொல்லும் குறிப்பிட்ட கருதுகோள்களை முன் வைப்பன. அவற்றில் மாற்றங்கள் கற்பித்தல் இயலாது. இந்த சொற்களைப் பிரயோகம் செய்வதில் நாம் தயக்கங்கள் காட் டக் கூடாது. அவற்றுக்குப் பிரதியாக, முஸ்லிமல்லாத சமூகங்

*களில் அறிமுகமாகியுள்ள 'இடதுசாரி' 'வலதுசாரி' முதலான வற்றை, அல்லது ஷரீயாவுக்கு முரணான வேறு ஏதும் இஸ்லாமியமல்லாத, தெளிவில்லா, மயக்கமூட்டும் சொல் வழக்காறுகளைப் பிரயோகித்தல் தகாது. மேலாக, கலாச்சார, நாகரிக மேன்மைகளை மதிப்பீடு செய்யும் போதும் இஸ்லா மிய சொற்பிரயோகங்களைப் பயன்படுத்துதல் அவசியம். 'முற்போக்கு', 'பிற்போக்கு' முதலாய மேற்கத்திய சொற்பிர யோகங்களை விடுத்து, அல்-கைர், அல்-ஷர்ர், அல்-ஹக்க், அல்-பாதில், அல்-அத்ல், அல்-ளூல்ம் முதலாய பதங்கள் பயன்படுத் தப்பட வேண்டும்.*

*சில முஸ்லிம் கிரந்த கர்த்தாக்கள் இஸ்லாமிய அகரா திகளில் கண்டுகொள்ள இயலாத பதங்களைப் பிரயோகம் செய்யும் பொறியில் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். இது மிகவும் அபாயகரமானது. இஸ்லாம் ஜாஹிலி சிந்தனை வயப்பட்டுச் சென்று அதன் சொல் வழக்காறுகளில், பதப் பிரயோகங்களில் அமிழ்ந்து போய்விடக் கூடும். இது எமக்கே உரிய சுதந்திரத்துடனான அடையாளத்தை அபகரித்துச் சென்றுவிடும்.*

*இஸ்லாமிய வரலாற்றை மீள எழுதும் போது இஸ்லாமிய நியாயவியல் சொற் பிரயோகங்களைப் பயன்படுத்துதல் அவசியம். அதுவே இஸ்லாமிய முறைகளின் சுதந்திரமான தன்மையைப் பேணிக் கொள்ளவும், அதன் தனித்துவத்தை முன்னெடுத்துச் செல்லவும் உதவும். மேலும் இஸ்லாமிய நியாயவியல் சொல் வழக்காறுகள், மேற்கத்திய சொல் வழக் காறுகளை விட தீர்க்கமான கருத்துகளைப் பொதிந்தனவாக உள்ளன.*

*இங்கு ஒரு வினா எழலாம். இஸ்லாமிய வரலாற்றில் ஹதீஸ் வல்லுனர்களது முறைமைகளைப் பிரயோகித்து ஆய் வுகள் மேற்கொள்ளலாகுமா?*

*ஹதீஸ் ஆய்வாளர்கள், ஹதீஸ் திறனாய்வு செய்வதற் கெனச் சில விதி முறைகளை வகுத்திருக்கின்றார்கள்.*

அவற்றின் அடிப்படையில் அவர்கள் ஸஹீஹ், ளயீப் முதலாக ஹதீஸ்களை வகைப்படுத்தி அமைப்பார்கள். இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாற்று அறிவிப்புகளைத் திறனாய்வு செய்வதற்கு அத்தகு முறைகளை நாம் எவ்வாறு பயன்படுத் தலாம்? ஆரம்ப கால வரலாற்று அறிவிப்புகள் பல ஹதீஸ் களின் அமைப்பிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது அறிவிப்பின் வாசகத்துக்கு (மத்ன்) முன்னால் அறிவிப்பாளர் வரிசை (இஸ்னாத்) கொடுக்கப்பட்டுள்ளது. ஆக, இதனைத் திறனாய்வு செய்பவர் குறிப்பிட்ட நிகழ்வினை அறிவித்த வர்களது பெயர்களையும், எந்த வரிசையில் அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதையும் தெரிந்து கொள்வார்.[9] அந்த அறிவிப்பாளர்கள் குறித்த விவரங்களை இல்ம் அல்-ரிஜால் (மனிதர்கள் பற்றிய அறிவு) நூல்களில் கண்டு கொள்ளலாம். அவர்களது பின்னணி, ஆதாரபூர்வ தன்மை என்பனவெல்லாம் அவற்றுள் குறிக்கப் பட்டிருக்கும்.

உதாரணமாக, ஒரு ஹதீஸை, ஸஹீஹ் என ஏற்றுக் கொள் வதற்கு, அந்த அறிவிப்பு அல்-அத்ல் அல்-ளாபித்[10] (நல்ல நினை வாற்றல் கொண்ட நம்பிக்கையான முஸ்லிம்) ஒருவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவருக்கும் அல்-அத்ல் அல்-ளாபித் ஒருவர் இதனை அறிவிப்புச் செய்திருக்க வேண்டும். அறிவிப்பாளர் வரிசை முழுவதும் இவ்வாறே அமைந்திருத்தல் அவசியம். அறிவிப்பாளர் வரிசையில் குறைகளோ, குந்தகங் களோ இருத்தல் தகாது. அது போலவே, வரலாற்று அறிவிப்பு ஒன்று ஸஹீஹ் ஆக அமைவதற்கு அதன் அறிவிப்பாளர்கள் அனைவரும் - கண்ணால் கண்ட சாட்சி உட்பட - நல்ல இறை பக்தி உள்ளவர்களாக, (தவறுகளிழைக்காத, நல்ல நினைவாற் றல் கொண்டவர்களாக) அறிவிப்பை மனனம் செய்து கொண் டவர்களாக, அல்லது தமது தொகுப்புகளில் அவ்வாறே பதிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். மேலும் அன்ன வர் தம் அறிவிப்பு அந்த நிகழ்வு குறித்த ஏனைய அறிவிப்பாளர்

9. ஹதீஸ் வகைப்படுத்தல், இஸ்னாத் முதலியன குறித்த போதிய விவரங்களுக்குப் பார்க்க: ஹதீஸ் முறைமையும் கிரந்தங்களும்: முஹம்மத் முஸ்தபா அஸமி (1989)

10. العدل الضابط

களது அறிவிப்புகளுடன் இயைந்து செல்வதாகவும் அமைய வேண்டும். அவ்வாறான ஏனைய அறிவிப்பாளர்களும் தமது அறிவிப்புகளிலும், பதிவுகளிலும் பிசகுதல்கள் இழைக்காதவர்களாக இருத்தல் வேண்டும். இத்தனையின் மத்தியிலும் ஏனைய அறிவிப்புகளுடன் இது ஒன்றிச் செல்லாவிடின் இது குறையுடையதெனக் கொள்ளப்பட்டு அதனிலும் சிறந்த அறிவிப்புகள் ஏற்கப்படும். வரலாற்று அறிவிப்பானது, மெய்யே போன்ற பொய்ம்மைகள், இர்சால்[11] (அறிவிப்பாளர் வரிசையில் காணும் முறிவு), வாசகத்தில் ஒத்த தன்மையின்மை முதலாய அகக்குறைபாடுகள் களைந்தனவாயிருத்தல் வேண்டும். மேலும் அது, ஹதீஸ் வல்லுனர்களது முறைமைகளுக்கு இயைய ஸஹீஹ் அக அமையாது விடின் இஸ்னாத்கள் பரீட்சிக்கப்படல் அவசியம். குறிப்பிட்ட ஒரு நிகழ்வு சம்பந்தப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் ஒன்று சேர்க்கப்பட்டு, அவை இயைந்து செல்கின்றனவா? அல்லவா எனக் காண வேண்டும். ஏதும் ஒரு வாசகம் பல இஸ்னாத்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமை, அந்த வாசகத்தின் ஏற்புடைத் தன்மையை வலுப்படுத்தி வைக்கும்- இத்துணை அறிவிப்பாளர்கள் பொய்யொன்றனைக் கற்பிதம் செய்ய ஒன்றிணைவார்கள் அல்லது தற்செயலாக அறிவித்திருப்பார்கள் என்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்ற காரணத்தால்.

வரலாற்று நிகழ்வுகளின் அறிவிப்புகளைக் கையாளும் போது, ஹதீஸ் வல்லுனர்களது முறைமைகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஹதீஸ் அறிஞர்களும் கூட, வரலாற்று நிகழ்வுகளை அறிவிக்கும் போது கட்டுப்பாடுகளைச் சற்று தளர்த்தவே செய்கின்றார்கள். இதனை நாம் மிக்க நம்பிக்கைக்குரியவர்களான இப்ன்-இஸ்ஹாக், கலீபா இப்ன் கையாத், அல்-தபரீ முதலாய ஆரம்ப கால முஸ்லிம் வரலாற்றாசிரியர்களிடம் கூடக் காண முடிகின்றது. இவர்கள் அனைவருமே முர்ஸல் அல்லது முன்கத்இ அறிவிப்புகள் செய்கின்றார்கள். மேலும், பலவீனமானவர்களாக, நம்பிக்கை குன்றிய

11. الارسال

வர்களாகக் கொள்ளப்படும் ஹிஷாம் இப்ன் கல்பீ, ஸைப்ப் இப்ன் உமர் அல்-தமீமி, நஸ்ர் இப்ன் மஸாஹிம் முதலானோரின் அறிவிப்புகளை ஆதாரமாகக் கொண்டு, அல்-தபரீ அறிவிப்புகள் செய்வதையும் நாம் காண முடிகின்றது.

ஆதி வரலாற்றாசிரியர்கள் ஹதீஸ் திறனாய்வுக்கான கடினமான பரீட்சைகளுக்கு உள்ளாக்காமல் வரலாற்று அறிவிப்புகளை ஏற்றுத் தாமும் அறிவிப்புச் செய்துள்ளமை காரணமாக, சமகால முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் பாரிய பொறுப்புகளைச் சுமக்க வேண்டியவர்களாய் உள்ளனர். ஆதி வரலாற்றாசிரியர்கள், இஸ்னாத்தில் குறிப்பிடப்பட்ட அறிவிப்பாளர்கள் மீது நம்பிக்கை வைப்பது போதுமானது எனக் கொண்டனர். ஆக, எந்த வரலாற்று அறிவிப்புகள் ஸஹீஹ் ஆனவை எனக் கண்டுகொள்ளக் கடுமையாக உழைக்க வேண்டிய நிலைக்குச் சமகால வரலாற்றாசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஹதீஸ் வல்லுனர்கள் கையாளும் முறைமைகளைத் தெரிந்து, அவை எவ்வாறு ஹதீஸ் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டனவோ அதே வகையில் வரலாற்று விவரணங்கள் மீதும் அவற்றைப் பிரயோகித்தல் வேண்டும். இது இலகுவானதொரு கருமமல்ல. பண்டை வரலாற்று அறிஞர்களான கலீபா இப்ன் அல்-கையாத், அல்-தபரீ ஆகியோரே ஹதீஸ் முறைமைகளில் போதிய பரிச்சயம் பெற்றவர்களாக இருந்தார்கள்.

ஆரம்ப கால வரலாற்றாசிரியர்களுக்கான கௌரவம், மேன்மை ஆகியவற்றை மதிப்பிறக்கம் செய்யவோ, அவர்கள் ஆற்றியுள்ள மாபெரும் பணிகளிலிருந்து கவனத்தை வேறுபுறம் திருப்பவோ முனையவில்லை நாம். அவர்கள் எமக்குத் தேவையான மூலாதாரங்களை அவற்றுக்கான இஸ்னாத்களுடன் தேடிப் பெற்றுத் தந்துள்ளார்கள். சிரமங்கள் நிறைந்திருந்தாலும் கூட, நாம் அவற்றை மதிப்பீடு செய்து காண முடிகின்றது. அடுத்து நாம் செய்ய வேண்டுவது என்ன?

நாம் முதலில் ஏற்க வேண்டுவது ஸஹீஹ் அறிவிப்புகள். அடுத்து ஹஸன் அறிவிப்புகள். பின்னர் அல்முஅத்ததா

(ஆதரவளிக்கப்பட்டவை) என வழங்குவனவான, வேறு தனி யான இஸ்னாத்கள் மூலம் ஆதரவளிக்கப்பட்ட ளயீப் அறிவிப் புகள். இந்த வகையில் ஆரம்ப இஸ்லாமிய வரலாற்றின் நிகழ் வுகளை நாம் மீளமைத்துக் காணலாம். ஏதும் முரண்பாடுகள் எழக் கூடுமாயின் மிகவும் உறுதியான ஹதீஸ்தான் பின்பற்றப் பட வேண்டும். என்றாலும் ஆதரவளிக்கப்படாத அல்லது வேறு ஆதாரங்கள் கொண்டு உறுதிசெய்யப்படாத பலவீன மான ஹதீஸ்களை, ஸஹீஹ் அல்லது ஹஸன் ஹதீஸ் கொண்டு நிரப்பப்படாத இடைவெளிகளை நிரப்பப் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் எடுத்துக் கொள்ளப்படும் விவ காரம், அகீதா அல்லது ஷரீயாவுடன் சம்பந்தப்படாததாயிருந்தால் மாத் திரமே இது செய்யப்படலாம். அடிப்படை நியதி என்னவென் றால், விசுவாசம், ஷரீயா சம்பந்தப்பட்ட விஷயங்களில் நாம் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும் என்பதாகும். ஸீறா வின் காலமும், நேர்வழி சென்ற கலீபாக்களது காலங்களும் ஏராளமான நியாயவியல் முன்னுதாரணங்களைக் கொண்டு அமைந்தவை என்பது தெளிவான ஒரு விஷயம். நேர்வழி சென்ற கலீபாக்கள், .இஸ்லாமிய போதனைகளின்படி வாழ் வை அமைத்துக் கொள்வதற்காய்ப் பெரு முயற்சிகள் எடுத்து வந்துள்ளனர். அவர்களது இராணுவ வெற்றிகள், படையெடுப் புகள் காரணமாக இஸ்லாமிய அரசின் எல்லைகள் விரிந்து செல்லலாயின. விளைவாக அவர்கள் புதிய பல பிரச்சினை களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அவற்றைக் கையாள அவர்கள் மேற்கொண்ட முனைவுகள், பின்பற்றப்பட வேண் டிய முன்னுதாரணங்களாக அமைந்துள்ளன.

நகரங்கள், நினைவுச் சின்னங்கள், நீர்ப்பாசன வாய்க்கால் கள் முதலானவற்றின் நிர்மாணம் குறித்தோ, யுத்த கைங்கர் யங்கள், முஜாஹிதீனின் துணிவுடைமை, தியாகங்கள் ஆகியன குறித்தோ வரலாற்றாசிரியர்கள் விவரணங்கள் தரும்போது, அவர்களது அறிவிப்புகள் குறித்த பரிசீலனைகளின் தீவிரம் சற்றே தணிந்திருக்கலாம்.

எனவே, ஹதீஸ் முறைமைகளைப் பிரயோகம் செய்வதனை நாம் அங்கீகரித்து ஏற்றிருப்பதன் காரணமாக, ஸீறாவையும், நேர்வழி சென்ற கலீபாக்களது காலங்களையும் கற்கும் போது நாம் ஹதீஸ் தொகுப்புகளைப் பரவலாகப் பாவித்துக் கொள்ளலாம். ஸீறா ஆக்கங்கள் அல்லது பொது வரலாற்று நூல்களை விட ஹதீஸ் தொகுப்புகள் திறனாய்வாளர்களின் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக நாம் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது இலகுவாகின்றது. உதாரணமாக, அல்-புஹாரீ, முஸ்லிம் ஆகியோரின் தொகுப்புகள் ஆதாரபூர்வமானவை என ஏற்கப்பட்டுள்ளதோடு அவற்றுள் அடங்கியுள்ள ஒவ்வொரு ஹதீஸும் ஸஹீஹ் எனத் தரப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டு தொகுப்புகளும், பாரிய நினைவாற்றல் கொண்ட பண்டைய அறிஞர்களாலும், நவீன ஆய்வாளர்களாலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் காணப்படும் சின்னஞ்சிறு விவரணங்கள் கூட, திறனாய்வாளர்களின் அங்கீகாரத்தை ஈட்டிக் கொண்டுள்ளன; அவற்றின் மூலங்கள் நன்கு அறியப்பட்டுள்ளன. மேலும் அவை அல்-புஹாரியும், முஸ்லிமும் மட்டுமே அறிவித்தனவல்ல. இத்தகு பின்னணியில் ஸீறா குறித்தும், நேர்வழி சென்ற கலீபாக்கள் குறித்தும், அல்-புஹாரி, முஸ்லிம் ஆகியோர் அறிவிப்புச் செய்துள்ளன அனைத்தும் ஆதாரபூர்வமானவை என நாம் ஏற்றுக் கொள்ளலாம். பின்னர் நாம் ஏனைய நான்கு ஹதீஸ் தொகுப்புகளையும் இமாம் மாலிக்கின் முவத்தா ஆகியவற்றையும் காணலாம். இவையும் போதியளவு ஆராயப்பட்டுள்ளனவாயினும்கூட, இரண்டு ஸஹீஹ்(அல்-புஹாரி, முஸ்லிம்)களின் தரத்தை எட்டிக்கொள்வனவாகவோ, ளயீப் ஹதீஸ்கள் முற்றாகக் களையப்பெற்றனவாகவோ அமையவில்லை.

ஸீறாவின் சம்பவங்கள் அனைத்தையுமே கோர்வை செய்தில்லாவிடினும் கூட, ஹதீஸ் தொகுப்புகள் ஸீறா சம்பந்தமான ஏராளமான தகவல்களைப் பொதிந்தனவாகவே உள்ளன.ஆக, ஹதீஸ் திறனாய்வு முறை, அவற்றை ஸீறா அறிவிப்புகளில் பிரயோகித்தல் ஆகியனவற்றின் முக்கியத்துவம்

*தெளிவாகின்றது. ஹாபிஸ் இப்ன் ஸையித் அல்-நாஸ், ஹாபிஸ் அல்-தகபீ முதலாய பிரசித்தி பெற்ற ஹதீஸ் வல்லுனர்கள் ஸீறா குறித்து எழுதிய வேளை பெரிதும் ஆறு தொகுப்புகளிலேயே (அல்-புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், அல்-திர்மிதீ, அல்-நஸயீ, இப்ன் மாஜா) தங்கியிருந்தனர். எவ்வாறாயினும் அவர்கள் ஏனைய ஸீறா நூல்களையும், பொது இஸ்லாமிய வரலாற்று நூல்களையும் கலந்து கொண்டே தம் ஆக்கங்களை உருவாக்கினார்கள்.*

*இந்த சந்தர்ப்பத்தில் மிக முக்கியமான ஒரு விஷயத்தை நாம் குறிப்பிட வேண்டியுள்ளது. அதனைக் கூறாமல் விடுவது, ஸீறா பற்றிய எமது நிலைப்பாடு, ஆரம்ப காலிபாத் பற்றிய எமது அறிவு என்பன குறித்த ஐயப்பாடுகளுக்கு இடமளிக்கலாம். உண்மையில் ஹதீஸ் தொகுப்புகள், ஸீறா நூல்களிலும், பொது வரலாற்று நூல்களிலும் கூறப்பட்டனவற்றை உறுதி செய்வனவாயுள்ளன. இரண்டு ஸீறா நூல்களைப் பொறுத்த மட்டில் இது மிகப் பொருந்தும். அவை, (1) முஹம்மத் இப்ன் இஸ்ஹாக் இப்ன் யஸ்ஸார் (மறைவு ஹிஜ்ரி 151) (2) மூஸா இப்ன் உக்பா (மறைவு ஹிஜ்ரி 140). முன்னையவரின் நூல் ஸீறா இப்ன் ஹிஷாம் என்ற பெயரில் எமக்குக் கிட்டியுள்ளது. பின்னையவரின் நூல் இப்ன் ஹிஷாமை ஒத்ததாக, அல்-வாகிதீயின் மகாஸீயினுள் அடங்கியுள்ளது. ஸீறா பற்றி வாகிதீ பெற்றிருந்த பரந்த அறிவினை ஹதீஸ் அறிஞர்கள் பெரிதும் மெச்சியிருந்தாலும் கூட, அவர் புனைந்துரையான அறிவிப்புகளும் செய்பவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை காரணமாக அவரது அதிகாரபூர்வ தன்மை, பெரிதும் வலுவிழந்து செல்லலாயது. உண்மையில், வாகிதீயினை ஆழ்ந்து கற்கும் வேளை ஹதீஸ் அறிஞர்கள் கூறியனவற்றின் யதார்த்தம் ருஜூவாகும். அல்-வாகிதீ மேற்கோள் காட்டுபவர்களில் ஏராளமானோரை இல்ம் அல்-ரிஜால் நூல்களில் கண்டு கொள்ள முடிவதில்லை.*

*அல்-வாகிதீயின் மகாஸீயின் தரத்தை மேம்படுத்திக் காட்டும் முனைவுகள் சில கீழைத்தேயவியலாளர் மத்தியில்*

*காணப்படுகின்றன. சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்களும் இதற்கு உடந்தையாக இருந்துள்ளனர். வாகிதீயின் மகாஸீயை இப்ன் இஸ்ஹாக்கின் ஸீறாவிலும் மேலாக நிலை நிறுத்த அவர்கள் முனைவர். உண்மையில் இப்ன் இஸ்ஹாக்கின் ஸீறா வானது, வாகிதீயின் ஆக்கத்தை விடச் செவ்வையானதும் ஆதாரபூர்வமானதும் ஆகும். இப்ன் இஸ்ஹாக் தரும் தகவல் கள், ஹதீஸ் தொகுப்புகள் தரும் தகவல்களுடன் பெரிதும் ஒத்துச் செல்கின்றன. ஹதீஸ் தொகுப்புகளுக்கும், ஸீறா நூல் களுக்கும் இடையிலான முக்கியமான வேறுபாடு என்னவென் றால், ஸீறா நூல்கள் முர்ஸல் அல்லது முன்கத்இ ஆன இஸ்னாத்களுடனான பல அறிவிப்புகளையும் கொண்டுள்ள மையாம். என்றாலும் இதே அறிவிப்புகள் ஹதீஸ் தொகுப்பு களில் பூரணமான இஸ்னாத்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ள மையையும் கண்டு கொள்ள முடிகின்றது. ஸீறா நூல்களின் தகவல்கள் இவ்வாறாக உறுதி செய்யப் பெறுகின்றன.*

*எவ்வாறாயினும் ஸீறா நூல்களை ஹதீஸ் தொகுப்பு களுடன் ஒப்பீடு செய்து காண்பதனாலும், ஹதீஸ் திறனாய்வு முறைகளை வரலாற்று அறிவிப்புகளின் மீது பிரயோகிப் பதனாலும் ஸீறா தகவல்களில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டியுள்ளது; சிலவற்றைத் தவிர்க்க வேண்டி வருகின்றது. இனி வரும் அத்தியாயங்களில், ஹதீஸ் முறைமைகளின் பிரயோகத்தினால் கண்டு கொண்ட முடிவுகளை நாம் ஆலோ சிக்கலாம். இந்த விவகாரம் குறித்து நான் கற்கத் தொடங்கிக் கண்டு கொண்ட முடிவுகள் சில வருமாறு:*

*1. ஸீறா சம்பந்தமாக நாம் பெற்றுள்ள அறிவின் அதிகார பூர்வ தன்மை உறுதி பெறுகின்றமை.*

*இது நிச்சயமாக இறைவன் தன் அடியார்கள் மீது கொண்டுள்ள மாபெரும் கருணை காரணமான ஒரு விளைவு. அவனது தூதரின் ஸீறாவை அவன் பாதுகாத்துத் தந்துள் ளான். அதன் மூலம் அவனது தூதரை மக்கள் முன்மாதிரி யாகக் கொண்டு பின்பற்றலாகும்*

*2. புதிய தகவல்கள் கிடைக்கின்றமை*

*ஹதீஸ் தொகுப்புகள் வழங்கும் இப்புதிய தகவல்கள் மிக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், ஸீறா, வரலாற்று நூல்கள் பொதுவாக மகாஸீகளுடன் மட்டுப் பெறுகின்றமை காரணமாக, ஸீறாவின் சமூகவியல், பொருளாதார, நிர்வாக விவரணங்கள் கிடைக்கப் பெறுதில்லை.*

*3. சில விஷயங்கள் குறித்து கூடிய தெளிவு கிட்டுகின்றமை..*

*வரலாற்றாசிரியர்களும், ஹதீஸ் ஆய்வாளர்களும் வேறு பட்டுச் செல்லும் விடயங்கள் பல. உதாரணமாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடியது, பனூ அல்-முஸ்தலிக் மீதான படை யெடுப்பு. அல்-புஹாரி தன் ஸஹீஹில், நபிகள் (ஸல்) அவர்கள், பனூ அல் முஸ்தலிக் எதிர்பார்த்திராத வகையில் அவர்கள் மீது திடீர்த் தாக்குதல் மேற்கொண்டார்கள் எனக் கூறுவார். எவ்வாறாயினும் ஸீறா நூல்களோ பனூ அல் முஸ்தலிக் எச்சரிக்கை செய்யப்பட்டார்கள், அவர்கள் யுத்தத்துக்குத் தயார் நிலையில் இருந்தார்கள், யுத்தம் முரைஸி கிணற்றின் சுற்று வட்டாரத்தில் நடந்தது எனக் கூறுகின்றன.*

*இத்தகு பின்னணியில், எதிரிக்கு எச்சரிக்கை விடுப்பது பற்றிய சரியான இஸ்லாமிய நிலைப்பாடு என்ன என்பது குறித்து நாம் தெளிவு பெற வேண்டியுள்ளது. நியாயவியலாளர் மத்தியில் இது குறித்து மூன்று அபிப்பிராயங்களை நாம் கண்டு கொள்ளலாம்:*

*அ. தாக்குதல் குறித்து எந்த விதமான முன்னெச்சரிக் கையையும் எதிரிக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அல்-மாஸிரீ, அல்-காதி-இயாத் ஆகியோர் இந்த அபிப்பிரா யத்தையே ஆதரிக்கின்றனர்.*

*ஆ. எல்லா சந்தர்ப்பங்களிலும் எதிரியை எச்சரிப்பது அவசியமாகும். இமாம் மாலிக்கும் ஏனையோரும் ஆதரிக்கும் அபிப்பிராயம் இது.*

*இ. இஸ்லாமிய செய்தி அனுப்பப் பெறாதவர்கள் எச் சரிக்கை செய்யப்பட வேண்டும். இஸ்லாமிய செய்தி கிடைக்*

கப் பெற்றவர்கள் (அவற்றை ஏற்காது நிராகரித்து விட) எச்சரிக்கப்பட வேண்டியதில்லை. இமாம்கள் அபூ ஹனீபா, அல்-ஷாபியி, அஹ்மத் ஆகியோரின் ஆதரவைப் பெற்றதும், மூன்று அபிப்பிராயங்களிலும் வலுவானதும் ஆகும் இது.

பனூ அல்-முஸ்தலிக் ஏற்கனவே இஸ்லாமிய அழைப்பு விடுக்கப் பெற்றிருந்தார்கள். ஆக, நபிகள் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை ஏதும் விடுக்காது திடீர்த் தாக்குதல் மேற்கொண்டார்கள் எனும் அல் இமாம் புஹாரியின் அறிவிப்பு, மிக்க ஏற்புடைத்தான அபிப்பிராயத்துடன் இயைந்து செல்வதாக உள்ளது. அல்-புஹாரியின் அறிவிப்பினை விட, இப்ன் இஸ்ஹாக்கினதும், ஏனைய ஸீறா கிரந்த கர்த்தாக்களதும் அறிவிப்புகளை நாம் ஏற்புடையனவாகக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அவர்களது அறிவிப்புகள் குர்ஆனிய வாசகத்துடன் முரண்பட்டனவாக அமைந்துள்ளன: "(உங்களுடன் உடன்படிக்கை செய்திருக்கும்) எந்த வகுப்பினரும் துரோகம் செய்வார்களென நீங்கள் பயந்தால் அதற்குச் சமமாகவே (அவ்வுடன்படிக்கையை) அவர்களிடம் எறிந்து விடுங்கள் ..." (8: 58).

4. ஸீறாவின் சில நிகழ்வுகள் குறித்த மீள் பரிசீலனையின் அவசியம்.

வெறுமனே ஸீறா நூல்களையும், வரலாற்று நூல்களையும் மட்டும் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சமகால ஸீறா அறிவுத் தேட்டத்தில், ஸீறாவின் சில நிகழ்வுகள் தவறாக விளங்கப் பெற்றிருக்கலாம். உதாரணங்களாக, நாம் கூறக் கூடியவை: 'சகோதர பந்தத்துவ முறை', 'நபிகள் (ஸல்) அவர்கள் ஹிஜ்றாவின் ஆரம்பத்தில் எழுதச் செய்த மதீன யாப்பு என்ற ஆவணம்' ஆகியன. இவை மீதான மீள் பரிசீலனை அவசியமாக இருக்கின்றது. என்றாலும் கூட, ஆரம்ப கிரந்த கர்த்தாக்கள் எமக்குத் தந்து, 1400 வருடங்களுக்கும் மேலாக முஸ்லிம்கள் மத்தியில் பதிந்து வந்துள்ள ஸீறாவின் அமைப்பினை மாற்றி விடுமளவு மீள்பரிசீலனைகள் மூலமான

*மாற்றங்களின் அளவு விரிவுபட்டு விடாது செயல்பட வேண் டும். உண்மையில் ஹதீஸ் தொகுப்புகளையும், ஸீறா நூல் களையும் ஒப்பீடு செய்து காணும் போது, ஏராளமான விவர ணங்களிலும், தகவல்களிலும் இவையிரண்டும் இயைந்து செல்கின்றமையைக் கண்டு கொள்ளலாம். அனைத்து இடத் தும், அனைத்துக் காலத்தும் முஸ்லிம்கள் அனைவருக்கும் ஆன வழிகாட்டும் ஒளி விளக்காக நபிகளாரின் ஸீறாவை, இறையோன் பாதுகாத்துத் தந்துள்ளமைக்கான ஓர் அடையாளமாகும் இது. தாபியூன்களுள் தலை சிறந்த சில ஹதீஸ் அறிஞர்களும், அவர்களது மாணாக்கர்களும், மிக்க ஆரம்ப காலத்திலேயே, ஸீறாவை, அதன் நிகழ்வுகளில் பங் கேற்றவர்களும், கண்டவர்களும் ஆன தோழர்களது சான்று களுடன் பதிவு செய்ய வைத்துள்ளான் வல்ல இறையோன்.*

*ஆக, ஸீறாவின் நிகழ்வுகளுக்கும், அவற்றின் பதிவுகளுக் கும் இடையில், இடைவெளிகள் இல்லை. அத்தகு இடை வெளிகள் காணப்பெற்றிருப்பின் அவை சில மூலாதாரங் களின் இழப்புக்கு அல்லது கிட்டியிருந்த மூலாதாரங்களின் திரிபுகளுக்கு அல்லது இடைச் செருகல்களுக்கு வாய்ப் புகளை உண்டாக்கியிருக்கும். மேலும் நாம் ஸீறா கிரந்த கர்த்தாக்களின் பெயர்களைப் பரிசீலித்துப் பார்த்தால், அவர் களில் பெரும்பாலானோர் ஹதீஸ் அறிஞர்களாகவும் இருந்துள்ளமையைக் காணலாம். அவர்கள் வெறும் இலக்கிய கர்த்தாக்களோ, கதை சொல்பவர்களோ அல்லர். இது மிக முக்கியமான ஒரு விஷயம். ஏனெனில் அவர்கள் ஆவணப் பதிவுகளில் தீவிர கவனம் செலுத்தியவர்களாக, தெளிவான, துல்லியமான முறைமைகளை வகுத்துக் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களது பாங்குகள் நிதானமானவை. மிகைப்படுத்தல், மீளவுரைத்தல், கற்பனாவாதப் புனைந்துரை கள், பகட்டுரைகள் என்பனவற்றிலிருந்து முற்றிலும் விலகிய னவாக அமைந்தன அவர்கள் கையாண்ட முறைமைகள்.*

# II

# ஹதீஸ் வல்லுனர்களது விதி முறைகளைப் பிரயோகிப்பதில் நெகிழ்வுத் தன்மையின் அவசியம்.

*வரலாற்று நிகழ்வொன்றனை ஏற்கும் முன்னர் அவற்றின் மீது ஹதீஸ் ஏற்புடைமைக்கான விதிகளைப் பிரயோகம் செய்ய வற்புறுத்துவது உசிதமானதல்ல. அத்தகு விதிகளுக்கு இயைவாகத்தான் நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகள் இருக்க வேண்டுமென வலியுறுத்தல்கள் இருக்கக் கூடுமாயின், இஸ்லாமிய வரலாற்றின் நிகழ்வுகளதும், அபிவிருத்திகளதும் பல்வேறு கட்டங்களை முற்று முழுதாகப் பதிவு செய்வது இயலாத கருமமாகிவிடும். விளைவாக வரலாற்று விவரணங்களில் பாரிய இடைவெளிகள் தோற்றி விடும். இதனை நாம் ஏனைய சமூகங்களது வரலாறுகளுடன் ஒப்பீடு செய்து பார்ப்போம். அவை பெரிதும் தனியொரு அல்லது அநாமதேய அறிவிப்புகளில் தங்கியிருக்கும் நிலையிலும் கூட பெரும் இடைவெளிகள் நிரம்பப் பெற்றனவாக உள்ளன. ஆகவே, இஸ்லாத்தின் மிக ஆரம்ப கால கட்டத்தைத் தொடர்ந்து வரும் காலங்களின் பதிவுகள் ஏற்புடைத்தனவா, அல்லவா எனக் கண்டுகொள்ள, வரலாற்றாசிரியரின் நம்பகத் தன்மை,*

அவரது நினைவாற்றல் ஆகியனவற்றை உறுதி செய்து கொள்வது போதுமானதாக இருக்கும். வரலாற்றாசிரியர்களின் பல்வேறு பட்ட பதிவுகளில் நாம் முரண்பாடுகளைக் கண்டு கொள்வோமாயின், அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்காக நாம் ஹதீஸ் திறனாய்வு முறைகளைப் பிரயோகம் செய்யலாம்.

வரலாற்றாசிரியர் ஒருவர் ஏனைய சமூகங்கள் குறித்து அளிக்கும் விவரணங்கள், அந்த சமூகங்களின் பங்களிப்புகள் என்பன ஏற்கப்பட வேண்டுமாயின் அந்த வரலாற்றாசிரியரின் நம்பகத் தன்மை, நேர்மை, இறையுணர்வு ஆகியன உறுதி செய்யப்பட வேண்டும். அத்தோடு இஸ்லாமிய வரலாற்றின் அனைத்துக் கட்டங்களும் இஸ்லாமிய கண்ணோட்டத்திலான மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப் பெற வேண்டும். எந்த ஒரு கால கட்டம் குறித்தும் நாம் கொண்டுள்ள புரிந்துணர்வு மீள்மதிப்பீடு செய்யப்படும் வேளையில் பெரும் மாற்றங்களுக்குள்ளாகும் என்பது அண்மைக் காலங்களில் தெளிவாகியுள்ளது. உதுமானிய அரசின் ஆவணங்கள் அனைத்தும் திறக்கப்பட்டு நானூறு முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அவற்றை மீள் பரிசீலனை செய்த வேளை நிகழ்ந்தது இதுவே. உமையா, அப்பாஸிய காலங்களோடு இற்றை நாள் வரையிலான பின்னைய காலப்பகுதிகள் குறித்தும் நாம் கொண்டுள்ள கருதுகோள்களிலும் நிச்சயம் பெரு மாற்றங்கள் இதனால் விளையும். எமது வரலாறு குறித்துக் கற்பிக்கப்பட்டு வந்துள்ள படுபயங்கரமான பொய்ம்மைகள், கருத்துப் பிறழ்வுகள் அனைத்தும் வெளிச்சத்துக்கு வரும்.

முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் வரலாறு குறித்த இஸ்லாமிய நோக்குகளின் பண்புகளை வெளிக்கொண்டுவரக் கூடியனவான, தெளிவான ஆக்கங்களை உருவாக்க வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். அத்துடன், இஸ்லாமிய வரலாற்றின் பதிவுகள் பரீட்சிக்கப்படுவதற்கான திறனாய்வு முறைகளின் உண்மையான பரிமாணங்களையும் அவர்கள் வெளிக்கொணர வேண்டும்.

இதே வேளை எமது இளைஞர்களுக்கும் ஓர் எச்சரிக்கையை விடுக்க நான் விரும்புகின்றேன். இஸ்லாமிய வரலாற்றின் நிகழ்வுகளையும், பெரும் தலைவர்களையும் விளங்கிக் கொள்ளும் தமது முனைப்புகளில், சில வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளனவற்றை அவ்வவ்வாறே நம்பி விடவோ, அவற்றைத் தீவிரமான திறனாய்வுகளுக்கு உட்படுத்தாமல் ஏற்றுக் கொள்ளவோ வேண்டாமென அவர்களுக்கு நான் கூறிக் கொள்கின்றேன். இல்லாதுவிடின், அவர்கள் இஸ்லாமிய வரலாற்றின் திரிபுபடுத்தப்பட்ட விவரணங்களையே ஈட்டிக்கொள்வார்கள். ஏனெனில் தபரீயும் ஏனையோரும் எந்த அறிவிப்பாளர்களில் தங்கியிருந்தார்களோ, அவர்கள், தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், அரசியல் குழுச் சார்புகள் ஆகியவற்றின் செல்வாக்குகட்கும் பாதிப்புகளுக்கும் ஆட்பட்டவர்களாகவே இருந்துள்ளார்கள். உமையா, அப்பாஸியக் காலங்கள் பற்றிய விவரணங்கள், அவ்வவற்றின் அறிவிப்பாளர்களது தனிப்பட்ட நோக்குகள், சார்புகளின் செல்வாக்குகட்கு ஆட்பட்டனவாகவே அமைந்திருந்தன. ஆகவே, இஸ்லாமிய வரலாறு, முஸ்லிம் கிரந்த கர்த்தாக்களால் மீளவும் எழுதப்படுதல் வேண்டும். அன்னவர் இறைவனையும் அவனது தூதரையும் விசுவாசித்தவர்களாக, எமது வரலாற்றில் இஸ்லாம் பதித்துள்ள செல்வாக்கினை அறிந்து விளங்கியவர்களாக, எமது எதிர்காலத்தில் அது கொண்டிருக்கக்கூடிய தாக்கங்களை உய்த்துணரக்கூடியவர்களாக இருத்தல் அவசியம்.

## ஸீறாவுக்கான ஆதார நூல்கள்

ஸீறா கற்பதற்கான ஆதாரங்கள் பல உள. அவற்றுள் மூல ஆதாரங்களாக அமைந்தன சில: குர்ஆன், ஹதீஸ், ஷமாயில் - தளாயில் நூல்கள், ஸீறாவையே மையமாகக் கொண்ட நூல்கள், வேறும் பொது வரலாறு சம்பந்தப்பட்ட நூல்கள். இரண்டாந்தர, மேலதிக ஆதாரங்களாக அமைந்தன சில: இவை நேரடியாக ஸீறாவையோ, வரலாற்றையோ குறிப்பிட்டுக் கையாள்வனவல்ல. வேறு விடயங்கள் சம்பந்தப்பட்டனவாயினும், ஸீறா அறிவுத் தேட்டத்துக்குப் பயன்படக் கூடிய

*விவரங்கள் பொதிந்தன. இவற்றுள் இலக்கியம், கவிதை, சரிதைகள், இல்ம்-அர்-ரிஜால், புவியியல், பிக்ஹ், அகராதிகள், வம்சாவளி நூல்கள் முதலியன அடங்குகின்றன. ஸீறா கல்வி முனைவில் இவையனைத்தும் ஒன்றிணைத்துக் கற்கப்படக் கூடுமாயின் மிகவும் பூரணமான, தெளிவான ஒரு காட்சியை நாம் ஈட்டிக் கொள்ளலாம்.*

*இந்த மூலாதார நூல்கள், அவற்றின் பெறுமானங்கள், அவற்றை நாம் எவ்வெவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பன குறித்துப்போதிய தெளிவினைத் தர நான் முயல்கின் றேன். ஆய்வாளர்கள் முதலில் மனதில் பதித்துக் கொள்ள வேண்டிய ஒரு விஷயம், இவையனைத்தும் ஒரே தரத்தனவல்ல என்பது. வலுவிலும், ஆதார பூர்வ தன்மையிலும் வேறுபட் டனவான இவை சமமானவையாகக் கொள்ளப்படக் கூடியன வல்ல. குர்ஆனிய வாசகம் ஒன்றனை அல்லது ஹதீஸ் அறி விப்பு ஒன்றனை வரலாற்று அல்லது இலக்கிய விவரணம் ஒன்றனுக்கு சமமாகக் கொள்தல் இயலாது. இந்த மூலாதாரங் கள் அனைத்தும் தனித்தனி மதிப்பீடு செய்யப்பட்டு அவ்வவற் றுக்குரிய தரத்தில் வைத்துக் கணிக்கப்படல் வேண்டும்.*

*ஸீறா மூலாதார நூல்களின் வரிசையில் முதலாவதாக அமைந்தது குர்ஆன். குர்ஆன் ஆனது, முஹம்மத் (ஸல்) அவர் களுக்கு, வஹீ மூலமாக, சொல்லளவிலும், கருத்தளவிலும் தெளிவாக அறிவுறுத்தப்பட்ட இறையோனின் சத்திய வாக்கு களாகும். இஸ்லாமிய அகீதாவையும், ஷரீஆவையும் விளக்கி வைக்கும் வாசகங்கள் பொதிந்தது அது. அஹ்காம் (நியமங் கள்)களாக அமைந்த வாசகங்களையும் கொண்டதான குர்ஆன், இஸ்லாமிய சமூகத்தையும் அதன் வளர்ச்சிப் படிவங் களையும் சரிவர விளங்கிக் கொள்ள அத்தியாவசியமானது. அஹ்காம் வாசகங்கள், நபிகள் (ஸல்) அவர்களது முதலாவது இஸ்லாமிய அரசிலான சமூக, பொருளாதார, அரசியல் விவ காரங்களின் நிர்வாக முறைகள் குறித்துப் போதிய தெளி வினைத் தருவனவாக அமைந்துள்ளன.*

*ஸீறா காலத்திய சில நிகழ்வுகள் குறித்த பிரஸ்தாபங்களும் குர்ஆனில் பொதிந்துள்ளன. பத்ர், உஹுத், அல்கன்தக், ஹுனைன்[1] என்பனவற்றை உதாரணங்களாகக் குறிக்கலாம். முக்கியத்துவம் வாய்ந்த இந்த யுத்தங்கள் நிகழ்வதற்கான பின்னணிகள், சூழல்கள் என்பனவற்றுக்கும் மேலாக அவற்றின் மனோவியல் பரிமாணங்களையும் பொதிந்துள்ளது குர்ஆன். இதிலிருந்து கிட்டும் துல்லியமான, தெளிவான விவரங்களை வேறு எந்த மூலாதாரங்களிலும் கண்டுகொள்ள இயலுவதில்லை.*

*ஹிஜாஸின் முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் இடையிலான உலோகாயுத, சிந்தனாவாத பிரச்சினைகள் குறித்த சரியான விவரணங்களையும் குர்ஆன் தருகின்றது.[2] கழிந்து போன முன்னை சமுதாயங்கள் பற்றிய குர்ஆனிய பிரஸ்தாபங்கள், வரலாறு பற்றிய முஸ்லிம்களின் கண்ணோட்டத்தைப் பரந்ததாக்கி வைத்தன. முஸ்லிம் வரலாற்றுக் கல்வியானது முன்னைய நபிமார்களதும், சமூகங்களதும் வரலாறுகளையும் தன்னுள் கொண்டிருந்தது. அராபிய தீபகற்பத்துக்கு அப்பாலான நிகழ்வுகளிலும் கொண்டிருந்த கரிசனை காரணமாக (உதாரணமாக ரோம-பாரசிகப் போர்கள்) முஸ்லிம்கள், ரோமர், பாரசிகர், துருக்கியர், அபிஸீனியர் ஆகியோரின் வரலாறுகளையும் பதிவு செய்யலாயினர்.*

*எவ்வாறாயினும் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய விவரணங்களைக் குர்ஆனில் கண்டு கொள்ளலாம் எனக் கருதி விடக் கூடாது. ஏனெனில், அடிப்படையில் அது வரலாற்றுப் பாட நூல் அல்ல. முழு வாழ்க்கைக்குமான ஒரு யாப்பாக அமைந்தது குர்ஆன். மேலும் ஏராளமான வாசகங்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் சந்தர்ப்ப சூழல், காலம் என்பன குறித்து*

---

*1. பத்ர் பற்றிய விவரங்கள் ஸூறா அல்-அன்பாலில் (8) கிடைக்கின்றன. உஹுத் பற்றி ஸூறா ஆல-இம்ரான் (3), அல்-கன்தக் குறித்து ஸூறா அல்-அஹ்ஸாப் (33), ஹுனைன் குறித்து ஸூறா அல்-தவ்பா (9) ஆகியவற்றில் போதிய விவரங்கள் உள்ளன. ஏனைய ஸூறாக்களிலும் இவை குறிக்கப் பெற்றுள்ளன.*

*2. சிந்தனாவாத முரண்பாடுகள் ஸூறா அல்-பகறா(2)விலும் உலோகாயுத முரண்பாடுகள் ஸூறா அல்-ஹஷ்ர், அல்-அஹ்ஸாப் ஆகியவற்றிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.*

*அறிந்து கொள்வது சிரமமான கருமமாக உள்ளது. ஏனெனில் அந்த விவரங்கள் குறித்த சரியான அறிவிப்புகள் கிட்டு வதில்லை. கிடைக்கக் கூடிய அறிவிப்புகளும் முரண்பட்ட தகவல்களையே தருகின்றன. முதலில் பிரச்சினைக்குரிய தகவல்கள் ஆதாரபூர்வமானவற்றிலிருந்து தனியே பிரித்தெடுக் கப்பட வேண்டும். பின்னரும் முரண்பாடுகள் காணப்படு மாயின், அவை தீர விசாரிக்கப்பட்டு முடிவு காண வேண்டும்.*

*மனத்திலிருத்திக் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம், ஆதார பூர்வமான தப்ஸீர்களின் துணையுடனேயன்றி குர்ஆனிலிருந்து நாம் பூரண பயன்களை ஈட்டிக் கொள்ள இயலாது என்பது. குறிப்பாக அல்-தப்ஸீர் அல்-மஃதூர் (அறிவிப்புகள் மூலமான தப்ஸீர்கள்: அல்-தபரீ, இப்ன் கஸீர் ஆகியன) . மேலும் நாஸிக் வ அல்-மன்சூக், அஸ்பாப் அல்-நுஸூல், உலூம் அல்-குர்ஆன் நூல்களும் கலந்து கொள்ளப் பட வேண்டும்.*

*சமகால வரலாற்றாசிரியர்களுள் சிலர், இத்தகு மேலதிக நூல்களைக் கலந்து கொள்வது தமது தரத்துக்கு உகந்ததொரு கருமமல்ல எனக் கொள்கின்றனர். அரபு மொழியின் கருத்து களும், மொழியியல் பாங்குகளும் குறித்துத் தாம் கொண் டுள்ள அறிவு, எந்தவொரு மதிப்பீட்டினையும் மேற்கொள்ளப் போதுமானது என்பதே அவர்களது நிலைப்பாடு. இதனால் அவர்கள் பல்வேறு தவறுகளை இழைக்கக்கூடிய சாத்தியங் கள் அதிகம். உதாரணமாக மேல்வரும் வாசகத்துக்கான அவர் களது விளக்கத்தை நாம் கொள்ளலாம்: "அவன் எத்தகைய வனென்றால், எழுத்தறிவில்லா மக்களில், அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினான் .." (62 :2). இங்கு 'அல்-உம்மிய்யீன்' என்பது எழுதவும் வாசிக்கவும் அறிவில்லாமை மட்டுமன்றி, தனது மதம் குறித்தும் அறிவீனரான ஒருவர் என்றே கீழைத் தேயவியல் ஆய்வாளர்கள் கருத்துக் கொண்டனர். என்றாலும் குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்களை 'அல்-நபி அல்-உம்மி' (எழுதப் படிக்கத் தெரியாத தூதர்) (7:157)என்றே பல சந்தர்ப் பங்களிலும் குறிக்கின்றது. தான் போதனை செய்ய வேண்டிய*

*மதத்தை அறியாதவராகத் தான் ஒரு தூதர் அனுப்பப்பட்டுள்ளார் எனக் கருதுவது புத்திக்குச் சற்றும் ஒவ்வாத ஒரு விடயமாகும்.*

*நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ள தப்ஸீர்களைக் கலந்து கொள்வது அறிவியல் தேட்டம் கொண்டார்க்குக் கடன். குர்ஆனிய சொற்கள் அவற்றின் சரியான கருத்துகள் கொடுக்கப்பெற வேண்டும். ஆய்வாளர்கள் அறிவியல் நேர்மை கொண்டவர்களாயின், ஆதாரபூர்வமான தப்ஸீர்களைக் கலந்து, குர்ஆனிய வாசகங்களின் உண்மையான கருத்துகளை வெளிக் கொணர வேண்டும். மாறாக, தத்தம் விருப்பு வெறுப்புகளுக்கு இயையவோ, அல்லது ஏதேனும் ஓர் அபிப்பிராயத்துக்கு அல்லது மத்ஹபுக்குச் சார்பாகவோ கருத்துகள் தெரிவித்தல் தகுமான கருமமல்ல. நபிகள் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்: "யார் குர்ஆனுக்குத் தமது சொந்தக் கருத்தைக் கொண்டோ, தமக்கு அறிவில்லாத ஒன்றைக் கொண்டோ விளக்கம் அளிக்கின்றாரோ, அவர் நரகத்தைத் தமது இருப்பிடமாக்கிக் கொள்ளட்டும்."*

*ஸீறா கற்கையில் ஹதீஸின் முக்கியத்துவம் குறித்துப் பார்ப்போம். ஹதீஸ் ஆனது இஸ்லாமிய நம்பிக்கைகள், நடைமுறைகள் ஆகியனவற்றை அறிவுறுத்துகின்றது. அல்-அஹ்காம் பற்றிய ஹதீஸ்கள், நோன்பு, தொழுகை, ஹஜ், ஸகாத் முதலாய வணக்க வழிபாடுகள், அரசியல், பொருளாதார நிர்வாக முறைகள் ஆகியனவற்றைத் தெளிவுறுத்துகின்றன. ஹதீஸ் அறிவு இல்லாதவிடத்து இஸ்லாம் குறித்த பூரணமானதொரு காட்சியைக் கண்டு கொள்தல் இயலாது. ஹதீஸ் மூலம் நாம் தெரிந்து கொள்ளும் அனைத்து விடயங்களும் நபிகள் (ஸல்) அவர்கள் காலத்தின், நிர்வாக, பொருளாதார, சமூக, கலாச்சார துறைகளுடன் சம்பந்தப்பட்டனவாக அமைந்துள்ளன. அடுத்து வந்த காலப்பகுதியிலும் இதனைக் கண்டுகொள்ள முடிந்தது. ஏனெனில் ஆரம்ப தலைமுறையினர், எப்போதும் ஸுன்னாவுக்கு இயைந்ததாகவே தமது வாழ்வினை அமைத்துக் கொள்ளலாயினர். இது போலவே, ஸஹீஹ் அல்-புஹாரி முதலிய ஹதீஸ் தொகுப்புகள் தம்முள்*

மகாஸி, சரிதைகள் என்பன சம்பந்தப்பட்ட பகுதிகளையும் கொண்டுள்ளன.

ஹதீஸ் தொகுப்புகளில் நாம் காணக் கூடியதாயுள்ள ஸீறா சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆதாரபூர்வமானவை என்பதில் ஐயங்களுக்கு இடமில்லை. ஆதலால், அவை, உறுதியான வையாக ஏற்கப்பட்டு மகாஸி, பொது வரலாற்று நூல்களில் கொடுக்கப்பட்ட தகவல்களுக்கு மேலாகக் கொள்ளப்பட வேண்டும். அவை ஸஹீஹ் ஹதீஸ் தொகுப்புகளில் இடம் பெற் றிருப்பின் அவற்றிற்கு விசேட இடம் அளித்தல் வேண்டும். ஏனெனில் ஹதீஸ் வல்லுனர்கள் ஹதீஸ்களின் இஸ்னாத், மத்ன் ஆகியவற்றைக் கடுமையான பரிசீலனைக்கு உள்ளாக்கி அவற்றின் ஏற்புடைமையை நிர்ணயிப்பதற்குப் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர். ஹதீஸ்கள் மீது பிரயோகமான முறைமைகளும், திறனாய்வுகளும் வரலாற்று நூல்கள் மீது பிரயோகமாகவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் ஹதீஸ் தொகுப்புகள் தமது இயல்பு காரணமாக, மகாஸிகள், ஸீறாவின் நிகழ்வுகள் பற்றிய விவரங்களைத் தருவதில்லை. பிரதியாக அவற்றின் சில அம்சங்களை மட்டுமே அவை குறித்துச் செல்கின்றன. அதாவது, தொகுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டன குறித்தும், ஹதீஸ் குறித்தும் அவற்றின் தரத்தை நிர்ணயம் செய்ய அவர் வகுத்துக்கொண்ட விதிமுறைகளுக்கு இயைபானவை மட்டுமே பதியப்பட்டன. ஆக, நிகழ்வுகள் குறித்த பூரணமான விவரங்களை அவை தருவதாக இல்லை. ஆய்வாளர் மயக்கங்களுக்கு ஆளாகாது இருக்க, ஸீறா கிரந்தங்களி லிருந்து தேவையான விவரங்களைச் சேகரித்துப் பூரணமான காட்சியை அமைத்தெடுத்தல் வேண்டும்.

ஹதீஸ் நூல்கள் ஒன்றில் ஹதீஸ் அறிவிப்புச் செய்த தோழர்களின் பெயர் வரிசைகளில் அமைந்திருந்தன - மஸானித் நூல்கள் இவை. இதில் சிறப்பிடம் பெறுவன வற்றுள் குறிப்பிடத்தக்கது இமாம் இப்ன் ஹன்பல் அவர்

*களின் முஸ்னத். அன்றேல் பொருள் வரிசையில் அமைந் துள்ளன - பிரபல்யமான ஹதீஸ் கிரந்தங்கள் ஆறினைப் போல (ஸஹீஹ் ஸித்தா). இரு வகைத் தொகுப்புகளுமே காலவரை யறை ஒழுங்கு முறையில் அமைந்தனவல்ல. ஆதலினால் ஹதீஸ் களின் காலங்களை நிர்ணயிப்பதில் ஆய்வாளர் சிரமங்களுக் குள்ளாவர். எவ்வாறாயினும் பெரும்பாலான சந்தர்ப்பங் களில், எதிர் கொள்ளக்கூடிய சங்கடங்களை நிவர்த்தி செய் கின்றன, கால ஒழுங்கின் அடிப்படையில் அமைந்தனவான, ஸீறா, வரலாற்று நூல்கள். ஹதீஸ் துறையில் தெளிவான ஆதி நூல்களாக எமக்குக் கிட்டியுள்ளவை: மாலிக்கின் முவத்தா, புஹாரி, முஸ்லிம் ஆகியோரின் ஸஹீஹ், அபூதாவூதின் ஸுனன், அல்திர்மிதீ, அல்-நஸயீ, இப்ன் மாஜா என்பனவற் றோடு அல்-தாரமீ, அஹ்மத் இப்ன் ஹன்பல் ஆகியோரின் முஸ்னத்கள்.*

*அல்-தளாயில், அல்-ஷமாயில் (நபித்துவ ஆதாரங்கள், நபியின் குணாதிசயங்கள்) நூல்களானவை, நபிகளாரின் தகைமைகளுக்கான ஆதாரங்களாய் அமைந்து அற்புதங்கள், அடையாளங்கள் குறித்துப் பேசுகின்றன.*

*நபித்துவத்தின் பண்புகள், அடையாளங்கள், ஆதாரங் கள்; நபிகளாரின் பண்புகள் என்பன குறித்த தனி அத்தி யாயங்களை ஹதீஸ் தொகுப்புகளில் கண்டு கொள்ளலாம். என்றாலும் இந்த விடயங்களை மட்டுமே தமது தொகுப்பு களின் கருப்பொருளாகக் கொண்ட ஆய்வாளர்களைக் காண் போம்.*

*- முஹம்மத் இப்ன் யூஸுப் அல்-பர்யாபீ ( ம. 212ஹி.) ஹதீஸ் வல்லுனர், நூல் ஆதாரபூர்வமானது (தளாயில் அல்-நுபுவ்வா)*

*- அலீ இப்ன் முஹம்மத் அல்-மதாயினீ (ம. 215ஹி.) (ஆயாத் அல்-நபீ)*

*- தாவூத் இப்ன் அலீ அல்-இஸ்பஹானீ (ம. 270ஹி.) (அஃலாம் அல்-நுபுவ்வா)*

*- இப்ன் குதைபா (ம. 273ஹி.) (அஃலாம் ரஸூல் அல்லாஹ்)*

*- இப்ன் அபூ ஹாதிம் (ம. 327ஹி.) (அஃலாம் அல்-நுபுவ்வா)*

*- அபூக்ர் இப்ன் அபூ அல்-துன்யா (ம. 281ஹி.)*

*- அபூ அப்த்-அல்லாஹ் இப்ன் முன்தா (ம. 395ஹி.)*

*- அபூ நுஐம் அஹ்மத் இப்ன் அப்த்-அல்லாஹ் அல்-இஸ்பஹானீ (ம. 415ஹி.) (தஸ்பீத் தளாயில் அல்-நுபுவ்வா) இது பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

*- அபூ அப்பாஸ் ஜஅபர் இப்ன் முஹம்மத் அல் முஸ்தக் பிரீ (ம. 432ஹி.)*

*- அபூபக்ர் அஹ்மத் இப்ன் அல்-ஹுஸைன் அல்-பைஹகீ (ம. 458ஹி.) இவரது நூல் தளாயில் அல் நுபுவ்வா வ மஅரிபத் அஹ்வால் ஸாஹிப் அல்-ஷரீயா பிரசுரமாகியுள்ளது. இதில் ஸஹீஹ், ஹஸன் ஹதீஸ்களோடு ளயீப், மவ்தூ ஹதீஸ்களும் கலந்துள்ளன. அல்-தஹபீ இதனை மெச்சியுள்ளார்.*

*- அபூ அல்-ஹஸன் அலீ இப்ன் முஹம்மத் அல்-மாவர்தீ (ம. 450ஹி.) இவரது நூலும் பிரசுரமாகியுள்ளது.*

*- அபூ அல்-காஸிம் இஸ்மாயீல் அல்-இஸ்பஹானீ (ம. 535ஹி.)*

*- உமர் இப்ன் அலீ இப்ன் அல் முலக்கின் (ம. 804ஹி.) (கஸாயிஸ் அப்ளல் அல்-மஹ்லுகீன்)*

*- ஜலால் அல்-தீன் அல்-ஸுயூதீ (ம. 911ஹி.) (அல்-கஸாயிஸ் அல்-குப்ரா) இவரது நூல் பிரசுரமாகியுள்ளது. இது ஸீறா, தளாயில், ஷமாயில் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.*

*பண்புகள் குறித்த தொகுப்புகள் (கஸாயிஸ்) பல. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டுமே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த விஷயம் குறித்து எழுதப்பட்டுள்ள அத்துணை நூல்களும் இந்த நிரலில் உள்ளடக்கப்படவில்லை. வேறும் பல நூல்களும் உள.*

*ஷமாயில் நூல்கள், அஹ்லாக் (ஒழுக்க நெறிகள்), ஆதாப் (நன்னடத்தைகள்), நபிகளார் குறித்த விவரணைகள் என்பன பற்றிப் பேசுகின்றன. இந்த விடயம் மாத்திரம் குறித்து எழுதிய ஆரம்ப கிரந்த கர்த்தர்கள் சிலர்:*

*- தாவூத் இப்ன் அலீ அல்-இஸ்பஹானீ (ம. 270ஹி) (ஸிபத் அஹ்லாக் அல்-நபீ)*

*- அல்-ஹாபிஸ் அல்-திர்மிதீ (ம. 279ஹி.) (அல்-ஷமாயில் அல் நபவிய்யா வ அல்-கஸாயிஸ் அல் முஸ்தபவிய்யா). இது பிரசுரமாகியுள்ளது.*

*- அபூ அல்-ஷெய்க் அப்த் அல்லாஹ் இப்ன் முஹம்மத் இப்ன் ஹயான் அல்-இஸ்பஹானீ (ம. 339ஹி.) (அஹ்லாக் அல்-நபீ வ ஆதாபுஹூ) இது பிரசுரமாகியுள்ளது.*

*- அபூ ஸயீத் அப்த் அல்-மாலிக் இப்ன் முஹம்மத் அல்-நீஸாபூரீ (ம. 406ஹி.) (கிதாப் ஷரப் அல்-முஸ்தபா)*

*- அபூ அப்பாஸ் அல்-முஸ்தக்பிரீ (ம. 432ஹி.) (ஷமாயில் அல்-நபீ)*

*- அல்-காதி இயாத் (ம.544ஹி.) (கிதாப் அல்-ஷிபா பி தஃரீப் ஹுகூக் அல் முஸ்தபா) இது பிரசுரமாகியுள்ளது.*

*- அல்-ஹாபிஸ் அல்-ஸுயூதீ (ம. 911ஹி.) (மனாஹில் அல்-ஸபா பீ தக்ரீஜ் அஹாதீஸ் அல்-ஷிபா). இது பிரசுரமாகி யுள்ளது.*

*ஏராளமான உலமா, அல்-ஷிபா (நிவாரணி) குறித்துப் பேசினர். அவர்களுள்ளாவோர்:*

*- அலீ அல்-காரீ (ம. 1014ஹி) (ஷர்ஹ் அல் ஷிபா) இது பிரசுரமாகியுள்ளது.*

*- அல் கபாஜீ (ம. 1069ஹி) (நஸீம் அல்-ரியாள் பீ ஷர்ஹ் அல்-ஷிபா லீ அல்-காதி இயாத்)*

*- அல்-ஹாபிஸ் இப்ன் கஸீர் (ம. 884ஹி) (ஷமாயில் அல் ரஸூல்) இது பிரசுரமாகியுள்ளது.*

*குர்ஆன் அல்-கரீமுக்கும், அல்-ஹதீஸ் ஷரீபுக்கும் அடுத்த படியாக, செம்மையானவையாகக் கருதப்படுவன ஸீறா தொகுப்புகள். பாரிய அறிவியல் பெறுமதி கொண்டனவாக அவை விளங்குவதற்கு ஒரு முக்கிய காரணம், ஆரம்ப ஸீறா நூல்கள் மிக ஆரம்ப காலத்திலேயே எழுதப்பட்டன என்பதாகும். சரியாகக் கூறுவதாயின் , தாபியூன்களின் தலைமுறையிலேயே - நபித் தோழர்கள் வாழ்ந்து வந்த காலத்திலேயே - இவை எழுதப்பட்டன. மேலும் இவை எழுத்தில் வடிக்கப்படுவதனை அவர்கள் தடுக்கவோ, நிராகரிக்கவோ இல்லை. நபித்தோழர்கள் ஸீறா குறித்து பரந்த, தெளிவான அறிவைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் ஸீறாவின் காலத்தில் வாழ்ந்து, அதன் நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்கள். நபிகள் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு, பற்றுணர்வு, ஹலால் - ஹறாம் குறித்த விடயங்களில் ஸுன்னாவைப் பேணவும் பிரயோகிக்கவும் காட்டிய பிரயாசை என்பன காரணமாக, ஸீறா பற்றிய தகவல்களைப் பரப்பவும் அவை குறித்துக் கற்கவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் அவர்கள் உந்துதல் பெற்றார்கள். இதுவே இஸ்லாமிய போதனைகளின் செயலுருவாக்கமாக அமைந்தது.*

*தாபியூன்கள் மத்தியில் இருந்தும், அவர்களைப் பின் தொடர்ந்து வந்தோரில் இருந்தும் ஸீறா ஆக்கங்கள் எழுதிய ஆரம்ப கிரந்த கர்த்தாக்கள் குறித்து ஏராளமான நவீன ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[3] என்றாலும் அவை, அல்-ஜர்ஹ் வ அல்-தஃதீல் குறித்து, அவற்றின் தரங்கள் பற்றிப் பேசவில்லை. அவர்களது ஆக்கங்கள் ஹதீஸ் சேகரிப்பிலிருந்தும் வித்தியாசப்பட்டன. முஸ்தலஹ் அல்-ஹதீஸ் நெறிகளுக்கு இயைய மேற்கொள்ளப் பட்டனவல்ல அவை. ஆரம்ப கிரந்த கர்த்தர்கள் வருமாறு:*

*3. இந்தத் துறையில்* Horovitz, Margoliouth, *அப்த்-அல்-அஸீஸ் அல்-தூரி, ஸாலிஹ் அல்-அலீ, ஜவாத் அலீ, ஸையித் இஸ்மாயில் காஷிப், ஹுஸைன் நஸ்ர்,* Fück, *காலித் அல்-அஸலீ, முஹம்மத் முஸ்தபா அல்-அஸமீ முதலாய பேரறிஞர்களின் ஆக்கங்கள் குறிப்பிடத் தக்கன.*

*- அப்பான் இப்ன் உத்மான் இப்ன் அப்பான் (ம.101 - 105?ஹி) இவர் நம்பிக்கைக்குரிய ஒரு தாபிஇ ஹதீஸ் வல்லுனர் ஆவார்.*

*- உர்வா இப்ன் அல்-ஸுபைர் இப்ன் அல்-அவ்வாம் (ம. 94ஹி) இவர் நம்பிக்கைக்குரிய ஒரு தாபிஇ ஹதீஸ் வல் லுனராக விளங்கியதோடு மதீனாவின் பிரசித்தம் வாய்ந்த புகஹாக்களுள் ஒருவராக அமைந்திருந்தார்.*

*- ஆமிர் இப்ன் ஷராஹீல் அல்-ஷஅபி (ம. 103ஹி) இவர் நம்பிக்கையான ஒரு ஹதீஸ் அறிஞர். இவர் மகாஸி நூல் ஒன்றும் எழுதியுள்ளார்.*

*- ஆஸிம்இப்ன் உமர் இப்ன் கதாதா (ம. 119ஹி) இவர் நம்பிக்கையான ஹதீஸ் அறிஞர்.*

*- முஹம்மத் இப்ன் முஸ்லிம் இப்ன் ஷிஹாப் அல்-ஸுஹ்ரீ (ம. 124ஹி). தனது காலத்தின் மிகச் சிறந்த ஹதீஸ் அறிஞர் களுள் ஒருவர். அல்-ஜர்ஹ் வ அல்-தஃதீல் பேரறிஞர்கள் இவரை நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக நிறுவியுள்ளனர்.*

*இவர்தான் இஸ்னாத்கள் அனைத்தையும் தனியாக ஒரு முகப்படுத்தி அமைக்கும் முறையை வகுத்துக் கொண்டோரில் முதன்மையானவர். அதன் மூலம் இஸ்னாத்களின் இடையீடு இன்றி நிகழ்வுகளைக் கோவைப்படுத்திக் கொள்ள முடிந்தது. தனது ஆசான்கள் பலரிடமிருந்தும் இவர் ஹதீஸ் அறிவிப் புகள் செய்தார். எந்த ஆசிரியரிடமிருந்து எந்த ஹதீஸ் பெற் றுக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்காமை குறித்துக் குற்றஞ் சாட்டப்பட்டவர் இவர். காதி இயாத் தனக்கு முன்னைய அறிஞர்களது அபிப்பிராயங்களின் அடிப்படையில் முன்வைத்த இத்தகு குற்றச்சாட்டுகளை அல்-நவவீ, அல்-ஈராக்கி முதலிய பேரறிஞர்கள் மறுத்துரைப்பர். ஸுஹ்ரீ தான் அறிவிப்புச் செய்வன குறித்துத் தெளிவானவராக இருந்தார்; மேலும் அவரது ஆசிரியர்கள் அனைவருமே நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருந்தனர் என்பதால் அவர் தவறு இழைத்துள்ளார் எனக் கூற முடியாது என அவர்கள் கூறுவர்.*

*- யஸீத் இப்ன் ரூமான் அல்-அஸதீ அல்-மதனீ (ம.135ஹி) இவர் நம்பிக்கைக்குரிய ஒரு தாபிஇ. மேலும் உர்வா, அல்-ஸுஹ்ரீ ஆகியோரின் ஆதாரங்களின் பேரில் மகாஸி நூல் ஒன்றையும் ஆக்கினார். இவரிடமிருந்து பெற்ற விவரங்களை இப்ன் இஸ்ஹாக் அறிவிப்புச் செய்வார்.*

*- அப்த்-அல்லாஹ் இப்ன் அபூபக்ர் இப்ன் அம்ர் இப்ன் ஹஸ்ம். (ம. 153ஹி) இவர் நம்பிக்கையான தாபிஇ ஹதீஸ் அறிஞர்.*

*- மூஸா இப்ன் உக்பா (ம.140ஹி) நம்பிக்கையான ஹதீஸ் அறிஞர்; அல்-ஸுஹ்ரீயின் மாணவர்களுள் ஒருவர். இவரது மகாஸி நூல்களை விதந்துரைக்கும் இமாம் மாலிக், மகாஸியின் மிகவும் நம்பிக்கையான அறிவிப்பாளர் இவர் எனக் கூறுவார். யஹ்யா-இப்ன் மஈன் கூறுவார் "அல்-ஸுஹ்ரீ யிடமிருந்து மூஸா இப்ன் உக்பா அறிவிப்புச் செய்தனவே இந்த நூல்களில் மிகச் சிறந்தது." இமாம் அல்-ஷாபிஇ கூறுவார்: "மூஸா இப்ன் உக்பாவின் நூல் போல தெளிவான, ஸஹீஹ் ஆன வேறு ஆக்கங்கள் எதுவும் இல்லை - ஏனைய நூல்களில் குறிக்கப்பட்டன பல இதில் இல்லாமலும், அளவில் இது சிறிதாக இருந்த போதிலும் கூட." அல்-தஹபீ கூறுவார்: "மூஸா இப்ன் உக்பாவின் மகாஸீ அளவில் பெரியதோர் ஆக்கமல்ல; அதனை வாசிக்க நாம் கேட்டுள்ளோம். அவற்றில் அதிகமானவை ஸஹீஹ், முர்ஸல் ஜெய்யித் ஆனவை. என்றாலும் இது மிகவும் சுருக்கமானது. இது மேலும் விளக் கமாக அமைய வேண்டும்."*

*- முஹம்மத் இப்ன் அப்த்-அல்-ரஹ்மான் இப்ன் நவ்பல் (ம. 131ஹி) மனது மகாஸி நூலில்.*

*- ஸுலைமான் இப்ன் தர்கான் அல்-தீமீ (ம.143ஹி). இவர் நம்பிக்கையான தாபிஇ ஹதீஸ் அறிஞர்.*

*-முஅம்மர் இப்ன் ராஷித் (ம. 153ஹி). இவர் நம்பிக்கை யான ஹதீஸ் அறிஞர். அல்-ஸுஹ்ரீயின் மாணவர் இவர். அல் தஹபீ கூறுவார்: உண்மை, விவேகம், பக்தி, எளிமை, பகுத் தறிதல் என்பன கொண்ட அறிவு மிக்கவர் இவர்.*

*- முஹம்மத் இப்ன் இஸ்ஹாக் (ம.151ஹி). அல்ஸுஹ்ரீயின் மாணவர்களுள் ஒருவரான இவர் மகாஸி துறையில் தலைமை ஸ்தானம் வகிப்பவர். இவரது அறிவிப்புகள் ஸஹீஹ் தரத்தை எட்டுவதில்லை. என்றாலும் அவர் முதல்லிஸ் என்பதால், இஸ்னாத்தில் யாரேனும் ஒருவர் இவருக்கு அறிவித்ததாகக் கூறுவாராயின் அவை ஹஸன் தரத்தை அடைந்து கொள் கின்றன. அவரது ஸீறா, ஹஸன், ளயீப் ஆகிய இரு ஹதீஸ் களையும் கொண்டுள்ளன. இப்ன் அதீ கூறுவார்: "நான் அவரது ஹதீஸ்களைப் பரிசீலித்துள்ளேன். என்றாலும் அவற் றுள் ளயீப் என உறுதிப்படுத்தக் கூடிய எதையும் நான் காணவில்லை. ஏனையோரைப் போலவே, சில இடங்களில் இவர் தவறுகள் இழைத்திருக்கலாம். அல்லது குழப்பத்துக்கு ஆளாகியிருக்கலாம். நம்பிக்கைக்குரிய அறிஞர்களும், இமாம் களும் இவரிடமிருந்து மேற்கோள் காட்டத் தயங்கியதில்லை; அவருக்கு மறுப்புகளும் கிட்டவில்லை."*

*இந்தக் கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றன. அதற்குக் காரணம் இப்ன் அதீ ஹதீஸ் அறிவிப் புகள் மீதான அங்கீகாரம் அளிப்பதில் காட்டும் அதீத கவனம் மாத்திரமல்ல; அறிவிப்புகள் மீதான பரீட்சைகளின் பின்னர் இவை தெரிவிக்கப் பட்டுள்ளமையால் ஆகும். மேலும் அவை, இஸ்ஹாக்கை, ஊழ்வினை விசுவாசி, ஷியா, தத்லீஸ் ஆகிய குற்றஞ்சுமத்தல்களுக்கு ஆளாக்கிய முன்னைய திறனாய் வாளர்களது அபிப்பிராயங்கள் மீதானவையல்ல இப்ன் அதீ யின் கருத்துகள். வேறு இடங்களில், ஹிஷாம் இப்ன் உர்வா இப்ன் அல்-ஸுபைரின் மனைவி பாத்திமாவின் அறிவிப்புகள் மீது இப்ன் இஸ்ஹாக் பொய்யுரைத்ததாகக் குற்றஞ் சாட்டுவர். அவர் பொய் கூறினார் என்பது நிரூபிக்கப் படவில்லை. மேலும், இமாம் அஹ்மத் இப்ன் ஹன்பல் உட்பட, திறனாய் வில் கைதேர்ந்த பல இமாம்கள் இக்குற்றச்சாட்டை மறுத் துரைத்துள்ளனர். அல்-ஹாபிஸ் அல்-தகபீ கூறுவார்: "வம்சா வளி அட்டவணையில் அனைத்து விவரங்களையும் அளிப் பதில் இப்ன் இஸ்ஹாக் நெடுந்தூரம் சென்றுள்ளார் என்பதில்*

எவ்வித ஐயத்துக்கும் இடமில்லை; அவற்றைச் சுருக்கிக் கொள்வது நல்லது. முக்கியத்துவம் இல்லாத கவிதைகளை அறிவிப்பதில் அவர் மிக்க சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளார்; அவற்றைத் தவிர்த்த விடுவது நல்லது. நிகழ்வுகளைப் பரீட்சிக்காமல் அவர் பரவலாக அறிவிப்புகள் செய்துள்ளார். மறுபுறம் அவருக்குக் கிட்டியிருக்காத ஏராளமான ஸஹீஹ் அறிவிப்புகளை அவர் தவிர்த்துள்ளார். ஆக, அவரது நூல் மீளாய்வுக்கும், திருத்தத்துக்கும் உட்படுத்தப்பட வேண்டும்; அவரால் தவற விடப்பட்டவை அறிவிக்கப்பட வேண்டும்.”

இப்ன் இஸ்ஹாக்கின் ஹதீஸ் தரத்தை விவரிப்பதில் அல்-ஹாபிழ் அல்-தகபீ சிறந்து விளங்குகின்றார். இப்ன் இஸ்ஹாக் குறித்து அவர் கூறுவார்: ஸீறாவைப் பொறுத்து அவர் தரத்தில் உயர்ந்தவராக விளங்குகின்றார். என்றாலும், ஹலால், ஹராம் சம்பந்தப்பட்ட ஹதீஸ்களைப் பொறுத்தளவில் அவை சீரானவை (ஸிஹ்ஹாஹ்) என்ற தரத்திலிருந்து ஹஸன் தரத்துக்கு இறங்கி விடுகின்றன. மேலும் அவரை மட்டுமே அறிவிப்பாளராகக் கொண்ட அல்லது முறை தவறுதலான சந்தர்ப்பங்களில் ஹதீஸ் முன்கர் ஆக அமைந்து விடுகின்றது.

அதனால், அவரது ஸீறா கிரந்தத்தில் அறிவிக்கப் பெற்றன அனைத்துமே ஆதாரபூர்வமானவையாக அமைந்து விடுவதில்லை. ஏனெனில் சில முன்கர், முன்கத்இ அறிவிப்புகளும் அவற்றுள் அமைந்துள்ளன. அல்-ஹாபிழ் அல்-தகபீ தனது மீஸான் அல்-இஃதிலால் நூலில் கூறுவார்: இப்ன் இஸ்ஹாக்கின் ஹதீஸ் அறிவிப்புகள் வலுவானவை. தனது ஸீறாவில் அவர் அறிவித்துள்ள முன்கர், முன்கத்இ அறிவிப்புகள் தவிர்த்து, அவர்மீது நான் தவறுகள் எதனையும் காணவில்லை.

- அபூ மஃஷர் அல்-ஸிந்தீ (ம. 171ஹி). மகாஸீயில் சிறந்து விளங்கிய இவர் ஹதீஸில் ‘ளயீப்’ ஆனவர். எவ்வாறாயினும், அவரது பலவீனங்களின் மத்தியிலும் முஹம்மத் இப்ன் கஅப், முஹம்மத் இப்ன் கைஸ் ஆகியோர் மூலம் அவர் செய்யும் அறிவிப்புகள் ஏற்கப்படலாம். இது மிதமான திறனாய்வாளர்களது அபிப்பிராயம். ஏனெனில் தஜ்ரீஹ் விவகாரங்கள் கடின

திறனாய்வாளர்களது அபிப்பிராயங்களுடன் முரண்படும் போது மிதமான திறனாய்வாளர்களது அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்வதே ஹதீஸ் வல்லுனர்களது முறைமை.

- அப்த் அல்-மலிக் இப்ன் முஹம்மத் இப்ன் அபூபக்ர் இப்ன் ஹஸ்ம் அல்-மதனீ (ம 176ஹி). தனது அல்-மகாஸியில் நம்பிக்கையான ஹதீஸ் அறிஞர்.

- யஹ்யா இப்ன் ஸஈத் அல்-உமவீ (ம. 194ஹி). இவரும் மகாஸீ எழுதிய நம்பிக்கையான ஒரு ஹதீஸ் அறிஞர்.

அல்-வலீத் இப்ன் முஸ்லிம் அல்-திமிஷ்கீ (ம. 196ஹி). நம்பிக்கையான ஹதீஸ் அறிஞர்.

- யூனுஸ் இப்ன் புகைர் (ம.199 ஹி). இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்பாளர்களுள் ஒருவர். இவர் மகாஸீக்கு மேலதிக விஷயங்களைச் சேர்த்துள்ளதாகக் கூறுவார் இப்ன் ஹஜர்.

- முஹம்மத் இப்ன் உமர் அல்-வாகிதீ (ம. 207ஹி). அவரது ஆழ்ந்த அறிவின் மத்தியிலும், ஹதீஸ் அறிஞர்களது கருத்தில் அவர் ளயீப் எனவே கொள்ளப்பட்டார். அடிப்படை விசுவாசங்கள், ஷரீயா கோட்பாடுகள் குறித்ததான விவாதங் களுக்கு இவரது அறிவிப்புகள் துணை பயப்பனவல்ல ஆயினும் அவை அல்லாதனவான நிகழ்வுகளை விவரிப்பதில் இவை பெரிதும் உதவுகின்றன. அவரது மகாஸியை ஆழ்ந்த பரிசீலனைக்கு உள்ளாக்கும் போது, அவர் பல்வேறு அறிவிப்புகளை பலதரப்பட்ட அறிவிப்பாளர் வரிசைகளுடன் இணைத்துக் கொண்டுள்ளமையைக் காணலாம். அந்த வரிசைகளில் இணைக்கப்பட்டுள்ளோர் பலரது விவரங்களை இல்ம் அர்-ரிஜால் நூல்களில் கண்டு கொள்ள முடிவதில்லை. அல்-வாகிதீயிடமிருந்து சில அறிவிப்புகளைச் செய்வார் இப்ன் ஸஅத். இப்ன் ஸஅத் மிகவும் கவனமாகவே அந்த அறிவிப்புகளைத் தேர்ந்து கொண்டுள்ளார் எனத் தோற்று கின்றது. ஏனெனில் அவர் தேர்ந்து கொண்டுள்ள அறிவிப் புகளின் அறிவிப்பாளர் வரிசையில் அடங்கியோரது விவரங் களை இல்ம் அர்-ரிஜால் நூல்களில் கண்டு கொள்ள முடிகின்

*றது. இதன் மூலம், அல்-வாகிதீயின் இஸ்னாத்களில் ஹதீஸ் அறிவிப்புச் செய்தவர்களாக நாம் காண முடியாதுள்ளவர்கள் அடங்கியுள்ளனர் என்பது தெளிவாகின்றது. அதனால் தான் அவர்களது நாமங்களை இல்ம் அர்-ரிஜால் நூல்களில் காண இயலுவதில்லை. அல்லது, இந்த நாமங்கள் அல்-வாகிதீயால் அல்லது அவரது ஆசிரியர்களுள் சிலரால் புனைந்து கூறப்பட்டுள்ளன.*

*ஹதீஸ் திறனாய்வாளர்கள் அல்-வாகிதீ பொய்யுரைப்பவர் எனவும் ஹதீஸ்களைப் புனைந்து கூறுபவர் எனவும் குற்றஞ் சுமத்தியமைக்கான காரணம் இதிலிருந்து தெளிவாகும். இதன் பின்னணியில் தான் அவர் நிராகரிக்கப்பட வேண்டியவர் என அவர்கள் தீர்மானம் செய்துள்ளனர். ஓர் அறிவிப்பாளரின் அறிவிப்புகள் அனைத்தையும் சேகரித்துக் கற்பது; அந்த அறிவிப்புகளின் பின்னணியில் அறிவிப்பாளரை மதிப்பீடு செய்வது; என்பனவே, பாரிய அளவு அறிவிப்புகள் செய்த அறிவிப்பாளரது தராதரங்களை நிர்ணயிக்க, திறனாய்வு மிக்க இமாம்கள் கைக்கொண்ட வழிமுறைகள் என்பதில் ஐயங்களுக்கு இடமில்லை.*

*- முஹம்மத் இப்ன் ஆஇஸ் அல்-தமஷ்கீ (ம. 234ஹி). நம்பிக்கையான ஒரு ஹதீஸ் வல்லுனர். அவரது மகாஸியிலிருந்து சில பாகங்களை இப்ன் ஹஜர் வாசித்துள்ளார்.*

*- அலீ இப்ன் முஹம்மத் அல்-மதாஇனீ (ம. 225ஹி) இவர் ஹதீஸில் வலுவானவர் அல்லர் (கவீ) என்பார் இப்ன் அதீ. இவரது சரிதையை இப்ன் ஹஜர் தனது லிஸான் அல்-மீஸானில் குறித்துள்ளார். ளயீப் ஆன அறிவிப்பாளர்களது சரிதைகள் சம்பந்தமானது அந்த நூல். அதனால் இப்ன் ஹஜர், அல்-மதாஇனீயை நம்பிக்கைக்குரிய ஓர் அறிவிப்பாளராகக் கருதவில்லை என்பது புலனாகும். எவ்வாறாயினும் அவரது சரிதையில் காணப்படும் சில குறிப்புகள், ஹதீஸ் தவிர்ந்த, வேறு வரலாற்று நிகழ்வுகளை (அக்பார்) அறிவிப்புச் செய்வதில் இவர் நம்பிக்கைக்குரியவர் எனக் காட்டுகின்றன. தனியொரு நூலில் ஸீறாவின் குறிப்பிட்ட சில விஷயங்கள்*

*குறித்து அவர் தரும் விவரணங்கள் முக்கியத்துவம் பெற்றன வாகின்றன. அந்த விஷயங்கள் ஸீறாவின், சமூக, பொருளா தார அம்சங்களை விளங்கிக் கொள்ளப் பெரிதும் பயன்படு கின்றன.*

*- அப்த்-அல்லாஹ் இப்ன் முஹம்மத் இப்ன் நுபைல் (ம. 234ஹி.), மகாஸி குறித்த ஒரு நூல் எழுதினார். ஏராளமான ஹதீஸ்களை மனனம் செய்திருந்த ஒரு ஹாபிஸ் இவர்.*

*- ஸாலிஹ் இப்ன் இஸ்ஹாக் அல்-ஜுரமீ அல்-நஹ்வீ (ம. 225ஹி). ஹதீஸ், அக்பார் ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கிய இவர், ஸீறா குறித்து மெச்சத்தக்க ஒரு நூலை யாத்தார்.*

*- இஸ்மாயில் இப்ன் ஜுமையி (ம. 277ஹி). இவரது நூல்: அக்பார் அல்-நபீ வ மகாஸிஹீ வ ஸராயாஹு.*

*- அஹ்மத் இப்ன் ஹாரிஸ் அல்-கர்ராஸ் (ம. 258ஹி). இவ ரது நூல்: மகாஸீ அல்-நபீ வ ஸராயாஹு வ அஸ்வாஜுஹு.*

*- அப்த்-அல்-மலிக் இப்ன் முஹம்மத் அல்-ரகாஷீ அல்-பஸ்ரீ (ம. 276ஹி). இவரது நூல்: அல்-மகாஸீ. இவர் ஸதூக் என்றாலும் தவறுகள் இழைப்பவர்.*

*- இப்றாஹீம் இப்ன் இஸ்மாயில் அல்-அன்பரீ அல்-தூஸி (ம. 280ஹி) இவரது நூல்: அல்-மகாஸீ.*

*- இஸ்மாயில் இப்ன் இஸ்ஹாக் அல்-காழீ (ம. 282ஹி) இவரது நூல்: அல்-மகாஸீ.*

*சில சரிதா நூல்கள், தாபியூன்களில் பலரையும், அவர் களைப் பின்பற்றியோரையும், அவர்களைத் தொடர்ந்து வந்தோரையும், ஸீறா குறித்து அறிந்தவர்களாகவும், அது குறித்த கரிசனை கொண்டவர்களாகவும் குறிக்கின்றன. இத்தகு நூல்களை ஆக்கியோர்களுள் சிலர்:*

*அபூ இஸ்ஹாக் அம்ர் இப்ன் அப்த் அல்லாஹ் அல்-ஸபீஇ (ம. 127ஹி)*

*யாகூப் இப்ன் உத்பா இப்ன் அல்-முகீரா அல்-மதனீ (ம. 128ஹி)*

*தாவூத் இப்ன் அல்-ஹுஸைன் அல்-உமவீ (ம. 135ஹி)*

*அப்த் அல்-ரஹ்மான் இப்ன் அப்த் அல்-அஸீஸ் அல்-ஹனீபீ (ம. 162ஹி)*

*முஹம்மத் இப்ன் ஸாலிஹ் இப்ன் தீனார் (ம.168ஹி)*

*அப்த் அல்லாஹ் இப்ன் ஜஅபர் அல் மக்ரிமீ அல்-மதனீ (ம. 170ஹி)*

*ஆதாரங்கள் இவர்களை ஸீறா கிரந்தங்கள் எழுதியவர் களாகக் குறிக்கவில்லை. என்றாலும் ஸீறா குறித்துக் கலந்துரையாடுவதில் ஆர்வங் கொண்டவர்களாகவே இவர்கள் காட்டப்படுகின்றனர். எனவே தான் ஸீறா கிரந்த கர்த்தாக் களுள் நாம் இவர்களை உள்ளடக்கவில்லை.*

*இவர்கள் தான் ஸீறா நூல்கள் எழுதுவதன் ஆரம்ப கர்த்தர்கள். இவர்களுள் பெரும்பாலானோரை ஹதீஸ் திறனாய்வாளர்கள் அதாலா, ளப்த் (ஆதாரபூர்வத் தன்மை, செம்மை) என்பவற்றுக்காக அங்கீகாரம் செய்தார்கள். அறிவிப்பாளர்களை அங்கீகாரம் செய்வதற்காக உலமா இந்த இரண்டு நியதிகளையும் விதித்திருந்தார்கள். அங்கீகாரம் வழங்க தீர்க்கமான நியதிகளை நிறுவியிருந்த ஹதீஸ் வல்லுனர்கள் அந்த அறிவிப்பாளர்களை அங்கீகாரம் செய்திருக்கக் கூடுமாயின், இந்த ஸீறா ஆக்கங்களைச் செய்த ஆரம்ப கிரந்த கர்த்தர்களது ஆக்கங்கள் பாரிய அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்திருக்கக் கூடும்.*

*அல்லாஹ் தனது தூதரது ஸீறாவைப் பாதுகாத்துத் தந்துள்ளான் - அது இழந்துபடாமல்; வழுக்கள், திரிபுகள், விதந்துரைத்தல்கள் இல்லாமல்; வரலாற்றாசிரியர்களும், கதைகள் புனைவோரும் ஈடுபாடு காட்ட முன்னமேயே ஹதீஸ் வல்லுனர்களது கவனத்தை அதன் பால் திருப்பி, அதன் ஆதி மூலங்களைப் பதிவு செய்து வைத்ததன் மூலம். இது ஸீறா ஆதாரங்களின் மிகச் சிறப்பான ஓர் அம்சமாகும். இத்தகு செம்மையை ஏனைய வரலாற்று நூல்களிலோ, அக்பார்களிலோ காண இயலாது.*

இந்த சிறப்பம்சத்துக்குக் காரணம், ஹதீஸ் அறிஞர்கள், அறிவிப்புகளில் நம்பிக்கைக்குரியவர்களாக, ஸனத் - மத்ன் முதலியவற்றைத் திறனாய்வு செய்யும் தெளிவான வழிமுறை களைக் கைக்கொண்ட உலமாவாக இருந்தமையாகும். அவர் களது முறைகள் மிகத் தீவிரமானவையாக, மிகைபடுத்தல், விதந்துரைத்தல் என்பன இல்லாதனவாக அமைந்திருந்தன.

உண்மையில் நான் குறிப்பிட்டுள்ள பேரறிஞர்களது ஸீறா ஆக்கங்களுள் ஏராளமானவை இழந்துபட்டுள்ளன. என்றாலும் எமக்குக் கிட்டியுள்ளனவான, இதன் கீழ் நான் தரக்கூடிய ஆக்கங்கள், இழந்துபட்ட அவற்றினை ஆதார மாகக் கொண்டே இயற்றப்பட்டுள்ளன. மேலும் அவற்றி லிருந்து ஏராளமான அறிவிப்புகளை இஸ்னாத்களுடன் இவை தந்திருக்கின்றன. விஷயங்களைப் பயன்படுத்தியுள்ள முறையில் மட்டுமன்றி நூல்களில் விஷயங்கள் பதியப்பட் டுள்ள வகையிலும்கூட, பின்னைய ஆக்கங்கள் முன்னைய வற்றின் விதிமுறைகளையே பின்பற்றியுள்ளன. எமக்குக் கிடைத்துள்ள ஆக்கங்களுள் ஒன்று, இப்ன் ஹிஷாமின் ஸீறாவாகும்.

இப்ன் ஹிஷாமின் ஸீறா, இப்ன் இஸ்ஹாக்கின் ஸீறா வின் திருத்திய பதிப்பாகும். இதில் இப்ன் ஹிஷாம், இஸ்ராயில் லியத் கதைகள் கவிதைகளுள் ஏராளமானவற்றைத் தவிர்த்துள் ளார். மேலதிகமாக அவர், மொழி வழக்கு, வம்சாவளிகள் சம்பந்தமான தகவல்களைச் சேர்த்துள்ளார். இப்ன் ஹிஷா மின் திருத்தங்களுடன் இந்த ஸீறா உலமாவில் பெரும் பாலானோரின் அங்கீகாரத்தையும், ஏற்பையும் ஈட்டிக் கொண் டுள்ளது. இப்ன் ஹிஷாமின் பின்னர் வந்த கிரந்த கர்த்தாக்கள் அவரது நூலிலேயே பெரிதும் தங்கலாயினர். உண்மையில் நபிகள் (ஸல்) அவர்களின் வாழ்வு குறித்து மகாஸி அளிக்கும் விவரணங்கள், ஸஹீஹ் ஹதீஸ் நூல்களின் அறிவிப்புகளோடு நெருக்கமாக இயைந்து செல்கின்றன. இது இந்த ஸீறா நூலை ஆதாரபூர்வமானதாக ஆக்கி வைக்கின்றது. இப்ன் ஹிஷா மின் ஸீறாவை விளக்கியுள்ளார் அல்-ஹாபிழ் அல்-ஸுஹைலீ

*(ம. ஹி581). அவரது நூல் அல்-ரவ்ல் அல்-அனிப் (பெருமை மிகுபூங்கா).*

*ஏனைய ஆதாரங்களுள் மேல்வருவனவும் அடங்கு கின்றன:*

*- முஹம்மத் இப்ன் உமர் அல்-வாகிதீ (ம. ஹி207)யின் மகாஸீ அல் வாகிதீ. இவர் சில இடங்களில் இப்ன் இஸ்ஹாக் கின் ஸீறாவுக்கு மேலதிக விவரங்களைச் சேர்த்துக் கூறுவார். அறிவிப்புகள் குறித்த தனது சொந்த அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் அவர், கூடிய நம்பிக்கைக்குரியன எவை எனவும் கூறுவார். அவரிடம் ஸீறா விவரணங்கள் ஏராளமாக உள்ளன என உலமா அங்கீகரித்தாலும், ஹதீஸ் வல்லுனர்கள் அவரை ளயீப் எனவே கொள்வர்.*

*அல் நஸாயி கூறுவார்: "அவர் (அல்-வாகிதீ) ஹதீஸ் களைப் புனைந்துரைப்பார்." இமாம் அல்-ஷாபிஇ, அபூ தாவூத், இப்ன் அபூ ஹாதிம் ஆகியோரும் அவ்வாறே குற்றம் சுமத்துவர். அவர் ஒரு பொய்யர் (கத்தாப்) என்பார் இமாம் அஹ்மத். இப்ன் அதீ கூறுவார்: அவரது ஹதீஸ்கள் அறியப் படாதன; பெரும் பிரச்சினைகளை அவர் ஏற்படுத்தியுள்ளார்.*

*இப்ன் ஹஜர் கூறுவார்: அவர் கொண்டிருந்த பாரிய அறி வின் மத்தியிலும் அவர் நிராகரிக்கப்பட வேண்டியவர் (மத்ரூக்)*

*ஸய்யித் அல்-நாஸ், வாகிதீயின் சார்பாகப் பேசுவார். என்றாலும் ஏனைய திறனாய்வாளர்கள் முன்வைக்கும் சான்றுகளின் மத்தியில் அவரது வாதம் பயனற்றுப் போய் விடுகின்றது.*

*- முஹம்மத் இப்ன் ஸஅத் (ம. ஹி230) எழுதிய அல்-தபகாத் அல்-குப்ரா. இதன் முதல் இரண்டு பாகங்கள் ஸீறாவை மட்டுமே கொண்டனவாயுள்ளன. இப்ன் ஸஅத் நம்பிக்கைக்குரியவர்; (அல்-காதிப் அல்-பக்தாதீயும் இப்ன் ஹஜரும் ஏற்றுக் கொள்வது போல) இவர் அல்-வாகிதீயின்*

*பல அறிவிப்புகளில் சிறந்தனவற்றை மட்டும் தேர்ந்து கொண்டுள்ளார். எவ்வாறாயினும், அவர் அல்-வாகிதீ போன்ற பலவீனமான அறிஞர்களிலிருந்து (ளூஅபா) அறிவிப்புகள் செய்வதன் காரணமாக, இப்ன் அல்-நதீம், வாகிதீயின் ஆக்கத்திலிருந்து திருடியுள்ளதாக இப்ன் ஸஅத் மீது குற்றஞ் சுமத்துவார். எனினும், தீவிரமான ஆய்வு செய்யும் ஒருவர், இப்ன் ஸஅத், தனக்கேயுரிய சில முறைகளை வகுத்துக் கொண்டிருந்தார் என்பதைக் கண்டு கொள்வார். அல்-வாகிதீ யிடமிருந்து போலவே அவர் ஏனைய அறிஞர்களிடமிருந்தும் அறிவிப்புச் செய்துள்ளார். அவர்களுள் குறிப்பிடத் தக்க வர்கள்: அப்பான் இப்ன் முஸ்லிம், உபைத்-அல்லாஹ் இப்ன் மூஸா, அல் பள்ல் இப்ன் தகீன். இம்மூவரும் நம்பிக்கைக்குரிய ஹதீஸ் வல்லுனர்கள்.*

*கலீபா இப்ன் கையாத் (ம. ஹி240) எழுதிய தாரீக். இவர் நம்பிக்கைக்குரிய ஒரு ஹதீஸ் அறிஞர். அல்-ஸஹீஹ் இயற்றிய இமாம் புஹாரியின் ஆசிரியர்களுள் ஒருவர். பொது வரலாறு சம்பந்தப்பட்டதான இவரது நூலின் ஆரம்ப அங்கங்கள் ஸீறாவின் நிகழ்வுகளைத் தொட்டுச் செல்கின்றன. அவை பெரிதும் தங்கியிருப்பது இப்ன் இஸ்ஹாக்கின் மீதாகும்.*

*- அஹ்மத் இப்ன் யஹ்யா இப்ன் ஜாபிர் அல்-பலதூரி (ம. ஹி279) எழுதிய அன்ஸாப் அல்-அஷ்ராப். இவரது நூல் வம்சாவளி ரீதியாக வரையப்பட்ட பொது வரலாற்று நூலாகும். இதன் முதல் பாகத்தில் ஸீறா குறித்து மட்டுமே பேசப்படுகின்றது. ஹதீஸ் வல்லுனர்கள் பலதூரியை ளயீப் என்றே கொள்வர். ளூஅபா குறித்த தனது நூலில் இப்ன் ஹஜர், இவரது சரிதை குறித்துப் பேசுவார்.*

*- முஹம்மத் இப்ன் ஜரீர் அல்-தபரீ (ம. ஹி310) எழுதிய தாரீக் அல்-ருஸுல் வ அல்-முலூக். இதன் ஓர் அங்கம் ஸீறா குறித்ததாக மட்டுமே அமைந்துள்ளது. நம்பிக்கைக்குரிய வரான அல்-தபரீ பெரிதும் இப்ன் இஸ்ஹாக்கிலேயே தங்கி யுள்ளார். தான் அறிவிப்பன குறித்த தனது கருத்துகளை, அவை ஸஹீஹ் ஆனவையோ, ளயீப் ஆனவையோ எனத்*

*தெரிவிக்காது அற்றின் இஸ்னாத்களோடு அறிவிக்கும் அல்-தபரீ அவற்றுள் மிகப் பொருத்தமானவை எவை என்பதைத் தேர்ந்து கொள்ளும் பொறுப்பினை வாசகர்க்கே விட்டு விடுகின்றார்.*

*-இப்ன் அப்த் அல்-பர்ர் அல்-குர்தூபீ (ம. ஹி463) எழுதிய துரர் பீ இக்திஸார் அல் மகாஸீ வ அல்-ஸியார். தனது காலத்தின் மிகச் சிறந்த ஹதீஸ் அறிஞர்களுள் ஒருவர் அல்-குர்தூபீ. இவர் பெரிதும் இப்ன் அல்-கைஸிமாவின் ஸீறா விலும், ஹதீஸ் தொகுப்புகளிலும் தங்கியுள்ளார். ஒரேயொரு இடத்தில் மட்டும் இவர் வாகிதீயிலிருந்து அறிவிப்பார். என்றாலும் வாகிதீயின் மகாஸி குறித்துப் பேசுவார். தனது நூலின் பொது அமைப்பைப் பொறுத்த மட்டில் தான் இப்ன் இஸ்ஹாக்கைப் பின்பற்றியுள்ளதாகக் கூறுவார் அல்-குர்தூபீ. இஸ்னாத்களை அறிவிப்பதில் இவர் செம்மையானவரல்லர்.*

*- இப்ன் ஹஸ்ம் அல்-ளாஹிரீ (ம. ஹி456) எழுதிய ஜவாமீ அல்-ஸீறா. இவர் இஸ்னாத்களை அறிவிக்கும் பண்பினைப் புறக்கணித்துச் செல்வார்; மூல ஆதாரங்களைக் குறிக்க மாட்டார். எந்த அறிவிப்புகள் கூடிய நம்பிக்கை வாய்ந்தன எனக் கூறிச் செல்லும் இவர் தனது நூலின் அறிவிப்புகளைப் பதிவு செய்து வைத்திருப்பார்; வரலாற்று நிகழ்வுகளைத் தீவிர பரிசீலனைக்குள்ளாக்குவார். இவர் பொதுவாகக் கையாளும் முறை சுருக்கியமைப்பதாகும். ஆக, இப்ன் ஹஸ்ம், ஸீறாவின் கவிதைகளையும், கதைகளையும் தவிர்த்துக் கொள்வார்.*

*- இப்ன் அல்-அஸீர் அல்-ஜஸரீ (ம. ஹி632) எழுதிய அல் காமில் பீ அல்-தாரீக். இது ஒரு பொது வரலாற்று நூல். நம்பிக்கைக்குரிய ஒரு வரலாற்றாசிரியர் இவர். இந்த நூலின் ஒரு பாகம் ஸீறாவை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது.*

*- இப்ன் ஸையித் அல்-நாஸ் (ம. ஹி734) எழுதிய உயூன் அல்-ஆஸார் பீ புனூன் அல்-மகாஸீ வ அல்-ஷமாயில் வ அல்-ஸியார். நம்பிக்கைக்குரிய ஹதீஸ் அறிஞர் இவர். அல்-தகபீ, இப்ன் கஸீர் ஆகியோர் இவரை அங்கீகரித்துள்ளனர். தனது நூலில் பெரிதும் ஹதீஸ் தொகுப்புகளிலிருந்தும், தனது*

*காலத்துக்கு முன்னர் இயற்றப்பட்ட மகாஸி நூல்களிலிருந்தும் இவர் அறிவிப்புச் செய்வார். தனது நூலின் முன்னுரையில் மூல ஆதார நூல்களைக் குறித்துக் காட்டுவார் அல்-நாஸ்.*

*-இப்ன் கையிம் அல்-ஜவ்ஸிய்யா (ம. ஹி751) எழுதிய ஸாத் அல்-மஆத் பீ ஹத்யி கைர் அல்-இபாத். தனது காலத்தின் மிகச் சிறந்த அறிஞர்களுள் ஒருவர் இவர். ஷமாயில், அதப், பிக்ஹ், மகாஸீ ஆகிய துறைகள் குறித்து மிகப் பெறுமதி வாய்ந்த நூல் இது. ஏனெனில் இவை அனைத்தினதும் கலவையாகவே இது அமைந்துள்ளது.*

*- ஹாபிழ் அல்-தகபீ (ம. ஹி748) எழுதிய அல்-ஸீறா அல் நபவிய்யா. நம்பிக்கைக்குரிய ஒரு வரலாற்றாசிரியரான இவர், ஹதீஸ் திறனாய்வாளர்களது நியதிகளைப் பிரயோகிப்பதில் பெரும் திறன் படைத்தவர். வாசகங்களைப் பரிசீலனை செய்யும் போது அந்நியதிகளைப் பயன்படுத்துவதில் பெயர் பெற்றிருந்தார். தனது நூலில் அறிவிக்கப்பட்டனவற்றுள் ஒரு சிலவற்றையே அவர் கண்டித்தார்.*

*- அல்-ஹாபிழ் இப்ன் கஸீர் (ம. ஹி774) எழுதிய அல்-பிதாயா வ அல்-நிஹாயா. பொது வரலாற்று நூலான இதன் ஒரு பாகம் ஸீறாவை மையமாகக் கொண்டது. வாசகங்களை நன்கு பரிசீலனை செய்யும் நம்பிக்கைக்குரிய இமாம்களுள் ஒருவர் இப்ன் கஸீர். அல்-தகபீ, இப்ன் ஹஜர், இப்ன் இமாத் அல்-ஹன்பலீ ஆகியோர் இவரை அங்கீகாரம் செய்து பேசுவர்.*

*- அல்-மக்ரீஸி எழுதிய இம்தாஅ அல்-அஸ்மாஅ. நம்பிக்கைக்குரியவரான இவர் சுருக்கியமைக்கும் முறையைக் கையாண்டதோடு இஸ்னாத்களை அறிவிப்பதைப் புறக்கணித்தார். அல்-இம்தாஅ குறித்து அல்-ஸகாவீ கூறுவார்: பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய பல அம்சங்களை இது கொண்டுள்ளது.*

*- அஹ்மத் இப்ன் முஹம்மத் அல்-கஸ்தலானீ (ம. ஹி923) எழுதிய அல்-மவாஹிப் அல்-லதுன்னியா பி அல்-மினஹ் அல்-முஹம்மதிய்யா.*

- முஹம்மத் இப்ன் அப்த் அல்-பாகீ அல்-ஸர்கானீ (ம. ஹி1122) எழுதிய ஷர்ஹ் அல்-மவாஹிப் அல்-லதுன்னியா.

அல்-மவாஹிப்பும் அதன் ஷர்ஹ (விளக்கம்)ஹூம், ஷமாயில், ஸீறா என்பன குறித்த தெளிவான ஆக்கங்களாக விளங்குகின்றன.

- அல்-புர்ஹான் அல்-தீன் அல்-ஹலபீ (ம. ஹி841) எழுதிய அல்-ஸீறா அல்-ஹலபிய்யா. இந்த நூல் இஸ்ராயில்லியாத்திலிருந்து பிரயோசனங்களில்லாத ஏராளமான விவரணங்களையும், கதைகளையும் உள்ளடக்கியுள்ளது. அறிவிப்புகளின் இஸ்னாத்களைப் புறக்கணிக்கும் அல்-ஹலபீ, 'கபர்'ரின் ராவீயை மட்டும் குறிப்பார்.

- முஹம்மத் இப்ன் யூஸுப் அல்-திமஷ்கீ அல்-ஷாமீ (ம. ஹி942) எழுதிய ஸுபுல் அல்-ஹுதா வ அல்-ரஷாத் பீ ஸீறா கைர் அல்-இபாத். இவர் முன்னூறுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து தனது ஆக்கத்துக்குரிய விவரங்களைச் சேகரித்துள்ளார்.

மேற்கண்டன தான் ஸீறா குறித்து எமக்கு இதுவரை கிட்டியுள்ள முக்கியமான மூலாதார நூல்கள். வழுவிலாமை, செம்மை ஆகியனவற்றைப் பொறுத்தமட்டில் இவை அல்-குர்ஆன் அல்-கரீமுக்கும், ஹதீஸ் ஷரீபுக்கும் அடுத்தபடியாக வருவன. என்றாலும் ஸீறா நூல்களில் குறிப்பிடப்பட்டன அனைத்துமே வலுவானவையாக, ஸிஹ்ஹாவின் தரத்தினை அடைந்து கொண்டுள்ளன எனக் கூற இயலாது. எவ்வாறாயினும், ஸீறாவில் அடங்கிய அனைத்தும் ஸஹீஹ் ஆக அமைந்திருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. இவற்றில் ஸஹீஹ் ஆனவையும் உள; ளயீப் ஆனவையும் உள. ஸீறா கற்கும் போது நாம் முதலில் தங்கியிருக்க வேண்டியது ஸஹீஹ் ஆனவற்றிலேயே. பின்னர் இடைவெளிகளை அல்லது வெற்றிடங்களைப் பூரணப்படுத்திக் கொள்ள ஹஸன் அல்லது அவற்றை அண்மியவற்றைப் பயன்படுத்தலாம். அடிப்படை விசுவாசங்கள், கோட்பாடுகள் அல்லது தஷ்ரீஇ குறித்த விவகாரங்களில் ளயீப் ஆனவற்றைக் கலந்து கொள்ளாது

*தவிர்ந்திருக்க வேண்டும். உயர் ஒழுக்க நெறிகளை ஊக்குவிக்க அல்லது கட்டடங்கள், தொழில் நுட்பங்கள், விவசாயம் போன்றவற்றை விவரிக்க, மேலும் வலுவான ஆதாரங்கள் கிட்டாதவிடத்து, ஸீறாவைப் பயன்படுத்துவதில் தவறுகள் இல்லை.*

*பின்வரும் முறைதான் ஹதீஸ் வல்லுனர்களாலேயே பிரயோகம் செய்யப்பட்டது. அப்த் அல்-ரஹ்மான் இப்ன் மஹ்தீ (ம. ஹி197) கூறுவார்: "நபிகள் (ஸல்) அவர்களிட மிருந்து, ஹலால், ஹராம், அஹ்காம் குறித்து அறிவிப்புகள் செய்யும் போது நாங்கள் இஸ்னாத் குறித்து தீவிர கவனம் செலுத்துவோம். இஸ்னாத் வரிசையில் குறிப்பிடப்பட்டோர் குறித்து தீவிரமான பரிசீலனைகள் செய்வோம். உயர் ஒழுக்க நெறிகள், வெகுமதிகள் (ஸவாப்), தண்டனைகள் (இகாப்) என்பன குறித்த அறிவிப்புகளின் மீதான இஸ்னாத்களில் நாம் தீவிரமாக இருப்பதில்லை. அத்தகு இஸ்னாத் வரிசைகளில் குறிப்பிடப்பட்டோர் குறித்து நாம் மென்மையாக நடந்து கொள்வோம்."*

*ஸீறாவின் இஸ்னாத்களும் முதூன்களும் ஹதீஸ் திறனாய் வுக்காக ஹதீஸ் வல்லுனர்கள் பிரயோகிக்கும் நியதிகளுக்கு இயைய பரீட்சிக்கப்பட வேண்டும். ஸீறாவின் முக்கியமான மூலாதாரங்கள் அனைத்தும் தமது அறிவிப்புகளைப் பூரண மான இஸ்னாத்களுடனேயே செய்திருப்பது; ஸீறாவின் பெரும்பாலான அறிவிப்பாளர்கள் ஹதீஸ் வல்லுனர்களாக வும் அமைந்துள்ளமை; அன்னவர்களது சரிதா குறிப்புகள் குதுப் அல்-ரிஜால்களில் பதிவாகியுள்ளமை என்பன இத்தகு முனைவினை மேற்கொள்வதனை இலகுவாக்கி வைக்கின்றன. குதுப் அல்-ரிஜால் நூல்கள், அறிவிப்பாளர்களது தரங்களை விவரிப்பதோடு, ஜர்ஹ், தஃதீல் என்பன பொறுத்து அவர்கள் பற்றிக் கூறுப்பட்டுள்ளனவற்றையும் தெளிவுறுத்துகின்றன.*

*சமகால ஆய்வாளர்களுள் சிலர் ஹதீஸ் முறைமைகளைக் கையாள்வதில்லை. அறிவிப்பாளர்கள் அனைவரையும் அவர்*

*களது தரங்களையும் அறிந்து கொள்வதில் உள்ள சிரமங்கள், அவற்றுக்காக எடுக்க வேண்டிய அதீத பிரயத்தனங்கள், அவற்றைப் பரிசீலனை செய்வதில் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் என்பன காரணமாக அவர்கள் இதினின்றும் தவிர்ந்திருக்கின்றனர். உலூம் அல்-ஹதீஸ் துறையில் போதிய தேர்ச்சியைப் பெற்றுக் கொள்தல், அவற்றை வரலாற்றுத் திறனாய்வுகளில் பிரயோகம் செய்வதற்கான பயிற்சியை ஈட்டிக் கொள்தல் என்பனவெல்லாம் சாத்தியமான கருமங் கள் அல்ல என்றே அவர்கள் கருதுகின்றனர். ஏனையோர் வேறு காரணங்களுக்காக இதனைப் புறக்கணிப்புச் செய் கின்றனர்: அதன் முக்கியத்துவத்தைச் சந்தேகிக்கச் செய்வதன் மூலமும், அதன் சில குறைகளை மிகைப்படுத்திக் காட்டுவதன் மூலமும், அதன் பலன்களைத் திசை திருப்பி அதன் முக்கியத் துவத்தைத் தகர்த்து விடுகின்றனர்.*

*சில ஆய்வாளர்கள் உலூம் அல்-ஹதீஸ் குறித்துப் பரிச் சயம் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதில் ஐயங்கள் இல்லை. எந்த ஒரு மதம் குறித்தும் சார்பு நிலை கொள்ளாத ஒரு கிறிஸ்தவரான அஸத் ரஸ்தம் என்பார், ஹதீஸ் ஆய்வாளர் களது திறனாய்வு முறைகளின் முக்கியத்துவத்தை விளக்கி, ஹதீஸ் ஆய்வாளர்களே இந்த முறையை முதன் முதல் பயன் படுத்தியவர்கள் எனக் கூறி, அது மகத்தானதொரு சாதனை யாகும் எனவும் காட்டித் தருவார். முஸ்தலா அல்-தாரீக் எனும் தனது நூலில் இவற்றைத் தெளிவு படுத்திக் கூறுவார் ரஸ்தம். ஸீறா கற்கும் போதும், பொதுவாக இஸ்லாமிய வரலாறு கற்கும் போதும் இந்த முறைகளைப் பிரயோகம் செய்தல் அவசியம். இது அகீதா, ஷரீயா என்பனவற்றோடு இணைந் துள்ளது; இஸ்லாமிய பண்புகளை உருவாக்கம் செய்கின்றது என்பதால் இந்தத் துறையில் மிக்க நுணுக்கத்துடன் செயல் படுதல் வேண்டும். மேலும், ராஷிதா காலிபாத், உமையா, அப்பாஸியா காலங்களைக் கற்கும் போதும் இம்முறைகள் பயன்படுத்தப்படுவது அவசியம் எனத் தோற்றுகின்றது. அக்பாரிகள் அறிவிப்புச் செய்த பல்வேறு விவரணங்களது*

தொகுப்புகளாக அமைந்துள்ளன, வரலாற்று நூல்கள். தத் தமது அரசியல், குழும, விருப்பு வெறுப்புகளுக்கும், லௌகீக நலன்கள் பற்றிய அவாக்களின் செல்வாக்குகட்கும் உட்பட் டோராயிருந்தனர் அவர்கள். உதாரணமாக உமையாக்களின் காலம் குறித்து அபூ மிக்னப் உடைய விவரணங்களை மட்டும் கொண்டு ஒருவர் விவரிக்க முனைகின்றார் எனக் கொள் வோம். நிச்சயமாக அது, அவானா இப்ன் அல்-ஹகம் அல்லது அபூ அல்-யக்ளான் அல்-நஸாபா ஆகியோரது விவரணங் களை மட்டும் அடிப்படையாகக் கொண்ட விவரங்களுக்கு முற்றும் வேறுபட்டதாக இருக்கும்.

## துணை ஆதாரங்கள்

செம்மை, வரிசைக்கிரம முக்கியத்துவம் என்பனவற்றைப் பொறுத்து, குர்ஆன் அல்-கரீம், ஹதீஸ் அல்-ஷரீப், ஸீறா கிரந்தங்களுக்கு அடுத்த படியாக அமைந்துள்ளன துணை ஆதாரங்கள். இவை, மூல ஆதாரங்கள் அனைத்தினதும் பிரயோகத்தின் பின்னரும் இருக்கக்கூடிய இடைவெளிகளை நிரப்புகின்றன; வரலாற்றுக் காட்சியைப் பூரணப்படுத்தி வைக்கின்றன.

இலக்கிய ஆக்கங்கள், ஸீறாக் காலத்தின் கலாச்சாரம், வாழ்க்கைத் தரங்கள், ஆடை அணிகலன்கள், உணவு வகை, மரபுகள் முதலியன குறித்த குறிப்புகளைத் தந்து செல்கின்றன. குறிப்பாக கவிதை முக்கியமானதொரு வரலாற்று ஆவணமாக அமைகின்றது. ஏனெனில் அது அறிவியல், சமூக வாழ்வு, வீர உணர்வுகளை உந்தும் யுத்தங்கள் ஆகியனவற்றைப் பிரதிபலிக் கின்றது. இதனைப் பொறுத்து, ஹஸ்ஸான் இப்ன் ஸாபித், கஅப் இப்ன் மாலிக், அப்த் அல்லாஹ் இப்ன் ரவாஹா ஆகியோர் ஸீறாவின் சில நிகழ்வுகள் குறித்துத் தரும் விவ ரணங்கள் பற்றிக் குறிப்பிட்டுச் செல்வது போதுமானதாக இருக்கும். என்றாலும் கூட, நாம் இலக்கிய ஆக்கங்கள் குறித்து எச்சரிக்கையாக இருத்தலும் அவசியம். ஏனெனில் அவற்றுள் விசித்திரமான (ஷாத்த்), நூதன (கரீப்), விநோத (தரீப்)மான

விவரணங்களும் அடங்கி விடுகின்றன. அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை விட அத்தகு விஷயங்களிலேயே இவை கூடிய கவனம் செலுத்துகின்றன என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் இந்த நூல்களிலான தகவல் களைப் பொதுவானவையாக ஏற்றுப் பிரயோகம் செய்வ தனால் ஆகும் அவலம் குறித்து நாம் எச்சரிக்கையாக இருந்து கொள்ளலாம்.

ஸீறாவின் காலத்திலேயே வாழ்ந்து, அதன் நிகழ்வுகளில் பங்கு கொண்டிருந்த நபித் தோழர்களது வரலாற்றுக் குறிப் புகளைத் தருகின்றன, நபித் தோழர்கள் பற்றிய நூல்கள். அவை ஆதார பூர்வமான வரலாற்றுத் தகவல்களைத் தருகின்றன. என்றாலும் அவை மட்டுப் படுத்தப்பட்டனவாகவும் ஆங் காங்கு சிதறியனவாகவுமே அமைந்துள்ளன. சில தகவல்கள் அவர்கள் குறித்த ‘அக்பார்’களைக் கொண்டுள்ளன. நபித் தோழர்கள் பற்றிய ஏனைய சரிதைகளும், குதுப் அல்-ரிஜால் நூல்களும், ஸீறா நூல்களில் குறிப்பிடப்பட்ட இஸ்னாத் களின் வரிசையில் வரும் மனிதர்கள் குறித்த நல்ல அறிமுகங் களைத் தருவன. ஸீறா நூல்களின் மூலாதாரங்கள் குறித்த கற் பிதங்களின் மீது இவை தீவிரமான செல்வாக்குகள் பதித்தன வாயுள்ளன; மேலும் இஸ்னாத்கள் பற்றிய திறனாய்வு களுக்கும் இவை பெருந்துணை பயக்கின்றன.

புவியியல் சம்பந்தப்பட்ட பழம் நூல்கள், ஸீறாவின் நிகழ் வுகள் இடம் பெற்ற அரேபிய தீபகற்பத்தின் புவியமைப்புகள் குறித்த விவரங்களைத் தருகின்றன. வாழ்க்கைத் தரங்கள், விவ சாய உற்பத்திகள், கோத்திரங்களதும், குழுமங்களதும் பிரதேசங்கள், ஸீறாவுடன் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக் கிடையிலான தூரங்கள் முதலாய விவரங்களை இவற்றின் மூலம் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

ஆக, ஸீறாவின் பல்வேறு அம்சங்கள் பற்றிய தெளிவினை ஈட்டிக் கொள்ளவும், சின்னஞ் சிறிய விஷயங்கள் குறித்த விவரங்களைப் பெற்றுக் கொள்ளவும் துணை ஆதாரங்கள் பெருமளவு உதவி செய்கின்றன.

நாம் இது வரை கண்டன, ஸீறாவின் மூலாதாரங்கள் பற்றிய சுருக்கமான ஓர் அறிமுகம். இறுதியாக நாம் கூறக் கூடியது, வரலாற்றுத் திறனாய்வு, விளக்கம் என்பன குறித்து தெளிவான வரைமுறைகள் அவசியம் என்பதுதான். வரலாற்று ஆய்வுகள், விளக்கங்கள் ஒழுங்கு படுத்தியமைக்கப்படாத நிலையில், இஸ்லாமிய வரலாற்றுக் கற்பிதங்கள் மட்டுப் படுத்தப் பட்டனவாகி விடுகின்றன. விளைவாக, எமது உம்மாவின் வரலாற்றினது உண்மையான ஆய்வுபூர்வமான விளக்கம் எமக்குக் கிட்டாமலேயே போய்விடக் கூடும்.

வரலாற்றின் இயல்பு, வரலாற்றுத் திறனாய்வு முறைகள், வரலாற்று விளக்கங்கள் அளித்தல் என்பன பற்றி மேலை யுலகில் ஏராளமான ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.[4] அறபு மொழி பயில்வோர்க்கென அவற்றுள் சில மொழி பெயர்க் கப்பட்டுள்ளன. என்றாலும்கூட, இவை மேலைத்தேய கண்ணோட்டங்கள், மேலையுலக வாழ்க்கைத் தத்துவம், மேலைத்தேய வரலாற்று இயல்பு என்பனவற்றைப் பிரதி பலிப்பனவாகவே, அவற்றைக் கற்பதில் எதிர்நோக்கும் பிரச் சினைகள் பற்றியனவாகவே அமைந்துள்ளன. அதற்குக் காரணம், அந்த நூல்கள் ஐரோப்பிய வரலாற்றின் அடிப்படை யில் ஆக்கப் பெற்றுள்ளமையாம். என்றாலும், அத்தகு தரத்தின வான நூல்கள் எமக்குத் தேவை என்பதே நான் கூறக் கூடியது. அவை எமது வரலாற்றை மேலைத் தேய கண்ணோட்டத்தில் அணுகுவனவாக அமைதல் கூடாது. அவை அகீதாவின் அடிப் படையில் ஆனவையாக, எமது வரலாற்றுக்கு இயைந்தனவாக உருவாதல் வேண்டும்.

பல முஸ்லிம் ஆய்வாளர்கள் இத்துறையில் சில ஆரம்ப நூல்களை ஆக்கியுள்ளமை இங்கு குறிப்பிடப்படுதல் அவசியம்.[5]

4. உதாரணத்திற்குப் பார்க்க: Collingwood - *The Idea of History*; Edward Carr - *What is History?*; A.L. Raus - *History, Its Influence and Benefit*; Langelois Wisinbos - *Historical Criticism*; Ernest Cassirer - *Concerning Historical Knowledge*; Joseph Hors - *The Importance of History*; Emery Naf - *Historians and the Spirit of Poetry*.

5. ஸெய்யித் குதுப், பாதீ உத்மான், அப்த்-அல்-ரஹ்மான் அல்-ஹாஜ்ஜி, இமாத் அல்-தீன் கலீல், அப்த்-அல்-ஹமீத் ஸித்தீகீ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வரலாறு எழுதப் படுவதற்கான நல்ல பல ஆலோசனைகளை அவர்கள் வழங் கியுள்ளார்கள். என்றாலும் அவர்களது ஆலோசனைகள் போதியனவல்ல. நடைமுறைப்படுத்தக்கூடிய ஓர் ஆய்வு முறை யை அவை நிர்ணயம் செய்து தரவில்லை. உண்மையான இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றை விளக்குவதற்கான தெளிவானதொரு முறைமை இன்னமும் காணப்பட வேண்டியதொன்றாகவே தோற்றுகின் றது.

# III

# இறை தூதர் காலத்திய மதீன சமூகம்

## ஹிஜ்றாவின் முன்னைய மதீன சமூகம்

மதீனா அல்-முனவ்வராவின் பண்டைய பெயர் யஸ்ரிப்[1]. நல்ல மண் வளமும் போதிய தண்ணீர் வசதியும் கொண்டதொரு பாலைச் சோலையான இது கருநிற எரிமலைப் பாறைகளால் சூழப்பட்டுள்ளது. இதன் முக்கிய பிரதேசங்கள், கிழக்கில் ஹர்ரா வாகிம்[2], மேற்கில் ஹர்ரா அல்-வபரா[3] என்பன. இரண்டிலும் ஹர்ரா வாகிம் கூடிய வளத்தையும் சனத்தொகையையும் கொண்டுள்ளது. உஹத் மலைத் தொடர் மதீனாவின் வடக்கிலும் அஸீர் மலைத் தொடர் தென் மேற்குப் பிரதேசத்திலும் அமைந்திருக்கின்றன. மதீனாவில் பல சமவெளிகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானவை வாதி பத்ஹான்[4], முதைனீப்[5], மஹ்ஸூர்[6], அல் அகீக்[7] என்பன. இவை தெற்கிலிருந்து வடக்கு நோக்கியனவாகச் சென்று, மழை வெள்ளங்கள் ஒன்று கூடும் ரூமா[8]வில் ஒன்று சேர்கின்றன.

அல் மஈனீ[9] கிரந்தங்களில் யஸ்ரிப் எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை அதன் பழைமையை உணர்த்துகின்றது.

---

1. يثرب
2. حرة واقم
3. حرة الوبرة
4. وادي بطحان
5. مذينيب
6. مهزور
7. العقيق
8. رومة
9. المعينية

இஸ்லாத்துக்கு முன்னைய யஸ்ரிபின் வரலாறு பற்றிய விவரங்கள் போதியனவாக இல்லை. இஸ்லாமிய காலத்தை நெருங்கும் போது வரலாற்று விவரங்கள் தெளிவாகின்றன.

**யூதர்கள்**

*பொதுவாக ஹிஜாஸினதும், குறிப்பாக மதீனாவினதும் யூதர்கள் குறித்து - அவர்கள் எங்கிருந்து வந்து குடியேறினார்கள், எப்போது வந்து சேர்ந்தார்கள் என்பன குறித்து - பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. திருப்திகரமான கருத்துகள், அல்-ஷாம் பிரதேசங்களிலிருந்து கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டு காலங்களில் யூதர்களின் புலம் பெயர்வு ஏற்பட்டமையைக் காட்டுகின்றன. இது, கி.மு. முதலாம் நூற்றாண்டில் சிரியாவையும் எகிப்தையும், பின்னர் கி.பி. 2ம் நூற்றாண்டு நபேஸியர்களையும் ரோமர்கள் வெற்றி கொண்ட பின்னர் நிகழ்ந்தது. ரோமர்களின் வருகை, யூதர்களை அரேபியத் தீபகற்பம் நோக்கிப் புலம் பெயரச் செய்தது. இதன் மூலம் ரோமர்களது அச்சுறுத்தல்களிலிருந்து தப்பியிருக்கலாமென யூதர்கள் கருதினர்.*

*எவ்வாறாயினும் ரோமர்களுக்கு எதிராக கி.பி. 70இல் யூதர்கள் மேற்கொண்ட கிளர்ச்சிகள் தோல்வியில் முடிவடையவே யூதர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியது. அக்கிளர்ச்சிகளைப் பேரரசர் டைட்டஸ் அடக்கிவிட்டார். அவ்வாறு வந்த யூதர்களுள் சிலர் யஸ்ரிபை வந்து சேர்ந்தனர். பின்னர் கி.பி. 132 - 135 காலப்குதியில் பேரரசர் ஹத்ரியனுக்கு எதிரான யூத கிளர்ச்சிகளும் தோல்வி காணவே மேலும் ஒரு குழுவினர் அரேபிய பிரதேசங்களை வந்து சேர்ந்தனர். இவ்வாறு வந்து சேர்ந்த யூதர்களே மதீனாவினதும் ஹிஜாஸினதும் யூத குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தனர்.*

*பனீ அல்-நளீர்[10], பனீ குரைளா[11] கோத்திரங்களது யூதர்கள் யஸ்ரிபில் வந்து குடியேற்றங்களை அமைத்துக் கொண்டமைக்கு அதன் மண் வளமும், ஸிரியா நோக்கிய வர்த்தக*

10. بني النضير    11. قريظة

மார்க்கத்தில் அது ஒரு முக்கிய தளமாக அமைந்தமையும் காரணமாக விளங்கின. யஸ்ரிபின் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்த ஹர்ரா வாகிம் பிரதேசத்தில் அவர்கள் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இதுவே மிக்க வளமான பிரதேசமாக விளங்கியது. அடுத்து முக்கியத்துவம் பெற்ற யூத கோத்திரம் பனூ கைனுகா[12]. அவர்களது குடியிருப்பின் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்றில் அவர்கள் ஹிஜாஸ் நோக்கி வந்து குடியேறிய யூதர்கள், அல்லது யூத மதத்தினைத் தழுவிய அரேபியர்கள். இவ்வாறான அபிப்பிராய பேதங்கள் அரேபிய மூலங்களில் குறிக்கப்பட்டுள்ள வேறும் சிறிய யூத கோத்திரங்கள் குறித்தும் நிலவுகின்றன. அவையாவன: பனூ அக்ரிமா[13], பனூ முஹம்மர்[14], பனூ ஸஊரா[15], பனூ அல்-ஷதீபா[16], பனூ ஜஷம்[17], பனூ முஆவியா[18], பனூ முரீத்[19], பனூ அல்-கஸீஸ்[20], பனூ ஸஅலபா[21].

யூதர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை மூல ஆதாரங்கள் அளிக்கவில்லை. என்றாலும், ஸீறா ஆக்கங்கள் போராளிகளின் எண்ணிக்கைகளை அளிக்கின்றன. பொதுவாக ஒவ்வொரு கோத்திரத்தினதும் வயது வந்த ஆண்களே போராளிகளாக அமைந்தனர்: பனூ கைனுகாவில் 700; அதே அளவினர் பனூ அல்-நளீர் கோத்திரத்தில்; பனூ குரைளாவில் 700க்கும் 900க்கும் இடைப்பட்டோர். மூன்று கோத்திரத்தாரதும் போராளிகள் 2000க்குச் சற்று கூடியவர்களாக இருந்தனர். யஸ்ரிபின் வேறும் பல பிரதேசங்களில் வாழ்ந்து வந்த முக்கியத்துவம் பெற்றிராத சிறிய யூத கோத்திரங்கள் இதில் சேர்க்கப்படவில்லை. இவ்வாறான சுமார் இருபது சிறு கோத்திரங்கள் காணப் பெற்றதாகக் கூறுவார் அல்-ஸம்ஹூதீ[22].

12. بنوقينقاء
13. عكرمة
14. محمر
15. زعورا
16. الشطيبة
17. جشم
18. معاوية
19. مريد
20. القصيص
21. ثعلبة
22. السمهودي

*அராபிய பிரசன்னம் உறுதிப்படுத்தப்படுமுன்னரான மதீன சமூகத்தில் யூதர்களது ஆதிக்கமே நிலவி வந்தமை குறித்து ஐயங்கள் ஏதும் இருக்க வேண்டியதில்லை. பொருளாதார, அரசியல், அறிவியல் துறைகள் என்பன யூதர்களின் பூரணமான செல்வாக்கின் கீழ் இருந்தன. யூதர்களது முத்திரை மதீன சமூகத்தில் பதிந்திருந்தது போலவே, யூதர்களும் யஸ்ரிபைச் சூழவுள்ள அரபு கோத்திரங்களது செல்வாக்குகட்கு ஆட்பட்டவர்களாக இருந்தார்கள். உதாரணமாக, ஸிரியாவிலிருந்து, யூதர்கள் அரண்கள் அமைக்கும் முறையை யஸ்ரிபுக்குக் கொண்டு வந்தார்கள். இத்தகு 59 அரண்கள் அமைக்கப்பெற்றன. விவசாயம், கைத்தொழில் துறைகளில் தாம் பெற்றிருந்த அறிவினையும் அவர்கள் யஸ்ரிபுக்குக் கொண்டு வந்தார்கள். இதனால் யஸ்ரிபின் பேரீச்சை, முந்திரிகை, மாதுளம் கனி வர்க்கங்களுடன் ஏனைய சில பயிர்களும் விருத்தி செய்யப்பட்டன. மிருக வளர்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நெய்தல் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டது. அரபு செல்வாக்கினை யூதர்கள் மத்தியில் கண்டுகொள்ளவும் முடிந்தது. கோத்திரக் குழு மனப்பான்மை, அஸபிய்யா, தாராண்மை, கவிதை மீதான விருப்பு, யுத்த ஆயுதப் பயிற்சி என்பவற்றில் யூதர்களின் ஆர்வம் பெருகலாயிற்று. ஒரே மதத்தைப் பேணுவோர் மத்தியில் இருக்க வேண்டிய ஒற்றுமை மனப்பாங்கையும் விஞ்சியதாக அமைந்தது, கோத்திர எண்ணங்களிலான அவர்களது பிரிவினைகள். ஆகவே அவர்கள் கோத்திரப் பிரிவினைகளின் உள்ளே வாழ்ந்தவர்களாய், பின்னர் நபிகளாரின் காலத்தில் பிரஷ்டம் செய்யப்பட்ட வேளைகளிலும் ஒன்று சேர இயலாதோராயினர். அவர்களது பொருளாதார நடவடிக்கைகளில் மத்தியஸ்தானம் பெற்றிருந்தது வட்டி(ரிபா)யாகும். மக்காவின் வர்த்தக சமூகத்தார் மத்தியிலும் வட்டி அறியப்பட்டிருந்தது.*

**அராபியர்**

*அராபியரின் அல் அவ்ஸ்[23], கஸ்ரஜ்[24] கோத்திரத்தவர்கள் யஸ்ரிபில் வாழ்ந்து வந்தனர். இங்குதான் மிக்க வளம் பொருந்*

23. الأوس 24. الخزرج

*திய நிலங்களையும் தண்ணீர் வசதிகளையும் பெற்றுக்கொண் டவர்களாக யூதர்கள் குடியேறியிருந்தனர். இதனால் அவ்ஸ் களும் கஸ்ரஜ்களும் யஸ்ரிபின் வளங்குன்றிய பாலைப் பிர தேசங்களிலேயே வாழ வேண்டியதாயிற்று. அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தார் யெமனின் அல்-அஸ்த்*[25] *கோத்திரத்தாரோடு தொடர்புற்றவர்களாக இருந்தனர். அவர்கள் யெமனிலிருந்து வெவ்வேறு காலங்களில் வடக்கு நோக்கிப் புலம் பெயர்ந்து வந்தனர். ஆரம்ப புலம் பெயர்வாக இருந்திருக்கக் கூடியது கி.பி. 207-ல் குஸாஅ*[26] *மக்காவுக்குச் சென்று குடியேறியமையா இருக்கலாம்.*

*அஸ்த் புலம் பெயர்ந்து சென்றமைக்கு வரலாற்றாசிரி யர்கள் வெவ்வேறு காரணங்கள் கற்பிப்பர். சிலர் மஅரிப்*[27] *அணைக்கட்டு உடைப்பெடுத்தமையையும் அல்-அரம்*[28] *வெள்ளத்தையும் காரணம் காட்டுவர். ஏனையோர் செங்கடல் பரப்பில் ரோமரின் செல்வாக்குப் பெருகியமையின் விளை வாக ஏற்பட்ட பொருளாதாரத் தளர்ச்சியும் அரசியல் உறுதி யின்மையுமே அஸ்த்தின் புலம் பெயர்வுக்கான காரணம் என் பர். ஏற்புக்குரியதொரு விளக்கமாகத் தோற்றுவது இதுவே. இதன் தாக்கங்கள் பாரியனவாக இருந்தன. மேலும் அஸ்த்தின் பெரும்பாலோர் மஅரிப் அணைப் பிரதேசத்திலிருந்தும் சேய்மைப் பட்டவர்களாகவே வாழ்ந்து வந்தனர்.*

*அஸ்த்களின் கோத்திரத்தார்களே அவ்ஸ், கஸ்ரஜ்கள். இவர்களும் யஸ்ரிபில் யூதர்களின் இருப்பிடங்களுக்கு அருகா மையில் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர்.*

*அவ்ஸ், அல்-அவாலி*[29] *எனும் மேட்டுப் பிரதேசங்களில், பனீ குரைளா, அல்-நளீர்களுக்கு அருகாமையில் வாழ்ந்து வர, கஸ்ரஜ், மதீனாவின் தாழ்ந்த பிரதேசங்களில் பனூ கைனு காவை அண்டை கோத்திரத்தோராகக் கொண்டு வாழலா யினர். அவ்ஸ்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் கஸ்ரஜ்களின் பகுதிகளை விட வளம் மிக்கனவாயிருந்தன. இரு கோத்திரத்*

*25.* الأزد *26.* خزاعة *27.* مأرب

*28.* العرم *29.* العوالي

தாரதும் மோதல்களில் இதுவும் பெரும் செல்வாக்கைப் பதித்திருந்தது.

இவர்களது புலப் பெயர்வு கி. பி. 300 அளவில் ஏற்பட்ட தாகவும், யஸ்ரிபில் அவர்களது மேலாண்மை கி. பி. 492 அளவில் நிலைபெற்றது என்றும் கணிப்பார் ஸித்யூ. அராபி யருக்குச் சார்பாக இக்கால கட்டத்தில், பொருளாதார, குடிப் பெருக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடுவது சாத்தியமே. அவர்களது தொகையும் செல்வமும் இக்காலகட்டத்தில் விருத்தியுற்றுச் சென்றன. அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தாரின் தொகை பற்றிய மதிப்பீடுகள் இல்லையென்றாலும் ஹிஜ்ரி 8-ல் மக்காவின் விடுதலையின் போது இரு கோத்திரத்தருமாக மொத்தம் 4000 போராளிகளை இஸ்லாமிய இராணுவத்துக்கு அளித்திருந்தனர். இத்தகு மாற்றங்கள், யூதர்களின் செல்வாக்கு களுக்குள்ளாகியிருந்த யஸ்ரிபில் அராபியரின் செல்வாக்கு பெருகுவதற்கு வழி வகுத்திருத்தல் இயல்பே. அவ்ஸ்- கஸ்ரஜ் களுக்கு இடையிலான ஒற்றுமையைக் குலைத்து, அவர் களிடையே பிரிவினைகளை உருவாக்கி வைப்பதன் மூலம் தமது நிலைமையை உறுதிசெய்து கொள்ள யூதர்கள் திட்ட மிட்டுக் கருமமாற்றலாயினர். இரு சாரார்க்கும் இடையில் பகைமையை வளர்த்து அவர்களை மோதல்களுக்கு உள் ளாக்கி விடுவதில் யூதர்கள் வெற்றி கண்டு கொண்டனர். இந்த மோதல்களில் இறுதியாக நிகழ்ந்தது புஆஸ்[30] யுத்தம். இது ஹிஜ்ரிக்கு ஐந்து வருடங்களின் முன்னர் நிகழ்ந்தது. இந்த யுத்தத்தின் போது அவ்ஸ்கள் தமது கூடிய படைப்பலத்தின் காரணமாக இதுவரை வெற்றிகண்டு வந்தவர்களான கஸ்ரஜ் களைத் தோற்கடிக்க முடிந்தது. அவ்ஸ்கள், யூத கோத்திரங் களான அல்-நளீர், குரைளாக்களுடன் கூட்டு உடன்படிக் கைகள் செய்து கொண்டமை காரணமாக கஸ்ரஜ்களை புஆஸ் ஸில் வெற்றி கொண்டாலும் கூட, கஸ்ரஜ்களை முற்றாக அழித்து விடுவதன் விளைவாக ஏற்படக் கூடிய ஆபத்துக் களையும் நன்கு உணர்ந்திருந்தார்கள். அவ்வாறான ஒரு

30. بعاث

நிலைமை, யஸ்ரிபில் தமது செல்வாக்கினை மீளவும் நிலை நிறுத்திக் கொள்ள யூதர்களுக்குத் துணை செய்வதாக அமைந் துவிடும். எனவே இரு சாராரும் ஓர் இணக்கத்தைக் கண்டு கொள்வதற்கான ஏற்பாட்டுக்கு வந்தனர். அவ்ஸ்களும், கஸ்ரஜ் களும் யஸ்ரிபின் அரசனாக கஸ்ரஜ்களுள் ஒருவரை நியமித் துக் கொள்ளவும் இணங்கினர். அவர் அப்துல்லாஹ் இப்ன் உபை இப்னு ஸலூல். தனது குடும்பத்தார் சகிதம் புஆஸ் யுத்தத் தில் பங்கேற்காமல் நடுநிலை வகிக்க முடிவு செய்திருந்தவர் இவர். புஆஸ் யுத்தத்தின் பின்னர் அராபியர் தமது பலத் தையும், ஆதிக்கத்தையும் தக்க வைத்துக்கொள்ளக் கூடியதாக இருந் தமையை இது உணர்த்துகின்றது.

இஸ்லாத்துக்கு முன்னர், அவ்ஸ் - கஸ்ரஜ்களுக்கிடையி லான மோதல்கள் இரு சாரார் மத்தியிலும் கசப்புணர் வுகளைத் தோற்றுவித்திருந்தாலும், ஐயமற, சமாதானமாக வாழ்வதற்கான அவர்களது அபிலாஷையையும் அவை பெருக்கவே செய்தன. இந்த உணர்வு, பின்னர் யஸ்ரிப் வாசிகள் சகோதரத்துவத்தையும், அமைதியையும் ஈட்டித் தருவதான இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதுடன் நெருங்கியதாக இருக் கின்றது. மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் யுத்தங் களும் மோதல்களும் கொண்டிருந்த தாக்கம் குறித்துப் பேசு வார் ஆயிஷா (ரலி):[31]

"புஆஸ் யுத்தம், இறைவனே அதனை இறை தூதரின் வரு கைக்கு முன்னர் கொண்டு வந்தான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) (மதீனாவுக்கு) வந்த வேளை அவர்கள் (அவ்ஸ், கஸ்ரஜ்) ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தார்கள். அவர்களது பிரதானிகள் பலர் கொல்லப்பட்டிருந்தார்கள் அல்லது காய முற்றிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதரது வருகைக்கு முன்னர் இறைவனே இதனைக் கொண்டு வந்தான். அதன் மூலம் அவர் கள் (இலகுவாக) இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள முடிந்தது."

31. (ரலி): 'ரலியல்லாஹு அன்ஹு' 'அன்ஹா', 'அன்ஹுமா' - அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக. நபிகள் (ஸல்) அவர்களது தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும் போது உரைக்கப்படுவது.

# IV

## மதீன சமூகத்தில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கம்.

ஒவ்வொரு நாகரிகமும் சிந்தனைப் பிரிவும், மதமும் தத்தமக்கேயுரிய சிறப்பியல்புகளையும், தனித்துவங்களையும் கொண்டனவாயிருக்கின்றன. நாகரிகத்தின் தன்மைகள் பலமும், சிறப்பும், உயர் தன்மைகளும் கொண்டனவாக இருக்கும் பட்சத்தில் அதன் எல்லைப் பரப்புக்குள் வாழும் மக்கள் மத்தியில் அது ஆழ்ந்த செல்வாக்குகளைப் பதித்து நிற்கும். சில கோட்பாட்டுச் சிந்தனைகள் தமக்குள் பெரிதும் ஒருமைப்பட்டனவாக அமைந்துள்ளன. குறிப்பிட்ட ஒரு சில அம்சங்களில் மட்டும் அவை வேறுபட்டுச் செல்கின்றன. இதற்கு உதாரணமாக நாம் கொள்ளக்கூடியதாக உள்ளது சமகால உலகில் நிலவி வரும் லௌகிக சித்தாந்தங்கள். இவற்றுள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிக் கொள்ள விரும்பும் ஒருவர் தனது வாழ்வில் முற்று முழுதான, தீர்க்கமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. ஒரு கோட்பாட்டின் மீதான ஈர்ப்பு குன்றிச் செல்ல, பிறிதொரு கோட்பாட்டின் மீதான அவரது நம்பிக்கை அதிகரிப்பதே ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிக்கொள்ளப் போதுமானதாக இருக்கும். இவ்வாறான மாற்றத்துக்குப் பாரிய முயற்சிகள் ஏதும் தேவைப்படுவதில்லை. ஏனெனில் இம்மாற்றம் ஒருவரின் அன்றாட நடவடிக்கைகளிலும், அவருள் ஊன்றியுள்ள பழக்கவழக்கங்களிலும் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆக ஒருவரின் வாழ்வமைப்பில் இத்தகு மாற்றம் எவ்வித பிரதிபலிப்பையும் தோற்றுவிப்பதில்லை.

இஸ்லாத்தைப் பொறுத்து ஏற்புடைத்தாவதில்லை இது. தான் ஆரம்பமான காலத்திலிருந்து இஸ்லாம் தனியார் வாழ்விலும் சமூக வாழ்விலும் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. மக்களின் அன்றாட நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், பெறுமானங்கள், விழுமியங்கள் அனைத்தையும் அது மாற்றியமைத்து விடுகின்றது. மானுடம், வாழ்வு, பிரபஞ்சம் என்பன பற்றிய நோக்கிலும் அது பூரணமான மாற்றங்களைக் கொண்டு வந்து விடுகின்றது. சமூக அமைப்புக்கூட பெரு மாற்றங்களுக்கு உள்ளாகி விடுகின்றது. அதன் அம்சங்களுள் சில மறைந்து போய் விடுகின்றன; புதியன உருவாகின்றன.

இஸ்லாம் கொண்டுவரும் மாற்றங்கள் ஆழமானவை; சர்வ வியாபகமானவை. அடிப்படை நம்பிக்கைகள், கோட்பாடுகளைப் பொறுத்தமட்டில் புலன்களுக்கு எட்டுவனவான சிலைகள், நட்சத்திரங்கள் முதலானவற்றை வணங்குவதினின்றும் முற்றும் மாற்றமான வகையில் உருவிலா, விவரிக்க இயலா, புலன்களால் கிரகித்துக்கொள்ளவியலா தனியோர் இறைவனை வணங்கும் நிலைக்கு மக்கள் உந்தப்பட்டு விடுகின்றார்கள். "அவனுக்கு ஒப்பானது ஒன்றும் இல்லை".(42:11). "பார்வைகள் அவனை அடைய முடியாது; அவனோ பார்வைகள் அனைத்தையும் அறிந்து கொள்கின்றான்".(6:103). இறைவன், தன்னைக் குறித்துத் தனது வேதத்தில், தானே கூறியன கொண்டும், அவனது தூதர் (ஸல்) அவர்கள் அவன் குறித்துக் கூறியன கொண்டுமே அறியப்படுகின்றான். அதில் தம்ஸீல்[1] (பிரதிநிதித்துவம்), தஷ்பீஹ்[2] (மானிடப் பண்புகளின் கற்பிதம்), நபீ[3] (மறுதலிப்பு), தஃதீல்[4] (இறைபண்புகளின் நிராகரிப்பு) என்பதெல்லாம் இல்லை.

அறிவுலகை அண்மிக் கொள்ள இயலாத சிந்தை, புலன் உணர்வுகளுக்கு எட்டுவனவற்றுடனேயே மட்டுப்பட்டு விடுகின்றது. அறிவும், நாகரிக முதிர்வும் எய்திக் கொண்ட சிந்தையானது ஏக இறைக் கோட்பாட்டையும், படைப்புகள் அனைத்தினதும் பரிபாலகனாக ஏக இறையோனையே கொள்ளும்

1. تمثيل 2. تشبيه 3. نفي 4. تعطيل

நிலையையும் எய்திக் கொள்வது பெரும் மாற்றமாக அமைகின் றது. மானுடரின் அன்றாட வாழ்க்கையில் இஸ்லாம் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்து விடுகின்றது. இஸ்லாத்துக்கு முன்னைய காலத்து மனிதர் ஒருவர் இஸ்லாத்தை ஏற்பதுடன் உள்ளாகும் மாற்றம் பாரியது.

இஸ்லாத்தின் ஏற்புடன், தமது சமூக நடவடிக்கைகளி லும், உறவுகளிலும் சட்டவரம்புகளுக்கு உட்படாத போக்கு களிலிருந்து அராபியர் மாற்றமுற வேண்டியதாயிற்று. ஷரீ ஆவின் வரம்புகளுக்கு உட்பட்டனவாக அவர்களுடைய வாழ் வின் அனைத்து அம்சங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டு வனவாயின: ஒழுக்க நெறிகள், பழக்கவழக்கங்கள்; உறக்கமும் துயிலெழுதலும்; உண்ணலும் அருந்துதலும்; திருமணமும் மணவிலக்கும்; வாங்கலும் விற்றலும் இத்யாதி அனைத்துமே.

மனிதர்களைக் கட்டுப்படுத்துவன அவர்களது பழக்க வழக்கங்களே. பழம் பழக்க வழக்கங்களைக் கைவிட்டு விடு வதும், புதிய பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வதும் இலகு வான கருமங்களல்ல. என்றாலும் இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டவர்களது இதயத்துள் இஸ்லாம் ஏற்படுத்தி வைத்த மகோன்னதமான தாக்கங்களின் காரணமாக இஸ்லாத்துக்கு முன்னைய அத்துணை தன்மைகளையும் களைந்து விடுதலும், இஸ்லாமிய நெறியை அதன் அனைத்துப் பெறுமானங்களுட னும் ஏற்றுக் கொள்வதும் அவர்களுக்குச் சிரமமான கருமங் களாக இருக்கவில்லை. ஏக இறையோனை மட்டுமே வணங் கும் நெறியின் பாற்பட்ட அவர்கள், தமது சமூக பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தையும் இறைவன் விதிசெய்த பிர மாணங்களின் படியே கொண்டு நடத்தலானார்கள். ஏனெனில் இஸ்லாத்தில் வணக்கம் என்பது, அனைத்துக் கருமங்களும் இறைவனுக்காக ஆற்றப்படுவதாக அமைவதனையே குறித்தது. சமயத்தின் தூண்களுள் ஒன்றாக அமைந்த ஸலாஹ்வை தின மும் ஐவேளை குறிப்பிட்ட நேரங்களில் அவர்கள் தொழுது வரலானார்கள்.

சோம்பலும், கரிசனையின்மையும் காரணமாக சிற்சில வேளைகளில் கடமைகளையும் பொறுப்புக்களையும் உதா

*சீனப்படுத்தி நடப்பது மானிட இயல்பு. ஆனால் இறைவனுக் குத் தன்னை அர்ப்பணம் செய்து விட்டுள்ள நிலையில் இக் கடமைகளை ஆற்றுவது, ஒரு முஸ்லிமைப் பொறுத்தளவில் சர்வ சாதாரண வழக்கமாகி விடுகின்றது. ஸலாஹ் எவ்வளவு பொறுமையை விழைந்து நிற்கின்றது என்பதனை அல்லாஹ் கூறுகின்றான்: "நபியே! தொழுகையைக் கொண்டு உமது குடும் பத்தினரை ஏவுவீராக! இன்னும் அதன் மீது நீரும் நிலைத் திருப்பீராக!" (20:132)*

*அது போலவே மானிடரின் அன்றாட உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றியமைத்து விடும் ஸவ்ம் நோன்பானது, மனோ திடத்தையும் தீர்க்கமான விசுவாசத்தையும் அவாவி நிற்கின்றது. ஒவ்வொரு வருடமும் தான் சேகரித்துக் கொண் டுள்ளசெல்வத்திலிருந்தும் ஒரு பகுதியை ஸகாஹ்வாக செலுத்த வேண்டியிருக்கின்றமை, ஒருவரை, பேராசை, அவா என்பவற்றிலிருந்தும் விலகச் செய்கின்றது. ஸகாஹ் செலுத்து வதற்கு ஒரு முஸ்லிம் இறைவன் மீது விருப்புக் கொள்ள வேண் டும் - செல்வத்தின் மீது கொள்ளும் விருப்புக்கும் மேலாக. இது இலகுவான ஒரு கருமமல்ல. அதனால்தான் அபூபக்ர் அல்-ஸித்தீக்கின் கிலாபாவின் போது இஸ்லாத்தில் தாம் தொடர்ந்தும் இருக்க வேண்டுமாயின் ஸகாஹ் கொடுப்பதி லிருந்தும் தமக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என வேண் டினர் சில கோத்திரத்தார்.*

*புதிய பிரமாணங்களை ஏற்கவும், அவற்றைக் கொண்டு நடத்தவும் தம்மைப் பயிற்றுவித்துக் கொள்வது மட்டுமன்றி சமூகத்தில் நன்கு வேரூன்றியிருந்த வழக்கங்களைக் கைவிட வேண்டியோராகவும் அன்னவர் இருந்தனர். மதுப்பாவனை; இஸ்லாத்தின் கண்டனத்துக்குள்ளான திருமண முறைகள்; மக்காவினதும், ஏனைய நகரங்களதும் பொருளாதார நடவடிக் கைகளை இயக்குவதில் பிரதான பங்கு வகித்த 'ரிபா' - வட்டி ஆகியன, முக்கியமான சில. இவற்றையும் ஏனைய வழக்கங் களையும் இறைவனின் கட்டளையின்படி கைவிட வேண் டியவர்களானார்கள் முஸ்லிம்கள்:*

*இறை நம்பிக்கையாளர்களே! நிச்சயமாக மது பானமும், சூதாட்டமும் (வணக்கத்துக்காக நட்டு வைக்கப்பட்டிருக்கும்) சிலைகளும், குறிபார்க்கும் (சூது விளையாட்டு) அம்புகளும் ஷைத்தானுடைய செயலிலுள்ள அருவருக்கத் தக்கனவாகும். - ஆகவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஷைத்தான் விரும்புவதெல் லாம் மதுவினாலும், சூதாட்டத்தினாலும் உங்களுக்கிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டாக்கு வதற்கும், அல்லாஹ்வுடைய நினைவை விட்டும், தொழுகையை விட்டும் உங்களை அவன் தடுப்பதற்கு மேயாகும்; எனவே (இவற்றை விட்டு) நீங்கள் விலகிக் கொள்கின்றீர்களா? (5:90-91)*

அன்ஸார், பெரும் மதுபானக் குடங்களைக் கொண்டு வந்து கொட்டியவர்களாகக் கூறினார்கள்: "நாங்கள் (மது அருந்துவதை) நிறுத்தி விட்டோம் ஓ இறைவா!". மது அருந்துதல் அவர்களது தனிப்பட்ட, சமூக வாழ்வில் மிக்க முக்கியத்துவம் பெற்றிருந்ததோர் அம்சம். அன்ஸார் கொட்டிய மது வானது, அகிலங்களையெல்லாம் பரிபாலித்து வரும் இறைவனுக்காக அவர்கள் தியாகம் செய்துவிட்ட பெருஞ் செல்வம்.

அராபியர் எந்த ஓர் அரசுக்கும் கட்டுப்பட்டு அடிபணிந்து செல்பவர்களல்லர். அவர்களது அரச, சமூக அங்கங்களில் மத்தியத்துவம் பெற்றது கோத்திரமாகும். இஸ்லாத்துக்கு முன்னர் அரேபிய தீபகற்பத்தின் பாகங்களில் முகிழ்த்திருந்த சிற்றரசுகள் பல வலுவிழந்து சென்றுவிட்டன. கோத்திர அமைப்பு முறையும் நாடோடி வாழ்க்கை முறையும், அவற்றோடு இணைந்த குழுப்பற்று, பிரிவினைகள், மோதல்கள் என்பவற்றுடன் இணைந்து தீபகற்பம் முழுவதும் வியாபித்திருந்தன. இஸ்லாம் தனது வருகையுடன், ஓர் அரசாட்சி முறையை நிறுவி அனைத்துக் குழுவினரையும், கோத்திரங் களையும், தனிமனிதர்களையும் அதற்குக் கட்டுப்பட்டிருக்கச் செய்தது. பூரணமானதொரு கோட்பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்ட மதீனத்து அரசியல் அமைப்பானது வரலாற்றில் முதன்

*முறையாக அரேபிய தீபகற்பத்தை இஸ்லாமிய பதாகையின் கீழ் ஒன்றுபடுத்தியமைத்தது. அரேபிய தீபகற்பத்து அரசியல் வரலாற்றில் இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகும்.*

*மதீனாவின் தனி மனிதருள்ளும், சமூக வாழ்விலும் இஸ் லாம் தனது ஆழமான, சர்வ வியாபக தன்மையின் காரண மாகவும், வாழ்வின் அனைத்து அங்கங்களையும் தனது செல் வாக்குக்குள்ளாக்கும் அருந்தகைமையின் காரணமாகவும் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவந்து சேர்த்தது. "அல்லாஹ்வுடைய மார்க்கத்தையே நாங்கள் பின்பற்றுவோம். அல்லாஹ்வை விட மார்க்கத்தால் மிக அழகானவன் யார்?" (2:138)*

*முற்று முழுதான இம்மாற்றங்கள் குறித்து நாம் பின்வரும் அத்தியாயங்களில் உரையாடுவோம்.*

V

# ஹிஜ்றாவும் மதீன சமூக அமைப்பில் அதன் தாக்கமும்

இஸ்லாத்தின் பின்னர் மதீனா என வழங்கிய யஸ்ரிபை முஹாஜிரூன் வந்து சேரலாயினர். ஆரம்ப முஹாஜிரூன் குறைஷியரின் பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்தோராக இருந்தனர். ஹிஜ்றா மேலும் தொடர்ந்தது. தீபகற்பத்தின் எல் லாப் பிரதேசங்களிலும் இருந்த அனைத்து நவ முஸ்லிம் களுக்கும் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத்துச் செய்வது கடமை யாகிவிட்டது. ஹிஜ்ரி 8-ல் மக்க விடுதலையுடன் உத்தியோக பூர்வமாக நிறுத்தப்படும் வரை ஹிஜ்றா தொடர்ந்து வந்தது.

உமர்-இப்ன்-அல்-கத்தாப் (ரலி) ஹிஜ்றா காலக் கணிப் பீட்டை அறிமுகம் செய்தது முதல், ஹிஜ்றாவே ஒவ்வோர் ஆண்டினதும் ஆரம்பத்தை நினைவுறுத்தும் நிகழ்வாக இருந்து வருகின்றது.

விசுவாசங்கள், நம்பிக்கைகள் மீதான தூய்மையான ஈடு பாட்டையும் தியாக சிந்தையையும் உறுதி செய்வதாக அமைந் தது ஹிஜ்றா. இறைவனதும் அவனது தூதரதும் அழைப்பு களுக்குச் செவி மடுத்தவர்களாகத் தமது வீடுவாசல்கள், சொத்து சுகங்கள், செல்வங்கள் அனைத்தும் துறந்தவர்களாய், தமது குடும்பத்தவர்களை, நண்பர்களை, உறவினர்களையெல் லாம் பிரிந்து வந்தவர்கள் முஹாஜிரூன். ஷுஹைப்-அல்-ரூமி[1] ஹிஜ்றாவுக்காகப் புறப்பட்ட வேளை அவரைத் தடுத்து நிறுத்தினார்கள் குறைஷியர். மக்காவுக்கு வந்து சேர்ந்த வேளை செல்வம் எதனையும் அவர் கொண்டிருக்கவில்லை யெனவும், அவர் தற்போது கொண்டுள்ள செல்வம் அனைத் தும் மக்காவில் ஈட்டிக்கொள்ளப்பட்டனவே எனவும்

1. صهيب الرومي

*குறைஷியர் கூறி நின்றனர். ஷுஹைப் தனது செல்வம் அனைத் தையும் மக்காவிலேயே விட்டு வெறுங்கையினராக ஹிஜ்றா வை மேற்கொண்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதனைச் செவியுற்ற வேளை கூறினார்கள்: "ஷுஹைப் (தனது வியாபாரத்தில்) லாபம் ஈட்டிக் கொண்டார்." அபூ ஸலாமா தனது மனைவி, மகன் சகிதம் புலம் பெயர்ந்து ஹிஜ்றா மேற் கொள்வதை தடுத்து நின்றார்கள் குறைஷியர். இதனால் அபூ ஸலாமா தனது தீர்மானத்தைக் கைவிட்டு விடவில்லை. அவ ரது மனைவி உம்ம் ஸலாமா தினமும் காலையில் அழுகை யுடன் அப்தா சென்று மாலை வரை இருந்து திரும்புவார். சுமார் ஒரு வருட காலமாக இது தொடர்ந்தது. பின்னரே அவர் தனது மகனுடன் தானும் புலம் பெயர்ந்து கணவனிடம் சென்று சேர முடிந்தது. இவ்வாறாக ஹிஜ்றா மேற்கொண் டோர் துயர்கள் பல அனுபவிக்க வேண்டியவர்களானார்கள். விசுவாசியரின் நம்பிக்கைகள்; அவர்களது விசுவாசத்தின் வலுவான தன்மை; லௌகிக நலன்கள், அவாக்கள், உறவுகள் மீதான விருப்புக்களுக்கும் மேலாக விசுவாசம் பெற்றிருக்கக் கூடிய உன்னதத்துவம் என்பனவெல்லாம் கடுமையான பரீட் சைகளுக்கு உள்ளாயின.*

*ஹிஜ்றாவோடு இணைந்த சம்பவங்கள் ஏராளம். அவை யனைத்தும் நபிகள் (ஸல்) அவர்களின் போதனைகளது வலு வான தன்மையை எடுத்துக் காட்டுகின்றன; அன்னாரைப் பின்பற்றியொழுகியோர் பெற்றிருந்த பயிற்சியினைத் தெளி வுறுத்துகின்றன. இவ்வாறான கடுமையான பயிற்சிகளின் பிரதிபலனாகத் தான் அவர்கள் இந்த உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதிகளாக அமைய முடிந்தது; அல்லாஹ்வின் சட்டங் களை அமுல் செய்வோராக விளங்க முடிந்தது; அல்லாஹ் வின் கட்டளைகளை நிறைவேற்றி வைப்போராக இயங்க முடிந்தது; அவனது வழியில் அவர்களால் போராட இயலு மாயிருந்தது. "பூமியில் சிறு தொகையினராகவும், பலவீன மானவர்களாகவும், எந்த நேரத்திலும் மனிதர்கள் இறாய்ஞ்சிக் கொண்டு போவதை அஞ்சியவர்களாகவும்" (8:26) இருந்த அவர்கள், மதீன அரசொன்றை அமைக்க வேண்டியவர்களாக*

*ஆன வேளை அதனைச் செயல்படுத்தப் பூரணமான தகுதி களைக் கொண்டவர்களானார்கள்.*

*அல்லாஹ் மதீனாவையே முஸ்லிம்கள் ஹிஜ்ரத்துச் செய்ய வேண்டிய இடமாகத் தேர்ந்து கொண்டான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்: "நீங்கள் வெளியேறிச் செல்வதற் கான இடம் காட்டப்பட்டவனாக இருக்கின்றேன். நன்கு நீர் பாய்ச்சப்பட்டதொரு நிலத்தை, பேரீச்சை மரங்கள் நிறைந்து, இரு கருங்குன்றுகளுக்கு இடைப்பட்ட ஒரு பிரதேசமாக நான் கண்டேன்."*

*தமது சொந்த ஹிஜ்றாவை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பிற்படுத்தினார்கள். இறைவனின் அனுமதி கிட்டிய வரை, அபூ பக்ருக்கும் தனது ஹிஜ்றாவைப் பிற்படுத்தும்படி அன்னார் அறிவுறுத்தினார்கள். ஆயிஷா (ரலி)கூறினார்: அபூபக்ர் மதீ னா செல்லத் தயாரானார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர் கள் கூறினார்கள்: "அவசரப்படாதீர். புலம் பெயர்ந்து செல்ல எனக்கு அனுமதி கிடைக்கும் என நான் நம்புகிறேன். (ஆகவே நீரும் என்னுடன் வரக்கூடுமாயிருக்கும்)". அல்லாஹ் தன் தூத ருக்குப் புலம் பெயர்ந்து செல்ல அனுமதியளித்த வேளை அன் னார், அலீ, அபூபக்ர், அவரது குடும்பத்தார் தவிர்ந்த வேறு எவருக்கும் அது குறித்துக் கூறவில்லை. முஸ்லிம்களது புலப் பெயர்வு குறித்துக் கடும் சினம் கொண்டவர்களாயிருந்த குறைஷிய அவிசுவாசியர், அல்லாஹ்வின் தூதரைக் கொன்று விடுவதற்கான முடிவினை எடுத்தனர். அல்லாஹ் கூறினான்: "இறை நிராகரிப்பாளர்கள்- உம்மை அவர்கள் சிறைப்படுத் துவதற்கு, அல்லது உம்மைக் கொலை செய்வதற்கு, அல்லது உம்மை (ஊரை விட்டு) வெளியேற்றுவதற்கு - சூழ்ச்சி செய்த நேரத்தை (நினைத்துப் பார்ப்பீராக!). அவர்கள் சூழ்ச்சி செய் கின்றனர்; அல்லாஹ்வும் (அவர்களுக்கெதிராய்) சூழ்ச்சி செய் கின்றான். (எனினும்) அல்லாஹ் சூழ்ச்சி செய்வோரில் மிகவும் மேன்மையுடையவன்." (8:30)*

*பின்னர் நபிகள் (ஸல்) அவர்களும் அபூபக்ரும் ஸவ்ர்[2] மலை வழியாகச் சென்றனர். அங்கே அவர்கள் ஒரு குகை*

*2.* ثور

*யினுள் ஒளித்திருந்தனர். அவர்களைத் தொடர்ந்து வந்தனர் குறைஷியர். குகையின் வெளியிலிருந்து அவதானித்தால் அவ்விருவரின் பாதங்கள் தெரியுமளவு அவர்கள் நெருங்கி வந்திருந்தனர். அபூபக்ர் கூறினார்: "யாரும் குனிந்து தனது பாதங்களைப் பார்த்தால் எம்மைக் கண்டுகொள்வார்". நபிகளார் (ஸல்) கூறினார்கள்: "ஓ அபூபக்ர்! இருவர் குறித்து நீர் என்ன நினைக்கின்றீர் - அல்லாஹ் மூன்றாமவனாக இருக் கும் வேளையில்?" இறைவன் முஷ்ரிகூனின் கவனத்தை அவர் களிலிருந்தும் திருப்பி விட்டான். குறைஷ், இவ்விருவரையும் கண்டு கொள்ளவில்லை. மூன்று நாட்கள் கழிய அவர்கள் குகையிலிருந்தும் வெளியேறி பாலைவனத்தினூடாக மதீனா சென்றனர். அவ்வேளை நபிகள்(ஸல்) அவர்களின் வயது 53. அபூபக்ரின் வயது 51. என்றாலும் அல்லாஹ்வை நெருங்கிய இதயம், தனது இலக்கை எட்டிக் கொள்வதற்கோ, சுவனத்து செய்திகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கோ எதுவும் தடையாக அமைவதில்லை.*

*இஸ்லாத்தின் தூதானது வணக்க வழிபாடுகளை(அல்-இபாதா[3])யும், மானிடர்க்கிடையிலான உறவுகளை(அல்முஆம லாத்[4])யும் ஒழுங்குபடுத்தி அமைப்பதாகும். முழு வாழ்க் கைக்குமான ஒரு சாசனம் அது. அதனைச் செயலுருப்படுத்திக் காட்ட ஒரு நிலப்பரப்பு அல்லது சில எல்லைகளும் ஓர் 'உம்மா'வும் தேவை. குர்ஆனில், மதீனாவில் அருளப்பட்ட வாசகங்களுடனும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியன, செய்தன, அறிவுறுத்தியன ஆன ஸுன்னாவுடனும் அந்த சாசனத்தின் சட்டதிட்டங்கள் அனைத்தும் அங்குதான் பூரணத்துவ நிலையை எட்டுகின்றன. இந்த சட்டதிட்டங்கள் மானுட வரலாற்றில் பெருமை மிக்கதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பிய உன்னதமானதோர் அரசினை உருவாக்கிக் காட்டின. அனைத்து இடங்களிலும், அனைத்துக் காலங் களிலும் மகிழ்வை உறுதி செய்வதற்கானதொரு முன்மாதிரி யாக அது அமைந்தது. அதுவே இம்மையிலும் மறுமையிலும் வெற்றியீட்டிக் கொள்ள வழியமைத்துக் காட்டியது; சிரமங்*

3. العبادات 4. المعاملات

கள் துயரங்களிலிருந்து பாதுகாப்பு அளித்தது; ஜாஹிலியத்தின் கொடூரங்கள் ஆக்கிரமிப்புக்களில் இருந்தும் தவிர்ந்திருக்கத் துணை பயந்தது. அல்லாஹ்வின் பக்கல் திரும்புவதும், அவனது தூதரது முன்மாதிரிகளைப் பின்பற்றியொழுகுவதும் தவிர எவருக்கும் மீட்சிக்கான மார்க்கம் வேறு எதுவும் இல்லை என்பது ருஜுவாகியது.

புலம் பெயர்ந்து செல்வதற்கான இறை கட்டளை கிட்டிய பின்னர், புலம் பெயர இயலுமான தோழர்களுள் ஏராளமானோர் தமது ஹிஜ்ராவை மேற்கொள்ளலாயினர். மதீனாவுக்கான நபிகளாரின் ஹிஜ்றா அதுவரை தாமதத்துக்குள்ளாகியது. ஹிஜ்றாவுக்கான உந்துதலும், ஹிஜ்றத்துச் செய்தோரின் உயரிய பண்புகள் குறித்த பிரஸ்தாபமும் குர்ஆனில் பலபடப் பேசப்பட்டன. மதீனாவில் உருவாக்கம் பெற்று வந்த இஸ்லாமிய அரசானது, நகரில் இஸ்லாத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசுவாசியரான முஹாஜிரூனின் பிரசன்னத்தை அவாவியிருந்தது. மதீனாவின் உள்ளே யூதர்களும், சிலை வணக்கஸ்தர்களும், வஞ்சகர்களும் இஸ்லாத்தை அழித்து விடுவதற்கான முனைவுகளில் ஈடுபட்டிருந்தனர். வெளியே, சிலை வணங்கிகளான நாடோடிய அரேபியர்களால் சூழப்பட்டிருந்தது மதீனா. மதீனாவில் நிகழ்ந்து வருவன குறித்து அவதானத்துடன் இருந்து வந்த குறைஷிய அவிசுவாசிகள், ஹிஜ்றாவின் காரணமாக ஆழ்ந்த குழப்பங்களுக்குள்ளானார்கள். இன்னமும் பால்ய நிலையிலேயே இருந்து வந்த இஸ்லாத்தையும், மதீனாவில் உருவாகி வரும் இஸ்லாமிய அரசையும் இல்லாமலாக்கி விடுவதற்கான சூழ்ச்சிகள் தொடர்ந்து வந்தன. எனவேதான் ஏராளமான வாசகங்கள் மதீனாவுக்கான புலம் பெயர்தலை ஊக்குவித்தன; அதன் சிறப்புக்களையும், அதனால் கிட்டக்கூடிய பெரு நன்மைகளையும் சிலாகித்துப் பேசின. தமது எதிரிகளை எதிர்த்துப் போராடுவதற்காய், முஹாஜிரூனுக்கான பாதுகாப்பை இறைவனே வாக்களிக்கின்றான். அவர்களுக்கெனத் தாராளமான வாழ்வாதாரங்களும் உறுதி செய்யப்படுகின்றன:

*“அல்லாஹ்வுடைய பாதையில் (தான் இருந்த இடத்தை விட்டு) எவர் வெளியேறி விடுகின்றாரோ, அவர் பூமியில் வசதியான இடங்களையும் சௌகரியத்தையும் அடைவார். எவரேனும் தன் இல்லத்தை விட்டு வெளியேறி அல்லாஹ்வின் பக்கமும், அவனுடைய தூதரின் பக்கமும் ஹிஜ்றத் செய்யும் வழியில் இறந்து விட்டால் அவருடைய வெகுமதி நிச்சயமாக அல்லாஹ்வின் மீது கடமையாகிவிடுகின்றது.” (4:100)*

*அதாவது புலம் பெயர்ந்து செல்லும் நோக்கினராகப் புறப்பட்டுச் செல்பவர், இடையில் மரணத்துக்காளாய் விடுவாராயின், அவர் புலம் பெயர்ந்து சென்றவருக்கான நன்மையை ஈட்டிக் கொண்டவராவார்.*

*எவர்கள் (தங்கள் இல்லங்களை விட்டு) அல்லாஹ்வுடைய வழியில் புறப்பட்டு பின்னர் (போரில்) வெட்டப்படுகிறார்களோ அல்லது இறந்து விடுகின்றனரோ அவர்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் மிக்க அழகான (முறையில்) உணவளிக்கின்றான். ஏனென்றால் நிச்சயமாக அல்லாஹ் உணவளிப்பவர்களில் எல்லாம் மிக்க மேலானவன். (22:58)*

*இதன் மூலம் இறைவனுக்காகப் புலம் பெயர்ந்து செல்வோருக்கான வாழ்வாதாரங்கள் உறுதி செய்யப்படுகின்றன. யுத்தத்திலோ அல்லது தங்கள் வீடுகளிலோ அவர்கள் மரணத்துக்காளாய் விடுவராயின் அவர்களுக்கான நன்மைகளும் வாக்களிக்கப்படுகின்றன.*

*புலம் பெயர்ந்து செல்லக்கூடியவர்களாயிருந்த முஸ்லிம்கள், அவிசுவாசியரான குறைஷியர் மத்தியில் வாழ்ந்து வருவது குர்ஆனின் கண்டனத்துக்குள்ளாகின்றது:*

*எவர்கள் (தங்கள் மார்க்கக் கட்டளையைச் சரிவர நிறைவேற்ற முடியாமல், நிராகரிப்பவர்களின் நாட்டில் இருந்து கொண்டு) தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனரோ அவர்களின் உயிரை மலக்குகள் கைப்பற்றும் பொழுது (அவர்களை*

*நோக்கி, மார்க்கக் கட்டளையை நிறைவேற்றாது) நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள் என்று கேட்பார்கள். அ(தற்க)வர்கள் 'இந்தப் பூமியில் நாங்கள் சிறுபான்மையினர்களாகவே இருந்தோம்' என்று (பதில்) கூறுவார்கள். (அதற்கு மலக்குகள்) 'அல்லாஹ்வுடைய பூமி விசாலமானதல்லவா? நீங்கள் (இருந்த) அவ்விடத்தை விட்டு வெளியேறி இருக்க வேண்டாமா?' என்று கேட்பார்கள். இத்தகையவர்கள் ஒதுங்குமிடம் நரகம் தான். அது ஒதுங்கும் இடங்களில் மிகக் கெட்டது. எனினும் ஆண், பெண், சிறியோர், பெரியோர், ஆகியோர்களில் (உண்மையில்) பலவீனமானவர்கள் யாதொரு பரிகாரமும் தேடிக்கொள்ளச் சக்தியற்று (அதைவிட்டு வெளியேற) வழி காணாதிருந்தால் அத்தகையவர்களை அல்லாஹ் மன்னித்து விடக் கூடும். ஏனென்றால், அல்லாஹ் மிக மன்னிப்பவனும், பிழை பொறுப்பவனாகவும் இருக்கின்றான். (4:97-99)*

ஆக, அவிசுவாசியரின் மத்தியில் வாழ்ந்து வருவது கண்டனத்துக்குள்ளானது. ஏனெனில் அவ்வாறு வாழ்ந்து வருவது, அவிசுவாசியரின் தொகையைப் பெருக்கி வைத்துவிடும். அத்துடன் முஸ்லிம்களின் கைவினைத் திறன்கள், விவசாய நடவடிக்கைகள் மூலம் அவிசுவாசியர் பயன்கள் ஈட்டிக் கொள்வார்கள். மேலும், முஸ்லிம்களுக்கு எதிரான யுத்தங்கங்களில் அவிசுவாசியருக்குச் சார்பாக யுத்தம் புரியும் படியும் அவர்கள் வற்புறுத்தப்படவும் கூடும். இதனை பத்ர் களத்தில் நாம் கண்டு கொள்ள முடிந்தது. முஸ்லிம்களை, அவர்களது மதத்தைக் கைவிட்டு விடச் செய்வதற்காக, துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கி வர அவிசுவாசியருக்குப் போதிய வசதிகளையும் இது அமைத்துக் கொடுக்கும்.

அவிசுவாசியருடன் முஸ்லிம்கள் வாழ்ந்து வருவதனால், முஸ்லிம்கள் தமது போராட்டங்களில் அவர்களிடமிருந்து எவ்வித நன்மையையும் ஈட்டிக்கொள்ள இயலுவதில்லை; முஸ்லிம் நலன்களைப் பாதுகாக்க முடிவதில்லை. முஸ்லிம்களது எண்ணிக்கையைக் கூட பெருக்கிக் கொள்ள முடியாது

*போகின்றது. எனவேதான் நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார் கள்: "முஸ்லிமல்லாதோருடன் உடன்பாடு கண்டு, அவர்கள் மத்தியில் வாழும் ஒருவர், அவர்களே போல்வர்."*

*சில முஸ்லிம்கள் தமது ஹிஜ்றாவைத் தாமதிக்கக் காரண மாயமைந்தன அவர்களது மனைவியரும் மக்களும் கொணர்ந்த அழுத்தங்கள். கால தாமதத்தின் பின்னர் அவர்கள் மதீனாவை அடைந்த வேளை, தமக்கு முன்னர் சென்றிருந்தோர், மத விட யங்களில் மிகவும் கூடுதலாக அறிந்து கொண்டிருந்தமையைக் கண்ணுற்றார்கள். அதனால் மனம் வருந்திய அவர்கள் தமது மனைவியரையும் மக்களையும் தண்டிக்க விழைந்தார்கள். இதுவே மேல்வரும் வாசகம் அருள் செய்யப்படக் காரணமாயிற்று:*

> *விசுவாசங் கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும் இன்னும் உங்கள் மக்களிலும் இருந்து உங்களுக்கு எதிரிகள் இருக்கின்றனர். எனவே அவர் களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள் (64:14)*

*இவற்றால் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் - ஹிஜ்ரி ஐந் தாம் ஆண்டின் அகழ் யுத்தம் வரை- முஸ்லிம்கள் அனை வருக்கும் ஹிஜ்றா கடமையாக அமைந்திருந்தது என்பது புலனாகும். கூட்டுப் படைகள் அனைத்தும் ஒன்று கூடி மேற்கொண்ட தாக்குதலை எதிர்த்து நிற்கும் தகைமையை இஸ்லாமிய அரசு பெற்றிருந்தமை அகழ் யுத்தத்தின் போது தெளிவாகியது. புதிய அரசுக்கு இனிமேலும் புதிய முஹா ஜிரூனின் அவசியம் இல்லாது போயிற்று. இஸ்லாமிய அரசின் யுத்த முனைப்புக்கள் தற்பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து தாக்குதல் எனும் நிலைக்கு மாற்றமுற்று விட்டன. ஆகவேதான் நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இனி நாம் அவர்களை ஆக்கிரமிப்போம். இனிமேல் ஒருபோதும் அவர்கள் எம்மை ஆக்கிரமிக்க மாட்டார்கள்."*

*ஜனத்தொகை பெருகிச் செல்ல, அவர்களுக்கான உணவு, இருப்பிட வசதிகளை அமைத்துக் கொள்வது மதீனாவுக்கு ஒரு சுமையாக அமையலாயிற்று. எனவே தான் அகழ் யுத்தத் தின் பின்னர் நபிகள் (ஸல்) அவர்கள், முஹாஜிரூன்களுள் ஒரு சாராரைத் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும்படி*

வேண்டினார்கள்: “உங்களது ஹிஜ்றா உங்களது ஒட்டக சேணத்தில் இருக்கின்றது.” ஏனெனில் அவர்கள் தொடர்ந்தும் மதீனாவில் தரித்திருக்க வேண்டிய தேவை இல்லாதிருந்தது. மாறாக, அவர்கள் தத்தமது கோத்திரத்தாருடனேயே வாழ்ந்து கொள்வதன் மூலம் தஃவாப் பணிகளை ஆரம்பிக்கலாம்; மதீனாவுக்கு வெளியே இஸ்லாத்தின் பரம்பலுக்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

எவ்வாறாயினும், உத்தியோக பூர்வமாக ஹிஜ்றா முற்றுப் பெற்று விட்டதை உணர்த்துவதாக இதனை நாம் கொள்ள வேண்டியதில்லை. ஹிஜ்றா முற்றுப் பெற்று விட்டதற்கான பிரகடனம் விடுக்கப்பட்டது மக்கா விடுதலையுடனாகும். அவ்வேளை நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “(மக்கா) வெற்றியுடன் (மக்காவிலிருந்து மதீனாவுக்கான) ஹிஜ்றா இல்லை. என்றாலும் ஜிஹாதும் நோக்கங்களும் இன்னமும் இருக்கின்றன. (முஸ்லிம் ஆட்சியாளரினால்) நீங்கள் யுத்தத்துக்கென அழைக்கப்பட்டால் உடன் முன் செல்லுங்கள்”. ஆக மதீனாவுக்கான ஹிஜ்றா இனிமேலும் கடமையானதாக அமையவில்லை. என்றாலும் ஜிஹாதும் அதனைச் செய்ய வேண்டுவதான நோக்கமும் தொடர்ந்து இருக்க வேண்டியதாயிற்று. ஜிஹாத் நோக்கத்தைக் கொண்டிருப்பதும், எதிரிகளால் ஆக்கிரமிக்கப் பட்ட வேளைகளில் ஜிஹாத் செய்வதும் கடமைகளாகத் தொடர்ந்தன. எவ்வாறாயினும், அவிசுவாசியரையே பெரும்பான்மையினராகக் கொண்ட சமூகத்தில் இஸ்லாத்தை ஏற்கும் ஒருவர், தனது மதத்தின் காரணமாகத் தனக்குத் துயர் இழைக்கப்படலாம் என்ற அச்சம் நிலவும் வேளைகளில் அத்தகு பிரதேசங்களிலிருந்து அல்லது நாட்டிலிருந்து விலகிச் சென்றுவிடக் கூடுமாயின் அதற்குச் சாதகமானதொரு சட்டவிதியாக ஹிஜ்றா அமைந்து கொள்கின்றது.

தொடர்ந்து நிலவி வந்த ஹிஜ்றா மதீன சனத்தொகையில் பல்திரத்தோரான மக்களைக் கொண்டு வந்து சேர்த்திருந்தது. மதீன மக்கள் முன்னம் போல, அவ்ஸ், கஸ்ரஜ், யூதர்கள் என்ற பிரிவினராக மட்டும் அமையவில்லை. குறைஷியரின் முஹாஜிரூன்களும், ஏராளமான அரபு கோத்திரத்தோரும் பண்டை

மதீனத்தாருடன் வாழ்ந்து வரலாயினர். மதீன சமூகத்தின் கட்டமைப்பானது, விசுவாசங்களதும், கோட்பாடுகளதும் பிணைப்பின் அத்திவாரத்தின் மீதாக எழுப்பப்பட்டது. இது, பண்டைய கோத்திர ஒருமைப்பாடு (அஸபிய்யா) மற்றும் கூட்டு அமைப்புக்களிலிருந்து முற்றும் மாறுபட்டதாக அமைந்தது. 'உம்மா' பற்றிய கோட்பாடே மேலெழுந்தது. நாம் மதீன சாசனம் குறித்துப் பார்க்கும் போது இது நன்கு தெளிவாகும். மக்கள் தங்கள் விசுவாசங்களின் அடிப்படையிலேயே பிரித்துக் காணப்படலாயினர். மூன்று பிரிவினராக அமைந்தனர் மதீன மக்கள்: விசுவாசியர் (முஃமினூன்), வஞ்சகர்கள் (முனாபிகூன்), யூதர்கள்.

முஹாஜிரூன் பெருந்தொகையினராக மதீனாவை வந்து சேர்ந்தமை, பொருளாதார சமூகப் பிரச்சினைகளைப் பெருக்கிவைத்தமை இயல்பே. இதற்கான, தீர்க்கமான தீர்வுகள் காணப்பட வேண்டும். ஆக, அல்-முஆகா[5] (சகோதர பந்த முறை) அறிமுகமாகியது.

5. المؤاخاة

# VI

## *நபிகள் (ஸல்) அவர்கள் காலத்தின் முஆகா முறை*

*விசுவாசிகள் அனைவரும் சகோதரர்கள் எனக் கொள்வது இஸ்லாம். "நிச்சயமாக இறை நம்பிக்கையாளர்கள் சகோதரர்களே"(49:10). விசுவாசியர் ஒவ்வொருவரும் தமக்கிடையே நெருங்கிய நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், நன்மையான கருமங்கள் செய்வதில் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து கொள்ள வேண்டும் எனவும் இஸ்லாம் அறிவுறுத்துகின்றது. விசுவாசியர் அனைவருக்கும் என நியதி செய்யப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் என்பவற்றுக்கும் மேலாக, நாம் இந்த அத்தியாயத்தில் தனியாக அறிமுகம் செய்யப்பட்ட சகோதர பந்தத்துவம் குறித்தும், அதற்கான சிறப்புரிமைகள் கடமைகள் என்பன குறித்தும் காண்போம்.*

*ஹிஜ்றாவின் முன்னமேயே நபிகள் (ஸல்) அவர்கள், சத்தியத்தின் மீதான விசுவாசம், பரஸ்பர ஆதரவு என்பனவற்றின் அடிப்படையில் சகோதர பந்தத்துவங்களை ஏற்படுத்தி வைத்திருந்தார்கள் எனக் கூறுவார் அல்-பலதூரி. அவ்வாறு நிறுவப்பெற்றிருந்த சகோதரத்துவ பந்தங்கள் வருமாறு:*

*ஹம்ஸா ~ ஸைத் இப்ன் ஹாரிஸா; அபூபக்ர் ~ உமர்; உஸ்மான் இப்ன் அப்பான் ~ அப்த் அல்-ரஹ்மான் இப்ன் அவ்ப்; ஸுபைர் இப்ன் அல்-அவ்வாம் ~ அப்த்-அல்லாஹ் இப்ன் மஸ்ஊத்; உபைத் இப்ன் அல்-ஹாரிஸ் ~ பிலால் இப்ன் ஹபஷீ; முஸ்அப் இப்ன் உமைர் ~ ஸஅத் இப்ன் அபூ வக்காஸ்; அபூ உபைதா இப்ன் அல்-ஜர்ராஹ் ~ (அபூ ஹுதைபாவால்*

*விடுவிக்கப் பெற்றிருந்த) ஸாலிம்; ஸஈத் இப்ன் ஸைத் இப்ன் அம்ர் இப்ன் நுபைல் ~ தல்ஹா இப்ன் உபைத்-அல்லாஹ்; நபிகள் (ஸல்) அவர்கள் ~ அலீ-இப்ன் அபீ-தாலிப்.*

*மக்காவில் நிறுவப்பெற்றிருந்த முஆகா குறித்து பிரஸ்தாபம் செய்த ஆரம்ப அறிஞராக அமைந்துள்ளார் அல்-பலதூரி (ம: ஹி 276). அவரைத் தொடர்ந்து இது குறித்து அறிவிப்புச் செய்தவர் இப்ன்-அப்த்-அல்-பர்ர் (ம: ஹி 463). தான் இதனை அல்-பலதூரியிடமிருந்து பெற்று அறிவிப்புச் செய்வதாகக் குறிக்காது விட்டார் அவர். இவ்விருவரும் தந்த விவரங்களையே பின்னர் இப்ன்-ஸய்யித்-அல்-நாஸ் தருவார். அல்-ஹாகிம் தனது அல்-முஸ்தத்ரக்[1]இல் இப்ன் உமரை ஆதாரமாகக் கொண்டு ஜமீஇ இப்ன் உமைரின் அறிவிப்பாளர் தொடர் மூலமாகக் கூறுவார்: "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அபூபக்ர் ~ உமர்; தல்ஹா ~ அல் ஸுபைர்; அப்த் அர்-ரஹ்மான் இப்ன் அவ்ப் ~ உஸ்மான் ஆகியோரிடையே சகோதர பந்தத்துவத்தை ஏற்படுத்தினார்கள்."*

*இப்ன் அப்பாஸை ஆதாரமாகக் கொண்டு ஹஸன் இஸ்னாத் ஒன்று மூலமாக அல்-ஹாகிமும், இப்ன் அப்த் அல்-பர்ரும் அறிவிக்கின்றார்கள்: "நபிகள் (ஸல்) அவர்கள், அல்-ஸுபைர் ~ இப்ன்-மஸ்ஊத் ஆகியோரிடையில் சகோதர பந்தத்துவத்தை ஏற்படுத்தினார்கள்."*

*இப்ன்-அல்-கையிம்மும், இப்ன்-கஸீரும் மக்காவில் முஆகா ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை என்றே கருதுகின்றனர். இப்ன்-அல்-கையிம் கூறுவார்:*

*"நபிகள் (ஸல்) அவர்கள் முஹாஜிரூன் மத்தியில் சகோதர பந்தத்துவத்தை ஏற்படுத்தி வைத்ததாகவும் அவர் அலீயைத் தனது சகோதரனாக அமைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. மதீனாவில் முஆகா ஏற்படுத்தப்பட்டமையில் எவ்வித ஐயமும் இல்லை. இஸ்லாம் இயல்பாகவே ஏற்படுத்தி வைக்கும் சகோதரத்துவம், உறவு முறைகளினால் ஆன பந்தங்*

---

1. المستدرك

கள், ஒரே நகரத்தோர் என்பவற்றின் காரணமாக முஹாஜிரூன் தமக்குள் சகோதர பந்தத்துவங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையேதும் இருக்கவில்லை. ஆனால், முஹாஜிரூன் ~ அன்ஸார்களுக்கிடையிலான முஆகா தேவையாக இருந்தது.''

இப்ன்-கையிம் காட்டிய அதே ஆதாரங்களின் நிமித்தம் சில முஸ்லிம் அறிஞர்கள் முஆகாவை மறுத்துரைத்தார்கள் என்பார் இப்ன்-கஸீர். ஆரம்ப ஸீறா ஆக்கங்கள் மக்காவில் முஆகா நிறுவட்டமை குறித்து ஏதும் கூறாமல் விட்டுள்ளமை காரணமாக, இப்ன்-கையிம், இப்ன்-கஸீர் ஆகியோரின் கருத்துக்கள் ஏற்புடைத்தனவாகவே தோற்றுகின்றன. அல்-பலதூரி மாத்திரம் தான் இதனை அறிவிப்புச் செய்துள்ளார். தனது அறிவிப்பில் 'காலூ' (அவர்கள் கூறினார்கள்) எனக் கூறும் அல்-பலதூரி இஸ்னாத் எதனையும் தராது விட்டுவிடுகின்றார். ஆக, அவரது அறிவிப்பு (ளயீப்) பலவீனமானது ஆகின்றது. அல்-பலதூரியே 'ளயீப்' ஆனவர் எனக் கூறுவர் திறனாய்வாளர்கள். மக்காவில் முஆகா ஏற்பட்டிருந்தது என்றே நாம் ஏற்பதானாலும் கூட, அது சகோதர பந்தத்துக்குள்ளான இருவரிடையிலான பரஸ்பர உதவிகள், அறிவுரைகளுக்கு மட்டுப்பட்டிருந்ததே ஒழிய, வாரிசுரிமைகள் எதனையும் விழைந்து நிற்பதற்கு இடமளிப்பதாக இல்லை.

## மதீனாவில் முஆகா

மக்காவிலிருந்து மதீனா வந்து சேர்ந்த முஹாஜிரூன், பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களானார்கள். முஹாஜிரூன் தமது குடும்பத்தவர்களையும், தமது செல்வத்தின் பெரும் பாகத்தையும் மக்காவில் விட்டு வந்தமை தெளிவு. மதீனாவின் பொருளாதார அமைப்பின் அடிப்படை அம்சங்களாக அமைந்த விவசாயம், கைவினைகள் ஆகியனவற்றில் போதிய பரிச்சயம் பெற்றிராத முஹாஜிரூன், குறைஷியர் பொதுவான திறமை பெற்றிருந்த வர்த்தகத் துறையிலேயே போதிய அறிவும், அனுபவமும் பெற்றிருந்தார்கள்.

*வர்த்தகம் செய்ய முதலீடு தேவையாக இருந்தது. ஆக, தாம் வந்து சேர்ந்த புதிய பிரதேசத்தில் முஹாஜிரூன் இலகுவாகத் தமது வாழ்வாதாரங்களை அமைத்துக்கொள்ள இயலவில்லை. புதிதாக உருவாகி வரும் அரசு இவர்களுக்காக வாழ்வாதாரங்களையும், இருப்பிட வசதிகளையும் அமைத்துக் கொடுக்கும் பாரிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. புதிய சமூகத்துடனான முஹாஜிரூனின் தொடர்பு தற்போதுதான் ஆரம்பமாகியிருந்தது. முஹாஜிரூன் தம் குடும்பத்தவர்களையும் நண்பர்களையும் மக்காவில் விட்டு வந்திருந்தனர். அவர்களுடனான தொடர்புகளும் முற்றாகத் துண்டிக்கப் பெற்றிருந்தன. தனிமைப்படுத்தப்பட்டுவிட்ட உணர்வினராயிருந்த முஹாஜிரூன் தம் சொந்த மண்ணான மக்காவை நினைந்து கவல்ந்து கொள்ளலானார்கள். மேலும் மக்கா-மதீனாவுக் கிடையிலான சுவாத்திய வேறுபாடுகள் காரணமாக முஹாஜிரூன்களில் சிலர் சுகவீனங்களுக்கும் ஆளானார்கள். உடனடி நிவாரண முனைவுகள் மேற்கொள்ள வேண்டிய நிலைமை. சாதாரண உபசார, உபகாரங்களையும் விஞ்சியனவாக அமைய வேண்டியிருந்தன அந்த நிவாரணங்கள். அன்ஸார் எவ்வித தயக்கமும் காட்டாது உதவிகள் செய்ய முன் வந்தார்கள். தியாகமும் சுயநலமின்மையும் மிக்க அவர்களது உதார குணா திசயங்கள் இறைவனின் நூலிலேயே நிரந்தர இடத்தை ஈட்டிக் கொண்டு விட்டன: "மேலும் (அன்ஸார்) தங்களுக்குத் தேவையிருந்தாலும் சரி தங்களை விட (மக்காவாசிகளாகிய அவர் களுக்குக் கொடுப்பதையே) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்" (59:9)*

*தாராண்மை மிக்க அன்ஸார் தமது பேரீச்சை மரங்களை முஹாஜிரூன்களுடன் பகிர்ந்து கொள்வதென நபிகள் (ஸல்) அவர்களிடம் ஆலோசனை வழங்கினார்கள். ஏனெனில் பேரீச்சை மரங்கள்தான் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வருமானங்கள் ஈட்டித் தருவனவாக இருந்தன. நபிகள் (ஸல்) அவர்கள், பேரீச்சை மரத் தோட்டங்களை அன்ஸார்களே வைத்துப் பராமரிக்கும்படியும் அதன் மூலம் கிட்டும் பேரீச்சம் பழங்களை முஹாஜிரூன்களுடன் பகிர்ந்து கொள்*

ளும்படியும் அறிவுரை செய்தார்கள். பழங்களைப் பகிர்ந்து கொள்தல் என்பதனை, கிடைப்பனவற்றைப் பாதியாகப் பிரித்துக் கொள்வதாகக் கொள்வதா அல்லது அன்ஸார்களை முஹாஜிரூன்களுக்கு ஆதரவளிக்க வேண்டுவதாகக் கொள் வதா என்பது தெளிவில்லை. எவ்வாறாயினும் முஹாஜிரூன் விவசாயத் தொழில் செய்வதிலும் பார்க்க, தஃவாவிலும், ஜிஹாதிலும் பணியாற்ற வேண்டுவதனையே நபிகள் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்ததாகத் தெரிகிறது. மேலாக அன்ன வரே கூறியது போல, முஹாஜிரூன் விவசாயத் தொழிலில் பரிச் சயம் பெற்றவர்களாகவும் இல்லை. ஆக, மதீனாவுக்குத் தேவை யான விவசாயப் பயிர்ச் செய்கைகளைக் கூட்டிக் கொள்ளும் சாத்தியங்கள் இல்லையென்பது புலனாகும்.

தமக்கு மேலதிகமாக இருந்த அத்தனை நிலங்களையும் அன்ஸார், நபிகள் (ஸல்) அவர்களுக்காக அளித்துவிட முன் வந்தவர்களாகக் கூறினார்கள்: "தேவையாயின் எமது வீடு களையும் எடுத்துக் கொள்ளுங்கள்." அவர்களுக்கு நன்றி தெரி வித்த நபிகளார், அன்ஸார் அளிக்க முன்வந்த நிலங்களிலும், எவரும் உரிமை பாராட்டாத பகுதிகளிலும் தமது தோழர் களுக்கான வீடுகளை அமைக்கலானார்கள்.

இவ்வாறான தாராள மனப்பாங்கு முஹாஜிரூனின் உள் ளங்களை உலுக்கிவிட, அன்ஸாரின் தாராண்மை குறித்து அவர்கள் பகிரங்கமாகவே பேசினார்கள்: "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் இவ்வாறான மக்களை ஒருபோதும் கண்ட தில்லை. இவர்களிடம் சிறிதளவே இருக்கக் கூடுமாயினும் ஆதரவு அளிப்பதில் இவர்களே மிகவும் சிறந்த மக்களாக இருக் கின்றார்கள். அவர்களிடம் கூடுதலாக இருக்கக் கூடுமாயின் அவற்றைத் தியாகம் செய்வதிலும் அவர்களே சிறந்த மக் களாக இருக்கின்றார்கள். அவர்களது மகிழ்வை நாமும் பகிர்ந்து கொள்ளவென எமக்குத் தேவையான அனைத்தையும் அவர்கள் தந்திருக்கின்றார்கள் - இறைவனிடமிருந்து அனைத்து நன்மைகளையும் அவர்களே பெற்றுக் கொண்டு விடுவார்களோ என நாம் நினைக்குமளவு!" நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்ல. அவர்களை நீங்கள் புகழ்ந்து அவர்களுக்காகப் பிரார்த்திக்கும் வரை!"

## முஆகா முறைமையின் அமைவு

அன்ஸார்களின் தாராண்மை, தியாக சிந்தை ஆகிய வற்றின் மத்தியிலும் முஹாஜிரூன்களுக்காக கௌரவமான வாழ்க்கையமைப்பு ஒன்றனை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாயிற்று. முஹாஜிரூன்களின் கௌரவமும், அந்தஸ் தும் அவர்கள் வேறு எவரையும் அண்டாது வாழ்ந்து கொள் ளக் கூடிய ஒரு முறையை அவாவியனவாக இருந்தன. இத்தகு பின்னணியில் தான் முஆகா அறிமுகமாகின்றது. இது நிறுவப் பெற்ற வரலாறு குறித்த அறிவிப்புக்கள் சிற்சிறு வித்தியாசங் களையே கொண்டுள்ளன.

ஹிஜ்ரி முதலாம் ஆண்டிலேயே முஆகா அறிமுகமானது என்பதில் அறிவிப்புக்கள் ஒருமைப்பட்டுள்ளன. என்றாலும் இது நிகழ்ந்தது மதீனாவில் பள்ளிவாசல் நிறுவப்படும் முன் னரோ, பின்னரோ என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப் படுகின்றன. ஹிஜ்றாவின் பின்னர் ஐந்தாவது மாதம் இது நிகழ்ந்தது எனக் கூறுவார் இப்ன் அப்த் அல்-பர்ர். ஹிஜ்றாவின் பின்னர், பத்ர் யுத்தத்துக்கு முன்னர் முஆகா நிறுவப்பட்டது எனக் கூறும் இப்ன் ஸஅத், இதற்கான ஒரு தினத்தைக் குறிக்காது விடுகின்றார்.

அறிவிப்புக்களின் படி, முஆகா நிறுவனப்படுத்தப் பெற் றது, அனஸ்-இப்ன் மாலிக்கின் இல்லத்திலாகும். இரு திரத்தார் மத்தியில் முஆகா ஏற்படுத்தப்பட்டது: முஹாஜிரூனும் அன் ஸாரும். நபிகள் (ஸல்) அவர்கள் இரு சாராரிலிருந்தும் ஒவ் வொருவர் மத்தியில் முஆகா வை ஏற்படுத்தினார்கள்.

முஆகாவுக்கு உள்ளானோர் 90 ஆண்கள். முஹாஜிரூனி லிருந்து 45 பேர். அன்ஸாரிலிருந்து 45 பேர். ஓர் அன்ஸாரி யுடன் முஆகா பந்தத்தில் இணைக்கப்படாத எந்த ஒரு முஹா ஜிரும் இருக்கவில்லையெனக் கூறப்பட்டது. மதீனாவில் நிறு வப்பெற்ற முஆகா முஹாஜிரூன் - அன்ஸார் மத்தியில் ஆனது என்றே மூலாதாரங்கள் கூறுகின்றன. என்றாலும் முஹாஜிரூன் - அன்ஸார் மத்தியில் முஆகா ஏற்படுத்தப்பட்ட அதேவேளை முஹாஜிரூன்களை மட்டுமே கொண்ட முஆகா பந்தங்களும்

ஏற்படுத்தப்பட்டன என்பார் இப்ன்-ஸஅத். என்றாலும் முஹா ஜிரூன்களை மட்டுமே கொண்ட முஆகா ஏற்படுத்தப்பட் டதன் காரணங்களையோ, அதன் மூலமான கடமைகள், உரி மைகள் யாவை என்பனவற்றையோ நாம் தெரிந்து கொள்ளக் கூடிய விவரங்களை அவர் தரவில்லை. வேறு ஆதாரங்கள் கூட இது குறித்து விவரங்கள் தருவதாக இல்லை.

முஆகா மூலம் இணைக்கப்பட்டு சகோதரர்களானோர் இருவர் மத்தியில் பரஸ்பர ஆதரவு முதலான சில விசேஷ உரி மைகள் நிலைப்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட சில விவகாரங் களுக்கென இந்த பந்தம் மட்டுப் படுத்தப்பெறவில்லை. வாழ் வின் எல்லா அம்சங்களையும் இது உள்ளடக்கியது. பொரு ளாதார உதவிகள், கரிசனைகள், அறிவுரைகள் பகர்தல், பரஸ் பர நலன்கள் பற்றிய அக்கறை, உறவு, அன்பு என அனைத்தை யுமே முஆகா நியமம் செய்து வைத்தது. முஆகா மூலம் சகோ தரரான இருவரும் தமது உறவினர்களின் தகைமைகளையும் விஞ்சிச் சென்று ஒருவரிடமிருந்து ஒருவர் வாரிசுரிமைகளைப் பெற்றுக் கொள்வதும் இயலுமாயிருந்தது. விளைவாக, உறவு முறையின் மூலம் எழும் சகோதர பந்தத்திலும் பார்க்க மகோன் னதமான தரத்துக்கு முஆகா மூலமான சகோதர பந்தத்துவம் கொண்டு செல்லப்பட்டது.

தமது சகோதரர்களான முஹாஜிரூன்களுக்காகத் தியாகங் கள் மேற்கொள்ளத் தமக்குக் கிட்டும் வாய்ப்புக்கள் குறித்து அன்ஸார் மகிழ்ச்சியடைந்தார்கள். இத்தகு பந்தத்துவத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த கடப்பாடுகளும், அதனை அமுல் படுத்துவதில் அன்னவர் கொண்டிருந்த ஆர்வமும் குறித்த பல அறிவிப்புகள் பதியப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக் கனவாக அமைந்தனவற்றுள் ஒன்று, அன்ஸாரியான ஸஅத் இப்ன் அல்-ரபீ அவர்களுக்கும் முஹாஜிரான அப்த் அர்-ரஹ்மான் இப்ன் அவ்ப் அவர்களுக்கும் இடையிலான முஆகா பந்தத்துவம். ஸஅத் கூறினார்: “நான் அன்ஸார்களில் அதிக செல்வம் உடையவன். என் செல்வத்தை இரு பாதிகளாகப் பங் கிட்டு (ஒரு பாதியை உமக்குக் கொடுத்து) விடுகின்றேன்.

*எனக்கு இரு மனைவிமார் உள்ளனர். அவ்விருவரில் உமக்கு அதிகமாகப் பிடித்திருப்பவளைப் பார்த்து என்னிடம் கூறும். நான் அவளைத் 'தலாக்' (மண விடுதலை) செய்து விடுகின்றேன். அவளுடைய இத்தா காலம் முடிந்த பின் நீர் அவளை மணந்து கொள்ளும்". அப்த் அர்-அர் ரஹ்மான் இப்ன் அவ்ப் கூறினார்: "அல்லாஹ் உமக்கு உமது வீட்டாரிலும் உமது செல்வத்திலும் அருள் வளத்தை வழங்குவானாக. உங்களது கடை வீதி எங்கே?". மக்கள் அவருக்கு பனூ கைனுகா கடை வீதியைக் காட்டினார்கள். அவர் (அங்கு சென்று வியாபாரம் செய்து) தம்முடன் பாலாடைக் கட்டியையும் நெய்யையும் லாபமாகப் பெற்றுத் திரும்பினார். ஒரு நாள் அப்த் அர்-ரஹ்மான் இப்ன் அவ்ப், தம் மீது (நறுமணப் பொருளின்) மஞ்சள் அடையாளம் தோய்ந்திருக்க அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) "என்ன இது?" என்று கேட்க "நான் அன்ஸாரிப் பெண் ஒருத்தியை மணந்து கொண்டேன்" என அவர் பதில் அளித்தார். நபிகளார் கூறினார்கள்: "ஒரேயொரு ஆட்டையேனும் (அறுத்து) வலீமா (மண விருந்து) கொடும்".*

*இத்தகைய அற்புதமான சகோதரத்துவம், பரஸ்பர தன்னலமின்மை என்பன வியப்பினை ஏற்படுத்துவது இயல்பே. எந்த ஒரு தேசத்தின் வரலாற்றிலும் இவ்வாறான பந்தத்துவத்தைக் காண முடிவதில்லை.*

*தன் சகோதரனை இடர்களுக்கு உள்ளாக்காமல் இருக்கும் அப்த் அர்-ரஹ்மான் இப்ன் அவ்பின் உன்னதமான பெருமித மனப்பாங்கு, இப்ன் அர்-ரபீயின் அற்புதமான பண்புகளினின்றும் குன்றியதல்ல. திறமை மிக்க வர்த்தகராக இருந்த இப்ன் அவ்ப் தனது புதிய வாழ்வில் தனக்கென ஒரு வழியை உருவாக்கிக் கொள்ள இயலுமானவராயிருந்தார். சில காலம் கழிய, ஒரு பேரீச்ச விதையளவு தங்கத்தை மஹராகக் கொடுத்து அவர் மணம் செய்து கொள்ள முடிந்தது. தனது தொழிலில் அருள் கிட்டப் பெற்ற அவர் பெருஞ் செல்வம் படைத்த முஸ்லிம்களுள் ஒருவராக ஆனார். அவர் விரும்பியதெல்லாம் தான் எப்போதும் 'மேலான கரம்' கொண்டவராக, பிறரிடம் இருந்து*

*எதனையும் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இல்லாத வராக இருக்க வேண்டும் என்பதாகும்.*

## *முஆகா பந்தத்துக்கு உள்ளானோரிடையே வாரி சுரிமை இல்லாமலாக்கப்பட்டமை*

*புதிதாக உருவாகி வரும் அரசு எதிர்கொள்ள வேண் டியிருந்த அசாதாரணமான சூழலின் பிரச்சினைக்குரிய விவ காரங்களுக்கான ஒரு தீர்வாக, சகோதர பந்தத்துவம் ஏற்படுத் தப்பட்ட இருவர்க்கிடையிலான வாரிசுரிமை அமைந்தமை இயல்பே. என்றாலும் முஹாஜிரூன் மதீன வாழ்வமைப்பில் போதிய பரிச்சயம் பெற்றவர்களாகி, வருமானங்கள் ஈட்டிக் கொள்ளும் வழிவகைகளையும் தெரிந்து, பத்ர் யுத்தத்தின் பின்னர் கனீமத்துப் பொருட்களும் பெற்றுக் கொண்ட பின் னர் வாரிசுரிமையானது, மானிட இயல்புகளுக்கேற்ப, உறவு முறையின் அடிப்படையில் ஏற்படுவதாக மீண்டு கொண்டது. சகோதரர்களாக ஆக்கப்பட்டவர்களுக்கு இடையிலான வாரிசுரிமை, குர்ஆன் மூலமே வலுவிழக்கச் செய்யப்பட்டது: “இன்னும் அல்லாஹ்வுடைய வேதத்தில் (உள்ளபடி உங்களுக் கு) உறவினர்கள் - அவர்களில் சிலர் சிலரிடமிருந்து (வாரிசு உரிமை பெறுவதில்) மிகத் தகுதி பெற்றவர்கள் . . .” (8:75)*

*இந்த வாசகம் முஆகாவின் அடிப்படையிலான வாரிசுரி மைகளை வலுவிழக்கச் செய்கின்றது. இப்ன்-அப்பாஸின் கருத்தில் “இன்னும் பெற்றோரும், உறவினர்களும் விட்டுச் செல்கின்ற(சொத்)திலிருந்து (அதனை அடைகின்ற) வாரிசு களை (ஆண், பெண்) ஒவ்வொருவருக்கும் நாம் ஏற்படுத்தியுள் ளோம். மேலும், உங்களுடைய வலக்கரங்கள் (எவர்களுடன்) உடன்படிக்கை செய்து கொண்டனவோ, அவர்களுக்கு, அவர் களின் பங்கை நீங்கள் கொடுத்து விடுங்கள்” (4:33) எனும் வாசக மும் முஆகாவின் அடிப்படையிலான வாரிசுரிமையை வலு விழக்கச் செய்து விட்டது. அவரது கருத்தில், இந்த வாசகத்தில் வரும் ‘மவாலி’, இரத்த உறவின் மூலம் வாரிசுரிமை பெறுபவர் களையும், ‘உங்களுடைய வலக்கரங்கள் (எவர்களுடன்) உடன் படிக்கை செய்து கொண்டனவோ’, முஆகா மூலம் வாரி*

சுரிமை ஈட்டிக் கொண்ட முஹாஜிரூனையும் குறிக்கின்றது. வாரிசுரிமை மட்டுமே முஆகா பந்தத்திலிருந்து விலக்கப்பட்டதென்றும், ஒருவருக்கொருவர் உதவி செய்வது , ஆதரவு அளிப்பது, அறிவுரை கூறுவது என்பன தொடர்ந்தும் அவர்களுக்குரிய கடமையாக இருந்தது எனக் கூறுவார் இப்ன் அப்பாஸ். சகோதர பந்தத்தில் உள்ளாக்கப்பட்டவர்கள் தமது உடைமைகளில் ஒரு பகுதியை பரஸ்பரம் நன்கொடையாக அளித்துக் கொள்ள முடிந்தாலும், அது தவிர்த்து வாரிசுரிமையாக எதனையும் கோர இயலவில்லை. இதனையே இமாம் அல்-நவவி கூறுவார்: “வாரிசுரிமையைப் பொறுத்த மட்டில், சகோதர பந்தத்துக்கு ஆளாக்கப்பட்ட இருவர், ஒருவரிலிருந்து ஒருவர் வாரிசுரிமையாகப் பெற்றுக் கொள்வதனைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. இதுவே முஸ்லிம் அறிஞர்களுள் பலரது அபிப்பிராயமாக இருக்கின்றது. ஆனால் இஸ்லாத்தில் முஆகாவையும் அல்லாஹ்வை வழிபடுவதன் மூலம் செய்யப்படும் ஒப்பந்தங்களையும் பொறுத்து, மத விவகாரங்களில் ஒருவருக்கொருவர் துணையாக இருந்து கொள்ளல், சத்தியத்திலும் விசுவாசத்திலும் கூட்டுறவு வைத்துக் கொள்ளல், சத்திய வழியை நிறுவுதல் என்பன இன்னமும் பெறுமதி உடையனவாக அமைந்துள்ளன. அவை வலுவிழந்து விடவில்லை.” இப்ன் ஸஅத் மட்டுமே, உர்வா இப்ன் அல்-ஸுபைர் வரை செல்லும் ஓர் இஸ்னாத் மூலம் ஓர் அறிவிப்பினைக் காட்டுகின்றார். சகோதர பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்ட இருவரிடையிலான வாரிசுரிமை வலுவிழக்கச் செய்யப்பட்டமையை அறிவிக்கின்ற இது ஹிஜ்ரி 3, ஷவ்வாலில் நிகழ்ந்த உஹத் யுத்தத்தின் பின்னர் அருளப்பட்டதாகக் கருதும் மேல்வரும் வாசகத்தைக் கவனத்தில் கொள்கின்றது: “ . . . . இன்னும், அல்லாஹ்வுடைய வேதத்தில் (உள்ளபடி உங்களுக்கு) உறவினர்கள் - அவர்கள் சிலர் சிலரிடமிருந்து (வாரிசுரிமை பெறுவதில்) மிகத் தகுதி பெற்றவர்கள்.”

இப்ன்-ஹஜர் தனது அறிவிப்பில் அல்-ஹத்தாத் அல்-தமீமி[2]க்கும் முஆவியா இப்ன் அபூ ஸுப்யானுக்கும் இடை

2. الحتات التميمي

*யிலான முஆகா குறித்துப் பேசுவது வியப்பூட்டுகின்றது. முஆவியாவின் கிலாபாவின் போது அல்-ஹத்தாத் மரணிக்க, அவர்கள் இருவருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருந்த சகோதர பந்தத்துவத்தின் அடிப்படையில் முஆவியாவே, அல்-ஹத்தாத்தின் வாரிசாக அமைந்தார் என்பார் இப்ன் ஹஜர். ஏராளமான மக்களை அல்-ஹத்தாத் வாரிசுகளாகக் கொண்டிருந்தமையின் காரணமாக ஆச்சரியத்துக்குள்ளான வராகவே இதனை அவர் அறிவிக்கின்றார். முஆகாவின் அடிப் படையிலான வாரிசுரிமைகள் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டுடன் வலுவிழக்கச் செய்யப்பட்டமையை அவர் குறிக்காது விட்டு விடுகின்றார். அல்-ஹத்தாத் முழுமையாக அல்லாது, தனது சொத்துக்களின் ஒரு பகுதியை முஆவியாவுக்கு நன்கொடை யாக அளித்திருக்கக் கூடுமாயின் இந்த அறிவிப்பு ஏற்புடைத் ததாக அமைந்திருக்கும்.*

## வாரிசுரிமைகளின்றி முஆகா தொடர்தல்

*நபிகள் (ஸல்) அவர்கள் தமது தோழர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக, அறிவுறுத்தல்கள் செய்து கொள்பவர் களாக, துணையாளர்களாக இருந்து கொள்ளும் வகையில் வாரிசுரிமை கோரல்கள் இன்றி முஆகா ஏற்படுத்திவைத்து வந்தார்கள் போலத் தோற்றுகின்றது. இந்த வகையில் அபூ அல்-தர்தாவுக்கும் ஸல்மான் அல்-பார்ஸிக்கும் இடையில் முஆகா ஏற்படுத்தி வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள் ளது. ஸல்மான் உஹத் யுத்தத்துக்கும், அல்-கன்தக் (அகழ்) யுத்தத்தக்கும் இடைப்பட்ட காலத்தில் தான் இஸ்லாத்தை ஏற்றார் என்பது கவனிக்கத்தக்கது. ஆதலால் அல்-வாகிதீயும், அல்-பலதூரியும் இத்தகு அறிவிப்புக்களை ஏற்காது விட்டார் கள். அது போலவே ஜஅபர் இப்ன் அபீ தாலிபுக்கும் முஆத் இப்ன் ஜபலுக்கும் இடையிலான முஆகா பற்றிய அறிவிப் பினை இப்ன்-கஸீர் நிராகரித்தார். ஏனெனில் ஜஅபர் ஹிஜ்ரி 7-ம் ஆண்டு கைபர் கைப்பற்றப்பட்ட வேளைதான் மதீனாவை வந்து சேர்ந்திருந்தார். மேலும் அல்-ஹத்தாத்துக்கும் முஆ வியா இப்ன் அபூ ஸுப்யானுக்கும் இடையிலான முஆகா*

*பற்றிய அறிவிப்பும் ஏற்காது விடப்பட்டது. ஏனெனில் முஆவியா ஹிஜ்ரி 8-இல் மக்கா விடுவிக்கப்பட்டதன் பின்னரே முஸ்லிமாக மாறினார். பத்ர் யுத்தத்தின் பின்னர் முஆகா வாரிசுரிமை ரத்துச் செய்யப்பட்டதாக இருந்தும், தொடர்ந்தும் முஆகா நிறுவப்பட்டு வந்ததென நாம் கொள்வதானால் வரலாற்றாசிரியர்கள் இவ்வாறான அறிவிப்புக்களை நிராகரிக்க வேண்டியிருந்தமைக்கான காரணங்கள் விளங்கவில்லை.*

*முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான முஆகா நிறுவப்படுவதற்கு முன்னரும் பின்னரும் வாரிசுரிமை பற்றிய கோரல்கள் இல்லாமல் முஆகா பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன என நாம் கொள்வதானால் இப்ன் இஸ்ஹாக் எதிர்கொண்ட குழப்பங்களிலிருந்து தெளிவு கிட்டும். நபிகள் (ஸல்) ~ அலீ; ஹம்ஸா ~ ஸைத் இப்ன் ஹாரிஸா ஆகியோர்க்கிடையிலான முஆகாவை இணைத்திருந்த அவரது பட்டியலில், ஏனைய அனைத்து முஆகாவிலும் ஓர் அன்ஸாரியும் ஒரு முஹாஜிருமே இணைந்திருந்தார்கள். முஹாஜிர்களுக்கிடையிலான அந்த இரு முஆகா குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் இப்ன் கஸீர், பால்யப் பருவத்திலிருந்தே தனது பொறுப்பிலிருந்த அலீயை வேறு எவரதும் பொறுப்பில் ஒப்படைக்கும் எண்ணம் ஏதும் இல்லாமல் தான் நபிகள் (ஸல்) அவர்கள் இவ்வாறான ஒரு முஆகாவை ஏற்படுத்தியிருந்தார்களாயின் மட்டுமே இந்த முஆகா அர்த்தமுள்ள ஒன்றாக இருக்கும் என்பார். அது போலவே ஹம்ஸா ~ ஸைத் இடையிலான முஆகா பற்றிய விடயத்தில் நபிகளாரின் பொறுப்பில் வளர்ந்து வந்த ஸைதைத் தொடர்ந்தும் பராமரிக்கும் பொறுப்பை ஹம்ஸா ஏற்க முன்வந்திருந்தாலேயொழிய இந்த முஆகாவும் அர்த்தமற்றதாகிவிடும் என்பார் அவர்.*

*இப்ன் கஸீர் கூறும் காரணங்கள் அத்துணை ஏற்புடைத்தனவாக அமையவில்லை. ஏனெனில் ஏனைய பல அறிவிப்புகள் ஹம்ஸா இப்ன் அல்-முத்தலிப் ~ குல்ஸூம் இப்ன் அல்-ஹதம்; ஸைத் இப்ன் ஹாரிஸா ~ உஸைத் இப்ன் ஹுலைர் ஆகியோர்க்கிடையிலான முஆகா குறித்துப் பேசுகின்றன.*

நபிகள் (ஸல்) அவர்களுக்கும் அலீக்கும் இடையிலான முஆகா, வாரிசுரிமையை வேண்டி நின்றது. ஹதீஸ் கூற்றின் படியோ, நபிகளாரிடமிருந்து யாரும் வாரிசுரிமையாக எதனையும் பெற்றுக் கொள்ள இயலாது. அத்துடன் அல்-பலதூரி, அலீ ~ ஸஹ்ல் இப்ன் ஹனீப் ஆகியோர்க்கிடையிலான முஆகா குறித்தும் பேசுவார். அல்-பலதூரி, நபிகள் (ஸல்) ~ அலீ; ஹம்ஸா ~ ஸைத் ஆகியோர்க்கிடையிலான முஆகா மக்காவில் ஏற்படுத்தப்பட்டதாக அறிவிப்பார்.

இவற்றிலிருந்து, நபிகள் (ஸல்) ~ அலீ; ஹம்ஸா ~ ஸைத் ஆகியோர்க்கு இடையிலான முஆகா எந்த விதமான வாரிசுரிமைகளும் இல்லாதனவாக ஒருவருக்கு ஒருவர் இடையிலான பரஸ்பர ஆதரவு, கரிசனை என்பவற்றின் அடிப்படையில், அனஸ் இப்ன் மாலிக்கின் இல்லத்தில் நிகழ்ந்த முஆகாவுக்கு முற்றும் மாற்றமான ஒரு சூழலிலும் பின்னணியிலும் ஏற்படுத்தப்பட்டன வென்பது தெளிவாகும்.

முடிவாக, விசுவாசியர் இடையிலான முஆகா ரத்துச் செய்யப்பட்டு விடாமல் தொடர்ந்தும் வலுவுள்ளதாகவே உள்ளது, ரத்துச் செய்யப்பட்டது அதன் மூலமான வாரிசுரிமைக் கோரல்கள் மட்டுமே என்பது புலனாகும். விசுவாசியர் எல்லாக் காலத்தும் தமக்குள் பரஸ்பர ஆதரவு, உதவி, அறிவுறுத்தல்கள் என்பனவற்றுக்காக முஆகா நிறுவிக் கொள்வது அனுமதிக்கப்பட்டுள்ளது; விசுவாசியர் மத்தியிலான பொதுவான முஆகாவுக்கும் மேலாக, இத்தகு விசேஷ முஆகா, குறிப்பான சில உரிமைகளை வழங்குவதாகவும் அமையலாம். இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகள், கோட்பாடுகளின் நலன்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், முஸ்லிம்கள், தமது சமூக, தேசிய உணர்வுகளைக் களைந்து அல்லாஹ்வின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு நடாத்த வேண்டியது அவசியமாகின்றது.

# VII

## விசுவாசமே மானிட பிணைப்பின் அடிப்படை

மனிதர்களை ஒன்றுபடுத்திப் பிணைப்பினை உண்டாக்கி வைக்கும் காரணிகள் பல. மனிதர்கள் குழுக்கள், நாடுகள், இனங்கள், தேசியங்கள் முதலாய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் கூட்டாக அமைந்து கொள்வர். பல்வேறு பட்ட தேசியங்கள், மதம் அல்லது பொதுவான நலன்களின் அடிப்படையில் கூட்டுச் சேர்ந்துகொள்வதுண்டு. மானிட சமூகங்களின் ஆரம்ப கால கட்டங்களில் பொதுவான ஒருவரின் மூலத்திலிருந்து உதித்தமை, இரத்த உறவினாலான பந்தங்கள் என்பன பிணைப்புக்களை ஏற்படுத்தி வைத்திருந்தன. இஸ்லாம் தோற்றம் பெற்ற வேளையின் போது, மனிதர்கள் அரேபியத் தீபகற்பத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் போல கோத்திர ரீதியில், அல்லது பாரசிகத்தில் போல தேசியங்களின் அடிப்படையில் அல்லது பைஸாந்தியப் பேரரசில் போல சமய சார்பினவான பிணைப்புகளை ஏற்படுத்தியிருந்தனர். மனிதர்கள் மத்தியில் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் முக்கிய காரணியாக இஸ்லாம், விசுவாசத்தினால் ஏற்படும் பிணைப்பை அறிமுகம் செய்தது. என்றாலும்கூட இந்தக் கோட்பாட்டுடன் முரண்படாத வகையில் இஸ்லாம் குடும்ப பிணைப்புகள் முதலான ஏனைய பந்தங்களையும் அனுமதித்ததுடன், ஊக்குவிக்கவும் செய்தது. இந்த அடிப்படையில் இஸ்லாம் சமூக பாதுகாப்பு, வாரிசுரிமை, அண்டை அயலவர்களுடனான உறவுகள், அதன் மூலம் எழும் அயலவர்களது உரிமைகள் என்பனவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி அமைத்தது.

*மேலும் அது, கோத்திர அங்கத்தவர்களிடையிலான உறவுகள்; ஈட்டுப் பணம் செலுத்தும் வேளை அமைய வேண்டிய ஒருமைப்பாடு; ஒரு நகரின் அங்கத்தவர்களிடையே காணப் பட வேண்டிய உறவுகள்; ஏனையோரிலும் பார்க்க நகரின் செல்வந்தர்களிடமிருந்தான ஸகாத்தைப் பெற்றுக்கொள்ள அவர்களுக்குரிய முன்னுரிமை என்பனவெல்லாம் ஒழுங்கு படுத்தப்பட்டன. என்றாலும் கூட, இவ்வாறான உறவுகள் எல்லாம் விசுவாசத்தின் அடிப்படையிலான பந்தங்களுடன் எவ்வகையிலும் முரண்படுதல் தகாது. விசுவாசத்தின் அடிப் படையிலான பந்தங்களுக்குக் குந்தகங்கள் விளைப்பன வாயின் அவை வலுவிழந்து விடுகின்றன. இஸ்லாத்தின் பரஸ்பர பந்தங்களுக்கான அடிப்படையாக அமைந்தது விசு வாசமாகும். இது உறுதிபெறும் வேளை, ஒருவர் தம் தந்தையர், மக்கள், மனைவியர், கோத்திரம் ஆய அனைத்திலிருந்தும் தம்மை விலக்கிக் கொள்ளவும், அத்தகு பந்தங்களை அறுத்து விடவும் கூடத் தயாராகி விடுகின்றார். அபூ ஹுதைபாவின் தந்தையார் சிலை வணக்கஸ்தராக இருந்து பத்ர் யுத்த களத்தில் கொல்லப்பட்டார். அல்-கலீப் கிணற்றுள் தள்ளப்படுவதற் காக தனது தந்தையின் உடல் இழுத்துச் செல்லப்பட்டமை அபூ ஹுதைபாவின் உள்ளத்தில் சஞ்சலங்களை ஏற்படுத்த வில்லை.*

*இப்ன் இஸ்ஹாக் கூறினார்: பனூ அப்த் அத்-தாருடன் கூட்டுச் சேர்ந்திருந்த இப்ன் வஹ்ப் என்னிடம் கூறினார்: பத்ரி லிருந்து யுத்தக் கைதிகள் தம்மிடம் கொண்டு வரப்பட்ட வேளை, அவர்களைத் தமது தோழர்கள் மத்தியில் பிரித்து அளித்து நபிகள் (ஸல்) கூறினார்கள்: "அவர்களை நலமாகப் பராமரியுங்கள்." அபூ அஸீஸ் இப்ன் உமைர் இப்ன் ஹிஷாம் கைதிகளுள் ஒருவராக இருந்தார். முஸ்அப் இப்ன் உமைரின் சகோதரர் அவர். அபூ அஸீஸ் கூறினார்: "எனது சகோதரர் முஸ்அப் என்னைக் கடந்து சென்றார். என்னைக் கைதியாக வைத்திருந்த அன்ஸாரியிடம் அவர் கூறினார்: 'அவரை விட்டு விடாதீர்; அவரது தாயார் பெரும் செல்வம் படைத்தவர்; அவர் உமக்கு ஈட்டுப் பணம் தரக்கூடும்.'"*

*இப்ன்-ஹிஷாம் கூறினார்: இந்த அபூ அஸீஸ்தான், நள்ர் இப்ன் அல்-ஹாரிஸ் கொல்லப்பட்ட பின்னர் முஷ்ரிகூன் களின் கொடியைத் தாங்கியவராக இருந்தவர். அவரைக் கைதி யாகக் கொண்டிருந்த அபூ அல்-யுஸ்ர்ரிடம் தனது சகோதர ரேயான முஸ்அப் இவ்வாறு கூறியதைக் கேட்ட அபூ அஸீஸ் வினவினார்: "ஓ என் சகோதரரே! இதைத் தான் நீர் எனக்காகப் பரிந்துரை செய்வீரோ?". முஸ்அப் கூறினார்: "அவர் (அபூ அல்-யுஸ்ர்) தான் எனது சகோதரர்; நீரல்ல."*

*அல்-திர்மிதீ, ஹஸன் ஸஹீஹ் என அவர் குறிப்பிடும் ஓர் இஸ்னாத் மூலம் கூறுவார்: ஜாபிர் இப்ன் அப்த் அல்லாஹ், அம்ர் இப்ன் தீனார் கேட்டதாக ஸுப்யான் கூற இப்ன் அபூ உமர் எமக்குக் கூறினார்: "நாங்கள் ஒரு படையெடுப்பில் சென் றிருந்தோம். ஸுப்யான் கூறினார் - அது பனூ அல் முஸ்தலிக் குக்கு எதிரான படையெடுப்பு என்றே அவர்கள் கருதினர். முஹாஜிரூன்களில் ஒருவர் அன்ஸார்களுள் ஒருவரைத் தள்ளி விட்டார் ... அப்த்-அல்லாஹ்-இப்ன் உபை இப்ன் ஸலூல் இத னைச் செவியுற்றுக் கூறினார்: "கருமங்கள் இவ்வளவு தூரம் சென்றுவிட்டதா? அல்லாஹ்வின் பெயரால், நாம் மதீனா வுக்குத் திரும்பியதும், நம்மில் மேலானோர் கீழானோரைத் துரத்தி விடுவோம்." அவரது மகன் அப்த்-அல்லாஹ் இதனைச் செவியுற்றுக் கூறினார்: "அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ் வின் தூதர் தான் பலமிக்கவர்; நீங்கள் பலவீனமானவர்கள் என ஏற்றுக் கொள்ளும் வரை நீங்கள் திரும்பிச் செல்ல மாட் டீர்கள்." அவரது தந்தை அவ்வாறே செய்தார்.*

*அப்த் அல்லாஹ் இப்ன் அப்த் அல்லாஹ் இப்ன் உபை தன் தந்தையாரை மிக்க கண்ணியப்படுத்தி வந்தவர். என்றாலும் கூட விசுவாசம் சம்பந்தப்பட்ட விவகாரங்களே கூடிய முக்கியத்துவம் பெற்றனவாயிருந்தன. ஆக, தனது தந்தையார் முஸ்லிம்களை இழிவு படுத்தி நின்றமையைக் கண்ட அவர், தானே அன்னவரைக் கொன்று தலையைத் துண்டித்துக் கொண்டு வருவதாக நபிகளாரிடம் கூறினார்.*

*நூஹுௗ நபியவர்களையும், அன்னவரது மகனையும் பொறுத்து விசுவாசம் பெறும் முக்கியத்துவத்தை விவரிக்கின்றது குர்ஆன்:*

*நூஹ் தம்முடைய இறைவனை (பிரார்த்தித்து) அழைத்து "என்னுடைய இறைவனே! நிச்சயமாக என்னுடைய மகன் என் குடும்பத்திலிருந்து உள்ளவன் தான். நிச்சயமாக (என் குடும்பத்தினரைக் காப்பாற்றுவதாக நீ கூறிய) உன்னுடைய வாக்கு உண்மையானதாகும். நீ தீர்ப்பளிப்போர்களில் மேலான நீதிபதியாக இருக்கின்றாய்" என்று கூறினார். (அப்பொழுது) "நூஹே! நிச்சயமாக அவன் உம் குடும்பத்தில் உள்ளவன் அல்லன். .நிச்சயமாக அவன் ஒழுக்கமில்லாச் செயலுடையோன் ஆவான்; எனவே எதில் உமக்குத் (தெளிவான) அறிவு இல்லையோ, அதனை என்னிடம் நீர் கேட்க வேண்டாம் - அறியாதவர்களில் உள்ளவராக நீர் ஆவதை விட்டும் உமக்கு நிச்சயமாக நான் உபதேசிக்கின்றேன்" என்று (அல்லாஹ்) கூறினான். (11:45-46)*

*இரத்த உறவின்படி நூஹுௗ நபியவர்களின் மகன் அன்னாரின் குடும்பத்தின் ஓர் அங்கத்தவரே. என்றாலும் அவர் குடும்பத்தில் ஒருவராகக் கருதப்படாது விட்டார். காரணம் - அவர் சத்தியத்தைக் கைவிட்டு விட்டமை. இறையோனை அவர் விசுவாசிக்கவில்லை; இறையோனின் தூதர் வழியில் செல்லவுமில்லை; நூஹுௗ நபிக்கும் அவரது மகனுக்கும் இடையிலான பந்தம் அறுக்கப்பட்டமைக்கான காரணத்தையும் குர்ஆன் கூறுகின்றது: "நிச்சயமாக அவன் ஒழுக்கமில்லாத செயலுடையோன் ஆவான்." விசுவாசத்துடன் முரண்படும் போது தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான நெருங்கிய உறவே அறுத்துவிடப்படுவதாயின் ஏனைய இரத்த உறவுகள் மட்டுமன்றி, இன, தேசிய, நிற உறவுகள் கூட அறுக்கப்படுவது இயல்பே.*

*இஸ்லாம் சகோதரத்துவத்தையும் நெருங்கிய நட்புறவுகளையும் விசுவாசியருக்கே மட்டுப்படுத்துகின்றது. அல்லாஹ்*

*கூறுகின்றான்: "நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் அனைவர் களும் சகோதரர்களே" (49:10). மேலும் விசுவாசியருக்கும் அவிசுவாசியருக்கும் இடையிலான உறவுகளை அது கண்டித் தது - அது, முஷ்ரிகூன், யூதர்கள், கிறிஸ்தவர்கள் என யாருட னாயினும் சரியே, இதையும் மீறிச் செயல்படுவோர் தவறே இழைக்கின்றார்கள். ஆக, விசுவாசியான ஒருவர், அவிசுவாசி யான ஒருவரை நண்பராகக் கொள்வது பெரும் பாவமாகக் கொள்ளப்பட்டது:*

> *இறை நம்பிக்கையாளர்களே! உங்கள் தந்தையர்களை யும் உங்கள் சகோதரர்களையும் - இறை நம்பிக்கை யை விட நிராகரிப்பை அவர்கள் நேசித்தால் பாது காப்பாளர்களாக நீங்கள் ஆக்கிக் கொள்ள வேண் டாம். (அவ்வாறு) உங்களில் எவரேனும் அவர் களைப் பாதுகாவலர்களாக ஆக்கிக் கொண்டால் அப்போது அவர்கள் தாம் அநியாயக்காரர்கள் (9:23)*

*முஸ்லிம்களின் லௌகிக ஆசாபாசங்கள், உறவுகள் முதலாய அனைத்தையும் தராசின் ஒரு பக்கத்தில் இடுகின்றது குர்ஆன். இறையோன், அவனது தூதர், சத்தியத்தின் வழி யிலான முனைவுகள் அனைத்தும் மறுபக்கம் இடப்படுகின் றன. விசுவாசத்தின் மீதான அர்ப்பணத்துக்கும் மேலாகத் தமது நலன்களையும், உறவு முறைகளையும் கொள்வது குறித்துக் குர்ஆன் எச்சரிக்கை விடுக்கின்றது. இறைவன் கூறுகின்றான்:*

> *(நபியே!) நீர் கூறுவீராக! உங்கள் தந்தையரும், உங்கள் மக்களும், உங்கள் சகோதரர்களும், உங்கள் மனை வியரும், உங்கள் குடும்பத்தினரும், எவற்றை நீங்கள் சம்பாதித்தீர்களோ அத்தகைய (உங்களுடைய) பொருட்களும், எதனுடைய நஷ்டத்தை நீங்கள் அஞ்சுகிறீர்களோ அத்தகைய (உங்களுடைய) வியா பாரமும், எவற்றை(க் கொண்டு) நீங்கள் திருப்தி கொள்கிறீர்களோ, அத்தகைய (உங்களுடைய) வீடு களும், அல்லாஹ்வை விட, அவன் தூதரை விட, உங்களுக்கு மிக விருப்பமானவையாக இருந்தால்*

*அல்லாஹ் தன்னுடைய (தண்டனை பற்றிய) கட்டளையைக் கொண்டு வரும் வரை நீங்கள் எதிர்பார்த்திருங்கள்; பாவிகளான கூட்டத்தை அல்லாஹ் நேர் வழியில் செலுத்த மாட்டான். (9:24)*

*ஸூறா அல்-தவ்பாவின் இந்த வாசகங்கள், மதீனாவில் உருவாக்கம் பெற்று வரும் இஸ்லாமிய அரசினைப் பாதுகாக்கும் பணியில் பங்குபற்றவென மதீனாவுக்கு ஹிஜ்றா மேற்கொள்வதனை ஊக்குவிப்பனவாகவே அமைந்தன. உன்னதமான தோழர்கள் இந்தப் பரீட்சையில் சித்தி கண்டு கொண்டார்கள். தமக்கு மிக்க விருப்பமானவையாக இருந்த குடும்பங்கள், தமது செல்வங்கள், சொத்து சுகங்கள் அனைத்தையும் அல்லாஹ்வுக்காகவும், அவனது தூதருக்காகவும் துறந்தவர்களாய், அவனது பாதையில் போராடவென அவர்கள் முன்வந்தார்கள்.*

*ஆக, மதீன சமூகம் இஸ்லாத்தினால் நிறுவப்பெற்றதாயது. அதன் அடிப்படையாக அமைந்தவை விசுவாசமும், இஸ்லாத்தின் மீதான அர்ப்பணமுமாகும். நட்புறவுகளும், பாதுகாப்பும் இறைவனிடமிருந்தும், அவனது தூதரிடமிருந்தும், விசுவாசிகளிடமிருந்துமே வருவனவாயின. இதுவே பந்தங்களில் மிகவும் உன்னதமானது. ஏனெனில் இது ஊற்றெடுப்பது, சத்தியம், நல்லெண்ணம், நல்லுணர்வு என்பவற்றின் அடிப்படையிலாகும். விசுவாசியர் அனைவரும் நண்பர்கள்; ஒருவருக்கொருவர் பாதுகாவலர்கள்; ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் கரிசனையும், அனுதாபமும் அவர்கள் இரத்தத்தில் கலந்தன. நிற, இன பேதங்கள் ஏதும் இன்றி யாரும் அந்த சமூகத்தில் இணைந்து கொள்ள முடிந்தது. இயல்புக்கு மாறான குணாதிசயங்கள் அனைத்தையும் களைந்து, இஸ்லாமிய தகைமையை ஈட்டிக் கொள்வதே அவர்கள் செய்ய வேண்டியிருந்தது. அதன் மூலம் முஸ்லிம்கள் அனைவரும் அனைத்து உரிமைகளையும் அனுபவிக்க முடிந்தது.*

# VIII

## அன்பே மதீன சமூகத்தின் அத்திவாரம்

மதீன சமூகத்தை இஸ்லாம், அன்பு, பரஸ்பர ஆதரவு என்பவற்றின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பியது. ஹதீஸில் குறிக்கப்படுவது இதுவே: "விசுவாசிகள், அவர்களது அன்பு, காருண்யம், நெருங்கிய உறவு ஆகியவற்றால் ஒரே உடம்பை ஒத்தவர்களாகின்றார்கள். அதன் ஏதேனும் ஒரு பாகம் துயருக்குள்ளாகும் போது முழு உடம்புமே விழித் திருந்து ஜுரம் மூலம் பதிலளிக்கிறது". முஸ்லிம் சமூகத்தின் அங்கத்தவர்கள் மத்தியில் பரிவு, காருண்யம், பரஸ்பர உறவுகள் என்பனவே மக்கள் மத்தியிலான தொடர்புகளின் அடிப்படை யாக அமைகின்றன. சமூக அங்கத்தவர்கள் முதியோர், இளை ஞர்; செல்வந்தர், ஏழையர்; ஆட்சியாளர், குடிமக்கள் என எத்தரத்தவராயினும் அவர்களுள் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்துவனவாக அவை அமைந்தன.

அன்பின் பரம்பலையே இஸ்லாமிய போதனைகள் ஆத ரித்து நிற்கின்றன: "தான் விரும்பும் ஒன்றனைத் தனது சகோத ரருக்கும் விரும்பாத வரை உங்களில் எவரும் உண்மையான விசுவாசியாக மாட்டார்." வாழ்வின் பிரச்சினைகளை எதிர் கொள்வதில் ஒருவருக்கொருவர் துணையாகஇருந்து கொள் வதன் மூலம் விசுவாசியர், சுய நலன் பேணல், சுரண்டல்கள் அற்ற ஒரு சமூகத்தில் சுமுகமாக வாழ்ந்து கொள்ள இயலு மாயிருக்கும். ஆகவே, "எவரொருவர் தனது சகோதரனுக்கு உதவி செய்கின்றாரோ அவருக்கு இறைவன் துணை செய் வான்." "அல்லாஹ் தன் அடியானுக்குத் துணை செய்வான் - அவ்வடியான் தன் சகோதரனுக்குத் துணை செய்யும் வரை."

*விசுவாசியரிடையிலான உறவுகள் பரஸ்பர மரியாதை கொண்டனவாகவே அமைகின்றன. செல்வந்தர் ஏழையரை, ஆட்சியாளர் குடிமக்களை, வலியார் எளியாரை இகழ்ந்து காணும் பண்பு அங்கில்லை. நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார் கள்: "தனது முஸ்லிம் சகோதரர் ஒருவரை இகழ்ந்து பேசுவார் தீமையையே வருவித்துக் கொள்கின்றார்." சினமுறும் சந்தர்ப்பங்களில் முஸ்லிம் சகோதரர்கள் இருவர்க்கு இடையி லான உறவு பலமிழக்கும் அல்லது முறிந்து போகும் சந்தர்ப் பங்கள் ஏற்படுவது உண்டு. ஆனால் அவை மூன்று நாட் களுக்கு மேல் நீடிக்கக் கூடாது: "மூன்று நாட்களுக்கு மேல் ஒரு முஸ்லிம் தனது சகோதரனுடன் கோபம் கொண்டிருப்பது தகுமானதல்ல."*

*அன்பளிப்புகள் வழங்கிக் கொள்வது அன்பினைப் பல முறச் செய்யும்: "ஒருவருக்கொருவர் அன்பளிப்புகள் செய்து ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துங்கள்." செல்வப் பங்கீட் டின் சமமின்மையினால் பொருளாதார கட்டமைப்பில் ஏற்படக் கூடிய இடைவெளிகளை நிரப்புவதற்காக, செல்வந் தர் தமது செல்வங்களின் ஒரு பகுதியை ஈவதன் மூலம் சமூகத்துக்கான தமது கடமைப்பாட்டினை நிறைவேற்ற முடிந் தது. தனது செல்வத்தின் மீதான 'ஸகாஹ்'வை அல்லாஹ் வுக்காகச் செலுத்துவதன் மூலம், செல்வந்தர் தன் செல்வம் கொண்டு வறியோரை ஆதரிக்கின்றார். மறுபுறம் வறியவர்கள் செல்வந்தர்தம் செல்வம் பெருகுதல் குறித்துக் காழ்ப்புணர் வுகள் ஏதும் கொள்வதில்லை. ஏனெனில், அப்பெருக்கம், வறியோர் மீதான இரக்கம், ஆதரவு என்பன மூலம் அவர்களை யும் வந்தடையும்.*

*அனஸ்-இப்ன்-மாலிக் (ரலி) கூறினார்:*

> *மதீனாவின் அன்ஸாரிகளிலேயே அபூ தல்ஹா அவர்கள் அதிக பேரீச்சந் தோட்டங்களை உடையவராய் இருந்தார். (மஸ்ஜிதுன் நபவி) பள்ளிவாசலுக்கு எதிரே இருந்த பைரூஹா எனும் தோட்டம் தம் சொத்துகளிலேயே அவ ருக்கு மிகவும் விருப்பமானதாயிருந்தது. அல்லாஹ்வின்*

*தூதர் (ஸல்) அவர்கள் அந்தத் தோட்டத்திற்குச் சென்று அதிலுள்ள நல்ல (சுவையான) நீரைப் பருகும் வழக்க முடையவராய் இருந்தார்கள்.*

*“நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து தானம் செய்யாத வரை ஒரு போதும் நீங்கள் (நிறைவான) பலனை அடைய மாட்டீர்கள்” (3:92) எனும் இறைவசனம் அருளப்பட்ட போது அபூ தல்ஹா (ரலி) அவர்கள் எழுந்து நின்று “அல் லாஹ்வின் தூதரே! ‘நீங்கள் விரும்புகின்றவற் றிலிருந்து தானம் செய்யாத வரை ஒரு போதும் நீங்கள் (நிறைவான) பலனை அடைய மாட்டீர்கள்’ என அல்லாஹ் கூறுகின் றான். என் சொத்துகளில் எனக்கு மிகவும் விருப்பமானது பைரூஹா ஆகும். இது அல்லாஹ்வுக்காக (நான் வழங்கும்) தர்மமாகும். இதற்கான நன்மையையும், (மறுமையில் எனக்குரிய) சேமிப்பாக இது இருப்பதையும் நான் அல்லாஹ்விடம் எதிர்பார்க்கின்றேன். ஆகவே அல்லாஹ் வின் தூதரே! அல்லாஹ் தங்களுக்குக் காட்டியுள்ள வழியில் இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று கூறினார்கள்.*

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “நல்லது. அது (மறுமையில்) இலாபம் தரும் செல்வம் தானே” என்று சொல்லி, “நீர் கூறியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அ(ந்தத் தோட்டத்)தை உம்முடைய நெருங்கிய உறவினர் களிடையே (தர்மமாக) வழங்குவதையே நான் (பெரிதும்) விரும்புகின்றேன்” என்றார்கள்.*

*அபூ தல்ஹா (ரலி) அவர்கள், “அவ்வாறே செய்கிறேன் அல்லாஹ்வின் தூதரே!” என்று கூறிவிட்டுத் தம் உற வினர்களுக்கும் தம் தந்தையின் சகோதரர் மக்களுக்கும் அந்தத் தோட்டத்தைப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார் கள்.*

ஸஹாபாக்களுள் செல்வந்தர்களாக இருந்தோர், தாம் ஈட்டிக் கொண்டுள்ள செல்வங்களுக்குத் தாம் பொறுப்பான வர்கள் என்ற உணர்வு கொண்டோராயிருந்தனர். அரசினால்

நிறைவேற்றிக் கொள்ள இயலாத, அல்லது கவனியாது விடப் பட்ட ஒரு விஷயம் அல்லது தேவை இருந்தால் அவற்றை நிறைவேற்றி வைக்கச் செல்வந்தர்கள் தம் செல்வங்களைத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். அபூ பக்ர் அல் ஸித்தீக் அவர் களின் காலிபாத்தின் போது மதீனாவில் பாரியதொரு பொரு ளாதார நெருக்கடி ஏற்பட்ட வேளை, உஸ்மான் (ரலி) அவர் கள் கோதுமை, எண்ணெய், தானியங்கள் ஏற்றப்பட்ட ஆயிரம் ஒட்டகைகளை ஸதகாவாக அனுப்பி வைத்தமை பிரசித்தமான ஒரு விஷயம். வர்த்தகர்கள் அப்பொருட்களுக்கு ஐந்து மடங்கு மேலதிக விலை தருவதாகக் கூறினார்கள். “நாங்கள் மதீனா வின் வர்த்தகர்கள். எமக்கு முன்னால் யார் இவற்றை உங்களுக் குத் தந்தார்கள்? இறைவன் எனக்கு இதைவிடப் பத்து மடங்கு தந்துள்ளான்” எனக் கூறிய உஸ்மான், அவற்றை வறுமைப் பட்ட முஸ்லிம்களிடையே பகிர்ந்தளித்தார்கள்.

இறையச்சமும் நேசமும் கொண்டவர்களாக நேர்வழி சென்ற எமது முன்னோர்களது வரலாறுகளில் இவ்வாறான சம்பவங்கள் ஏராளமாக உள்ளன. அதன் காரணமாக வர்க்க வேறுபாட்டு எண்ணங்கள் உருவாகாது விட்டன; வர்க்கப் போராட்டங்களும் இல்லாது போயின. மக்கள் தத்தம் பொரு ளாதார தகைமைகளுக்கு ஏற்பப் பிரித்துப் பார்க்கப்படாத தனால், தமக்கு மேலும், கீழும் அமைந்தாருடன் போராட் டங்கள் நடாத்தும் தேவை அவர்களுக்கு ஏற்படவில்லை. வர்க்க பேத அடிப்படையிலான பிரிபாடுகளை இஸ்லாம் அங்கீகரிக்காமை காரணமாக வறியோர் மீது செல்வந்தர், அல்லது குடிமக்கள் மீது ஆட்சியாளர் செலுத்தக் கூடிய மேலாண்மைகளுக்கு இடம் இருக்கவில்லை. ஆரம்பத்தில் இருந்தே மானிடரிடையிலான நிற, இன, மூல வேறுபாடுகள் எதனையும் இஸ்லாம் அங்கீகரித்திருக்கவில்லை. ஒரு சீப்பின் பற்களைப் போல முஸ்லிம்கள் அனைவரும் சமமானவர் களாயிருந்தார்கள். இறையுணர்வு தவிர்ந்த ஏனைய விடயங் களில் ஒருவரில் ஒருவர் சிறந்தவர் எனக் கொள்ள இடம் இருக்கவில்லை. அனைவருக்கும் திறக்கப்பட்டிருந்தன இஸ் லாத்தின் வாயில்கள். அபிவிருத்தி காணவும், வாழ்வா

*தாரங்களை ஈட்டிக் கொள்வதற்குமான வாய்ப்புகள் சமூக அங்கத்தவர்கள் அனைவருக்கும் சமமாகக் கிட்டுவனவாயின. சமூக தரங்களிலான வேறுபாடுகள் பொருட்படுத்தப் பெற வில்லை. ஏழையரான ஒருவர் செல்வந்தரான ஒரு பெண்ணை மணந்து கொள்ளத் தடைகள் இருக்கவில்லை. பலவீனமான ஒரு மனிதன் தேசத்தில் உயர் ஸ்தானங்களை ஈட்டிக் கொள் ளவோ, சமூகத்தின் தலைமைத்துவத்தில் உயர் தரங்களை ஈட்டிக் கொள்ளவோ தடைகள் ஏதும் இடப்படவில்லை. சமூக அங்கத்தவர்களுள் எவரும் மேலும் உயர்ந்து செல்லத் தடை களாக அமையும் வர்க்கங்கள் இருக்கவில்லை. இஸ்லாமிய சமூகமானது தனது விஞ்ஞான நாகரிக அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் நெறிப்படுத்திச் செல்ல அனுமதிக்கப்பட்டு, மானிடர்க்குத் தலைமைத்துவத்தை அளிக்கும் தகைமை கொடுக்கப் பெற்றிருந்தால், அழிவுக்கு மட்டுமே வழிகாட்டும் முரண்பாடுகள், மோதல்கள் இல்லாது அன்பும், ஆதரவும் கொண்ட ஒரு பலமான சமூகத்தை உருவாக்கும் அதன் தன்மை நன்கே தெளிவாகியிருக்கும்.*

*மதீன சமூகத்தின் செல்வந்தர்களது மனப்பாங்குகள் இவ்வாறு அமைந்திருந்தன என்றால் பலவீனமும், வறுமையும் கொண்டிருந்த அதன் மக்களது மனப்பாங்குகள் எத்தகையன வாக இருந்தன?*

# IX

# செல்வந்தரும் வறியோரும் சமானமாக ஒன்றுபட்டு உழைத்தல்

*நவீன இஸ்லாமிய சமூகத்தில் செல்வந்தரும் வறியவர்களும் பேதங்கள் பாராட்டாதவர்களாய் ஒன்றுபட்டு உழைக்கலாயினர். வர்க்க முரண்பாடுகள் தோற்றம் பெறுவதைத் தடைசெய்து வைத்திருந்த இஸ்லாமிய நம்பிக்கைகள், செல்வந்தர்க்கும் வறியவர்களுக்கும் இடையே சகோதர பந்தத்துவத்தை நிறுவி ஜிஹாதுக்கு அவசியமாயிருந்த ஒற்றுமை, அகப்பிணைப்பு என்பனவற்றை ஏற்படுத்தி வைத்தன. நபிகள் (ஸல்) அவர்களின் காலத்தில் மிக்க வறுமையில் வாடிய ஒரு கூட்டத்தாரின் வாழ்வமைப்பினைச் சித்தரிக்கின்றது குர்ஆன்:*

> *(தருமங்கள் என்பது) அல்லாஹ்வின் பாதையில் (தங்களை அர்ப்பணித்துத்) தடுத்து வைக்கப்பட்டுள்ள வறியவர்களுக்குரியதாகும்.(பொருள் சம்பாதிப்பதற்காக) பூமியில் சுற்றி அலைய அவர்கள் சக்தி பெற மாட்டார்கள்; (அவர்கள் பிறரிடம் யாசிக்காமல்) பேணுதலாக இருப்பதனால் (அவர்களை) அறியாதவர், அவர்களைச் செல்வந்தர் என எண்ணிக் கொள்வர்; அவர்களுடைய (வறுமையின்) அடையாளத்தைக் கொண்டு அவர்களை நீர் அறிந்து கொள்வீர். மனிதர்களிடம் எதையும் அவர்கள் வருந்திக் கேட்க மாட்டார்கள்;(இத்தகையோருக்காக) நல்லதிலிருந்து எதனை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை முற்றும் அறிந்தவனாக இருக்கின்றான். (2:273)*

இப்ன் ஸஅத் தனது அல் தபகாத்தில், கஅப் அல்-கரளீயை எட்டும் ஓர் இஸ்னாத் கொண்டு, இந்த வாசகம் அஹ்ல் அல்-ஸுப்பா குறித்து அருளப்பட்டது எனக் காட்டுவார். அல்-தபரீ தனது தப்ஸீரில், முஜாஹித், அல்-ஸித்தீ ஆகியோ ரின் ஆதாரத்தின் கீழ், இந்த வாசகமானது முஹாஜிரூன்கள் மத்தியிலான வறியவர்கள் குறித்தது எனக் காட்டுவார்.

ஆரம்ப இஸ்லாமிய சமூகத்தின் வறிய மக்களது வாழ்வு பற்றிய ஒரு விவரணத்தைத் தர நான் முனைகின்றேன். அவர்கள் தான் அஹ்ல்-அல்-ஸுப்பாஹ்.[1]

## வறிய முஹாஜிரூன்

மக்காவிலிருந்து மதீனாவுக்கான ஹிஜ்றாவின் பின், தமது மதத்தின் காரணமாக சிலை வணக்கத்தவர்களின் இம்சை களிலிருந்தும் தப்பி, தமது வீடுவாசல்கள், செல்வங்கள், சொத்துக்கள் அனைத்தையும் துறந்தவர்களாய் வந்து சேர்ந்த முஹாஜிரூன்களுக்கு வாழ்வாதாரங்களை அமைத்துக் கொள்வது பாரியதொரு பிரச்சினையாகத் தோற்றம் பெற்றது.

ஆரம்பத்தில் மதீனாவை வந்து சேர்ந்த முஹாஜிரூன் களில் பலர், விவசாய அடிப்படையிலான பொருளாதாரமே நிலைபெற்றிருந்த ஒரு சூழலில் உழைப்புக்கான வாய்ப்புக்கள் குன்றியவர்களாகவே விளங்கினர். வர்த்தகப் பொருளாதார சமூக அமைப்பினதாக அமைந்திருந்தது மக்கா. ஆக, முஹா ஜிரூன் விவசாயப் பயிற்சிகள் ஏதும் பெற்றோராக இல்லை. மக்காவில் தமது செல்வங்கள் அனைத்தையும் விட்டு வந்திருந் ததனால் முதலீடு செய்யத் தேவையான பணமும் அவர்களிடம் இல்லை. ஆக, மதீனாவில் அவர்கள் விவசாயக் காணிகள் எதனையும் உடமையாகக் கொள்ள இயலவில்லை. முஹாஜி ரூன்களைப் பராமரிக்க அன்ஸாரிகள் தம்மால் இயன்றன அனைத்தையும் செய்தனர். என்றாலும் கூட, முஹாஜிரூன் களில் ஒரு தொகையினர் மேலும் பராமரிப்புத் தேவையான வர்களாகவே இருந்தனர்.

---

1. أهل الصفة

முஹாஜிரூன்களின் மதீன வருகை தொடர்ந்து வந்தது. குறிப்பாக அகழ் யுத்தத்தின் முன்னர் வரை, அவர்களுள் ஏராளமானோர் மதீனாவுக்குக் குடி பெயர்ந்து வந்து கொண் டிருந்தனர். தூதுக் குழுக்கள் பலவும் மதீனா நோக்கி வரலா யின. அவர்களுள் பலர் மதீனாவில் எவரையும் அறிந்திருக் கவில்லை. இவர்கள் அனைவருக்கும் தற்காலிக அல்லது நிலை யான வசிப்பிடங்கள் அமைக்க வேண்டியது அவசியமாயிற்று.

ஆக, வறியவர்களாயிருந்தோர்க்கும், தூதுக் குழுக்களில் வந்தோருக்குமாக இருப்பிட வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பினையும் சுமக்க வேண்டியவர்களானார் கள் நபிகள் (ஸல்) அவர்கள்.

## அல்-ஸுப்பாஹ்

இதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது, தொழுகையின் போதான 'கிப்லா'வானது ஜெரூஸலத்தின் பைத் அல்-மக்திஸ் ஸிலிருந்து, மக்காவின் கஃபாவை நோக்கி மாற்றப்பட்ட வேளையிலாகும். இது நபிகள் (ஸல்) அவர்களது மதீனா நோக் கிய ஹிஜ்றாவின் பின் 16 மாதங்களில் நிகழ்ந்தது. இவ்வாறான திசை மாற்றத்தின் காரணமாக, முதல் கிப்லாவின் சுவரானது, நபிகளாரின் பள்ளிவாசலது பின் சுவராக அமைந்துவிட்டது. அதன் மேல் ஒரு திரையை அமைக்கும்படி நபிகள் (ஸல்) அவர் கள் உத்தரவிட்டார்கள். பின்னர் அது அல்- ஸுப்பாஹ் (உயர்த் தப்பட்ட ஒரு திண்ணை அல்லது மேடை) அல்லது அல்- லிள்ளாஹ்[2] (திரை) என வழங்கியது. என்றாலும் அது மூன்று பக்கங்களில் திறந்து விடப்பட்டிருந்தது.

இப்ன் ஜுபைர், அல் ரிஹ்லா (பிரயாணம்)வில், அல்- ஸுப்பாஹ்வானது கூபாவின் எல்லையில் அஹ்ல் அல்-ஸுப் பாஹ் வாழ்ந்து வந்த ஒரு வீடாகும் என்பார். அதனை விளக் கும் அல்-ஸம்ஹூதீ, அஹ்ல் அல் ஸுப்பாஹ் என அழைக்கப் பட்டோர் பின்னர் அந்த வீட்டில் குடியிருக்கச் சென்றனர் என்றும், அதனாலேயே இப்ன்-ஜுபைர் குறித்த அந்த இல்லம்

2. ظلة

அல்-ஸுப்பாஹ் எனும் பெயரை ஈட்டிக் கொண்டது என்றும் கூறுவார். ஸுப்பாஹ் எனும் நாமம் மதீனாவின் நபிகளார் (ஸல்) அவர்களது பள்ளிவாசலிலிருந்து பெறப்பட்டதாகும்; இப்ன்-ஜுபைர் குறித்த அந்த வீட்டிலிருந்து பெறப்பட்டதல்ல.

ஸுப்பாஹ்வில் எத்தனை பேருக்கு இடவசதி இருந்தது என்பது தெரியவில்லை. என்றாலும் பெருந்தொகையினர் அங்கு தங்கிக் கொள்ள முடிந்தது போலத் தெரிகின்றது. ஏனெனில் நபிகள் (ஸல்) அவர்கள் சுமார் முன்னூறு பேர் அளவினரான தொகையினர் கலந்து கொண்ட திருமண உபசாரம் ஒன்றனை இங்கு நடாத்தியிருக்கின்றார்கள் - அவர் களில் சிலர் பள்ளிவாசலை அண்மி நபிகளாரின் மனை வியர்க்குரியதாயிருந்த ஓர் அறையில் அமர்ந்திருந்த போதும் கூட.

## ஸுப்பாஹ்வில் வசித்து வந்தோர்

ஸுப்பாஹ்வில் வாழ்ந்து வந்த முதலாவது மக்கள் முஹாஜிரூன் ஆவர். ஆக, அவர்களோடு இணைத்து அது ஸுப்பாஹ் அல்-முஹாஜிரூன் என வழங்கியது. நபிகள் (ஸல்) அவர்களைச் சந்தித்துத் தமது விசுவாசத்தைப் பிரகடனம் செய்து கொள்ளவென வந்த தூதுக் குழுக்களின் அங்கத்தவர் களும் அங்கு தங்கி வந்தனர். நபிகளாரைக் காண மதீனா வரும் ஒருவர், தனக்குத் தெரிந்த யாரும் மதீனாவில் இருந்தால் அவருடன் தங்கிக் கொள்வார். இல்லையேல் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுடன் தங்குவார். அஹ்ல் அல்-ஸுப்பாஹ் வின் நிரந்தர குடியிருப்பாளர்களுக்கும், தற்காலிகமாகத் தங்கிச் செல்வோர்க்கும் இடையிலான தொடர்புகளை நிர்வகித்து வந்தவர் அபூஹுரைரா. அவர் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வின ரை நன்கு அறிந்தவராக, ஜிஹாத், இபாதா முதலியவற்றிலான அவர்களது தகைமைகளையும், தரங்களையும் தெரிந்தவராக இருந்தார். முஹாஜிரூன், நகருக்கு வெளியிலிருந்து தவிர, அன்ஸார்களில் சிலரும் அல்-ஸுப்பாஹ்வில் வாழ்வதற்கென வந்தனர். மதீனாவில் சொந்த வீடுகளைக் கொண்டிருந்த அவர் கள் இங்கு வாழ வேண்டிய தேவையேதும் இருக்கவில்லை.

என்றாலும், துறவும் (ஸுஹ்த்)[3] எளிமையும் கொண்ட வாழ்வினை யாசித்தவர்களாய் அவர்கள் அல்-ஸுப்பாஹ்வில் இணைந்து கொண்டனர். அவர்களுள்ளானோர்: கஅப் இப்ன் மாலிக் அல்-அன்ஸாரி, ஹன்ளலா இப்ன் அபூ ஆமிர் அல்-அன்ஸாரி (தனது வீர மரணத்தின் பின்னர் வானவர்களால் நீராட்டப்பட்டவர்), ஹாரிஸா இப்ன் அல்-நுஃமான் அல்-அன்ஸாரி முதலியோர்.

அஹ்ல்-அல்-ஸுப்பாஹ் பல்வேறு கோத்திரத்தவர்களாக இருந்ததனால் நபிகள் (ஸல்) அவர்கள் அவர்களை அல்-அவ்பாள்[4] (கலப்புக் கூட்டத்தினர்) என அழைத்தனர். இவ்வாறு அழைக்கப்பட்டமைக்குக் கற்பிக்கப்படும் மற்றொரு காரணம், அவர்கள் ஒவ்வொருவரும் தமது உணவுகளைச் சேகரித்து வைக்கவென தோல் பை (வப்ளா)[5] ஒன்றனைக் கொண்டிருந்தமையாம். என்றாலும் முன்னைய காரணமே ஏற்புடைத்ததாகத் தெரிகின்றது.

## ஸுப்பாஹ்வில் வசித்தோர் எண்ணிக்கையும் பெயர்களும்

அவர்களது எண்ணிக்கை நிலையானதொன்றல்ல. மதீனாவுக்குத் தூதுக் குழுக்கள் வரும் வேளைகளில் எண்ணிக்கை கூடியது. வந்தவர்கள் திரும்பிச் செல்லக் குறைந்தது. என்றாலும் பொதுவாக நிரந்தர வாசம் செய்து வந்தோர் தொகை எழுபது ஆண்கள் ஆக இருந்தது. அவர்களது தொகையும் திடீரென உயர்வதுண்டு. ஸஅத் இப்ன் உபாதா சில வேளைகளில் என்பது பேரை உபசரித்திருக்கின்றார். நபிகளாரின் ஏனைய தோழர்களது விருந்தினர்களாக அமைந்தோர் பலர் இருந்தனர்.

அபூ நுஐம் தனது அல்-ஹில்யாவில் ஸுப்பாஹ் வாசகம் செய்தோரின் பெயர்களைப் பட்டியலிட்டதாகவும், அதில் நூறு பேருக்கு மேற்பட்டோர் இருந்ததாகவும் கூறுவார் அல்-ஸம்ஹூதீ.

3. الزهد 4. الأوفاض 5. وفضة

எவ்வாறாயினும் அபூ நுஐமினால் பட்டியலிடப்பட்டோர் தொகை 51 ஆகும். அதில் ஐந்து பேர் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வைச் சார்ந்தோரல்லர் என்பார் அவர். அபூ நுஐம் மட்டும்தான் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வின் பிரசித்தமான நாமங்கள் அனைத்தையும் தருகின்றவர். அதனை முன்னைய ஓர் ஆதாரத்திலிருந்து அறிவிப்புச் செய்தாலும் அந்த மூல ஆதாரத்தைக் குறிப்பிடாது விட்டுவிடுகின்றார் அவர். எவ்வாறாயினும் அது அபூ அப்த் அல்-ரஹ்மான் அல்-ஸலமீ (மறைவு ஹி.412)யின் நூலாக இருத்தல் வேண்டும்.

அபூ நுஐம் கூறியபடியான அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வினரின் நாமங்கள் ஏனைய ஆதாரங்களில் குறிப்பிடப்பட்டன வற்றுடன் கீழே தரப்படுகின்றன:

1. அபூ ஹுரைரா (தான் அவர்களுள்ளானவர் என அவர் கூறியதால்)
2. அபூதர் அல்-கிபாரி[6] (தான் அவர்களுள்ளானவர் என அவர் கூறியதால்)
3. வாஸிலா இப்ன் அல்-அஸ்கா
4. கைஸ் இப்ன் தஹ்பா அல்-கிபாரி (தான் அவர்களுள் ஆனவர் என அவர் கூறியதால்)
5. கஅப் இப்ன் மாலிக் அல்-அன்ஸாரீ
6. ஸஈத் இப்ன் ஆமிர் இப்ன் ஹதீம் அல்-ஜுமஹீ
7. ஸல்மான் அல்-பார்ஸீ
8. அஸ்மாஅ இப்ன் ஹாரிஸா இப்ன் ஸஈத் அல்-அஸ்லமீ
9. ஹன்ளலா இப்ன் அபூ ஆமிர் அல்-அன்ஸாரீ (வானவர்களால் நீராட்டப்பட்டவர்)
10. ஹாஸிம் இப்ன் ஹர்மலா
11. ஹாரிஸா இப்ன் அல்-நுஃமான் அல்-அன்ஸாரீ அல்-நஜ்ஜாரீ
12. ஹுதைபா-இப்ன்-உஸைத் அபூ ஸுரைஹா அல்-அன்ஸாரீ

6. أبوذر الغفاري

13. ஹுதைபா இப்ன் அல்-யமான் (முஹாஜிரூன்களில் ஒருவரான இவர் அன்ஸார்களுடன் தன்னை இணைத்துக் கொண்டதால் அவர்களுள் ஒருவராகவே கருதப் பட்டார்)
14. ஜாரியா இப்ன் ஜமீல் இப்ன் ஷபாஹ் இப்ன் கிர்த்
15. ஜுஐல் இப்ன் ஸுராகாஹ் அல்-ளமரீ
16. ஜுர்ஹத் இப்ன் குவைலித் (அல்லது இப்ன் ரஸாஹ்) அல்-அஸலமீ
17. ரபாஅஹ் அபூ லுபாபா அல்-அன்ஸாரீ (இவரது நாமம், பனூ அம்ர் இப்ன் அவ்ப்பைச் சேர்ந்த பஷீர் இப்ன்அப்த் அல்-முன்திர் எனக் கூறப்பட்டது.)
18. அப்த்-அல்லாஹ் தூ அல்-பிஜாதைன்
19. துகைன் இப்ன் ஸஈத் அல்-மஸனீ (அல்லது அல்-கஸ்அமீ)[7]
20. குபைப் இப்ன் யஸாப் இப்ன் அனபா
21. ஹரீம் இப்ன் அவ்ஸ் அல்-தாஈ
22. ஹரீம் இப்ன் பாதிக் அல்-அஸதீ
23. ஹுனைஸ் இப்ன் ஹதாபா அல்-ஸஹமீ
24. ஹப்பாப் இப்ன் அல்-அர்த்
25. அல் ஹகம் இப்ன் உமைர் அல்-ஸமாலீ
26. ஹர்மலா இப்ன் அயாஸ் (இவர் ஹர்மலா இப்ன் அப்த் -அல்லாஹ் அல்-அன்பரீ எனக் கூறப் பெற்றார்)
27. ஸைத் இப்ன் அல்-கத்தாப்
28. அப்த்-அல்லாஹ் இப்ன் மஸ்ஊத்
29. அல் தபாவீ அல்-தவ்ஸீ
30. தல்ஹா இப்ன் அம்ர் அல்-நள்ரீ
31. ஸப்வான் இப்ன் பய்ளாஅ அல்-பஹரீ
32. ஸுஹைப் இப்ன் ஸனான் அல்-ரூமீ
33. ஷத்தாத் இப்ன் உஸைத்
34. ஷக்ரான் (நபிகள் (ஸல்) அவர்களால் விடுவிக்கப்பட்டவர்)

7. الخثعمي

35. அல் ஸாஇப் இப்ன் கலாத்
36. ஸாலிம் இப்ன் உமைர் (பனூ ஸஅலபா இப்ன் அம்ர் இப்ன் அவ்ப் இன் அல் அவ்ஸ் களிலிருந்து)
37. ஸாலிம் இப்ன் உபைத் அல்-அஷ்ஜஈ
38. ஸபீனா (நபிகள் (ஸல்) அவர்களால் விடுவிக்கப்பட் டவர்)
39. ஸாலிம் (அபூ-ஹுதைபாவால் விடுவிக்கப்பட்டவர்)
40. அபூ ரஸீன்
41. அல்-அஃர் அல்-மஸனீ
42. பிலால் இப்ன் ரபாஹ்
43. அல் பர்ரா இப்ன் மாலிக் அல்-அன்ஸாரீ
44. ஸவ்பான் (நபிகள் (ஸல்) அவர்களால் விடுவிக்கப்பட் டவர்)
45. ஸாபித் இப்ன் வதீஆ அல்-அன்ஸாரீ
46. ஸகீப் இப்ன் அம்ர் இப்ன் ஷமீத் அல்-அஸதீ
47. ஸஅத் இப்ன் மாலிக் அபூ ஸஈத் அல்-குதரீ
48. அல் அர்பாள் இப்ன் ஸாரியா
49. குர்பா அல் அஸதீ
50. அப்த் அர் ரஹ்மான் இப்ன் கிர்த்
51. அப்பாத் இப்ன் காலித் அல்-கிபாரீ

அபூ நுஐம், அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வினராகக் குறிக்கப் பட்டோர் ஐவரின் பெயர்களைத் தந்து, அவர்கள் அதனைச் சார்ந்தோரல்லர் என்பார்:

1. ஸஅத் இப்ன் அபூ வக்காஸ். - இவரை அஹ்ல் அல்-ஸுப் பாஹ்வுக்குள் சேர்ப்போர், மேல்வரும் வாசகம், அவர்களைக் குறித்தது என அவர் கூறியமையை அடிப்படையாகக் கொண் டே அவ்வாறு செய்தனர்.

"காலையிலும், மாலையிலும் தங்களுடைய இறைவனை அவனுடைய திருப் பொருத்தத்தை நாடியவர்களாக (அழைத் துப்) பிரார்த்தித்துக் கொண்டிருப்போரை (தூதரே!) நீர் விரட்டி விடாதீர்" (6:52). ஆனால் இந்த வாசகம் , இப்ன் கஸீ ரின் விளக்கத்தின் படி, மக்காவில் அருளப்பட்டதாகும். இது அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்து அருளப்பட்டதல்ல.

*2. ஹபீப் இப்ன் ஸைத் இப்ன் ஆஸிம் அல்-அன்ஸாரீ அல் நஜ்ஜாரீ. - இவர் 'அல்-அகபா'வின் மக்களுள் ஒருவர். தவறுதலாக அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வில் அடக்கப்பட்டுள்ளார்.*

*3. அபூ அய்யூப் அல்-அன்ஸாரீ - இவரும் அல்-அகபாவின் மக்களுள் ஒருவர்.*

*4. ஹஜ்ஜாஜ் இப்ன் அம்ர் அல்-மாஸினீ அல்-அன்ஸாரீ*

*5. ஸாபித் இப்ன் அல்-ளஹ்ஹாக் அல்-அன்ஸாரீ*

## *அஹ்ல் அல்-ஸுப்பாஹ் அறிவுத் தேட்டம், இபாதா, ஜிஹாத் மீது கொண்ட அர்ப்பணிப்பு*

*அஹ்ல் அல்-ஸுப்பாஹ் அறிவுத் தேட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாகவும், தொழுகைக்காகவும் பள்ளிவாசலிலேயே தங்கினர். ஏழ்மைக்கும் துறவுக்கும் அவர்கள் நன்கு பயிற்றப்பட்டிருந்தனர். பள்ளிவாசலில் அவர்கள் தொழுவார்கள்; குர்ஆன் ஓதுவார்கள்; அதன் வாசகங்களைக் கூட்டாகப் பயில்வார்கள்; இறைவனை நினைவுறுத்தலில் காலத்தைக் கழிப்பார்கள். சிலர் எழுதுவதற்குப் பயின்றார்கள். தனக்குக் குர்ஆன் கற்பித்து, எழுதவும் பயிற்றுவித்தமைக்காக ஒருவர், உபாதா இப்ன் அஸ்ஸாமித்துக்குத் தனது அம்பை அன்பளிப்புச் செய்தார். அவர்களுள் சிலர் அறிவிலும், நபிகள் (ஸல்) அவர்களது வாக்குகளை மனனம் செய்வதிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்களானார்கள். ஹதீஸ் அறிவிப்பில் பிரசித்தி பெற்ற அபூ ஹுரைரா, பிதன் (கலகங்கள்) குறித்த ஹதீஸ்களுக்குப் பெயர் பெற்றிருந்த ஹுதைபா இப்ன் அல்-யமான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.*

*அறிவுத் தேட்டம், தொழுகை ஆகியவற்றிலான ஈடுபாடு, சமூக வாழ்விலும் ஜிஹாதிலும் பங்கு பெற அவர்களுக்கு எவ்விதத்திலும் தடையாக அமைந்திருக்கவில்லை. அவர்களுள் சிலர் பத்ர் களத்தில் வீர மரணம் எய்தினார்கள்: ஹன்ளலா அல் கஸீல். சிலர் ஹுதைபியாவில் பங்கு பெற்றிருந்தார்கள்:*

*ஜுர்ஹத் இப்ன் அல்-குவைலித், அபூ ஸுரைஹா அல்-கிபாரீ. சிலர் கைபரில் வீர மரணம் எய்தினார்கள்: ஸகீப் இப்ன் அம்ர். சிலர் தபூக்கில் வீரமரணம் எய்தினார்கள்: அப்த் அல்லாஹ் தூ அல்-பிஜாதைன். சிலர் யமாமாவில் வீர மரணம் எய்தினார்கள்: அபூ ஹுதைபாவால் விடுவிக்கப்பட்ட ஸாலிம், ஸைத் இப்ன் அல்-கத்தாப். அவர்களது இரவுகள் தொழுகைகளில் கழிந்தன. பகற் பொழுதுகள் ஜிஹாத் உட்பட சமூக விவகாரங்களில் கழிந்தன.*

## *அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வின் ஆடைகள்*

*அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குளிரிலிருந்து தம்மைப் பாது காத்துக் கொள்ளவோ, தம்மைப் பூரணமாக மறைத்துக் கொள்ளவோ போதிய ஆடைகள் கொண்டிருக்கவில்லை. போர்வைகள் அவர்களிடம் இருக்கவில்லை. பூரணமான ஆடைகள் கொண்டோராக எவரும் இருக்கவில்லை. தமது கழுத்தில் ஓர் ஆடையை அல்லது புடவையைக் கட்டிக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள். சிலர் தமது பின்னங்கால்கள் வரை மறைக்கும் ஆடைகள் கொண்டிருந்தனர்; ஏனையோர் தமது முழங்கால்களை எட்டும் அளவாவது ஆடைகள் இல்லாதிருந்தனர். சில ஆதாரங்களின் படி, சிலர் தமது தலைகளை மறைக்கும் 'ஹௌதிகிய்யா' அணிந்திருந்தனர்.*

*அல் ஹனப்[8] என்பது யெமனிலிருந்து வரும், தரத்தில் குறைந்த, சொரசொரப்பான ஒரு வகைப் போர்வையாகும். சில போது இந்த ஆடைகளில் அவர்கள் வெளிச் செல்ல வெட்கப் பட்டார்கள். ஏனெனில் அவை அவர்களது அங்கங்களைப் பூரணமாக மறைப்பதாக இல்லை. ஸுப்பாஹ், காற்றுக்கும் தூசுக்கும் தப்பியிருக்க இயலாது திறந்திருந்ததால் அவர்களது ஆடைகள் விரைவாகவே அழுக்கடைந்தன. வியர்வையின் காரணமாக அழுக்கும் தூசும் நிரம்பியனவாகவே அவர்களது உடம்புகளும் தோற்றின.*

---

8. الحنف

## அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வின் உணவு

அவர்களது உணவு பெரிதும் பேரீத்தம் பழமே. தினமும் இருவருக்கென ஒரு கொத்து பேரீச்சம் பழம் கொடுப்பார்கள் நபிகள் (ஸல்) அவர்கள். தினமும் பேரீச்சம் பழம் உட்கொள் வது அவர்களது வயிறுகளில் அசௌகர்யங்களை ஏற்படுத்து வதாக அவர்கள் முறையிட்டனர். என்றாலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களால் வேறு உணவு வகைகள் எதனையும் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வினருக்கு அளிக்க முடியவில்லை. பொறுமையைக் கொண்டு உபதேசம் செய்து ஆறுதல் வார்த் தைகள் கூறினார்கள் நபிகள் (ஸல்) அவர்கள். தமது இல்லத் தில் தம்முடன் வந்து உணவு உட்கொள்ள அவர்களுக்கு அழைப்பு விடுப்பர் அன்னார். என்றாலும் அவர்களுக்கென நல்ல உணவு வகைகளை அளிக்க அன்னாரால் இயலவில்லை. ஏனெனில் அன்னார், தமக்கும் தம் குடும்பத்தாருக்குமென பெரிய செலவுகள் ஏதும் செய்ததில்லை. சில வேளைகளில் அவர்களுக்குப் பால் கொடுத்தார்கள். சில போது ஜஷீஷா[9] (இறைச்சி அல்லது பேரீத்தம் பழத்துடன் சமைக்கப்பட்ட ரொட்டி) கொடுத்தார்கள். ஒரு முறை ஹீஸா[10] (பேரீச்சை, கோதுமை, நெய் கலந்த ஒரு வகை பதார்த்தம்) அளித்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அல்-ஸரீத்[11] (இறைச்சியும் சாறும் தோய்ந்த ரொட்டி) கொடுத்தார்கள். உணவு சிறப்பாக இல்லாதிருப்பது குறித்துத் தமது ஆதங்கத்தைத் தெரிவித்துக் கொள்வார்கள் நபிகள் (ஸல்) அவர்கள். ஒரு சந்தர்ப்பத்தில் வாற்கோதுமை கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு வகைப் பதார்த்தத்தைக் கொடுத்துக் கூறினார்கள்: “முஹம்மதுடைய ஆன்மா யாருடைய கையில் இருக்கின்றதோ அவன் மீது சாட்சியாக, நீங்கள் காண்பது தவிர முஹம்மதுடைய வீட்டில் இன்றைய இரவு வேறு உணவு ஏதும் இல்லை”.

நபித்தோழர்களுள் செல்வந்தரான யாரேனும் ஒருவரது அழைப்புக் கிட்டிய வேளைகளில் அஹ்ல் அல்-ஸுப்பாஹ் நல்ல உணவு உட்கொண்டார்கள். இது இடைக்கிடை நிகழ்ந்து

9. جشيشة 10. حيسة 11. الثريد

*வந்தது. என்றாலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது உடம்பையும் ஆன்மாவையும் ஒரு நிறுத்தி வைக்குமளவு உணவு அவர்களுக்குக் கிட்டுவதாயில்லை. அதன் காரணமாக அவர்கள் தொழுகையின் போது மயக்கமுற்று வீழ்வதுமுண்டு. உணவுப் பற்றாக்குறை அவர்களை ஒருபோதும் பேரவாவுடன் உணவு உட்கொள்ள உந்தியதில்லை. சகோதரத்துவத்தின் உரிமைகளும் கடமைகளுமே ஒருவரோடு ஒருவருக்கு இடையிலான அவர்களது உறவுகளை நிர்ணயம் செய்து வந்தன. அபூ ஹுரைரா அறிவிக்கின்றார்: அவர்கள் பேரீத்தம் பழம் உட்கொள்ள அமர்ந்திருக்கும் வேளைகளில் யாரேனும் ஒருவர் இரண்டு பழங்களை ஒரு சேர உட்கொண்டு விட்டால் ஏனைய தோழர்களை விளித்து அவர் கூறுவார்: "நான் இரண்டு பேரீத்தம் பழங்களை ஒன்றாக எடுத்து விட்டேன்; நீங்களும் அவ்வாறே எடுத்துக் கொள்ளுங்கள்." அதன் மூலம் அவர் ஏனையோரை விட கூடுதலாக உட்கொண்டிருக்க மாட்டார்.*

*சிறிதளவு உணவுடனும், சொரசொரப்பான ஆடைகளுட னும் திருப்தி கண்டு கொண்டனர் அஹ்ல் அல்-ஸுப்பாஹ். தொழுகை, அறிவுத் தேட்டம், ஜிஹாத் ஆகியவற்றில் முழு மையான ஈடுபாடு கொள்வதற்காய் அவர்கள் சுகபோக வாழ் வினை முற்றாகத் தவிர்த்து வந்தனர். அவர்களது வாழ்வு லௌகீக பந்தங்கள் அறுந்த கடின வாழ்வாக இருந்தது.*

## *நபிகள் (ஸல்) அவர்களும் அன்னாரின் தோழர் களும் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வைப் பராமரித்தமை*

*நபிகள் (ஸல்) அவர்கள் தாமே அஹ்ல் அல்-ஸுப்பாஹ் வைப் பராமரித்து வந்தார்கள். அவர்களைக் காண அன்னவர் அடிக்கடி செல்வர்; அவர்களது நிலைமைகளை அவதானிப் பர்; அவர்களுள் சுகவீனமுற்றவர்களைச் சென்று நலம் விசாரிப்பர்; அவர்களுடன் அமர்ந்திருந்து உரையாடுவர்;*

அறிவுரைகள், ஆறுதல் கூறுவர்; பழம் நிகழ்வுகளை எடுத்துக் கூறுவர்; சமய விவகாரங்கள் குறித்து நினைவுறுத்துவர்; குர்ஆனை ஓதவும் விளங்கவும் ஊக்குவிப்பர்; அல்லாஹ்வை நினைவுறுத்தல் செய்ய உந்துவார்கள்; மறுமையை எதிர்பார்த் துக் கருமமாற்றவும், உலகையும் அதன் சுகபோகங்களையும் தவிர்ந்து கொள்ளவும் வழிகாட்டுவார்கள்.

ஸதகா ஏதும் கிடைக்கப்பெற்ற வேளை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமக்கென எதுவும் வைத்துக் கொள் ளாது முழுவதுமாக அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுக்கே அனுப்பி விடுவார்கள். அன்பளிப்பாக ஏதும் கிட்டிய வேளை அவர் களுடன் பகிர்ந்து கொள்வார்கள். அடிக்கடி அவர்களை உண வருந்த தமது மனைவியருள் ஒருவரின் அறைக்கு அழைப்பார் கள். அன்னவரின் சிந்தையிலிருந்து அவர்கள் ஒருபோதும் பிரிந்ததில்லை. அல்-ஹஸன் பிறந்த வேளை, தனது மகள் பாத் திமாவிடம், குழந்தையின் மயிரின் நிறையளவு வெள்ளியை, ஸதகாவாக, அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுக்கு அனுப்பும்படி வேண்டினர்.

யுத்தக் கைதிகள் கொண்டு வரப்பெற்ற ஒரு சந்தர்ப்பம். தான் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதனால், கைதி களில் ஒருவரைத் தமக்குச் சேவகராகத் தந்து உதவும் படி வேண்டினார் மகள் பாத்திமா. அன்னார் கேட்டார்கள்: “நான் உமக்கு ஒரு சேவகரைத் தந்து அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வை பட் டினியில் வாடச் செய்யவா?” யுத்தக் கைதிகளை விற்று விடு வதன் மூலம் கிட்டும் பணத்தைத் தான் அஹ்ல் அல்-ஸுப் பாஹ் மீது செலவழிக்க முடிவு செய்துள்ளதாக அன்னார் விளக்கினார்கள். பாத்திமா தனக்கும் பணம் தரும்படி கோரி னார் போலத் தெரிகின்றது.

நபிகளார் ஏற்கனவே அலீ (ரலி) அவர்களைக் காணச் சென்றிருந்தார்கள். படுக்கைக்கான அவர்களது போர்வை, முழுமையாகப் போர்த்திக் கொள்ள இயலாத அளவு குட்டை

யாக இருந்தது. என்றாலும் கூட, அவர்களுக்குச் சில பிரார்த் தனைகளைக் கற்பித்த அன்னார் அவர்களிலும், அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வையே தேர்ந்தவர்களாகக் கூறினார்கள்: "நான் உங்களுக்குத் தந்து, அஹ்ல்-அல்-ஸுப்பாஹ்வைப் பட்டினி யில் வாடச் செய்ய இயலாது."

நபிகள் (ஸல்) அவர்கள், அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுக்கு ஸதகா அளிக்கும்படி தமது தோழர்களை ஊக்குவித்தார்கள். அவர்களும் தம்மிடம் இருந்த நல்லவற்றை அளிக்க லானார்கள். செல்வந்தராயிருந்த தோழர்கள், ஸுப்பாஹ் வினருக்கு உணவுகள் அனுப்புவார்கள். ஸலாத் அல்-இஷா வின் பின்னர் நபிகளார் (ஸல்) அவர்கள் அஹ்ல் அல்-ஸுப் பாஹ்வைத் தமது தோழர்கள் மத்தியில் பங்கீடு செய்து அனுப்புவார்கள். அதன் மூலம் அத்தோழர்களுடன் அவர்கள் இராப் போசனம் செய்து கொள்ள முடிந்தது. நபிகள் (ஸல்) அவர்கள் கூறுவார்கள்: "இருவருக்குப் போதுமான உணவைக் கொண்டவர்கள் மூன்றாமவர் ஒருவரை எடுத்துக் கொள் ளட்டும். நால்வருக்குப் போதுமான உணவு இருந்தால் அவர் ஐந்தாமவரை அல்லது ஆறாமவரை எடுத்துக் கொள்ளட்டும்." ஆக, சிற் சிலரைத் தோழர்கள் அழைத்துச் செல்வார்கள். மீத மிருப்போரை நபிகளார் (ஸல்) அவர்கள் தமது வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். அவர்கள் அன்னாருடன் இராப் போசனம் செய்வர்.

ஹிஜ்றாவின் ஆரம்ப கட்டத்தில் நிலைமை இவ்வாறாக இருந்ததாகவே தோற்றுகிறது. என்றாலும், இறைவன் முஸ்லிம் களுக்குப் போதிய செல்வத்தைக் கொடுத்த பின்னர், அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வை தோழர்கள் மத்தியில் பகிர வேண்டிய தேவை இருக்கவில்லை.

அன்ஸார்களுள் அல்-குர்ரா (குர்ஆன் ஓதுவோர்) என வழங்கப்பெற்ற எழுபது பேர், அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித் துக் கூடிய அக்கறை செலுத்தி வந்தார்கள். (இந்த எழுபது பேரும் தான் பீர் மஊனாவில் வீர மரணம் எய்தியவர்கள்). இரவுகளை அவர்கள் குர்ஆன் ஓதுவதிலும், கற்பதிலும் கழிப் பார்கள். பகல் வேளைகளில் பள்ளி வாசலுக்குத் தண்ணீர்

கொண்டு வருவார்கள்; விறகு சேகரித்து விற்றுக் கிட்டும் பணத்தின் மூலம் உணவுப் பதார்த்தங்கள் வாங்கி அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுக்கும் ஏழைகளுக்கும் வழங்குவார்கள். முஹம்மத் இப்ன் மஸ்லமாவும், ஏனைய அன்ஸாரும், பேரீத்தம் பழங்கள் நன்கு பழுத்த பின்னர், அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுக்கும், ஏழைகளுக்கும் வழங்குவதற்காய்த் தாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குலை பேரீத்தம் பழங்களை வழங்க வேண்டுமென நபிகள் (ஸல்) அவர்களிடம் ஆலோசனை வழங்கினார்கள். அதனை அங்கீகரித்த நபிகளார், பள்ளிவாசலின் இரண்டு தூண்களுக்கிடையில் ஒரு கயிற்றைக் கட்டி விட்டார்கள். மக்கள் பழுத்த பேரீத்தம் பழக் குலைகளை அந்தக் கயிற்றில் தொங்க விடலானார்கள். சில சந்தர்ப்பங்களில் இருபதுக்கும் கூடிய பேரீத்தம் குலைகள் அங்கு தொங்கவிடப் பெற்றிருந்தன.

பேரீத்தம் குலைகளைப் பாதுகாத்து வருவார் முஆஸ் இப்ன் ஜபல் (ரலி). மற்றோர் அறிவிப்பின்படி நபிகள் (ஸல்) அவர்கள் தான், பேரீத்தம் குலைகளைத் தத்தம் தோட்டங்களிலிருந்து ஸதகாவாக அளிக்கும்படி மக்களைக் கோரியதாகவும் அதன் மூலம் அவர்களது மரங்களைப் பீடித்திருந்த ஒரு வியாதியை இறைவன் நீக்கி விடுவான் எனக் கூறியதாகவும் தெரிய வருகின்றது. மக்கள் அவ்வாறே செய்தார்கள்.

தரங்குறைந்த குலையொன்றனைத் தொங்கவிட்டமைக்காக ஒருவரை நபிகள் (ஸல்) அவர்கள் கடிந்து கொண்டார்கள்; ஸதகாவானது நல்ல தரத்தினதாக இருக்க வேண்டும் எனக் கூறினர் அன்னார். அல்-ஸம்ஹூதியின் ஓர் அறிவிப்பின்படி, மதீனாவில் நபிகள் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலில் பேரீத்தம் குலைகள் தொங்கவிடும் பழக்கம் ஹிஜ்ரி 2-ம் ஆண்டு வரை தொடர்ந்ததாகத் தெரிகின்றது.

## அஹ்ல்-அல்-ஸுப்பாஹ் பற்றியதெனக் கூறப்படும் குர்ஆன் வாசகங்கள்

அஹ்ல்-அல்-ஸுப்பாஹ் குறித்து அருளப் பெற்றன எனக் கூறப்படுகின்றது மேல்வரும் வாசகங்கள்:

*அல்லாஹ் தன் அடியார்களுக்கு உணவை விரிவு படுத்தினால் பூமியில் அவர்கள் அட்டூழியம் செய்வார்கள்; எனினும் தான் நாடிய அளவுக்கு (உணவு வசதிகளை) அவன் இறக்கி வைக்கின்றான் - நிச்சயமாக அவன் தன் அடியார்களைப் பற்றி நன்கு அறிகிறவன்; பார்க்கிறவன். (42:27)*

அல்-தபரீ, அபூ நுஐம் ஆகியோர் அம்ர் இப்ன் ஹரீஸ் வரை செல்லும் இஸ்னாத்கள் கொண்டு இந்த வாசகம் அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்து அருளப்பட்டது என்பர். என்றாலும் இந்த வாசகம் அருளப்பெற்றது மக்காவிலாகும். ஆகவே இது அவர்கள் குறித்ததாக இருக்க முடியாது.

*(தருமங்கள் என்பது) அல்லாஹ்வின் பாதையில் (தங்களை அர்ப்பணித்துத்) தடுத்து வைக்கப்பட்டுள்ள வறியவர்களுக்குரியதாகும். (பொருள் சம்பாதிப்பதற்காக) பூமியில் சுற்றி அலைய அவர்கள் சக்தி பெறமாட்டார்கள்; (அவர்கள் பிறரிடம் யாசிக்காமல்) பேணுதலாக இருப்பதனால் (அவர்களை) அறியாதவர், அவர்களைச் செல்வந்தர் என எண்ணிக் கொள்வார்; அவர்களுடைய (வறுமையின்) அடையாளத்தைக் கொண்டு அவர்களை நீர் அறிந்து கொள்வீர். மனிதர்களிடம் எதையும் அவர்கள் வருந்திக் கேட்கமாட்டார்கள்; (இத்தகையோருக்காக) நல்லதிலிருந்து எதனை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை முற்றும் அறிந்தவனாக இருக்கின்றான். (2:273)*

இப்ன் கஅப் அல்-குரளீ வரை செல்லும் இஸ்னாத் ஒன்றன்படி இப்ன் ஸஅத் கூறுவார் "அவர்கள் தான் அஹ்ல் அல்-ஸுப்பாஹ்". அல்-ஸஅதீ, முஜாஹித் ஆகியோர் வரை செல்லும் இஸ்னாத்கள் கொண்டு, வறுமைப்பட்ட முஹாஜிரூன் குறித்தே இது அருளப்பட்டதாகக் கூறுவார் அல்-தபரீ.

*காலையிலும் மாலையிலும் தங்களுடைய இறைவனை, அவனுடைய திருப் பொருத்தத்தை நாடியவர்*

*களாக (அழைத்து)ப் பிரார்த்தித்துக் கொண்டிருப் போரை (தூதரே!) நீர் விரட்டி விடாதீர் (6:52)*

*இந்த வாசகம் மக்காவில் அருளப்பட்டதாகவும், ஆகவே இது அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்து அருளப்பட்டதாக இருக்க இயலாது எனவும் கூறுவார் இப்ன் கஸீர். அல்-தபரீ யின் சில குறிப்புகள் இதனை ஏற்பனவாக உள்ளன.*

*(நபியே!) காலையிலும் மாலையிலும் தங்களுடைய இறைவனை (பிரார்த்தனை செய்து) அழைத்துக் கொண்டும் அவனுடைய திருமுகத்தை (திருப் பொருத்தத்தை) நாடியவர்களாகவும் இருப்பவர் களுடன் உம்மையும் நீர் பொறுமையுடன் கட்டுப் படுத்திக் கொள்வீராக! (18:28)*

*இந்த வாசகம் மக்காவில் அருளப்பட்டது. ஆக இது அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்து அருளப்பட்டதாக இருக்க முடியாது.*

*இன்னும் சிலரின் மீதும் (எவ்விதக் குற்றமும்) இல்லை. அவர்கள் எத்தகையோரென்றால் (போருக்குச் செல்ல) அவர்களுக்கு நீர் வாகனம் அளிப்பதற்காக (அதனைக் கேட்டு) உம்மிடம் அவர்கள் வந்த நேரத் தில் "எதன் மீது உங்களை நான் ஏற்றிச் செல்வே னோ, அத்தகைய (வாகனத்)தை நான் பெற்றுக் கொள்ளவில்லையே" என்று கூறினீர். (அப்பொழுது அல்லாஹ்வுடைய பாதையில்) அவர்கள் செலவு செய்கின்ற (பொருள் முதலிய)வற்றைப் பெற்றுக் கொள்ளவில்லையே என்ற கவலையால், தம் கண்கள் கண்ணீர் பொழிகின்ற நிலையில் அவர்கள் திரும்பிச் சென்றார்கள் (9:92)*

*இந்த வாசகம் அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்ததென்பார் அபூ நுஐம். என்றாலும் அல்-தபரீ, இப்ன் கஸீர் ஆகியோரின் அறிவிப்புகள் அவ்வாறு கூறவில்லை. பெரும்பாலான அறிவிப்புகள் பனூ மஸீனா கோத்திரத்தோரான, கண்ணீர் சிந்தி நின்ற ஏழு பேர் குறித்தே இது அருளப்பட்டதாகக் கூறுகின்றன.*

## அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்து எழுதிய வரலாற்றாசிரியர்கள்

*அஹ்ல் அல்-ஸுப்பாஹ் குறித்து எழுதிய ஆரம்ப வரலாற்றாசிரியர்களுள் ஒருவர் முஹம்மத் இப்ன் ஸஅத் (மறைவு ஹி.230). அவர் கூறியன அனைத்தும் அல்-வாகிதீயிடமிருந்து பெறப்பட்டன. என்றாலும் அல்-வாகிதீயின் மகாஸீயிலிருந்து இந்த அறிவிப்புகளை நாம் பெற்றுக் கொள்ள இயலவில்லை. பெரும்பாலும் அவரது மற்றொரு நூலான 'அல்-தபகாத்' திலிருந்து இவை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். அந்த நூல் கிடைப்பதாக இல்லை. இப்ன் ஸஅத் தனது தபகாத் அல்-குப்ராவில் வாகிதீயிடமிருந்து ஏராளமான அறிவிப்புக் களைத் தருகின்றார்.*

*எவ்வாறாயினும் அஹ்ல் அல்-ஸுப்பாஹ் மாத்திரம் குறித்து எழுதிய ஆரம்ப வரலாற்றாசிரியராக நான் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளவர் அபூ அப்த் அல்-ரஹ்மான் முஹம்மத் இப்ன் அல்-ஹுஸைன் அல்-ஸலமீ அல்-நீஸாபூரீ (மறைவு ஹி. 412). அவரது நூல் 'தாரீக் அஹ்ல் அல்-ஸுப் பாஹ்'. இதுவும் இப்போது கிடைப்பதாக இல்லை. அபூ நுஐம் தனது 'ஹில்யா அல்-அவ்லியாஅ'வின் அஹ்ல் அல்-ஸுப் பாஹ் குறித்த அதிகாரத்தில் தரும் விவரங்கள் அந்த நூலி லிருந்தே பெறப்பட்டிருக்க வேண்டும். அதனை அவர் பெயர் சுட்டிக் குறிப்பிடவில்லை என்றாலும், தனது நூலின் பிறிதோ ரிடத்தில் இந்த நூலிலிருந்து அறிவிப்புச் செய்துள்ளதாகக் கூறுவார் அவர். அஹ்ல் அல்-ஸுப்பாஹ்வுடன் தொடர்பு பட்ட அஹ்ல் அல்-கிப்லா எனும் குழுவினரது பெயர்கள் அகர வரிசையில் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கூறுவார் அபூ நுஐம். இது, சில அறிவிப்பாளர்கள் பிரதி செய்த போது இழைத் துள்ள தவறாகும்.*

*பின்னைய வரலாற்றாசிரியர்களுள் அமைந்தவர் தகீ அல்-தீன் அல்-ஸுப்கீ (மறைவு ஹி. 856). அவர், 'அல் துஹ்பா பீ அல் கலாம் அலா அஹ்ல் அல்-ஸுப்பாஹ்' எனும் பெயரில் நூல் ஒன்றனை எழுதினார். பிறிதொருவர் அல்-ஸம்ஹூதீ.*

*இவர் அஹ்ல் அல்-ஸுஃப்பாஹ் குறித்த தொகுப்பொன்றனை யாத்தார். அதில், ஹதீஸ், வரலாறு, புவியியல், சொல்லகராதிகள், மேலும் ஏனைய ஆக்கங்கள் அனைத்திலுமிருந்து, அஹ்ல் அல்-ஸுஃப்பாஹ் குறித்துக் கிட்டக் கூடிய விடயங்களை கோர்வை செய்து எடுத்தார் அவர்.*

*தொழுகையிலும், நோன்பிலும் தீவிர ஈடுபாடு கொண்டு, கடினமான, வலிமை மிக்க வாழ்வு வாழ்ந்த அஹ்ல் அல்-ஸுஃப்பாஹ் மீது இறைவன் அருள் பாலிப்பானாக. வல்லோனான இறைவன் மிக்க உண்மையையே கூறியுள்ளான்:*

> *(அவர்கள் பிறரிடம் யாசிக்காமல்) பேணுதலாக இருப்பதனால் (அவர்களை) அறியாதவர், அவர்களைச் செல்வந்தர் என எண்ணிக் கொள்வர்; அவர்களுடைய (வறுமையின்) அடையாளத்தைக் கொண்டு அவர்களை நீர் அறிந்து கொள்வீர். மனிதர்களிடம் எதையும் அவர்கள் வருந்திக் கேட்க மாட்டார்கள் (2:273)*

*முஸ்லிமல்லாத சமூகங்களில் வறுமையில் உழலும் மக்கள் செய்வனவற்றிற்கும் இதற்கும் இடையிலான பாரிய வித்தியாசங்கள்தான் எத்துணை! குழுக்கள் அமைத்து, கொள்ளை, கொலை முதலாய பாரிய குற்றச் செயல்கள் புரிந்து, சமூகத்தில் உறுதியும் பாதுகாப்பும் இல்லாமற் செய்யும் அவர்களது நடவடிக்கைகள் தான் என்னே! முஹம்மத் (ஸல்) அவர்களது போதனைகளுக்கும் ஜாஹிலிய்யாவின் போதனைகளுக்கும்; இறைவனின் வாழ்வு முறைக்கும், மானுடரின் வாழ்வு முறைக்கும் இடையிலான வித்தியாசம் இதுதான்.*

*அடுத்த அத்தியாயத்தில், இஸ்லாமிய சமூகம் தனது உன்னதமான, பூரணத்துவ அமைப்பை நிறுவிக் காட்டிய மதீனாவில் இஸ்லாம் ஏற்படுத்தி வைத்த இறுக்கமான பந்தங்கள் குறித்து விவரிப்பேன். இதிலிருந்து இஸ்லாமிய சமூகத்தில் வர்க்க பேதங்கள் தோற்றம் பெறாதிருக்கின்றமைக்கும், இஸ்லாமிய நெறியின் கீழ் செல்வந்தரும்-வறியவரும் தோளோடு தோள் நின்று உழைப்பதற்கும் ஆன பின்னணியை*

*நாம் உணர்ந்து கொள்ளலாகும். அது, விசுவாசியரிடையிலான சகோதரத்துவமும் பரஸ்பர ஆதரவும் ஆகும். இவையே மதீன சாசனத்தின் மூலப் பிரகடனமாகின்றன.*

X

# மதீன சாசனம் பிரகடனமாதல்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவில் குடி மக்கள் அனைவரிடையிலுமான உறவுகளை ஒழுங்கு படுத்தியமைத்து, அதனைப் பதிவு செய்து வைத்தார்கள். அது வரலாற்று ஆதாரங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. ஒவ்வொரு குழுவினரதும் கடமைப்பாடுகள் அவர்களது உரிமைகள், கடமைகள் என்பனவற்றை விவரிப்பதாக உள்ளது இந்த சாசனம். பழம் ஆதாரங்களில் இது அல்-கிதாப்[1] (நூல்), அல்-ஸஹீபா[2] (பத்திரம்) என வழங்கியது. நவீன ஆய்வாளர்கள் இதனை அல்-துஸ்தூர்[3] (யாப்பு / சாசனம்), அல்-வஸீகா[4] (ஆவணம்) என வழங்குவர்.

## சாசனம் அறிவிப்புச் செய்யப்பட்ட மூலாதாரங்கள்

சமகால ஆய்வாளர்கள் மதீனாவில் நபிகள் (ஸல்) அவர்கள் கொணர்ந்த சீர்திருத்தங்களைக் கற்பதற்கான அடிப்படை ஆதாரமாக இந்த சாசனத்தைக் கொள்வர்.[5] என்றாலும் எந்த ஓர் ஆய்வையும் ஆரம்பிக்கும் முன்னர் இந்த சாசனம் ஆதார பூர்வமானதா எனக் கண்டு கெள்ள வேண்டும். இது புனைந்து

---

1. الكتاب 2. الصحيفة 3. الدستور 4. الوثيقة

5. பேராசிரியர் ஸாலிஹ் அஹ்மத் அல்-அலீ, கலாநிதி அப்த்-அல்-அஸீஸ் அல்-தூரி, பேராசிரியர் R.B. ஸர்ஜன்ட் ஆகியோர் இந்த ஆவணம் குறித்து விவரமாக எழுதியுள்ளனர். மேலும் பலர் இது குறித்து எழுதியுள்ளவற்றை தனது The Collection of Political Documents எனும் நூலில் தொகுத்துத் தருவார் பேராசிரியர் முஹம்மத் ஹமீதுல்லாஹ்.

*கொள்ளப்பட்ட ஓர் ஆவணம் எனக் கருத்துத் தெரிவிப்பார் ஓர் ஆய்வாளர்.[6]*

*இந்த ஆவணங்களின் வரலாற்று முக்கியத்துவம் ஒரு புற மிருக்க, அவை நியாயவியல் முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் அமைந்துள்ளன. ஆகவே ஹதீஸ் வல்லுனர்களின் தரங்களுக் கியைய இவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதன் மூலம் இதன் பலம், பலவீனம் என்பனவற்றை நிர்ணயம் செய்து கொள்ளலாம். ஏனைய வரலாற்று நிகழ்வுகளின் பிரஸ்தாபம் போல இதனை நொய்ம்மையாக நோக்கல் தகாது. இந்த சாசனம் பற்றிய ஆரம்ப அறிவிப்புக் கிட்டுவது, முஹம்மத் இப்ன் இஸ்ஹாக் (மறைவு ஹி.151) மூலமாகும். என்றாலும் அவர் இதனை இஸ்னாத் ஏதும் இல்லாமலே அறிவித் துள்ளார். ஸய்யித் அல்-நாஸ், இப்ன் கஸீர் ஆகியோர் அவரி லிருந்தே அறிவிப்புச் செய்வதாகக் கூறினாலும் அவர்களும் இஸ்னாத் ஏதும் தராமல் விட்டுவிட்டார்கள். முஹாஜிரூன்-அன்ஸார் இடையிலான உறவுகள் குறித்த விஷயங்களை இப்ன் இஸ்ஹாக்கின் இஸ்னாத்துடன் பதிவு செய்துள்ளார் அல்-பைஹகீ. அதில் யூதர்களுடனான உறவுகள் பற்றிய பாகம் இணைக்கப்படவில்லை. ஆகவே அதே மூலத்திலிருந்துதான் இதனை அவர் பெற்றுக் கொண்டார் எனக் கூறுவதற்கில்லை. இப்ன் அபூ-க்ஹைஸமா[7] இந்த சாசனத்தை மேல்வரும் இஸ் னாத்துடன் அறிவிப்புச் செய்துள்ளதாகக் கூறுவார் இப்ன் ஸய்யித் அல்-நாஸ்: "அஹ்மத் இப்ன் க்ஹப்பாப் அபூ அல் வலீத் கூறினார்: ஈஸா-இப்ன்-யூஸுப் கூறினார்: தந்தையார் கூறினார்: பாட்டனார் கூறினார்: நபிகள் (ஸல்) அவர்கள் முஹாஜிரூனுக்கும் அன்ஸாருக்கும் இடையிலான ஓர் உடன் படிக்கையை எழுத்தில் பதிவு செய்தார்கள். அது இப்ன் இஸ் ஹாக் அறிவித்த சாசனத்தை ஒத்ததாக இருந்ததென உறுதி செய்தார்". எவ்வாறாயினும் இப்ன் அபூ-க்ஹைஸமாவின்*

*6. இவ்வாறு தான் கருத்துத் தெரிவிப்பார் பேராசிரியர் யூஸுஃப் அல்-இஷ்ஷ்* -(The Arab State and its Decline)

*7.* خيثمة

*தற்போது கிடைப்பதற்கரியதாய் விட்ட பாகத்தில் தான் அது பதிவாகி இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அந்த நூலின் எமக்குக் கிட்டியுள்ள பாகங்களில் இதனைக் கண்டு கொள்ள இயலவில்லை. இந்த ஆவணத்தை அபூ உபைத் அல்-காஸிம் இப்ன் ஸலாம் தனது 'கிதாப்-அல்-அம்வால்'லில் வேறோர் இஸ்னாத்துடன் அறிவிக்கின்றார்:"யஹ்யா இப்ன் அப்த்- அல் லாஹ் இப்ன் பாகீர், அப்த்-அல்லாஹ் இப்ன் ஸாலிஹ் ஆகி யோர் எனக்கு அறிவித்தனர்: லைஸ் இப்ன் ஸஅத் கூறினார்: உகைல் இப்ன் க்ஹாலித் கூறினார்: இப்ன் ஷிஹாப் கூறினார்: "இந்த ஒப்பந்தத்தை நபிகள் (ஸல்) அவர்கள் நிறுவியதாக நான் செவியுற்றேன்", எனக் கூறி அவர் அதனை விவரித்தார்".*

*'கிதாப் அல்-அம்வால்'லில் இந்த சாசனத்தை அல்-ஸுஹ்ரீ மூலம் அறிவிப்பார் இப்ன் ஸன்ஜவை.*

*இவ்வாறுதான் இந்த சாசனத்தின் முழுமையும் அறிவிக் கப்பெற்றுள்ளது. அறிவிப்புகள் அனைத்தும் ஒரே மாதிரி யானவையாகவே உள்ளன. வார்த்தை அமைப்புகளிலும், சொற்பிரயோகங்களிலும் சிற்சில வேறுபாடுகள் காணப் படினும் அதன் பொதுவான உள்ளடக்கத்தில் வேறுபாடுகள் காணப்படவில்லை.*

## *சாசனத்தின் ஆதாரபூர்வ தன்மை*

*நவீன ஆய்வாளர்களில் பலர், தமது ஆய்வுகளின் பிரதான அங்கமாக இந்த சாசனத்தையே கொண்டுள்ளனர். இது புனைந்து கட்டப்பட்ட ஒரு சாசனம் எனக் கூறுவார் பேரா சிரியர் யூஸுப் அல்-இஷ்ஷ்: "அதன் சட்டவாக்க முக்கியத் துவத்தின் மத்தியிலும் அது நியாயவியல் நூல்களிலோ, ஆதார்வ பூர்வ ஹதீஸ்களிலோ குறிப்பிடப் பெறவில்லை. இப்ன் இஸ்ஹாக் இதனை இஸ்னாத் இல்லாமலே அறிவிப்புச் செய்தார். அவரிடமிருந்தே இப்ன் ஸய்யித் அல்-நாஸ் அறி விப்புச் செய்தார். மேலும் அவர் கூறினார்: கஸீர் இப்ன் அப்த்- அல்லாஹ் இப்ன் அம்ர் - அல் முஸனீ தன் தந்தையாரிடமிருந் தும், பாட்டனாரிடமிருந்தும் அறிவித்ததாக. இப்ன் ஹிப்பான் அல்-புஸ்தீ கூறினார்: கஸீர் அல்-முஸனீ அவரது தந்தையாரிட*

மிருந்தும், பாட்டனாரிடமிருந்தும் புனைந்துரைக்கப்பட்ட ஒரு வாசகத்தை அறிவித்ததாக. வியப்பினை வெளிக்காட்டுவதற்கன்றி, அதனை ஒரு நூலில் உள்ளடக்குவதோ, அதிலிருந்து அறிவிப்புகள் செய்வதோ தகுமானது (ஹலால்) அல்ல.'' கஸீரின் அறிவிப்பிலேயே இப்ன் இஸ்ஹாக் தங்கியிருந்ததாகவும், அவர் இஸ்னாத்தை வலிந்து தவிர்த்துக் கொண்டுள்ளார் எனவும் பேராசிரியர் அல்-இஷ்ஷ் கூறுவார்.

இப்ன் இஸ்ஹாக் தவிர்த்து வேறு எவராலும் இந்த சாசனம் அறிவிப்புச் செய்யப்படவில்லை எனத் தான் கருதியமையாலேயே இத்தகையதொரு கருத்தை முன்வைத்துள்ளார் பேராசிரியர் அல்-இஷ்ஷ். இப்ன் ஸய்யித் அல்-நாஸ் அறிவிக்கும் கஸீர்அல்-முஸனீ மூலமான அபூ-க்ஹைஸமாவின் அறிவிப்புத் தவிர்ந்த வேறு எந்த ஓர் இஸ்னாத்தையும் அவரால் கண்டு கொள்ள இயலவில்லை. ஆனாலும் அல்-ஸுஹ்ரீ மூலமாக அபூ உபைத் அல்-காஸிம் இப்ன் ஸலாம் இந்த ஆவணம் குறித்துப் பேசுகின்றார். கஸீர் அல்-முஸனீயுடன் சம்பந்தப்பட்டிராத ஓர் அறிவிப்பாளர் வரிசையாகும் இது. இப்ன் இஸ்ஹாக், அல்-ஸுஹ்ரீயின் மிகப் பிரசித்தம் வாய்ந்த மாணவர் என்பதால், அவர் அல்-ஸுஹ்ரீயின் மூலமாக இந்த சாசனத்தை அறிவித்திருக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன - பைஹகீ, யூதர்களது விவகாரங்களை உள்ளடக்காமல், முஹாஜிரீன்களுக்கும், அன்ஸார்களுக்கும் இடையிலான விவகாரங்களை மட்டுமே அடக்கிய சாசனமாக, இப்ன் இஸ்ஹாக்கின் இஸ்னாத்துடன் அறிவிப்புச் செய்திருந்தாலும் கூட. யூதர்கள் சம்பந்தப்பட்ட அங்கங்களை இப்ன் இஸ்ஹாக் எந்த மூலத்திலிருந்து பெற்றுக் கொண்டார் என நாம் கூற இயலவில்லை. அல்-பைஹகீ கூறினார்: அபூ அப்த்-அல்லாஹ் அல்-ஹாபிழ் மூலம், அபூ அப்பாஸ் முஹம்மத் இப்ன் யஅகூப் மூலம், அஹ்மத் இப்ன் ஜப்பார் மூலம், யூனுஸ் இப்ன் புகைர் மூலம் இப்ன் இஸ்ஹாக் கூறினார்: உஸ்மான் இப்ன் முஹம்மத் இப்ன் அல்-முகீரா இப்ன் அல்-அக்ஹஸ் இப்ன் ஷுரைக் கூறினார்: "நான் இந்த ஆவணத்தை, அஸ்-ஸதகா சம்பந்தப்பட்ட ஆவணத்துடன் உமர் இப்ன் அல்-கத்தாபின் குடும்பத்திலிருந்து

பெற்றுக் கொண்டேன்". இந்த இஸ்னாத்தைப் பொறுத்து ஹதீஸ், ளயீப் ஆகின்றது. ஏனெனில் ஏதோ ஒரு வகையில் ளயீப் ஆன மனிதர்களை இந்த இஸ்னாத் கொண்டுள்ளது. உதாரணமாக உஸ்மான் - இவர் நம்பிக்கையானவர் என்றாலும் சில சந்தர்ப்பங்களில் குழப்பங்களுக்கு ஆளாகித் தவறுகள் இழைத்து விடுவார். யூனுஸ் இப்ன் புகைர் தவறுகள் இழைப் பவராக அறியப்பட்டிருந்தார். அதன் பலவீனங்களின் மத்தி யிலும் இந்த அறிவிப்பு தீவிர கவனத்தில் கொள்ளப்பட வேண் டும். பேராசிரியர் இஷ்ஷ் தனது வாதங்களுக்கு ஆதாரமாகக் கொண்ட தளங்களை அறிவிப்பின் வாசகம் முற்றாகத் தகர்த்து விடுகின்றது. அதன் வாசகங்கள் முழுமையையும் ஹதீஸ் நூல் கள் அறிவிப்புச் செய்யவில்லை என்பதனால் இந்த ஆவணம் புனைந்து கட்டப்பட்டதெனக் கூறிவிட முடியாது. ஹதீஸ் நூல்கள் அதன் பல வாசகங்களை அறிவிப்புச் செய்துள்ள மையை நாம் பின்னர் காண்போம்.

ஆக இந்த ஆவணம் புனைந்து கட்டப்பட்டதெனத் தீர்ப் பளிப்பது பொறுப்பில்லாத் தனமாகும் என்பது தெளிவாகின் றது. எவ்வாறாயினும் சாசனத்தை முற்று முழுதாக, ஆதார பூர்வமான ஸஹீஹ் தரத்துக்கு நாம் கொண்டு சென்றுவிட முடியாது. இப்ன் இஸ்ஹாக் தனது ஸீறாவில் இதனை இஸ் னாத் இல்லாமல் அறிவித்துள்ளார். ஆக, அவரது அறிவிப்பு ளயீப் ஆக அமைகின்றது. அல்-பைஹகீ, இப்ன் இஸ்ஹாக் கிடமிருந்து ஸஅத் இப்ன் அல்-முன்ஸிர்ரை உள்ளடக்கிய இஸ்னாத்துடன் அறிவிப்பார். அல்-முன்ஸிர் 'மக்பூல்' (ஏற்கப்படக்கூடியவர்) மட்டுமே ஆவார். இப்ன் அபூ-க்ஹைஸமா, புனைந்துரை செய்பவர் என அறியப்பட்டிருந்த கஸீர் இப்ன் அப்த்-அல்லாஹ் இப்ன் அம்ர் முஸனீ மூலம் அறிவித்துள்ளார். அபூ உபைத் அல்-காஸிம் இப்ன் ஸலாம், அல்-ஸுஹ்ரீ வரை மட்டும் செல்லும் ஒரு 'முன்கத்இ' இஸ் னாத்துடன் இதனை அறிவிப்பார். ஸுஹ்ரீ ஒரு கனிஷ்ட தாபி யூன் மட்டுமே. எனவே அவரது முர்ஸல் ஹதீஸை ஆதாரமாக ஏற்றுக்கொள்தல் இயலாது.

*எவ்வாறாயினும், சாசனத்தின் சில வாசகங்கள் ஹதீஸ் நூல்களில் பதிவாகியுள்ளமையை நாம் காண முடிகின்றது. சில அல்-புஹாரியாலும், முஸ்லிமாலும் அறிவிக்கப் பெற்றுள் ளன. இவை ஆதாரபூர்வமான ஹதீஸ்களுள் அடங்குகின்றன. நியாயவியலாளர்கள் அவற்றைத் தமது தீர்ப்புகளுக்கு ஆதாரங் களாகக் கொண்டுள்ளனர். சில வாசகங்கள், இமாம் அஹ் மதின் முஸ்னத், அபூ தாவூதின் ஸுனன் ஆகியவற்றிலும், இப்ன் மாஜா, திர்மிதீ ஆகியோராலும் அறிவிக்கப்பட்டுள்ளன. முழுமையான சாசனம் அறிவிப்புச் செய்யப்பட்ட அறிவிப் பாளர் வரிசையினின்றும் மாற்றமான வேறு ஆதாரங்களுடன் அறிவிப்புச் செய்யப்பட்டன இவை. ஆதாரபூர்வமான ஹதீஸ் தொகுப்புகளில் அறிவிப்புச் செய்யப்பட்ட சில பாகங்கள் தவிர்த்து, சாசனத்தின் ஏனைய பகுதிகள் ஷரீஆ தீர்ப்புகள் வழங்க ஏற்புடைத்தானவையல்ல என நாம் கொண்டாலும் கூட, வரலாற்றுக் கற்பிதங்களுக்கு அவை போதிய வலு அளிப்பனவாகவே உள்ளன. நியாயவியல் தீர்வுகள் அளிக்கும் அளவு உயர்ந்த தர ஆதாரபூர்வ தன்மையை அது அவாவு வதில்லை. அத்துடன் ஏராளமான அறிவிப்பாளர் வரிசை களுடன் இந்த சாசனம் அறிவிக்கப் பெற்றிருக்கின்றமையைக் காணலாம். இவை அனைத்தும் கூட்டிணைந்து போதிய வலிமையை அதற்குக் கொடுக்கின்றன. நபிகள் (ஸல்) அவர் களது ஸீறாவை எழுதிய ஆரம்ப கிரந்த கர்த்தாக்களுள்ளான மிகச் சிறந்த அறிஞர்களுள் ஒருவர் அல்-ஸுஹ்ரீ. ஸீறாவின் மிக முக்கிய ஆக்கங்களும், வரலாற்று மூலாதாரங்களும் எழுத் தில் பதியப்பட்ட நபிகளாரின் சமாதான உடன்படிக்கை யையும், முஹாஜிரூன்-அன்ஸார்களுக்கிடையில் எழுதப்பட்ட ஒப்பந்தத்தையும் குறிப்பிடுகின்றன.*

*சாசனத்தின் பாணி அதன் ஆதாரபூர்வ தன்மையை அதி கரிக்கின்றது. கலாநிதி ஸாலிஹ் அல்-அலீ கூறுவார்: "அதன் பந்திகள் குறுகிய, எளிய பதங்களால் ஆனவை. குழறுபடிகள் இல்லாத வாசகங்கள் அவை. அதிகமான மீட்டல்கள் உள்ளன. அதில் உள்ள சொல் வழக்காறுகள், வார்த்தைப் பிரயோகங் கள் முதலியன நபிகள் (ஸல்) அவர்களின் காலத்தில் சாதா*

ரணமாகப் புழக்கத்தில் இருந்தவை. அக்கால கட்டம் குறித்து ஆழ்ந்த அறிவு இல்லாதவர்க்கு அவை புரிந்து கொள்ளச் சிரமமாய் விட்டன. இந்த சாசனத்தில் எந்த ஒரு தனி மனிதரையோ, குழுவினரையோ புகழும் அல்லது இகழும் வாசகங்களாக எவையும் இல்லை. ஆக, நாம் இந்த சாசனம் ஆதார பூர்வமானதெனக் கூறலாம். இது ஏதும் புனைந்துரையல்ல". இந்த சாசனத்தின் பாணிக்கும், நபிகள் (ஸல்) அவர்கள் சொல்ல எழுத்தில் வடிக்கப்பட்ட ஏனைய ஆவணங்களது பாணிக்கும் இடையில் காணப்படும் ஒத்த தன்மைகளும் இது ஆதாரபூர்வமான ஓர் ஆவணம் என்பதை உறுதி செய்கின்றன.

## ஆவணம் எழுதப்பட்ட காலம்

ஆவணம் ஆரம்பத்தில் இரண்டு பாகங்களில் ஆனதாக இருந்து பின்னர் வரலாற்றாசிரியர்கள் அவற்றை ஒன்றாக்கி அமைத்திருக்கலாம் எனக் கூறத் தோற்றுகின்றது. ஒன்று யூதர்களுடன் நபிகளாரின் சமாதான உடன்படிக்கையாக இருந்தது. அடுத்தது முஹாஜிரூன் - அன்ஸார் ஆகிய இரு சாராரான முஸ்லிம்களது கடப்பாடுகள், உரிமைகள், கடமைகள் என்பன குறித்ததாக அமைந்தது.

யூதர்களுடனான சமாதான ஒப்பந்த ஆவணம் பத்ர் யுத்தத்துக்கு முன்னரும், முஹாஜிரூன்-அன்ஸார் சம்பந்தப்பட்ட ஆவணம் பத்ர் யுத்தத்திற்குப் பின்னரும் எழுதப்பட்டன என்றே கூறலாம் போலத் தெரிகின்றது. யூதர்களுடனான சமாதான ஒப்பந்தம் நபிகள் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்து சேர்ந்த வேளையில் எழுதப்பட்டது என்றே மூல ஆதாரங்கள் கூறுகின்றன. அபூ உபைத் அல்-காஸிம் இப்ன் ஸலாம் கூறினார்: "இந்த ஆவணம் இரண்டு நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது: இஸ்லாம் வலிமை பெறு முன்னர் அல்லாஹ்வின் தூதர் மதீனாவுக்கு வருகை தந்தமை; வேதமளிக்கப்பட்ட மக்களிடமிருந்து ஜிஸ்யா அறவிடும்படி அன்னார் கட்டளையிடப்பட்டமைக்கு முன்னைய நிலைமை." இஸ்லாம் பத்ர் யுத்தத்தின் பின்னர் பலம் வாய்ந்ததாக அமைந்தது. அல்-பலதூரி கூறுவார்: "அல்லாஹ்வின் தூதர் அவர்கள் மதீனா வந்த போது,

*தமக்கும் யூதர்களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஒன்றனைச் செய்து, அதனை எழுத்தில் ஆவணப்படுத்தி வைத்தனர் என்று கூறப்பட்டது. யூதர்கள், தனது எதிரிகளுக்குத் துணை செய்தல் கூடாது எனவும், ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துத் தனக்கு ஆதரவாக நின்று அவர்கள் போராட வேண்டும் எனவும் அன்னார் நியமம் செய்தார்கள். அன்னார் அஹ்ல் அல்-திம்மா[8]வுக்கு எதிராக யுத்தம் செய்வதில்லை என்றும் தீர்மானமாயிற்று. ஆக, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) யாருடனும் யுத்தம் புரியவில்லை. அன்னாரை யாரும் யுத்தத்துக்குத் தூண்டவும் இல்லை. அல்லாஹ் அன்னாருக்கு அறிவுறுத்தல் செய்யும் வரை அன்னார் எந்த ஒரு படையணியையும் அனுப்பி வைக்கவில்லை: 'போர் தொடுக்கப்பட்டோருக்கு (ஓரிறை நம்பிக்கையாளருக்கு) நிச்சயமாக அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த நிராகரிப்பாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன்' (22:39). அன்னார் முதலில் அனுப்பிய படையணி ஹம்ஸா இப்ன்-அல் முத்தலிபின் தலைமையில் அனுப்பப்பட்டது."*

இவ்வாறாக அல்-பலதூரி, யூதர்களுடனான சமாதான ஒப்பந்தம் ஆரம்ப படையணியினர் அனுப்பப்படும் முன்னர் எழுதப்பட்டதாக விளக்குகின்றார். ஹிஜ்ரி முதலாம் ஆண்டு ரமழான் மாதத்தில் - பத்ர் யுத்தத்துக்கு ஒரு வருட காலமளவு முன்னர் - ஹம்ஸா தலைமையிலான படையணி அனுப்பப்பட்டது என்பது நன்கு தெரிந்ததே. வேறோரிடத்தில் பனூ கைனுகாக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் குறித்து உரையாடும் வேளை அல்-பலதூரி கூறுவார்: *"இந்த கஸ்வா[9]வுக்கான காரணம் என்னவென்றால், நபிகள் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த வேளை அன்னார் யூதர்களுடன் ஒரு சமாதான ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அது எழுத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது. அன்னார் பத்ர் யுத்தத்தை*

---

8. أهل الذمة

9. غزوة

வென்று, காயங்கள் ஏதும் இன்றி, வெற்றிப் பெருமிதத்துடன் மதீனாவுக்கு வந்த வேளை யூதர்கள் பகைமை பூண்டவர்களாய் ஒப்பந்தத்தை முறித்து விட்டனர்.'' ஆக, யூதர்களுடனான ஒப் பந்தம் பத்ருக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்டது என்பதில் அல்-பலதூரி உறுதியாக உள்ளார்.

அல்-தபரீ கூறுவார்: பத்ரிலிருந்து திரும்பிய பின்னர் நபிகள் (ஸல்) அவர்கள் மதீனாவில் தங்கியிருந்தார்கள். மதீனா வந்து சேர்ந்த வேளை அன்னார் யூதர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். அதன் பிரகாரம் அன்னாருக்கு எதிராக அவர்கள் யாரையும் ஆதரிக்கக் கூடாது என்றும், மதீனாவுக்கு எதிராக யாரும் எதிரிகள் படையெடுத்து வரக் கூடுமாயின், அன்னாரை அவர்கள் ஆதரித்து நிற்க வேண்டும் என்றும் நியதியாகியிருந்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறைஷியரின் சிலை வணக்கஸ்தர்கள் சிலரைக் கொன்று போட்டதுடன் யூதர்கள் பொறாமையும், பகைமையும் பூண் டவர்களாய் ஒப்பந்தத்தை முறித்து விட்டனர்.'' ஆக, அல் -தபரீ யின் வாசகங்கள், யூதர்களுடனான ஒப்பந்தம், நபிகளார் மதீனாவை வந்து சேர்ந்ததுடன், பத்ர் யுத்தத்துக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்டது என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக அமைந்துள்ளது.

அபூ தாவூத் தனது ஸுனனில் செய்யும் அறிவிப்பின்படி - கஅப் இப்ன் அல்-அஷ்ரப் கொல்லப்பட்ட பின்னர் அது குறித்து யூதர்களும், முஷ்ரிகூனும் நபிகள் (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள் - "நபிகள் (ஸல்) அவர்கள் தமக்கும் அவர் களுக்கும் இடையில் ஓர் ஆவணத்தைத் தயாரித்துக் கொள்ள வருமாறு அழைத்தார்கள். பின்னைய காலங்களில் அந்த ஆவணத்தை அவர்கள் மேற்கோள் காட்டக் கூடுமாயிருக்கும். ஆக, நபிகள் (ஸல்) அவர்களுக்கும், தனக்கும், பொதுப்பட முஸ் லிம்களுக்கும் இடையிலான ஓர் ஒப்பந்தத்தை எழுதினார்கள்''. கஅப் இப்ன் அல்-அஷ்ரப் பத்ரின் பின்னர்தான் கொல்லப்பட் டிருந்தார். ஆகவே வரலாற்று ரீதியான அறிவிப்புக்களை இந்த நிகழ்வுடன் இணைத்துக் காண வேண்டியுள்ளது. ஹதீஸ்

வல்லுனர்கள் விதித்துள்ள நியதிகளின்படி, நாம் முன்னர் கண்ட வரலாற்றாசிரியர்களின் அறிவிப்புகளை விட இந்த அறிவிப்பு வலுவானதாக உள்ளது. இவற்றை நாம் சமனப் படுத்த முடியுமாயிருப்பதால் ஏனைய வரலாற்று அறிவிப் புகள் அனைத்தையும் நிராகரிக்க வேண்டிய அவசியம் இல் லை. ஏனெனில் கஅப் இப்ன் அல்-அஷ்ரபின் கொலையின் கார ணமாக யூதர்களும், முஷ்ரிகூனும் கொண்டிருந்த பீதியைத் தணியச் செய்து, அவர்களுக்குரிய பாதுகாப்பினை உத்தர வாதம் செய்யும் வகையில் ஆவணம் மீளவும் கைச்சாத்திடப் பட்டிருக்கலாம்.

அபூதாவூதிலிருந்தும் வேறான ஓர் அறிவிப்பாளர் வரிசை கொண்டு, அல்-பைஹகீ கூடிய விவரங்களுடன் பின்வரும் அறிவிப்பினைச் செய்கின்றார்: "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பின்த்-அல்-ஹாரிஸ்ஸின் இல்லத்தில் பேரீத்தம் பழ மரத்தின் கீழ் இந்த ஆவணத்தை எழுதச் செய்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது மறைவின் பின்னர் இந்த ஆவணம் அலீ இப்ன் அபீதாலிப்பின் பொறுப்பில் இருந்தது."

முஹாஜிரூன்களுக்கும் அன்ஸார்களுக்கும் இடையிலான ஆவணம், யூதர்களுடனான ஒப்பந்த ஆவணம் எழுதப்பட்ட பின்னர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு வரையப்பட்டது. இரண் டாம் ஆண்டின் நிகழ்வுகளில் ஒன்றாக அல்-தபரீ கூறுவார்: "இந்த ஆண்டில் நபிகள் (ஸல்) அவர்கள் ஆவணத்தை எழுதச் செய்து கொண்டார்கள். அது அன்னாரின் வாளோடு இணைக்கப்பட்டிருந்தது." அந்த வாளின் பெயர் தூ அல்-பிகார்[10]. அது பத்ர் யுத்தத்தில் கிட்டிய யுத்தப் பொருட்களில் ஒன்றாகும்.

வாளோடு இணைக்கப்பட்டிருந்த இந்த மஆகில்[11], இப்ன் ஸஅத் கூறுவது போல, முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடை யிலான ஆவணத்தின் வாசகங்களாகும். "அப்த்-அல்லாஹ்

10. ذو الفقار

11. المعاقل

இப்ன் மூஸா எமக்குக் கூறினார்: இஸ்ராயீல் அவருக்குக் கூறினார்: "ஜாபிரிலிருந்து - ஆமிரிலிருந்து: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது வாள் தூ அல்-பிகாரிலிருந்து நான் வாசித்தேன். விசுவாசியர் அனைவரும் இரத்த ஈட்டுப் பணம் செலுத்த வேண்டும். இஸ்லாத்தில் எவரும் துணையின்றி கை விடப்பட்டவராக இருக்கக் கூடாது. ஒரு காபிருக்குப் பிரதி யாக எந்த ஒரு முஸ்லிமும் கொல்லப்படக் கூடாது." பின்னர் வாளையும், ஆவணத்தையும் அலீ வைத்திருந்தார். ஒரு சந்தர்ப் பத்தில் அபூ ஜுஹைபா, அலீயிடம் ஆவணம் குறித்துக் கேட் டார். இரண்டாம் சந்தர்ப்பத்தில் அல்-அஷ்தர் வினவினார். அவர்களுக்கு ஆவணத்தின் கருத்துக்களை அல்லது அதி லிருந்து மேற்கோள் காட்டிக் கூறிய அலீ (ரலி), தனது பிரசங் கங்களில் ஒன்றில் அதன் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

உதாரணமாக அலீ கூறினார்: "நபிகளாரிடமிருந்து குர் ஆனும் இந்த ஆவணத்தில் உள்ளதும் தவிர வேறு எதனையும் எழுத்தில் வடிக்கவில்லை." அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஆஇர் மலையிலிருந்து இன்னின்ன இடம் வரை பாதுகாப்பான ஒரு பிரதேசமாக இருக்கும். இங்கு மதவிரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர், அல்லது பாவ காரியங்கள் இழைப்போர், அல்லது அத்தகு ஒரு விரோதிக்குத் தஞ்சம் வழங்குவோர் அல்லாஹ்வினதும், வானவர்களதும், எல்லா மக்களதும் சாபத்துக்குள்ளாவார். அவர் கடமையாக நிறைவேற்றியனவும், மேலதிக நன்மைகள் கருதிச் செய்தன வுமான நன்மைகள், தொழுகைகள் எவையும் ஏற்கப்பட மாட் டாது."

மேலும் அலீ (ரலி), காயங்களுக்குப் பிரதியாகக் கொடுபட வேண்டிய ஒட்டகைகளின் தகைமைகள் - வயதுகள் - அந்த ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டதாகக் கூறினார். ஒரு சந்தர்ப் பத்தில் அவர் கூறினார்: "ஒரு காபிருக்குப் பிரதியாக ஒரு முஸ்லிம் கொல்லப்படலாகாது. ஓர் ஒப்பந்தம் அமுலில் இருக்கும் காலம் வரை ஒப்பந்தத்தில் உள்ள ஒரு சாரார் கொல் லப்பட முடியாது." இரத்த ஈட்டுப் பணம், கைதிகள் விடுவிப்

*புப் பணம் எனும் வாசகங்களும் இந்த ஆவணத்தில் இருந்தாக அவர் குறிப்பிட்டார். அலீ (ரலி)யின் தோழர்கள் அந்த ஆவ ணத்தில் வாசித்தார்கள்: "இப்றாஹீம் மக்காவைப் புனிதமாக்கி வைத்தார். நான் இரண்டு ஹர்ரா (கருநிறக் குன்றுகளு)க் கிடையிலான மதீனாவின் பிரதேசங்களைப் புனிதமாக்கி வைத்துள்ளேன். இங்கு விளையும் தாவரங்களை யாரும் பிடுங்க மாட்டார்; இங்கு காணும் விலங்குகளை யாரும் வேட்டை யாட மாட்டார்; இங்கு கண்டெடுக்கப்படக்கூடிய எந்த ஒரு பொருளையும் பகிரங்கமான அறிவிப்புச் செய்யாமல் எவரும் வைத்துக்கொள்ள மாட்டார்; இங்கு நாம் மரங்கள் எதனையும் வெட்டக் கூடாது - தனது ஒட்டகைகளுக்குத் தீவனமாக மட் டும் தவிர. யுத்த ஆயுதங்கள் எதனையும் இங்கு தரித்திருத்தல் கூடாது."*

*ஆவணத்தில் கூறப்பட்டனவற்றை அவ்வாறே ஒத்தனவாக உள்ளன மேற்கண்ட வாசகங்கள். முஸ்லிம்கள் அனைவரும் - முஹாஜிரூனும் அன்ஸாரும் - கடைப்பிடிக்க வேண்டியன குறித்து ஆவணம் கூறும் பெரும்பாலான அம்சங்களை இவை உள்ளடக்குகின்றன. என்றாலும் யூதர்களுடனான சமாதான ஒப்பந்தத்தின் அம்சங்கள் குறித்து இவை எதனையும் குறிப் பதாக இல்லை. ஆக, ஆவணம் இரண்டு ஒப்பந்தங்களைத் தன்னுள் கொண்டிருந்ததாகத் தோற்றுகின்றது. எனவே, நபிகளாரின் வாளுக்கு இணைக்கப்பட்டிருந்து பின்னர் அலீ யின் கரங்களைக் கிட்டிய ஆவணமானது முஹாஜிரூன்- அன் ஸார்க்கிடையிலான ஆவணமே என்பதும் புலனாகின்றது.*

*முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான ஆவணத்தின் வாசகங்களோடு இயைந்த வாசகங்களை நபிகள் (ஸல்) எழு திய வேறு ஆவணங்களிலும் கண்டுகொள்ளக் கூடுகின்றமை குறிப்பிடத்தக்கதொரு விஷயம். உதாரணமாக அம்ர் இப்ன் ஹஸம் அறிவிப்புச் செய்வதன் பிரகாரம் நபிகள் (ஸல்) அவர் கள் அல்-யமன் மக்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் மேல்வரும் வாசகங்களும் அடங்கியிருந்ததன: "தக்க காரணங் களின்றி விசுவாசியருள் ஒருவரைக் கொலை செய்யக்கூடிய எவரும், கொல்லப்பட்டவரின் அடுத்த உறவினர் இரத்த*

*ஈட்டுப் பணத்துடன் திருப்தி கண்டாலேயொழிய, பதில் தாக்குதலுக்கு உள்ளாவார்.” இக்கடிதம் ஆவணம் எழுதப் பட்ட பின்னர் அனுப்பப் பெற்றது.*

*மக்கா விடுதலை செய்யப்பட்ட தினம் நபிகளார் கூறிய தாக அறிவிக்கப்பட்டுள்ளது: “ஒரு காபிருக்குப் பகரமாக ஒரு முஸ்லிம் கொலை செய்யப்படலாகாது.” இந்த வாசகங்கள் எல்லாம் ஆவணம் எழுதப்பட்டதன் பின்னைய காலங்களில் எழுதப்பட்ட கடிதங்களின்ஒரு தொகுப்பாகப் பின்னர் ஆவ ணத்துடன் இணைக்கப்பட்டதெனக் கூறுவதாகாது. நபிகளார் (ஸல்) அவர்கள் தமது ஆவணத்தின் அம்சங்கள் சிலவற்றைத் தமது கடிதங்களில் குறிப்பிடவில்லை எனக் கூறுவதற்கு ஆதாரங்கள் ஏதும் இல்லை. ‘மஆகில்’ சம்பந்தப்பட்ட ஆவ ணத்தில் யூதர்கள் சம்பந்தமான எந்த ஓர் அங்கமும் இல்லாமை யை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆக, அந்த ஆவண மானது யூதர்கள் சம்பந்தப்பட்ட ஆவணத்திலிருந்தும் வேறு பட்டது என்பது புலனாகும். இதனை ஆதரிப்பதாக உள்ளது அனஸ் இப்ன் மாலிக்கின் ஒரு ஹதீஸ்: “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அனஸ் இப்ன் மாலிக்கின் இல்லத்தில் முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான ஒரு கூட்டு ஒப்பந்தத் தைச் செய்து கொண்டார்கள்.” இந்த கூட்டு ஒப்பந்தத்தின் போது யூதர்களின் பிரசன்னம் குறித்து அனஸ் எதுவும் கூறவில்லை.*

*இதற்கு ஆதரவான மற்றொரு ஹதீஸ், அம்ர் இப்ன் ஷுஐப், தன் தந்தையாரிடமிருந்து - பாட்டனாரிடமிருந்து அறிவிப்புச் செய்தது: “நபிகள் (ஸல்) அவர்கள் முஹாஜிரூன் - அன்ஸார்க் கிடையில் ஓர் ஆவணத்தை எழுதச் செய்தார்கள். அதில் அவர்கள் இரத்த ஈட்டுப் பணம் செலுத்த வேண்டும்; தமது கைதிகளைக் கருணையுடன் விடுவிக்க வேண்டும்; முஸ்லிம்களிடையே சமாதானத்தை நிலை நிறுத்த வேண்டும் என்பன கூறப்பெற்றிருந்தன.” இந்த ஆவணத்தில் யூதர்கள் குறிக்கப் பெறவில்லை. இதுவே, அல்-பைஹகீ, முஹாஜிரூன் - அன்ஸார் சம்பந்தப்பட்ட அங்கங்களை இப்ன் இஸ்ஹாக்கின்*

இஸ்னாத் தோடு அடையாளம் காட்டுவதன் மூலம் ஆதரிக்கப் பெறுவது. இதில் யூதர்கள் பற்றிய பிரஸ்தாபம் எதுவும் இல்லை. இப்ன் இஸ்ஹாக்கிலிருந்து இப்ன் ஹிஷாம் அறிவித்த அங்கங்களுடன் இது சமானமாக உள்ளது.

நான் இதுவரை காட்டிய அறிவிப்புக்கள் எல்லாம் பெரும் பாலும் இரண்டு வெவ்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகி யுள்ளன எனக் கொள்ள வைக்கின்றன. முதலாவது, யூதர்களுட னான உறவுகள் பற்றியது. அது நபிகளார் மதீனா வந்து சேர்ந் ததும் - பத்ர் யுத்தத்துக்கு முன்னர் - செய்து கொள்ளப்பட்டது. இரண்டாவது, முஹாஜிரூன் - அன்ஸார் கூட்டு ஒப்பந்தம் சம்பந்தப்பட்டது. இது பத்ரின் பின்னர் எழுதப்பட்டது. வர லாற்றாசிரியர்கள், பின்னர் இரண்டையும் ஒரே ஆவணமாக இணைத்துக் கண்டுள்ளனர்.

## முஹாஜிரூன் - அன்ஸார் இடையிலும், யூதர்களுடனுமான நபிகள் (ஸல்) அவர்களின் ஆவணம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

ஆவணத்தின் வாசகங்கள்:

1) இறைவனின் தூதரான முஹம்மதுக்கும், விசுவாசிகளுக்கும், குறைஷிய-யஸ்ரிப் முஸ்லிம்களுக்கும், அவர்களைப் பின் தொடர்ந்தோர்க்கும், அவர்களோடு இணைந்து கொண் டோர்க்கும், அவர்களோடு இணைந்து போராடியோர்க்கும் இடையிலான ஓர் ஆவணம் இது.

2) அவர்கள் எல்லா மனிதர்களிலும் வேறாக அமைந்த தனி யொரு சமூகம் (உம்மா) ஆவர்.

3) குறைஷ் முஹாஜிரூன் தற்போதைய தமது வழக்கப்படி தமது எண்ணிக்கைக்குள்ளாக இரத்த ஈட்டுப் பணம் செலுத்துவார் கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என் பவற்றுக்கியையத் தமது கைதிகளை விடுதலை செய்து கொள் வார்கள்.

*4) பனூ அவ்ப், தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ்வொரு பகுதியின ரும் கைதிகளை விடுதலை செய்து கொள்வார்கள்.*

*5) பனூ அல்-ஹாரிஸ் (இப்ன் அல்-கஸ்ரஜ்) தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற் றுக்கியைய ஒவ்வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள்வார்கள்.*

*6) பனூ ஸாஇதா, தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட் டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொது வான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ்வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள்வார்கள்.*

*7) பனூ ஜுஷம், தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ் வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள் வார்கள்.*

*8) பனூ அல்-நஜ்ஜார், தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ்வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள்வார்கள்.*

*9) பனூ அம்ர் இப்ன்-அவ்ப், தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ் வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள் வார்கள்.*

*10) பனூ அல்-நபீத், தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ்*

*வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள் வார்கள்.*

*11) பனூ அல்-அவ்ஸ், தற்போதைய தமது வழக்கப்படி இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்; விசுவாசியர்க்குப் பொதுவான இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியைய ஒவ் வொரு பகுதியினரும் கைதிகளை விடுதலை செய்து கொள் வார்கள்.*

*12) விசுவாசியர் தம்மில் யாருக்கும் இரக்கத்துடன் ஈட்டுப் பணமோ, இரத்த ஈட்டுப் பணமோ செலுத்தாது கைவிட்டு விட மாட்டார்கள்.*

*12 ஆ) மற்றொரு முஸ்லிமின் விடுவிக்கப்பட்ட அடிமை யை அவருக்கு எதிராக தனக்குச் சார்பாகக் கொள்ளமாட்டார்.*

*13) இறையச்சம் கொண்ட விசுவாசியர், குழப்பங்கள் உண் டாக்குவோர்க்கும் அநீதி, தீங்குகள், பகைமை, விசுவாசியர் மத்தியில் சீரழிவு ஆகியன இழைப்போர்க்கும் எதிராக நிற்பார் கள். அவர்களுள் ஒருவரது மகனாக இருப்பினும் கூட, அனை வரது கரங்களும் அன்னவர்க்கு எதிராக விளங்கும்.*

*14) அவிசுவாசியர் ஒருவரின் சார்பாக, விசுவாசியொருவர், மற்றொரு விசுவாசியைக் கொல்ல மாட்டார்; விசுவாசியொரு வருக்கு எதிராக அவிசுவாசியர்க்கு உதவவும் மாட்டார்.*

*15) இறைவனின் பாதுகாப்பு சர்வவியாபகமானது. அவர்களில் மிகக் குறைந்த நிலையில் உள்ளவர் அவர்கள் சார்பாக, புதி யவர் ஒருவருக்குப் பாதுகாப்பு அளிக்கலாம். ஏனைய அனை வரும் தவிர்ந்தவர்களாய் விசுவாசியர் ஒருவருக்கு ஒருவர் நண் பரும், பாதுகாவலரும் ஆவார்.*

*16) யூதர்களுள் எம்மைப் பின்பற்றுவோர் உதவி செய்யப்படு வார்கள்; சமத்துவம் காட்டப் பெறுவார்கள். அவர் தவறிழைக் கப்பட மாட்டார்; அவரது எதிரிகள் உதவி செய்யப்பட மாட் டார்கள்.*

17) விசுவாசியரிடையிலான சமாதானம் பிரித்துக் காண முடியாதது. இறைவனின் பாதையில் விசுவாசிகள் போராடும் போது சமாதானம் செய்து கொள்தல் இயலாது. நியதிகள் நியாயமானவையாகவும், அனைவர்க்கும் சமானமானவை யாகவும் இருக்க வேண்டும்.

18) எந்தவொரு தாக்குதலின் போதும், சவாரி செய்பவர் தன் பின்னால் இன்னொருவரை ஏற்றிக் கொள்ள வேண்டும்.

19) இறைவனின் பாதையில் சிந்தப்பட்ட இரத்தத்துக்கு விசு வாசியர் நிச்சயம் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும்.

20) இறைவனை அஞ்சியிருக்கும் விசுவாசியர், மிக உயர்ந்த, நேர்மையான வழி காட்டலைக் கொண்டிருக்கின்றார்கள்.

20ஆ) எந்த ஒரு சிலை வணக்கஸ்தரும், குறைஷியரின் உடைமைகளையோ, மனிதர்களையோ தமது பாதுகாப்பின் கீழ் கொள்ளக் கூடாது. விசுவாசியர்க்கு எதிராக அவர்கள் தலையிடவும் கூடாது.

21) சரியான காரணம் ஏதும் இன்றி ஒரு விசுவாசியைக் கொலை செய்யும் எவரும், கொல்லப்பட்டவரின் அடுத்த உறவினர், இரத்த ஈட்டுப் பணத்துடன் திருப்தி கண்டாலேயொழிய, திருப்பித் தாக்கப்படுவார். விசுவாசியர் அனைவரும் அவருக்கு எதிராக ஒன்றே போல் நிற்பர். அவர்கள் அனைவரும் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாவர்.

22) இந்த ஆவணத்தில் கூறப்பட்டனவற்றை ஏற்று, இறை வனையும், இறுதி நாளையும் விசுவாசங் கொண்டுள்ள ஒரு விசுவாசி, தீங்கிழைப்பார் ஒருவருக்கு உதவி செய்வதோ, அவருக்குத் தஞ்சம் அளிப்பதோ தகுமானதல்ல; இறைவனின் சாபமும், இறுதி நாளின் போது அவனது கோபமும் அவர் மீதாகும். அவரிடமிருந்து பாவ மன்னிப்போ, ஈட்டுப் பணமோ பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

23) நீங்கள் ஏதேனும் ஒரு விஷயத்தில் வேறுபாடு காணும் விவ காரங்கள் இறைவனதும் , முஹம்மதினதும் தீர்வுக்கு சமர்ப் பிக்கப்பட வேண்டும்.

24) விசுவாசியருடன் சேர்ந்து போராடும் யூதர்கள், யுத்தச் செலவுகளுக்காகத் தமது பங்குகளைச் செலுத்துவார்கள்.

25) பனூ அவ்பின் யூதர்கள் விசுவாசியருடனான ஒரே சமூகத் தவர்களாவர். - யூதர்கள் தமது மதத்தையும், முஸ்லிம்கள் தமது மதத்தையும் கொண்டிருப்பர். அவர்களது விடுதலை செய்யப் பட்ட அடிமைகளும், அவர்களது மக்களும் - அநியாயமும் தீங்கும் இழைப்போர் தவிர. ஏனெனில் அவர்கள் தமக்கும் தமது குடும்பத்தோர்க்கும் தீங்கு இழைத்துக் கொள்கின்றார் கள்..

26) பனூ அல்-நஜ்ஜாரின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர்களே போலாவர்.

27) பனூ அல்-ஹாரிஸின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர்களே போலாவர்.

28) பனூ ஸாஇதாவின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர்களே போலாவர்.

29) பனூ ஜுஷம்மின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர்களே போலாவர்.

30) பனூ அல்-அவ்ஸின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர்களே போலாவர்.

31) பனூ அல்-ஸஅலபா[12]வின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர் களே போலாவர். அவர்களுள் அநீதியும் தீங்கும் இழைப்போர் தவிர. ஏனெனில் அவர்கள் தமக்கும் தமது குடும்பத்தோர்க்கும் தீங்கு இழைத்துக் கொள்கின்றார்கள்.

32) ஸஅலபாவின் ஒரு குழுவினரான ஜப்னா[13] அவர்களே போலாவார்.

33) பனூ அல்-ஷுதைபாவின் யூதர்கள் பனூ அவ்பின் யூதர்கள் போலாவர். நேர்வழி செல்தல் பாவங்களிலிருந்து பாதுகாப்பதாகும்.

12. ثعلبة 13. جفنة

*34) ஸஅலபாவின் விடுவிக்கப்பட்ட அடிமைகள் அவர்களே போலாவர்.*

*35) யூதர்களின் நெருங்கிய நண்பர்கள் அவர்களே போலாவர்.*

*36) முஹம்மதின் அனுமதியுடனேயன்றி இவர்களுள் எவரும் போர்களுக்குச் செல்ல மாட்டார்கள்.*

*36ஆ) என்றாலும் இழைக்கப்பட்ட காயத்துக்குப் பழி தீர்த்துக் கொள்வதிலிருந்தும் அவர் தடுக்கப்பட மாட்டார். தனக்குத் தவறிழைத்தவர் ஒருவரைக் கொல்வது தவிர்ந்து, முன்னறிவிப்பு ஏதுமின்றி ஒரு மனிதனைக் கொல்பவர் தன்னையும், தன் குடும்பத்தோரையும் கொன்று போட்டவராகின்றார்.*

*37) யூதர்கள் தங்களது செலவினங்களையும், முஸ்லிம்கள் தங்களது செலவினங்களையும் பொறுப்பேற்க வேண்டும். இந்த ஆவணத்தின் மக்கள் எவரையும் யாரேனும் தாக்கக் கூடுமாயின் அவர்களுக்கு எதிராக இரு சாராரும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய வேண்டும். அவர்கள் பரஸ்பரம் ஆலோசனைகளும், அறிவுரைகளும் செய்து கொள்ள வேண்டும். நேர்வழி செல்தல் பாவங்களிலிருந்து பாதுகாப்பதாகும்.*

*37ஆ) தனது சகாவின் கெடுதலான செயல்களுக்கு ஒருவர் பொறுப்பாக மாட்டார். தவறிழைக்கப்பட்டவர் உதவி செய்யப்பட வேண்டும்.*

*38) யுத்தம் நீடிக்கும் காலம் முழுவதும், விசுவாசியருடன் யூதர்களும் செலவுகளை அளிக்க வேண்டும்.*

*39) இந்த ஆவணத்தின் மக்களுக்கு யஸ்ரிப் புனித பூமியாக இருக்கும்.*

*40) பாதுகாவலரைப் பெற்றிருக்கும் ஒரு புதியவர், அவரைப் பாதுகாப்பவரைப் போலவே பாதிப்புகளோ, குற்றங்களோ இழைக்காதிருப்பார்.*

*41) ஒரு பெண், தன் குடும்பத்தாரின் அனுமதியுடனேயே பாதுகாப்பு அளிக்கப் பெறுவார்.*

*42) கருத்து வேறுபாடுகள், பிரச்சினைக்குரிய விவகாரங்கள் எழக்கூடிய சந்தர்ப்பங்களில் அவை இறைவனுக்கும், அல்லாஹ்வின் தூதர் முஹம்மதுக்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த ஆவணத்தில் இறையச்சத்தை நெருங்கியதையும், நன்மையானவற்றையும் இறைவன் ஏற்கின்றான்.*

*43) குறைஷியரும், அவர்களுக்கு ஆதரவளிப்போரும் பாதுகாப்பு அளிக்கப்பட மாட்டார்கள்.*

*44) யஸ்ரிப் மீதான எந்த ஒரு தாக்குதலின் போதும் ஒப்பந்தத்தின் சாரார்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல் வேண்டும்.*

*45) அவர்கள் சமாதானம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், அதனை நிலைப்படுத்த வேண்டும் எனவும் வேண்டப்பட்டால் அவர்கள் அவ்வாறே செய்தல் வேண்டும். தமது மதத்துக்கான யுத்தங்களில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர, விசுவாசியர் அவ்வாறு சமாதானம் செய்து கொள்ள வேண்டப்பட்டால் அவ்வாறே செய்து கொள்ள வேண்டும்.*

*45ஆ) தான் சார்ந்துள்ள பிரிவிலிருந்து தனக்குரிய பங்கை ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வர்.*

*46) அல்-அவ்ஸின் யூதர்கள், அவர்களால் விடுவிக்கப்பட்டோர் உட்பட அனைவரும் இந்த ஆவணத்தின் மக்களுடன் சமாதானமானவர்களாக, இந்த ஆவணத்தின் மக்கள் அனைவரதும் காப்பினைப் பெற்றிருப்பர். நேர்வழி செல்தல் பாவங்களிலிருந்து பாதுகாப்பதாகும். தத்தமது செயல்களுக்கு அவரவர்களே பொறுப்பாவர். இறைவன் இந்த ஆவணத்தை அங்கீகரிக்கின்றான்.*

*47) அநீதியும் பாவங்களும் இழைப்போரை இந்த ஒப்பந்தம் பாதுகாக்காது. அநீதியும் பாவங்களும் இழைக்காமல் இருப்பராயின் யுத்தத்துக்கெனப் புறப்பட்டுச் செல்வோரும் பாதுகாப்பாயிருப்பர். நகரில் தன் வீட்டில் இருந்து கொள்வோரும் பாதுகாப்பாயிருப்பர். நேர்வழி செல்வோரதும், இறையச்சம் கொண்டோரதும் பாதுகாவலன் இறைவனே. முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதராவார்.*

## ஆவணத்தின் பகுப்பாய்வு

ஆவணம் மூலத்தில் இரண்டாக இருந்ததென நாம் ஏற்கனவே கண்டு கொண்டுள்ளோம். ஆக, இது சம்பந்தமான கலந்துரையாடல்கள், பகுப்பாய்வுகள் என்பன, யூதர்கள் சம் பந்தப்பட்ட அங்கங்களுக்கும், முஸ்லிம்களிடையிலான உறவு களை ஒழுங்குபடுத்தி, அவர்களது கடமைகளையும், உரிமை களையும் நிர்ணயம் செய்யும் அங்கங்களுக்கும் இடையிலான தெளிவான பிரிவினைகளின் அடிப்படையில் ஆனதாக இருக்க வேண்டும்.

நாம், முதலில் யூதர்கள் சம்பந்தப்பட்ட அங்கங்கள் குறித்து ஆராய்வோம். ஏனெனில் வரலாற்றுக் கால ஒழுங்கின் அடிப்படையில் அந்தப் பகுதியே முதலில் வர வேண்டி யுள்ளது. என்றாலும் பின்னால் வர வேண்டிய முஹாஜிரூன் - அன்ஸார் சம்பந்தப்பட்ட அங்கங்கள் ஆவணத்தின் ஆரம்பத் தில் வந்துள்ளன.

### யூதர்களுடனான சமாதான ஒப்பந்தத்தின் அங்கங்கள்

ஆவணத்தின் 24 முதல் 47 வரையிலான அங்கங்கள் யூதர் களுடனான சமாதான ஒப்பந்தம் குறித்துப் பேசுகின்றன. இவ் வாறான ஒழுங்கு முறை, இரண்டு ஆவணங்களதும் அங்கங் கள் ஒன்றில் ஒன்று கலந்துவிடாமையைக் காட்டுகின்றது. ஒவ்வோர் ஆவணத்தினதும் அங்கங்கள் முழுவதுமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவை வரிசை முறை யிலும் ஒழுங்காக அமைந்துள்ளன. எவ்வாறாயினும் அங்கம் 16 யூதர்கள் பற்றியதாயினும் முஹாஜிரூன் - அன்ஸார் சம்பந் தப்பட்ட அங்கங்களுள் அடக்கப்பட்டுள்ளது. ஏனெனில் தமது சகாக்களாக அமைந்த யூதர்களுடன் அவர்கள் நீதமாக நடந்து கொள்வார்கள் என்பதை அது உறுதி செய்கின்றது. ஆகவே, யூதர்களுடனான சமாதான ஒப்பந்தத்தில் அந்த அங்கம் சேர்க்கப்பட வேண்டிய தேவை இல்லை.

அங்கம் 24இன் பிரகாரம் மதீனாவின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் யுத்தங்களுக்கான செலவினங்களில்

*தமது பங்கை அளிக்க யூதர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர். ஆக, விசுவாசியர் யுத்தத்தில் இருந்த காலமெல்லாம் யூதர்களும் தமது பங்கைச் செலுத்தியிருந்தனர். அபூ உபைத் அல்-காஸிம் இப்ன் ஸலாமின் கருத்தில் யூதர்களின் செலவினப் பங்களிப் பானது மதீனாவின் பாதுகாப்பு யுத்தங்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டிருக்க வில்லை. அவரது கருத்தில் விசுவாசியர் யுத்தங் களுக்கெனப் புறப்பட்டுச் சென்ற வேளைகளில் யூதர்களும் அவர்களுடன் இணைந்து சென்றுள்ளனர். அவர் கூறினார்: "முஸ்லிம்களுடன் இணைந்து யூதர்கள் யுத்தங்களுக்கென வெளிச் சென்ற வேளைகளில், அவர்கள் யுத்தத்துக்கான செல வினங்கள் உட்படத் தமது பங்களிப்பினைச் செய்திருப்பின் யுத்தப் பொருட்களில் அவர்களும் ஒரு பங்கினைப் பெற்றுக் கொண்டனர். அப்படி ஒரு நியதி இல்லாதிருப்பின் முஸ்லிம் களின் யுத்தப் பொருட்களில் அவர்களுக்கு எந்த ஒரு பங்கும் கிடைத்திருக்காது." அவர் மேலும் கூறினார்: "அப்த் அர்-ரஹ்மான் இப்ன் மஹ்தீ எமக்குக் கூறினார்- ஸுப்யானிட மிருந்து - யஸீத் இப்ன் யஸீத் இப்ன் ஜாபிரிடமிருந்து - அல்-ஸுஹ்ரீயிடமிருந்து : 'யூதர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் யுத்தங்களுக்கென வெளிச் செல்வார்கள்; யுத்தப் பொருட்களிலிருந்து அவர்களுக்குரிய ஒரு பங்கு அளிக்கப் பட்டது'." எவ்வாறாயினும் இது, அல்-ஸுஹ்ரீயின் முர்ஸல் ஹதீஸ்களில் ஒன்று. ஆக இதில் தங்கியிருத்தல் இயலாது. என்றாலும், நாம் முன்னர் கண்டனவற்றுக்கும் மேலாக, நபிகளாருடன் யூதர்கள் யுத்தங்களில் கலந்து கொண்டமை பற்றிய வேறு ஹதீஸ்கள் அறிவிக்கப் பெற்றுள்ளன:*

*1) "அல்லாஹ்வின் தூதர் (யுத்தத்திற்காய்) கைனுகாவின் யூதர்களது உதவியை வேண்டினார்கள்." அல்-ஹஸன் இப்ன் இமாரா மூலமாக இந்த ஹதீஸ் அறிவிக்கப்பட்டுள்ளது. அபூயூஸுபும், அல்-பைஹகீயும் இதனைச் சேர்த்துள்ளனர். அல்-ஹஸன் இப்ன் இமாரா குறித்து அவர் ளயீப் என இனங் காணப்படாவிடினும் கூட, அவர் மத்ரூக் ஆவார் எனக் கூறுவார் அல் பைஹகீ. என்றாலும் மிகவும் தீவிரமான ஆய் வாளர்கள் அவரை ளயீப் என்றே கொள்வர். அது குறித்து*

இணக்கம் கண்டு கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறுவார் ஸுஹைலீ.

2) "தன்னுடன் சேர்ந்து போராடிய யூதர்களுக்கு நபிகளார் (ஸல்) யுத்தப் பொருட்களில் ஒரு பங்கினைக் கொடுத்தார்கள்." அல்-ஸுஹ்ரீ மூலமான இது முர்ஸல் எனக் கூறிய திர்மிதீ, இது ஹஸன் கரீப்[14] என்பார். அல்-ஸுஹ்ரீயின் முர்ஸல் ஹதீஸில் தங்கியிருக்க முடியாது எனும் கோட்பாட்டை முன்வைப்பார் அல் திர்மிதீ.

3) "நபிகள் (ஸல்) அவர்கள் யுத்தத்துக்கென யூதர்களுடன் வெளிச் செல்வார்கள்." அல்-ஸுஹ்ரீயின் முர்ஸல் ஹதீஸ் களில் ஒன்றான இதில் தங்கியிருத்தல் இயலாது.

4) "அல்லாஹ்வின் தூதர் சில யூதர்களுடன் ஒரு படை யெடுப்பில் சென்றார்கள்." இதனை அறிவிக்கும் பைஹகீ இது முன்கத்இ என்பார். இதுவும் ஸுஹ்ரீயின் முர்ஸல் ஹதீஸ் களில் ஒன்று.

5) "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) மதீனாவின் பத்து யூதர் களுடன் வெளிச் சென்று கைபரை முற்றுகையிட்டார்கள்." இதனை அல்-வாகிதீ அறிவித்தார். ஆனால் அவர் ளயீப். அவரிடமிருந்து இதனை அல்-பைஹகீயும், அல்-ஸைலயீயும்[15] அறிவித்தனர்.

6) "யூதர்களில் சிலர் நபிகளாருடன் அவரது யுத்தங்கள் சிலவற்றில் கலந்து கொண்டனர். முஸ்லிம்களுக்கு அளித்தது போலவே, அவர்களுக்கும் அன்னார் யுத்தப் பொருட்களில் ஒரு பங்கை அளித்தனர்." இதனை அபூ ஹுரைராவிடமிருந்து அல்-காதிப் அல் பக்தாதீ அறிவிப்பார். என்றாலும் அதன் இஸ்னாத் ளயீப். அத்துடன் அது சில அறிவிப்பாளர்களைத் தவிர்த்து விட்டுள்ளது.

ஆக, நபிகளார் (ஸல்) அவர்களுடன் யூதர்கள் யுத்தங்களில் இணைந்து பங்கு பற்றியமை பற்றிய ஹதீஸ்கள் எல்லாம் பலமில்லாதனவாக அமைந்துள்ளன. சில ஹதீஸ்கள், நபிகள்

14. حسن غريب

15. الزيلعي

*(ஸல்) அவர்கள், யூதர்கள் தம்முடன் யுத்தங்களில் பங்குபற்றுவதனைத் தடுத்தமை பற்றி அறிவிக்கின்றன.*

*1) அபூ ஹாமித் அல் ஸாஇதீயிடமிருந்து அபூ அப்த்-அல்லாஹ் அல் ஹாகிம் அறிவிப்புச் செய்யும் ஒரு ஹதீஸ்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸின்யத் அல்-வதாஅ[16] வுக்கு அப்பால் சென்றிருந்த வேளை யுத்த வீரர்கள் குழுவொன்றைக் கண்டார்கள். அன்னார் கேட்டார்கள்: "அவர்கள் யார்?" அன்னார் கூறப்பெற்றார்கள்: "பனூ கைனுகா. அப்த்-அல்லாஹ் இப்ன் ஸலாமின் மக்கள் அவர்கள்." அன்னார் வினவினார்கள்: "அவர்கள் முஸ்லிம்கள் ஆகிவிட்டார்களா?" பின்னர் கூறினார்கள்: "அவர்களைத் திரும்பிச் செல்லும்படி கூறுங்கள். நாங்கள் முஷ்ரிகூனிடமிருந்து உதவி கேட்க மாட்டோம்."*

*அல் ஹாகிம் இதனை மற்றொரு ஹதீஸுக்கு ஆதரவான ஓர் ஆதாரமாக அறிவித்தார்: "நாங்கள் முஷ்ரிகூனுக்கு எதிராக முஷ்ரிகூனின் உதவி கேட்க மாட்டோம்." அல்ஹாகிம் கூறினார்: "இது இஸ்னாத்தில் ஸஹீஹ் ஆனது. என்றாலும் அவர்கள் (புஹாரியும் முஸ்லிமும்) இதனை அறிவிக்காது விட்டார்கள்." உஹத் யுத்தத்தோடு சம்பந்தப்பட்டதாக இந்த ஹதீஸ் அறிவிக்கப் பெற்றது. என்றாலும் ஒரு படையெடுப்பு சம்பந்தப்பட்டது என அல்-ஹாகிம் கூறினாலும் அது எந்தப் படையெடுப்பு என அவர் கூறாது விட்டார்.*

*உஹத் யுத்தத்தோடு இதனைச் சம்பந்தப்படுத்துவது முற்றிலும் தவறானதாகும். ஏனென்றால் உஹத் யுத்தத்துக்கு ஒரு வருடம் முன்னரே பனூ கைனுகா வெளியேற்றப்பட்டு விட்டனர். அபூ ஹாமித் அல் ஸாஇதீயிடமிருந்து அல்-ஹாகிம் மூலமாக அல்-பைஹகீயும் இதனை அறிவிப்புச் செய்வார். அல்-வாகிதீயும், இப்ன் ஸஅதும் அவர்கள் அப்த்-அல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூலின் சகாக்கள் எனக் கூறுவர். நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "முஷ்ரிகூனுக்கு எதிராக முஷ்ரிகூன் உதவியை நாடாதீர்கள்."*

16. ثنية الوداع

*2) இப்ன் இஷ்ஹாக், இமாம் ஸஹ்னூன், இப்ன் அல்-கையிம் ஆகியோர் அனைவரும் அல்-ஸுஹ்ரீ மூலமாக அறிவித்தார்கள்: "உஹதுடைய தினத்தின் போது அன்ஸார் கூறினார்கள்: 'எங்கள் யூத சகாக்களிடமிருந்து நாம் ஏன் உதவி கேட்கக் கூடாது?' அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'அவர்களது தேவை எமக்கில்லை'."*

*முதலாவது ஹதீஸ், அதன் இஸ்னாத்தைப் பொறுத்து ஏனையவற்றை விட வலுவானது - இப்ன் ஹஜ்ரின் படி அதில் அடங்கியுள்ள ஸஅத் இப்ன் அல்-முன்திர்[17] ஒரு மக்பூல் அறிவிப்பாளராக இருப்பினும் கூட. யுத்த முனைப்புகளில் யூதர்களின் பங்களிப்பு குறித்து ஆவணத்தில் குறிக்கப் பெற்றுள்ளமை காரணமாக இது நிகழ்ந்திருக்கக் கூடியமை ஏற்புக்குரியதாக உள்ளது. எவ்வாறாயினும் அவர்களது பங்களிப்பு மதீனாவின் பாதுகாப்புக்குரியதான யுத்த நடவடிக்கைகட்கு மட்டுமானதாகவே அமைந்தது. அங்கம் 44 கூறுகின்றது: யஸ்ரிப் மீதான எந்த ஒரு தாக்குதலின் போதும் ஒப்பந்தத்தின் சாரார்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்தல் வேண்டும்.*

*என்றாலும் அல்-ஹாகிம் கூறுவது போல, ஏன் யூதர்களில் சிலர் முஸ்லிம்களுக்கு ஆதரவளிப்பதற்காக வெளிச் சென்றார்கள்? இதனைக் காண நாம் பின்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. அதாவது, இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர், அவ்ஸ் - கஸ்ரஜ் கோத்திரத்தாருக்கும் யூதர்களுக்கும் இடையில் இருந்து வந்த கூட்டு ஒப்பந்தங்கள் நிகழ்ந்து வந்த காலத்துக்கு நாம் செல்ல வேண்டும். முன்னம் போலவே, யூதர்கள் தமது பண்டைய சகாக்களுடன் செய்திருந்த கூட்டு ஒப்பந்தங்களை மீள்வலு செய்து, உறவுகளை உறுதிப்படுத்தி, முஸ்லிம்களை ஒருவருக்கொருவர் பகைமை பூணச் செய்து, அவர்களது மனோ உறுதியை உலுக்கி, அவர்களுள் வஞ்சக எண்ணங்களை விதைக்கும் முனைவில் ஈடுபட்டிருக்கக் கூடும். என்றாலும் நபிகள் (ஸல்) அவர்கள் இத்தகைய ஒரு திட்டம் செயலுருப் பெறுவதனை, யூதர்கள் இன்னமும் அவிசுவாசி*

17. سعد بن المنذر

*யராக இருக்கும் வரை அவர்களது உதவியை மறுத்துரைப் பதன் மூலம் தடுத்து விட்டார்கள். உஹதுடைய தினத்தன்று அன்ஸார்கள் நபிகளாரிடம் கூறியவற்றிலிருந்து, அவ்ஸ் - கஸ்ரஜ்கள், யூதர்களுடன் பூண்டிருந்த கூட்டு ஒப்பந்தங்கள் இன்னமும் நினைவில் இருந்து வந்தமை தெளிவு. அவர்கள் வினவினார்கள்: "நாம் ஏன் எமது யூத சகாக்களின் உதவியை நாடக் கூடாது?" பின்னைய சந்தர்ப்பங்களிலும்இதனைக் கண்டு கொள்ள முடிந்தது. தனது கோத்திரத்தோரான கஸ்ரஜ் களின் சகாக்களாக விளங்கிய பனூ கைனுகாவின் சார்பாக வஞ்சகர்களின் தலைவராக விளங்கிய அப்த்-அல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூல் தலையீடு செய்தமை; நபிகள் (ஸல்) அவர்களது தீர்ப்பை ஏற்ற பின்னர் கொல்லப்பட இருந்த தமது பண்டைய சகாக்களான பனூ குறைளாவின் சார்பாக அவ்ஸ் களில் சிலர் முன்வந்தமை என்பன குறிப்பிடத்தக்கன. நபி களார் பனூ குறைளா மீது தீர்ப்பு வழங்கவென ஸஅத் இப்ன் முஆஸை[18] நியமித்தார்கள். பனூ குறைளா கொன்று போடப் பட வேண்டுமென தீர்ப்பு வழங்கினார் ஸஅத். இதன் மூலம் அவர் தமது பண்டைய கூட்டு ஒப்பந்தத்தை அங்கீகரிக்காது விடுகின்றார். முன்னர் நபிகளாருக்கு எதிராகக் கிளம்பிய பனூ கைனுகாவைப் பொறுத்து (கஸ்ரஜ்களின் பனூ அவ்ப்களைச் சேர்ந்த) உபாதா இப்ன் அஸ்ஸாமித்தும் அத்தகைய ஒரு நிலைப்பாட்டையே எடுத்திருந்தார்.*

*25 முதல் 35 வரையான அங்கங்கள், அவ்ஸ் - கஸ்ரஜ் கோத் திரங்களின் யூதர்களாய் விட்ட அங்கத்தவர்கள் குறித்துப் பேசு கின்றன. அவை, அவர்களது கோத்திரத்து அராபிய மூலங்கள் குறித்துப் பேசி, முஸ்லிம்களுடனான அவர்களது உடன்படிக் கையை உறுதி செய்கின்றன: "பனூ அவ்பின் யூதர்கள் விசு வாசியருடனான ஒரே சமூகத்தவர்களாவர்." எவ்வாறாயினும் அல்-அம்வாலில் பிறிதொரு பிரயோகத்தைக் கையாள்வார் அல்-இபாரா. அவர் கூறுவார்: ". . . . விசுவாசியருள்ளான ஒரு சமூகத்தவராவர்." இது குறித்து அபூ உபைத் கூறுவார்:*

*18.* سعد بن معاذ

*“முஸ்லிம்களது எதிரிகளுக்கு எதிராக, அவர்களுக்கு நியமம் செய்த பிரகாரம் செய்த பங்களிப்புகளையே அவர் குறிக் கின்றார்.” ஆனால் அவர்களது மதமான இஸ்லாத்துடன் அவர்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை. “யூதர்கள் அவர் களது மதத்தைக் கொண்டிருப்பார்கள்; முஸ்லிம்கள் அவர் களது மதத்தைக் கொண்டிருப்பார்கள் என நபிகள் (ஸல்) அவர்கள் தெளிவுறக் கூறவில்லையா?” இப்ன் இஸ்ஹாக் “ . . . . விசுவாசியருடனான . . . .” எனக் கூறுவது கூடிய பொருத்த முடைத்ததாகத் தெரிகின்றது. அல்-அம்வால் வாசகம் திருத்தி யமைக்கப்பட்டதாக இருக்கலாம்.*

*அங்கம் 25 யூதர்களுக்கான மத சுதந்திரத்தை உறுதி செய் கின்றது. குற்றங்களுக்கான பொறுப்பு, குற்றம் இழைப் போருக்கு மட்டுமாக வரையறை செய்யப்படுகின்றது. (அநி யாயமும் தீங்கும் இழைப்போர் தவிர - ஏனெனில் அவர்கள் தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் தீங்கிழைத்துக் கொள் கின்றார்கள்.) குற்றவாளி தனக்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வார். இந்த ஒப்பந்தத்தில் இணைந்து கொண்ட ஒரு கோத்திரத்தின் அங்கத்தவராக அந்தக் குற்றவாளி இருப்பா ராயின், “இந்த ஒப்பந்தமானது அநீதியும் பாவங்களும் இழைப் போரைப் பாதுகாக்காது.”*

*அங்கம் 45 யூதர்கள் குறைஷியரைப் பாதுகாப்பதையோ, அவர்களுக்கு உதவி செய்தலையோ தடை செய்கின்றது. நபி களார் (ஸல்) அவர்கள், ஸிரியா நோக்கி, மதீனாவின் மேற்குப் புறமாகச் செல்லும் வர்த்தகக் குழுக்களை இடைமறிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். ஆக, குறைஷியரின் வர்த்தகக் குழுக் களுக்கு யூதர்கள் பாதுகாப்பளிப்பதன் மூலம் யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் எழக் கூடிய பூசல்களைத் தவிர்ப் பதற்காய் இவ்வாறானதொரு கடப்பாட்டை நியதி செய்வது அவசியமாகின்றது. அங்கம் 36, யூதர்கள் நபிகளாரின் அனுமதி யுடனேயன்றி மதீனாவை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்கின்றது. அவர்களது நடமாட்டங்கள் மீது விதிக்கப் பட்ட இவ்வாறான தடை, முதலில் அவர்கள் எந்த ஓர் இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடுவதனை - மதீனாவுக்கு*

வெளியே கோத்திர மோதல்களில் பங்கு பெறுவதனை - நிறுத்துவதற்காக விதி செய்யப்பட்டிருக்கலாம். ஏனெனில் அத்தகைய நடவடிக்கைகள், நகரின் பாதுகாப்பையும் பொருளாதாரத்தையும் பாதிப்புக்கு உள்ளாக்கி விடும். இஸ் லாமிய அரசின் குடிமக்கள் என்ற ரீதியில், யூதர்கள், அரசின் சட்டதிட்டங்களைப் பேணி ஒழுக வேண்டியவர்களானார் கள். அங்கம் 42-இன் படி, யூதர்கள் உட்பட, மதீனாவின் மக்கள் அனைவரும் உயர் அதிகார பீடமொன்று நிலை பெற்றுள்ள மையை ஏற்றுக் கொள்வராயினர். தமது விவகாரங்கள் அனைத்திலுமே யூதர்கள் இஸ்லாமிய நெறிகளைப் பின்பற்ற வேண்டியிருக்கவில்லை. விவகாரங்கள் அல்லது முரண் பாடுகள் தம்மையும் முஸ்லிம்களையும் உள்ளடக்கிய போது மட்டுமே யூதர்கள், இந்நியதிகளை ஏற்று நடக்க வேண்டியவர் களானார்கள். தமது சொந்த விவகாரங்களைப் பொறுத்த மட் டில் அவர்கள் தவ்ராத்தில் நியாயம் காண விழைந்தார்கள்; அவர்களது ரப்பிகள் தீர்வுகள் வழங்கினார்கள். அவர்கள் விரும்பக் கூடுமாயின் தமது விவகாரங்களில் தீர்ப்பு வழங்க நபிகளாரை ஏற்றுக் கொள்ளலாம். அவர்களது நீதிபதியாக அமைய அல்லது யூத ரப்பிகளிடம் அவர்களை அனுப்பி வைக்க வேண்டிய உரிமையைக் குர்ஆன் நபிகளாருக்கு அளித் துள்ளது: "உம்மிடம் (தீர்ப்புப் பெற) அவர்கள் வந்தால், அவர் களுக்கிடையே நீர் தீர்ப்பு வழங்குவீராக. அல்லது அவர்களைப் புறக்கணித்து விடுவீராக. அவ்வாறு அவர்களை நீர் புறக் கணித்து விட்டால், அவர்கள் உமக்கு யாதொரு தீங்கையும் ஒருக்காலும் செய்ய முடியாது. மேலும் (அவர்களுக்கிடையே) நீர் தீர்ப்பளித்தால், நீதியைக் கொண்டு அவர்களிடையே தீர்ப்பளிப்பீராக - நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களையே நேசிக்கின்றான்." (5:42). எவ்வாறாயினும் யூதர்கள், பலமிழந் தவர்களாய் விட்ட நிலையிலேயே நபிகளாரை நீதி வழங்குன ராக ஏற்க முன்வந்தமை தெளிவு. ஏனெனில் ஸூறா அல் மாயி தா, பின்னைய காலங்களில் அருளப்பட்ட ஒரு ஸூறாவாகும்.

அங்கம் 45 முஸ்லிம்களதும் யூதர்களதும் ஏனைய நட்புக் கோத்திரத்தார் அனைவரையும் உள்ளடக்கும் வகையில்

அமைந்துள்ளது. மறு சாராரின் நட்புக் கோத்திரங்கள் அனைத்துடனும் நட்புறவை நிறுவுவதனை இது வற்புறுத்து கின்றது. என்றாலும் முஸ்லிம்கள், குறைஷியரை இதிலிருந்தும் விலக்கி வைத்தனர். ஏனெனில் அவர்கள் முஸ்லிம்களுடன் பகைமை பூண்டு யுத்த நிலையில் இருந்து வந்தனர்.

அங்கம் 39 மதீனப் பிரதேசங்களைப் புனித பூமியாகக் கொள்கின்றது. “இந்த ஆவணத்தின் மக்களுக்கு மதீனா ஒரு புனித பூமியாக அமையும்.” அங்கு வன்மம் இருக்காது; அதன் விலங்குகள் வேட்டையாடப்பட மாட்டா; அதன் மரங்கள் தரிக்கப்பட மாட்டா. மேற்கின் ஹர்ரா (கரு நிறப் பாறை) கிழக் கின் ஹர்ரா, வடக்கே ஸவ்ர் மலை, தெற்கே ஈர் மலை என்ப வற்றுக்கு இடைப்பட்ட பிரதேசமாக அமைந்தது மதீனா. வாதி-அல்-அகீக் புனித பூமியின் ஒரு பகுதியாகும். இந்த அங்கம் மதீனாவின் உள்ளகப் பாதுகாப்பை உறுதி செய்து, அதன் உள்ளே மோதல்கள் ஏதும் ஏற்படுவதைத் தடை செய்கின்றது.

## முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான ஆவணம்

முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான ஆவணம் ஒப்பந் தத்தில் சேரும் பிரிவார்களை வரையறுத்துக் கூறுகின்றது: விசுவாசியரும்; குறைஷியரதும் யஸ்ரிபினதும் முஸ்லிம்களும்; அவர்களைச் சார்ந்தோரும்; அவர்களை இணைந்து கொண் டோரும்; அவர்களோடு இணைந்து போராடியோரும். விசுவாசியர்க்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிரிபாடு தெளிவானது. ஏனெனில் விசுவாசி ( முஃமின்) ஆனவர், விசு வாசித்து, அதனை நாவால் மொழிந்து, இதயத்துள் அதன் உறுதி பெறப் பெற்றவர். முஸ்லிம் ஆனவர் இஸ்லாமிய சட்ட விதிகளை ஏற்று வழிபாட்டோடான அனைத்துக் கடமை களையும் செயல்படுத்துபவராக இருப்பார். இந்த இரு சாரா ரும் பற்றிய பிரிபாடு யஸ்ரிபில் தெளிவாகப் புலனாவதற்குக் காரணம், பத்ர் யுத்தத்தின் பின்னர் வஞ்சகர்களின் தோற்றத்தை அங்கு கண்டு கொள்ள முடிந்தமையாகும். முஹாஜிரூன்களுள் எவரும் முஸ்லிம்களாக மட்டுமல்லாது, இதயத்தில் உறுதி பெற்ற முஃமின்களாகவும் விளங்கினர்.

அங்கம் 2, "அவர்கள் எல்லா மனிதர்களிலும் வேறாக அமைந்த தனியொரு சமூகம் (உம்மா) ஆவர்" என உறுதி செய்கின்றது. இரத்தத்தாலன்றி, விசுவாசத்தால் ஒன்றுபட்டவர்களாக அவர்கள் காணப்பட்டமையால் உணர்விலும், சிந்தையிலும், இலக்குகளிலும், நோக்கங்களிலும் ஒன்றுபட்டவர்களாக அவர்கள் விளங்கினார்கள். அவர்கள் பணிவு செய்தது இறைவனை மட்டுமே; கோத்திரத்தையல்ல. நீதி முறைகளை அவர்கள் வழங்கியது ஷரீஆவுக்கியையவே அன்றி, மரபு ரீதியான வழக்கங்களுக்கு இயையவல்ல. இவ்வாறாக எல்லா வழி வகைகளிலும் அவர்கள் ஏனைய மக்களிலிருந்து விலகியவர்களாகவே தோற்றினார்கள். எல்லா மனிதர்களிலும் வேறாக அமைந்த இத்தகைய பந்தங்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமாகவே விளங்கின. யூதர்கள், அவர்களைச் சார்ந்தோர் போன்ற எவரையும் இது உட்படுத்துவதாக இல்லை. அவர்களது கூட்டு மனப்பாங்கையும், சுய மரியாதையையும் பலப்படுத்தியெடுக்கும் முகமாகவே இந்த சமய ரீதியான சமூகம் தனியாகப் பிரித்துக் காணப்பட்டதென்பதில் ஐயங்களில்லை. இதனைத் தெளிவு படுத்துவதாக அமைந்தது கிப்லா. 16 அல்லது 17 மாதங்கள் அளவு (ஜெரூஸலத்தின்) பைத்-அல்-மக்திஸை நோக்கியதாக இருந்த கிப்லா, கஃபாவை நோக்கியதாக மாற்றியமைக்கப்பட்டது. தம்மைப் பின்தொடர்ந்தோரைப் பல்வேறு வகைகளிலும் வித்தியாசப்பட்டவர்களாக அமைக்கலானார்கள் நபிகள் (ஸல்) அவர்கள். யூதர்களிலும் வித்தியாசப்பட்டோராக அவர்களை அமைப்பதே தனது நோக்கம் என அன்னார் அவர்களுக்குக் கூறினார்கள். யூதர்கள் காலணிகள் அணிந்தவர்களாகத் தொழுவதில்லை; நபிகளார் தம் தோழர்களைக் காலணிகளுடன் தொழ அனுமதித்தார்கள். யூதர்கள் தம் நரைத்த மயிர்களை நிறமூட்டுவதில்லை; முஸ்லிம்கள் தம் நரைமயிர்களை மருதோன்றி, 'கதம்' என்பன கொண்டு நிறமூட்டலாயினர். யூதர்கள் ஆஷூரா (முஹர்ரம் பத்து) தினத்தன்று நோன்பிருந்தார்கள்; நபிகளாரும் அன்றைய தினம் நோன்பிருந்தார்கள். யூதர்களிலும் தம்மை வேறுபட்டவர்களாக அமைத்துக் கொள்வதற்காய் அன்னார் தமது அந்திம காலங்களின் போது முஹர்ரம் ஒன்பதாம் நாளன்றும்

*நோன்பிருக்கத் தீர்மானித்தனர். முஸ்லிம்கள் அல்லாதோரி லிருந்தும் வித்தியாசப்பட்டவர்களாகத் தம்மை அமைத்துக் கொள்ளும் பண்பினை முஸ்லிம்களுள் வளர்த்த அன்னார் (ஸல்) கூறினார்கள்: "மக்களுள் எவரைப் போல ஒருவர் நடந்து கொள்கிறாரோ அவர் அன்னவரைச் சார்ந்தவராவார்" ; "யூதர்களைப் போல் நடந்து கொள்ளாதீர்கள்." இது குறித்து ஏராளமான ஹதீஸ்கள் இருக்கின்றன. அவை அனைத்தும், முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்களிலிருந்தும் வித்தியாச மானவர்கள் மட்டுமல்ல, அவர்களிலும் உயர்ந்தவர்கள் என் பதனை உணர்த்துகின்றன. இத்தகைய பிரிபாடும், உயர்ந்தவர் களாக அமைந்துள்ள கோருதலும் முஸ்லிம்களுக்கும் முஸ் லிம் அல்லாதோருக்கும் இடையில் தடைச்சுவர்கள் எதனை யும் ஏற்படுத்தவில்லை. முஸ்லிம் சமூகம் மூடுண்டதல்ல; விரிந்து கொடுப்பது. அதன் கோட்பாடுகளை ஏற்பார் யாரும் அதனுடன் இணைந்து கொள்ளலாலம்.*

*3 முதல் 11 வரையான அங்கங்கள் கிளைக் கோத்திரங் களைக் குறிப்பிடுகின்றன. முஹாஜிரூன் தமது குறைவான எண்ணிக்கை காரணமாக, ஒரு தனிக் குழுவினராகக் குறிப் பிடப்படுகின்றனர். ஆனால், அன்ஸார்கள் அவர்களது கோத்திரங்களின் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றார்கள். கோத்திரங்கள் குறிப்பிடப் பட்டுள்ளமையால், மக்களை ஒன்றுபடுத்தி வைக்கும் சாதனம் அதுதான் என்றோ, கோத்திர, குல பந்தங்கள் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்டன என்றோ நாம் கொள்ள வேண்டியதில்லை. இஸ்லாத்தில் தடை செய்யப் பட்டது அது: "அஸபிய்யா[19]வை வலியுறுத்தும் எவரும் எம் மைச் சார்ந்தோரல்லர்" என்பர் நபிகள் (ஸல்) அவர்கள். சமூக பாதுகாப்பு முறையொன்றனை ஒழுங்கு படுத்தி அமைத்துக் கொள்வதில் இஸ்லாம் கோத்திர பந்தங்களிலிருந்து கிட்டும் நலன்களைப் பயன்படுத்திக் கொண்டது என்றே நாம் கூறலாம்.*

*தம்மைப் பின்பற்றியோரை ஒற்றுமைப்படுத்தி அமைக் கும் பிரதான காரணியாக இஸ்லாம் விசுவாசத்தையே கொண்*

19. عصبية

டிருந்தது. என்றாலும் விசுவாசத்துக்கு அடுத்த படிகளில் காணப்பட்ட பந்தங்களும் இஸ்லாத்தின் அங்கீகாரத்தை ஈட்டிக்கொள்கின்றன. அதன் மூலம் மக்களிடையே ஒரு சமூக பாதுகாப்பு முறையொன்றனை நிறுவுவதனை இலகுவாக்கிக் கொள்ள முடிந்தது. இஸ்லாம் அங்கீகாரம் செய்த பந்தங்களுள் ளாவன:

- ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களிடையிலான விசேட பந்தங்கள்; தந்தை, தாய், குழந்தைகளின் உரிமைகளும் கடமைகளும்; ஈட்டுப்பணங்கள் செலுத்துவதிலும், யுத்தக் கைதிகளை விடுவித்துக் கொள்வதிலும், தம்முள் வறியவர் களுக்குத் துணை செய்வதிலும் ஒரு கோத்திரத்தின் அங் கத்தவர்கள் மத்தியில் உருவாகும் பொறுப்புகள் முதலியன.

- ஒரு பகுதியில் குடியிருப்போர் மத்தியிலான விசேட பந்தங்கள். - நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஜிப்ரீல் (அலை), அயலவர் மீது நான் கொண்டிருக்க வேண்டிய நல்லுறவுகள் குறித்து என்னை வற்புறுத்தல் செய்தார்கள் - அவர்களை எனது வாரிசுகளாக்கி விடுவாரோ என நான் எண்ணுமளவு.”

- ஒரு கிராமத்தில் குடிவாழ்வோர் கொண்டுள்ள பந்தங் கள்: “ஒரு பிரதேசத்தில் வாழ்வோருள் ஒருவர் பட்டினியால் வாடுவாராயின் அந்த மக்கள் மீதான அல்லாஹ்வின் பாது காப்பு அகற்றப்பட்டு விடுகின்றது.”

- ஒரு நகரில் வாழ்வோரிடம் காணப்பட வேண்டிய விசேட பந்தங்கள்: “அவர்களுடன் குடிவாழ்வோரின் தேவை கள் பூர்த்தி செய்யப்படும் வரை அவர்களது ‘ஸகாஹ்’ நகரின் வெளியில் செலவிடப்படக்கூடாது.”

ஆக, சமூகத்தின் ஒவ்வொரு சிறு குழுவும், தனது சமூக பாதுகாப்பினதும் நலன்களதும் பொறுப்பினை ஏற்று நடாத்த வேண்டியமையை இஸ்லாம் உறுதி செய்தது. அவ்வாறு செய் வதன் மூலம் அது சமூக பொறுப்பில் காணப்படக் கூடிய பாரிய இடை வெளிகளை நிரப்பி வைத்தது. இறுதியாக, தனி மனிதர்களால் நிரப்பப்பட முடியாத இடைவெளிகளை

நிரப்பும் பொறுப்பு அரசின் வசமாகின்றது. இவ்வாறான ஓர் ஒழுங்கு முறை, அரசின் தோள்களிலிருந்து பெருஞ் சுமை களை இறக்கி விடுகின்றது என்பதில் ஐயமில்லை. ஏராளமான நவீன அரசுகளில் இது ஒரு பாரிய பிரச்சினையாக இருப்பது கண்கூடு.

கோத்திர பந்தங்களை அங்கீகாரம் செய்வதன் மூலம் சமூக நல, பாதுகாப்பு விவகாரங்களில் அதனடியாகக் கிடைக் கக்கூடிய பயன்களை ஈட்டிக்கொள்ள முடிந்தது. அடக்கு முறையை ஆதரித்தலோ, கோத்திரக் கூட்டு உணர்வுகளை உந்துதல் செய்தலோ அல்ல இதன் நோக்கம்.

சமூக நல, பாதுகாப்பு ஒழுங்கு முறைகள், தமது அங்கத் தவர்களுக்கு, அவர்கள் சார்ந்துள்ள கோத்திரம் உதவி செய்ய வேண்டுமென நியதி செய்திருந்தன. அதன் அங்கத்தவர்களுள் ஒருவர் தவறுதலாக யாரையும் கொன்று போடக் கூடுமாயின், அதற்கான இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டியது, கோத்திரத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்குமானதொரு பொறுப்பாகும். இதுவே ஜாஹிலிய்ய கால மரபு. ஆவணம் அதனை மீளவும் உறுதி செய்தது: "தற்போதைய தமது வழக்கப்படி இதுவரை அவர்கள் செலுத்தி வந்த இரத்த ஈட்டுப் பணத்தைச் செலுத்துவார்கள்." அதாவது, இரத்த ஈட்டுப் பணம் சம்பந்தமான அவர்களது மரபுகளுக்கு இயைய. அது போலவே, கோத்திரம், தமது அங்கத்தவர்களுள் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களை விடுவித்துக் கொள் வதற்கான ஈட்டுப்பணத்தையும் செலுத்த வேண்டும்: "இரக்கம், நியாயம் என்பவற்றுக்கியையத் தமது கைதிகளை விடுதலை செய்து கொள்வார்கள்." - அங்கம் 3.

ஆவணம், கூட்டுப் பொறுப்புணர்வுக்கு அழுத்தம் கொடுத்தது. அத்துடன், மதீன சமூகத்தில் நீதியையும், சமூக நல பாதுகாப்பையும் நிலைப்படுத்தும் பொறுப்பினை விசுவாசியர் அனைவருக்குமாக ஆக்கி வைத்தது. இது மிகவும் முக்கியத் துவமானது. ஏனெனில், நபிகளார் சட்டவொழுங்குகளை மீறுவோரைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிக்கக்கூடிய

பொலிஸ் படை போன்ற ஒரு குழுவினரை ஏற்படுத்தி இருக்க வில்லை.

இழைக்கப்படும் குற்றங்களுக்கான தண்டனைகள் இறைவனால் அங்கீகரிக்கப்பட்டன என்பதால் அவற்றைக் கொண்டு நடாத்த வேண்டியது விசுவாசியர் அனைவருக்குமான சமயக் கடமையாக அமைந்து விடுகின்றது. அதனால் அதற்குப் புனிதத்துவமும் பலமும் கிட்டுகின்றது. ஆக, மானிட சட்ட நியதிகளில் போல் அல்லாது, அவற்றை எதிர்த்தலோ மீறலோ செய்வதற்குரிய வாய்ப்புகள் அனைத்தும் தடுக்கப் பட்டு விடுகின்றன. 13 முதல் 21 வரையிலான அங்கங்கள் விசுவாசியர்க்கான பாத்திரங்கள் குறித்துப் பேசுகின்றன. அங்கம் 13 கூறுகின்றது: "இறையச்சம் கொண்ட விசுவாசியர், குழப்பங்கள் உண்டாக்குவோர்க்கும் அநீதி, தீங்குகள், பகைமை, விசுவாசியர் மத்தியில் சீரழிவு ஆகியன இழைப்போர்க்கும் எதிராக நிற்பார்கள். அவர்களுள் ஒருவரது மகனாக இருப் பினும் கூட, அனைவரது கரங்களும் அன்னவர்க்கு எதிராக விளங்கும்." கொடுங்கோலர், அடக்குமுறையாளர், தீங்கிழைப் போர், லஞ்சங்கள் எடுப்போர் அனைவரையும் தடுக்கும் பணி விசுவாசியர்க்கு உரியதென வற்புறுத்துகின்றது. "அநீதி இழைத்தல்" என்பது தனக்கு உரிமையில்லாத ஒன்றனை வேண்டிநிற்பது. இறையச்சம் கொண்ட விசுவாசியர் (அல்-முத்தகூன்) இவற்றுக்கான பொறுப்பாளராகக் கூறப்படுகின் றார்கள். ஏனெனில் அவர்கள் பூரணமான விசுவசியராயுள் ளனர். ஆக, ஷரீஆவை அமுல் செய்வதில் ஏனையோரிலும் பார்க்க அவர்களே கூடிய ஈடுபாடு கொண்டவர்களாக இருக் கின்றார்கள். வெறுமனே விசுவாசம் கொண்டவர்கள், இன்னமும் தவறுகள் இழைக்கலாம்; எல்லை மீறலாம். அவர்களைத் தடுத்து நிறுத்துதல் அவசியம்.

அங்கம் 21 கூறுகின்றது: "சரியான காரணம் எதுவும் இன்றி ஒரு விசுவாசியைக் கொலை செய்யும் எவரும் .... திருப் பித் தாக்கப்படுவார்". அதாவது தக்க காரணமில்லாமல் யாரும் கொல்லப்படக் கூடுமாயின் கொல்லப்பட்டவரின் குடும் பத்தார் 'கிஸஸ்'ஸுக்குப் பகரமாக இரத்த ஈட்டுப் பணம் பெற்

*றுக்கொள்ள அல்லது மன்னித்து விட முன் வராது விடுவரா யின் கொன்றவர் கொல்லப்படுவார். அந்த மனிதரைப் பிரதி யாகக் கொல்ல, அல்லது இரத்த ஈட்டுப் பணம் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கக் கூடுமாயின் விசுவாசியர் அனைவரும் - கொலையாளியின் குடும்பத்தார் உட்பட - அவர்மீது விதிக் கப்பட்ட தீர்ப்பினை நிறைவேற்றி வைப்பதில் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். அவர் எவ்வளவுதான் நெருங்கிய உற வினராக இருப்பினும் கூட, அவரை யாரும் பாதுகாக்க முயலக் கூடாது. ஏனெனில் அங்கம் 22 கூறுகின்றது: "இந்த ஆவணத் தில் கூறப்பட்டனவற்றை ஏற்று, இறைவனையும், இறுதி நாளையும் விசுவாசங் கொண்டுள்ள ஒரு விசுவாசி, தீங் கிழைப்பார் ஒருவருக்கு உதவி செய்வதோ, அவருக்குத் தஞ்சம் அளிப்பதோ தகுமானதல்ல; இறைவனின் சாபமும், இறுதி நாளின் போது அவனது கோபமும் அவர் மீது ஆவதாகும். அவரிடமிருந்து பாவ மன்னிப்போ, ஈட்டுப் பணமோ பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது." தீங்கிழைப்பவர் இறை வனின் கட்டளையை மீறிச் செல்பவராவார். எனவே அவர் தண்டிக்கப்படுவதை யாரும் தடுத்தல் தகாது. தீங்கிழைப் பவருக்கு யாரும் தஞ்சமளிக்கக் கூடுமாயின் அல்லாஹ் அவர் மீது சாபமிடுவான். அவருடன் கோபம் கொண்டிருப்பான். குற்றமிழைத்தவருக்குத் துணை போனமைக்கான பாவத்துக் குரிய மன்னிப்பு ஏதும் அவருக்குக் கிட்டாது. அவரிடமிருந்து எந்த ஈட்டுப் பணத்தைக்கூட அவன் பெற்றுக்கொள்ள மாட் டான்.*

*விசுவாசியர்க்கிடையிலான சமூக நல பாதுகாப்பு, தேவையானோர்க்கு - முப்ராஹ்[20] (பெருங்கடனில் அமிழ்ந் துள்ளவர்) - உதவுவதனை வேண்டி நிற்கின்றது. அவர் யுத்தக் கைதியாக இருப்பாராயின் அவருக்குரிய ஈட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டும். அவர் தவறுதலாகக் கொலை ஏதும் செய்து விடுவாராயின் அங்கம் 12-இல் கூறப்பட்டபடி அவர் கள் இரத்த ஈட்டுப்பணம் செலுத்த வேண்டும். இப்ன் ஸஅத், தேவையானோர் (முப்ரஹ்) என்போர், மக்கள் மத்தியில்*

*20.* المفرح

வாழ்ந்தாலும் தமக்குப் போஷகர் (மவ்லா) யாரும் இல்லாதிருப் போர் எனக்கூறுவார். இரத்த ஈட்டுப் பணம் செலுத்துவதன் மூலம் அல்லது வேறு உதவிகள்செய்வதன் மூலம் உதவுவது, சார்பாளர் (வலாஅ) சார்ந்த கடமைப்பாடாகும் என்பது தெளிவு. ஆனால் யாரேனும் ஒருவர் தனக்கென ஒரு கோத் திரத்தை அல்லது போஷகரைக் கொண்டிராவிடின் விசுவாசி யர்கள் அனைவருமே அவரது போஷகர்களாகி அனைவரும் அவருக்குத் துணை செய்ய வேண்டியதாகிவிடும். அவர் குற்றம் ஏதும் இழைப்பாராயின் அவருக்குத் துணை செய்ய கோத்திரம் ஏதும் இல்லாத நிலையில் அவர் சார்பில் அரச திறைசேரி அதனைச் செலுத்த வேண்டும்.

அங்கம் 12ஆ, நேச உணர்வுகள் பற்றிய கோட்பாட்டை உறுதி செய்கின்றது. என்றாலும் போஷக சார்பு உரிமைகளை விஞ்சுவதாக அது அமையவில்லை. அதாவது, விடுவிக்கப் பட்ட தமது அடிமைகள் மீது எஜமான் கொண்டிருந்த உரி மைகளை. விடுவிக்கப்பட்ட அடிமையர் எவருடனும், அவரது முன்னாள் எஜமானரின் அனுமதியோடன்றி யாரும் உடன் பாடுகள் ஏற்படுத்திக் கொள்தல் இயலாது. முன்னம் மேற் கொள்ளப்பட்டிருந்த கூட்டு உடன்படிக்கைகளை இஸ்லாம் உறுதி செய்தது பற்றிய ஒரு ஹதீஸ் உள்ளது: மக்காவை வெற்றி கொண்ட வேளை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) மக்களை நோக்கிக் கூறினார்கள்: "ஜாஹிலிய்யாவில் செய்து கொள்ளப் பட்ட கூட்டு உடன்படிக்கைகள் அனைத்தையும் இஸ்லாம் உறுதி செய்யும். ஆனால் இஸ்லாத்தில் கூட்டு உடன்படிக் கைகள் இல்லை."

அங்கம் 14, அவிசுவாசியரிலும் மேலான விசுவாசியரின் தரத்தை உறுதி செய்கின்றது: "அவிசுவாசியர் ஒருவரின் சார்பாக, விசுவாசியொருவர், மற்றொரு விசுவாசியைக் கொல்ல மாட்டார்; விசுவாசியொருவருக்கு எதிராக அவிசு வாசியர்க்கு உதவவும் மாட்டார்." இது அவிசுவாசியொரு வரின் இரத்தம், விசுவாசியொருவரின் இரத்தத்துக்கு ஈடாக அமையாது என்பதை உணர்த்துகின்றது. மேலும் இது, விசு வாசியர் மத்தியிலான நெருங்கிய இணக்கத்தையும் நட்புற

*வையும் உறுதி செய்வதோடு, அவிசுவாசியருடன் ஆன முன் னைய இணக்கங்களை வெட்டி விடுகின்றது.*

*அங்கம் 17, "விசுவாசியரிடையிலான சமாதானம் பிரித்துக் காண முடியாதது. இறைவனின் பாதையில் விசுவாசிகள் போராடும் போது சமாதானம் செய்து கொள்தல் இயலாது. நியதிகள் நியாயமானவையாகவும், அனைவர்க்கும் சமான மானவையாகவும் இருக்க வேண்டும்" என்பதனை உறுதி செய் கின்றது. யுத்தத்துக்கோ, சமாதானத்துக்கோ ஆன பிரகடனங் களைச் செய்யும் பொறுப்பு மக்களிடமன்றி, நபிகளாரிடமே விடப்பட்டது. அவர் யுத்தப் பிரகடனம் செய்வாராயின் விசுவாசியர் அனைவருமே எதிரியுடனான யுத்த கால நிலைக்கு உள்ளாகிவிடுவர். யாரும் எதிரிகளுடன் சமாதானத்துக்குச் செல்ல இயலாது. ஏனெனில் அவர் விசுவாசியர் அனைவரின தும் பொதுக் கொள்கைக்கியையவே செயற்பட வேண்டியுள் ளார். யுத்த முஸ்தீபுகளை தனியொரு கோத்திரத்தின் பொறுப் பில் விட்டு விடுதலும் இயலாது. விசுவாசியர் அனைவருக்கும் கட்டாயக் கடமைப்பாடாக (பர்ள்) அமைந் துள்ளது, ஜிஹாத். அவர்கள் யுத்தத்துக்குச் செல்லும் வேளை மாறிமாறி யுத்தத் தில் பங்குபற்றுவார்கள்: "எந்தவொரு தாக்குதலின் போதும், சவாரி செய்பவர் தன் பின்னால் இன்னொருவரை ஏற்றிக் கொள்ள வேண்டும்" -அங்கம் 18.*

*அங்கம் 15, இஸ்லாத்துக்கு முன்னமேயே வழங்கி வந்த தான பாதுகாப்பு அளிக்கும் கோட்பாட்டை (ஜிவார்[21]) உறுதி செய்து, ஒவ்வொரு முஸ்லிமுக்கும் பாதுகாப்பு அளிக்கும் உரிமையை அளித்தது. அவர் அளிக்கும் பாதுகாப்புக்குப் பங் கம் விளைக்க எவருக்கும் அனுமதியில்லை. இது விசுவாசியர்க் கிடையிலான நெருங்கிய நட்புறவுகளையும் வலியுறுத்தியது. நெருங்கிய நட்புறவானது அன்பையும் ஆதரவையும் அவாவி நிற்பது. ஆகவே ஒரு விசுவாசி, அவிசுவாசியருடன் நெருங்கிய நண்பர்களாக இருத்தல் இயலாது. "விசுவாசியர் ஒருவருக்கு ஒருவர் நண்பரும் பாதுகாவலரும் ஆவார்." "இறை நம்பிக்கை*

*21.* الجوار

*யாளர்களே! யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் (உங்க ளுடைய) நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவர்களில் சிலர், சிலருக்கு நண்பர்களாக இருக்கின்றனர். உங்களில் எவ ரேனும் அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொண்டால் அப் பொழுது நிச்சயமாக அவரும் அவர்களில் நின்றுமுள்ளவர் தாம்" (5:51)*

*"இறை நம்பிக்கையாளர்கள் (தங்களைப் போன்ற) இறை நம்பிக்கையாளர்களை விடுத்து நிராகரிப்பாளர்களை(த் தங்களின்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்ள வேண் டாம்" (3:28)*

*அங்கம் 20ஆ, அவ்ஸ்-கஸ்ரஜ் கோத்திரத்தோரில் சிலை வணக்கஸ்தர்களாகவே தொடர்ந்தும் இருந்து வந்தோர், குறைஷியருக்கோ அவர்களது வர்த்தகத்துக்கோ பாதுகாப்பு அளித்தல் கூடாது; அவர்களது வர்த்தகக் குழுக்களை முஸ் லிம்கள் இடை மறிக்கக் கூடுமாயின், அதனை அவர்கள் தடை செய்தலும் கூடாது. ஏனெனில் நபிகள் (ஸல்) அவர்கள் குறைஷியரின் வர்த்தக குழுக்களை இடை மறிக்கும் நோக்கில் மிகத் தீவிரமானவர்களாக இருந்தார்கள். அவ்ஸ்-கஸ்ரஜ் கோத் திரங்களில் பெரும்பான்மையினராக இருந்த முஸ்லிம்கள், தமது கோத்திரங்களின் சிலை வணக்கஸ்தர்களாயிருந்தோர் மீது இந்த நியதிகளை அமுல் செய்யும் பொறுப்பினராக இருந் தனர் என்பதில் ஐயமில்லை. முன்னம் யூதர்களுடனான ஒப்பந் தம் தீர்மானமாகிய வேளை யூதர்கள் இவ்வாறான ஒரு நிய திக்கு இணக்கம் தெரிவித்திருந்தார்கள். இந்த வாசகங்கள் மீள வும் குறிப்பிடப்பட்டுள்ளமை, நாம் முன்னர் கூறியது போல, இந்த ஆவணம் இரண்டு ஆவணங்களை உள்ளடக்கியது என்பதை உறுதி செய்கின்றது.*

*முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான ஆவணம், முஸ் லிம்களைச் சார்ந்தோரான யூதர்களை அன்பாகவும் நீதியாக வும் நடத்த வேண்டும் என்பதை ஒரு நியதியாகக் கொண் டிருக்க வேண்டும் என்பதும், அவர்களை ஒருவருக்கு ஒருவர்*

*எதிராகக் கிளறி விடவோ, பாதகங்கள் இழைக்கவோ கூடாது என்பதும், இந்த அங்கங்கள் எழுதப்பட்ட வேளை யூதர்களின் பிரசன்னம் இல்லாதிருந்த போதும் கூட, குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு. இஸ்லாமிய அரசின் ஒழுக்க நெறிகளிலான நேர்மைக்கு அங்கம் 16 ஓர் உதாரணம். கபடங்களுக்கும், துரோக நடவடிக்கைகளுக்கும் அதில் இடமில்லை என்பதையும் இது உறுதி செய்கின்றது.*

*முஹாஜிரூன் - அன்ஸார்க்கிடையிலான கூட்டு ஒப்பந்தத்து ஆவணத்தின் இறுதியில் அங்கம் 23, மதீனாவின் முஸ்லிம்கள் மத்தியில் எழக்கூடிய எந்த ஒரு வேறுபாடும் நபிகளாரின் தீர்ப்புக்கே முன் வைக்கப்பட வேண்டும் என உறுதி செய்தது: "நீங்கள் ஏதேனும் ஒரு விஷயத்தில் வேறுபாடு காணும் விவகாரங்கள் இறைவனதும் , முஹம்மதினதும் தீர்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்."*

XI

# யூதர்கள் ஒப்பந்தத்தை முறித்தலும் மதீனாவிலிருந்து வெளியேற்றப்படலும்.

நபிகள் (ஸல்) அவர்கள் தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நடந்து கொள்ளாத யூதர்கள் விரை விலேயே அதனை முறித்து விடலானார்கள். ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தமக்கான கடமைகளைப் புறக்கணித்து நடந்ததோடு, பகைமை பாராட்டவும் தொடங்கினார்கள் யூதர் கள். இதுவே அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேற்றப்படக் காரணமாக அமைந்தது. இந்த நிகழ்வுகளையும் அவற்றுக் கான நேரடி, மறைமுக காரணங்களையும் நாம் காண்போம்.

## பனூ கைனுகா வெளியேற்றப்பட்டமை[1]

### நிகழ்ந்த காலம்

பத்ரின் பின்னால் நிகழ்ந்தது இது என்பதில் உடன்பாடு காண்பர் வரலாற்றாசிரியர்கள். அல்-ஸுஹ்ரீ, இது ஹிஜ்ரி இரண்டாம் வருடம் ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது என்பார். அல்-வாகிதீ மேலதிகமாக ஷவ்வாலின் மத்தியில் ஒரு சனிக் கிழமை நிகழ்ந்தது என்பார்.

1. இந்த விடயம் குறித்த ஆதாரபூர்வமான விவரங்கள் பலவற்றை எனது மேற்பார்வையின் கீழ் அல்-ஷெய்க் அக்ரம் ஹுஸைன் அலி அவர்கள் 'மதீன யூதர்கள் பற்றிய அறிவிப்புகள்' எனும் தலைப்பில் நிகழ்த்திய ஆய்வுகளிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளேன். மதீனாவின் இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் முதுமானிப் பட்டத்துக்காக மேற்கொள்ளப்பட்டது இந்த ஆய்வு.

## இராணுவ நடவடிக்கைக்கான காரணம்

*பத்ரில் முஸ்லிம்கள் கண்ட வெற்றியின் பின்னர் யூதர்கள் சினமும், பொறாமையும் மீதூரப் பெற்றவர்களாய் வெளிப் படையாகவே தமது பகைமையைக் காட்டத் தொடங்கியமை தான் பனூ கைனுகா வெளியேற்றப்பட்டமைக்கான காரணம் எனக் காட்டுகின்றன ஸீறா ஆக்கங்கள்.*

*கைனுகா வெளியேற்றப்பட்டமைக்கான பின்னணியின் உளவியல் சூழல்களை நாம் சரிவர மதிப்பீடு செய்வதாயின் சில நிகழ்வுகளைக் கவனத்தில் கொள்ளல் அவசியம். உதாரண மாக, நபிகள் (ஸல்) அவர்கள் யூதர்களை அழைத்து அவர் களுக்குச் சில அறிவுரைகள் வழங்க விரும்பினார்கள். ஆக, பனூ கைனுகாவின் சந்தைப் பகுதியில் யூதர்களை விளித்தவர் களாக அன்னார் கூறினார்கள்: "ஓ யூதர்களே! குறைஷியருக்கு விளைந்தன உங்களுக்கும் விளையும் முன்னர் முஸ்லிம்களாகி விடுங்கள்." யூதர்கள் கூறினார்கள்: "ஓ முஹம்மதே! நாங்கள் உம்முடைய மக்களைப் போன்றவர்கள் என எண்ணிக் கொண் டீர் போலத் தெரிகிறது. அந்த யுத்தத்தினால் நீர் மதிமயங்கி விடாதீர். அது நடந்தது யுத்தம் பற்றிய அறிவேதும் இல்லாத மக்களுடன். அதனாலேயே அவர்களை நீர் வெற்றி கொண் டீர். இறைவன் பேரால் நிச்சயமாக, நாம் உம்முடன் யுத்தம் தொடுப்போமாயின் நாங்கள் தான் அஞ்சப்பட வேண்டியவர் கள் என நீர் அறிந்து கொள்வீர்." நபிகளாருடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் அன்னாரின் தலைமைத் துவத்தை யூதர்கள் ஏற்றிருந்தாலும் கூட, அவர்கள் அளித்த பதிலானது ஒரு சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் அமைந் துள்ளமை தெளிவு. இந்த அறிவிப்பு, இப்ன் இஸ்ஹாக் மூல மாக வருகின்றது. இது 'ஹஸன்' என்பார் இப்ன் ஹஜர். என்றா லும் அதன் இஸ்னாத், ஸைத் இப்ன்-ஸாபித்தின் விடுவிக்கப் பட்டவரான முஹம்மத் இப்ன் முஹம்மதையும் உள்ளடக்கி யுள்ளது. இப்ன் ஹஜரே, அவரை மஜ்ஹூல் (அறியப்படாத வர்) என்பார்.*

*இப்ன் ஹஜர் கூறியது போல இந்த அறிவிப்பு 'ஹஸன்' என நாம் கொண்டாலும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள*

மறுத்தமைதான் பனூ கைனுகா வெளியேற்றப்பட்டமைக் கான காரணம் ஆக அமைந்து விடாது. ஏனெனில் அப் போதைய கால அளவில் இஸ்லாம் இன்னமும் யூதர்களுடன் சமாதானமாக வாழ்வதனை அங்கீகாரம் செய்திருந்தது; மேலும் மதீனாவில் வாழ்ந்து வருவதற்கு யூதர்கள் இஸ்லாத் தை ஏற்றிருக்க வேண்டும் என்ற நியதி எதனையும் நபிகள் (ஸல்) அவர்கள் விதித்திருக்கவில்லை. மாறாக, ஆவணம் யூதர்களின் மத சுதந்திரத்தை உறுதி செய்திருந்தது. அவர்கள் வெளியேற் றப்பட்டமைக்கான காரணம் அவர்கள் காட்டிய பகைமை யுணர்வாகும். நிச்சயமாக மதீனாவின் உள்ளகப் பாதுகாப்புக்கு இது ஓர் அச்சுறுத்தலாய் விடும்.

கிட்டும் ஓர் அறிவிப்பின்படி, பனூ கைனுக்காக்களுள் ஒருவர், தமது சந்தைப் பகுதியில் வைத்து, எழும் வேளை விழுந்து விடக்கூடிய வகையில் முஸ்லிம் பெண் ஒருவரின் மேலாடையின் ஒரு முனையைக் கட்டி விட்டிருந்தார். எழுந்து நின்ற வேளை மேலாடை வீழ்ந்து விட, நிர்வாண கோலத் தராய் விட்ட பெண் கூக்குரலிட்டாள். குற்றம் இழைத்த யூதனை முஸ்லிம்களுள் ஒருவர் கொன்று விட்டார். பின் யூதர்கள் ஒன்று கூடி, அந்த முஸ்லிமைக் கொன்று போட்டனர். மரித்து விட்ட அந்த முஸ்லிமின் குடும்பத்தார், யூதர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் அனைவரதும் துணையை நாடினர். முஸ்லிம்கள் சினங் கொண்டவர்களாக, அவர்களுக்கும் பனூ கைனுகாவுக் கும் இடையில் பூசல்கள் பெருகின. இது ‘ளயீப்’ ஆனஓர் அறி விப்பு. ஏனெனில் இப்ன் ஹிஷாமுக்கும், அப்த்-அல்லாஹ் இப்ன் ஜஅபர் அல்-மக்ரமீக்கும் இடையில் இஸ்னாத் முறிவுற் றிருக்கின்றது. அத்துடன், அது கனிஷ்ட தாபிஇ ஒருவரான அபூ அவ்னுடன் முடிவுறுகின்றது. (ஹதீஸில்) அவரது தரா தரம் அறியப்பட்டில்லை. என்றாலும், வரலாற்று விவரணங் களுக்காக இந்த அறிவிப்பு கருத்தில் கொள்ளப்படலாம். பல ஸீறா ஆக்கங்கள் இந்த சம்பவத்தை உள்ளடக்கியனவாயுள் ளன. பனூ கைனுகாவின் வெளியேற்றம் வரையான நிகழ் வுகளின் தொடரில் இதுவும் இடம் பெறுகின்றது.

இஸ்லாத்தில் நுழைய மறுத்தமையல்ல பனூ கைனுகா வெளியேற்றப்பட்டமைக்கான காரணம். அவர்கள் மதீனா வின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்தமையும், தமது பகைமையை வெளிப்படையாகவே காட்டி நின்றமையுமே உண்மையான காரணம். இவை, கைனுகாவுடன் சமாதானமாக வும், அமைதியாகவும் வாழ இயலாது என்பதனை நபிகள் (ஸல்) அவர்களுக்கு உணர்த்துவனவாயின.

## முற்றுகை

பனூ கைனுகாவின் வெளியேற்றம் பற்றிய அறிவிப்பு ஸஹீஹ் ஆனது. (ஆஸிம் இப்ன்-உமர் இப்ன் கதாதாவின் அறிவிப்பு மூலம்) இப்ன் இஸ்ஹாக்கும், (இஸ்னாத் இல்லாமல்) அல்-வாகிதீயும் பனூ கைனுகாவின் முற்றுகை பற்றிய விவ ரணங்களைத் தருகின்றனர். ஹதீஸ் ஆய்வுகளின் தரத்தில் இந்த விவரணங்கள் ஸஹீஹ் என உறுதிப்படுத்தப்படவில்லை யாயினும் வரலாற்றாசிரியர்களும், ஸீறா கிரந்த கர்த்தாக்களும், இவ்விருவரதும் விவரணங்களை அறிவிப்புச் செய்துள்ளார் கள். என்றாலும், ஹதீஸ் வல்லுனர்கள் அறிவிப்புச் செய்யப் படலாம் என அனுமதியளித்துள்ளனவற்றுள் இந்த முற்று கையும் அடங்கியுள்ளது. வரலாற்றுத் திறனாய்வுகளின் பிரகாரம் இது ஏற்புடைத்ததாக அமைகின்றது. ஏனெனில் அவை, இஸ்னாத் ஸஹீஹ் ஆக இருக்க வேண்டும் முதலாய நியதிகள் விதிப்பதில்லை. வரலாற்று அறிவுக்காக இந்த அறி விப்புகள் ஏற்புக்குள்ளாகின்றன.

கைனுகா யூதர்கள் அப்த்-அல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூலின் நேச கோத்திரத்தார் என்றும், யூதர்களுள் தைரியம் மிகப் பெற்றவர்கள் இவர்கள் எனவும் அவர்கள் பெரிதும் பொற்கொல்லர்கள் எனவும், பனூ கைனுகா முற்றுகை சம் பந்தப்பட்ட அறிவிப்புகள் தெரிவிக்கின்றன. அவர்கள் பகை மையையும், வெறுப்பையும் வெளிப்படையாகவே காட்டி நின்ற நிலையில், யூதர்கள் துரோகம் இழைப்பார்கள் என நபிகளார் அஞ்சினார்கள். ஆக, துல்கஃதாவின் ஆரம்பம் வரை 15 தினங்களாக பனூ கைனுகா முற்றுகை இடப்பெற்றார்கள்.

*அதன் போது, மதீனாவில் நபிகளாருக்குப் பிரதியாக அபூ லுபாபா இப்ன் அல்-முன்திர் நியமிக்கப்பட்டிருந்தார். முற்று கையின் போது வெண்ணிறக் கொடி தாங்கியவராக நின்றார் ஹம்ஸா இப்ன் அல்-முத்தலிப். முற்றுகை பலமுற்றுச் செல்ல, பனூ கைனுகா நபிகளாரின் தீர்ப்பினை ஏற்க இணங்கினர். அதன்படி அவர்களது செல்வங்கள் நபிகளார் வசமாகும். யூதர்கள் தம் பெண்களையும் குழந்தைகளையும் வைத்துக் கொள்வர். கைனுகா யூதர்கள் கட்டப்பட வேண்டும் எனக் கட்டளை பிறப்பித்தனர் நபிகளார். அவ்வேளை அவர்களது நேசராக இருந்த அப்த்-அல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூல் நபிகள் (ஸல்) அவர்களை அணுகி வற்புறுத்தல் செய்யலானார்: "…. கவசங்களின்றி நானூறு பேர்; கவசங்களுடன் முன்னூறு பேர்! சிவந்தோர், கறுத்தோர் அனைவரிடமிருந்தும் அவர்கள் என்னைக் காப்பாற்றியுள்ளார்கள். ஒரே நாளில் அவர்கள் எல்லோரையும் வெட்டிப் போடுவீரா?" நபிகளார் கூறினார் கள்: "அவர்கள் உம்முடையவர்களாவர்." மதீனாவிலிருந்து பனூ கைனுகா வெளியேற்றப்பட வேண்டும் என பணிக்கப் பட்டு அதற்கான பொறுப்பு உபாதா இப்ன் அஸ்ஸாமித்திடம் வழங்கப்பட்டது. யூதர் அஸ்ரஆவுக்குச் சென்றார்கள். கைனு காவின் செல்வங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் பொறுப்பு அளிக்கப் பெற்றவர், முஹம்மத் இப்ன் மஸ்லமா அல்-அன் ஸாரீ. அவற்றில் ஐந்தில் ஒரு பங்கு நபிகளாரிடம் ஒப்படைக் கப்பட்ட பின்னர், எஞ்சியவை தோழர்கள் மத்தியில் யுத்தப் பொருட்களாகப் பங்கீடு செய்யப்பட்டன.*

பனூ கைனுகாவின் வெளியேற்றம் குறித்து மேல்வரும் குர்ஆன் வாசகங்கள் அருளப்பட்டன:

*(நபியே!) நிராகரிப்போரிடம் நீர் கூறுவீராக! "வெகு விரைவில் நீங்கள் வெற்றி கொள்ளப்படுவீர்கள்; அன்றியும் (மறுமையில்) நரகத்தில் சேர்க்கப்படுவீர்கள், இன்னும் (தங்கு மிடமான) அது மிகக் கெட்டதாகும்." சந்தித்த இரு சேனை களிலும் உங்களுக்கு ஓர் அத்தாட்சி திட்டமாக உள்ளது; ஒரு சேனை அல்லாஹ்வின் பாதையில் போரிட்டது; பிறிதொன்று நிராகரிப்பாளர்களாக இருந்தது. . . . (3:12-13)*

*சில குர்ஆன் விரியுரையாளர்கள், மேல்வரும் குர்ஆன் வாசகம், பனூ கைனுகாவுடன் அப்த் அல்லாஹ் இப்ன் உபை கொண்டிருந்த நெருங்கிய நட்பு குறித்துப் பேசுவதாகக் கூறுவர்:*

*"இறை நம்பிக்கையாளர்களே! யூதர்களையும் கிறிஸ்தவர் களையும் நண்பர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அவர்கள் சிலர் சிலருக்கு நண்பர்களாக இருக்கின்றனர். உங்களில் எவரே னும் அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொண்டால், அப் பொழுது நிச்சயமாக அவரும் அவர்களில் நின்றுமுள்ளவர் தாம். நிச்சயமாக அல்லாஹ், அநியாயக்கார சமூகத்தினரை நேர்வழியில் செலுத்த மாட்டான் (5:51)*

*இதே வேளை உபாதா இப்ன் அஸ்-ஸாமித்தும் யூதர்களுள் பல தோழர்களைக் கொண்டிருந்தார். அவர்கள் அனை வரையும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமாகத் தான் கைவிட்டுவிடுவதாகக் கூறினார் உபாதா: "ஓ அல்லாஹ்வின் துதரே! யூதர்களுள் நான் ஏராளமான நண்பர்களைக் கொண்டிருக்கின்றேன். என்றாலும் யூதர்களுடனான நட்புற வை நான் கைவிட்டு, அல்லாஹ்வினதும், அவனது தூதரின தும் பக்கல் திரும்புகின்றேன். நான் அல்லாஹ்வையும் அவ னது தூதரையுமே எனது நண்பர்களாக ஏற்கின்றேன்."*

*வஞ்சகமே நிறைந்திருந்த மனத்தினரான அப்த்-அல்லாஹ் இப்ன் உபைக்கும், நபிகளாரின் போதனைகளால் வளப்படுத் தப்பட்டிருந்த உபாதா இப்ன் அஸ்ஸாமித்தின் தன்மைகளுக் கும் இடையில் தெளிவான வித்தியாசங்கள் காணப்பட்டன. ஜாஹிலி அஸபியா மூலமான கோத்திர அடிபணிவு, சுய நலன் கள் அனைத்தினதும் சாயல்கள் களைந்தவராக மாறியிருந்தார் உபாதா. தனது சொந்த நலன்களுக்கும் மேலாக, தனது விசு வாசத்தின் மூலமான நலன்களுக்கே முக்கியத்துவம் அளித் தார் அவர். இதய சுத்தியும், உள்ளத்து உறுதியும் வாய்க்கப் பெற்ற விசுவாசியர் ஒருவருக்கான நல்லதோர் உதாரணம் ஆவார் உபாதா.*

## கஅப் இப்ன் அல்-அஷ்ரப் கொல்லப்படுதல்

வரலாற்றாசிரியர்களுள் பொரும்பாலானோர், இப்ன் அல்-அஷ்ரப் கொல்லப்பட்டமை நிகழ்ந்தது பத்ருக்குப் பின்னரும், பனூ அல்-நளீருக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முன்னரும் என்பதில் உடன்பாடு காண்பர். அல்-வாகிதீ இது நிகழ்ந்த தினத்தையும் சரிவரக் குறிப்பிட்டுக் கூறுகின்றார்: மூன்றாம் வருடம், ரபியுல் அவ்வல் 14-ம் நாள். ஹிஜ்றாவின் 25-ம் மாதத்தின் ஆரம்பம் அது. கஅப் இப்ன் அல்-அஷ்ரபின் தந்தையார் தாயிஇ[2] கோத்திரத்தின் ஓர் அராபியர். தாயார் அகீலா பின்த் அபூ அல்-ஹகீக் யூத கோத்திரமான பனூ அல்-நளீர்களைச் சார்ந்தவர். கவிதை புனைவதில் திறம் படைத் திருந்த கஅப் இஸ்லாத்தின் எதிரியாகத் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டிருந்தார். பத்ரில் முஸ்லிம்கள் கண்டிருந்த வெற்றி அவரது மனதில் பெரும் ஆதங்கத்தையும், எரிச்சலை யும் ஏற்படுத்தியிருந்தது. மக்கா நோக்கிச் சென்ற அவர், அங்கு, பத்ருக்காகப் பழி வாங்க வேண்டுமெனக் குறைஷியர்களை ஊக்குவித்தார்; நபிகளாரையும் அன்னாரைச் சார்ந்தோரையும் இகழ்ந்துரைக்கும் கவிதைகளைப் பாடி வந்தார்; பத்ரில் உயிரிழந்த குறைஷியருக்காக இரங்கலுரைகள் நிகழ்த்தினார். பின்னர் மதீனாவுக்குத் திரும்பி வந்த கஅப், முஸ்லிம் பெண் களை இகழ்ந்தும், அவதூறு செய்தும் பாடல்கள் யாக்கலா னார். ஆக, கஅப் கொல்லப்பட வேண்டும் எனக் கட்டளை பிறப்பித்தனர் நபிகள் (ஸல்) அவர்கள்.

அல்-புஹாரீ, கஅப்பின் கொலை குறித்த விரிவான விவர ணம் ஒன்றனை அளித்துள்ளார். அதன் சாராம்சம் வருமாறு: நபிகள் (ஸல்) அவர்களின் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்று முன்வந்த முஹம்மத் இப்ன் மஸ்லமா அல்-அன்ஸாரீ, எந்த ஒரு தந்திரோபாயம் மூலமும் கஅப்பைக் கொல்வதற்கான அனுமதியை வேண்டி நின்றார். நபிகளாரின் இணக்கத்தை ஈட்டிக் கொண்ட மஸ்லமா, கஅப்பிடம் சென்று, அவர் (முஹம்மத்) தம்(முஸ்லிம்கள்)மிடமிருந்து

2. طيء

வற்புறுத்தி வரும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தாம் பெரிதும் சிரமங்களுக்குள்ளாவதாகக் குறைப்பட்டுப் பேரீத் தம் பழம் ஒரு தொகையைக் கடனாகத் தந்து உதவுமாறு வேண்டினார். கடனுக்கு அடமானமாக பெண்களை அல்லது குழந்தைகளை வேண்டினார் கஅப். அது, பாரிய மானக்கேட்டைக் கொண்டு வரும் என்பதால் அதனை மறுத்துரைத்த மஸ்லமா, பிரதியாக யுத்த ஆயுதம் ஒன்றனை வைக்க ஒப்புக் கொண்டார். கஅப் இணங்கினார். அன்றைய இரவு, மஸ்லமா ஒரு தோழருடன் வந்தார். அவர் அபூ நாஇலா, கஅப்பின் ரளாஅ்[3] - பால்குடி சகோதரர். அவர்களுடன் மேலும் மூன்று தோழர்கள் உடன் இருந்தனர். அவர்கள் கஅப்பை அழைத்தனர். கீழிறங்கி வந்த கஅப், அவர்களுடன் சேர்ந்து நடந்தார். ஏற்கெனவே திட்டமிட்டிருந்த படி, அவர்கள் கஅப்பின் தலை மயிரின் நறுமணத்தை நுகர்வது போலப் பாசாங்கு செய்து அவரைத் தம் வாள்களால் தாக்கினார்கள். தாக்குதலின் வேகத்தில் அவர்களுள் ஒருவர் தம் தோழர்களாலேயே வெட்டப்பட்டுக் காயங்களுக்குள்ளானார். யூதர்கள் இக்கொலை குறித்து நபிகளாரிடம் முறையீடு செய்யவே, அன்னார் கஅப்பின் பகைமை குறித்தும், இகழ்ச்சியுரைகள் குறித்தும் அவர்களுக்குக் கூறினார்கள். யூதர்களும், ஏனைய அவிசுவாசியரும் நிகழ்ந்தன குறித்து அதிர்ச்சிக்கும் பீதிக்கும் உள்ளாகியிருந்தனர். அவரவர்களைப் பற்றிய அச்சமும் அவர்களுள் பெருகியிருந்தது. தம்முடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி அவர்களை அழைத்தார்கள் நபிகள் (ஸல்) அவர்கள். ஆக, பொது ஆவணம் ஒன்று எழுதப்பட்டது. அபூ தாவூத் இது குறித்துச் செய்துள்ள அறிவிப்பு ஏனைய ஆதாரங்களாலும் உறுதி செய்யப்பட்டு வரலாற்று ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. பத்ருக்கு முன்னர் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை, கஅப் இப்ன் அல் அஷ்ரபின் கொலை யூதர்கள் மத்தியில் ஏற்படுத்தி வைத்த பீதியைத் தொடர்ந்து, மீளவும் உறுதி செய்யும் வகையிலேயே இந்த ஆவணம் எழுதப்பட்டது போலத் தெரிகின்றது.

3. الرضاعة

இப்ன் அல்-அஷ்ரபின் கொலையானது ஒரு துரோக நட வடிக்கை போலத் தோற்றலாம். என்றாலும், சற்றே ஆழமாகச் சிந்திக்கும் போது, இதற்கு ஆதாரமாக அமைந்தது கஅப்பின் துரோக நடவடிக்கைகளே என்பது புலனாகும். பனூ அல்-நளீ ரும் ஏனையோரும் ஏற்கனவே சமாதான ஒப்பந்தத்தில் இணைந் திருந்த கூட்டில் ஒருவராக இருந்தவர் கஅப் இப்ன் அல்-அஷ்ரப். அரசின் தலைமைப் பொறுப்பில் இருந்த நபி களாரை அவதூறு செய்தவர் அவர். முஸ்லிம்களின் எதிரிகளான குறைஷியருள் மர ணித்தோருக்காக இரங்கி அனுதாபம் காட்டியவர்; இவற்றால், இப்ன் அல்-அஷ்ரப் ஒப்பந்தத்தை முறித்து முஸ்லிம்கள் மீது போர்ப் பிரகடனம் செய்தவராகவே இருந்தார். ஆக, அவரது இரத்தம் சிந்தப்படுதல் நியாயமானதே. தன்னால் நம்பப்பட்டவர் களால் ஏமாற்றப்பட்டு அவர் கொல்லப்பட்டமை, முஸ்லிம்கள் மீது போர்ப் பிரகடனம் செய்துள்ள ஒருவரைப் பொறுத்த மட் டில் அனுமதிக்கப்படக் கூடியது - ஜாஇஸ்[4] - ஆகும். அதுவும் நபிகளாரின் கட்டளையின் பேரிலேயே நிறைவேற்றப்பட்டது.

எவ்வாறாயினும் நபிகளார் (ஸல்) அவர்கள், இப்ன் அல்-அஷ்ரபின் குற்றங்களுக்கு பனூஅல்-நளீர் மீது குற்றம் சாட்ட வில்லை. அவர் இழைத்த குற்றங்களுக்கு அவர் மட்டும் கொல் லப்படுவது போதுமானதாக இருந்தது. நபிகளார் பின்னர் பனூ அல்-நளீருடன் தம் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டார் கள். எவ்வாறாயினும் கஅப்பின் கொலை அவர்களுள் பாரிய தொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை காரணமாக, ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்ட நிலையிலும், அவர்கள் நபிகளாருக்கு எதி ரான சதிகளில் ஈடுபடலானார்கள். ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட் டமைக்குக் காரணம் நல்லெண்ணங்கள் அல்ல; அச்சமே. பின்னைய நிகழ்வுகள் இதனையே சித்தரிப்பனவாயின.

## பனூ அல்- நளீர் வெளியேற்றப்பட்டமை

இரண்டு அறிவிப்புக்கள், ஒவ்வொன்றும் ஸஹீஹ் இஸ் னாத்துடன் பனூ அல்-நளீருக்கு எதிரான நடவடிக்கைகள் பத்ர் யுத்தத்தின் பின்னர் நிகழ்ந்தன எனக் காட்டுகின்றன:

4. جائز

*முதலாவது அறிவிப்புச் செய்தவர் அல்-ஸுஹ்ரீ. அவர் கூறினார்: "அப்த்-அல்லாஹ் இப்ன் அப்த்-அல்-ரஹ்மான் இப்ன் கஅப் இப்ன் மாலிக் என்னிடம், நபிகளாரின் தோழர்களுள் ஒருவரிடமிருந்து கூறினார்."*

*இரண்டாவது, ஆயிஷாவிடமிருந்து உர்வா அறிவிப்புச் செய்தது - ஆயிஷா குறிப்பிடப்பட்டுக் கூறப்படவில்லை - கைர் மஹ்பூள்[5] என அல்-பைஹகீ கூறிய போதிலும் கூட. என்றாலும் அல் தஹபீ, ஆயிஷா குறிப்பிடப்பட்டதாகக் கூறுவார். நம்பிக்கைக்குரிய ஓர் அறிஞராலேயே இவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என நான் எண்ணுகின்றேன். இது ஏற்புக்குரியதே. அல்-பைஹகீ மட்டும் தான் இந்த அறிவிப்பு முர்ஸல் என்பதற்கான காரணங்களைக் கூறுவார். உர்வாவிட மிருந்து கிட்டும் ஒரு முர்ஸல் அறிவிப்பு பத்ரின் பின்னர் ஆறு மாத காலமளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது எனக் கூறுகின்றது.*

*அல்-பைஹகீ, உர்வாவிடமிருந்து மற்றோர் அறிவிப் பினைச் செய்துள்ளார். அதன்படி இந்த நடவடிக்கை ஹிஜ்ரி மூன்றாம் வருடம் முஹர்ரம் மாதம் நடைபெற்றது. இது முதலாவது அறிவிப்புடன் இணங்கிச் செல்கின்றது. ஏனெனில் பத்ர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமழான் 17-இல் நிகழ்ந்தது. இந்த செய்தியை மூஸா இப்ன் உக்பாவும் அறிவிப்பார். உர்வா இரண்டாம் தலைமுறை (தாபிஇ)யின் மிக்க உயர் தரத்திலான ஒரு முஸ்லிம். மூஸா கனிஷ்ட தரத்தில் உள்ளவர். அவர்கள் வரை பின் செல்லும் இஸ்னாத்தில் இணைந்துள்ள சிலரின் வாழ்க்கைக் குறிப்புகளை என்னால் கண்டு கொள்ள இயல வில்லை. இன்றேல், இந்த அறிவிப்பு 'ஹஸன்' ஆகும்.*

*ஹிஜ்ரி நான்காம் ஆண்டு படையெடுப்பு நிகழ்ந்ததாகக் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். அல்-வாகிதீயும், இப்ன் ஸஅதும், இஸ்னாத்கள் ஏதும் இன்றி ஹிஜ்றாவின் முப்பத்தேழாம் மாதம் ரபியுல் அவ்வலில் இது நிகழ்ந்தது என்பர். ரபியுல் அவ்வலின் ஒரு நிகழ்வே இது என இப்ன் ஹிஷாமும் உடன்*

5. غير محفوظ

*படுவார். ஸீறா கிரந்த கர்த்தாக்கள் பலரும், யுத்தத்தின் காலம் குறித்துப் பேசும் போது, இப்ன் இஸ்ஹாக்கையே பின்பற்று வோராயினர். இந்த யுத்தம் பத்ரின் பின் ஆறு மாதங்களில் நடந் தது எனக் கூறும் போது, அல்-ஸுஹ்ரீ, ஒன்றில் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளார் அல்லது தவறு இழைத்துள்ளார் எனக் கருத்துத் தெரிவிப்பார் இப்ன் அல்-கையிம். இது உஹதின் பின்னர் நிகழ்ந் தது என்பதில் உறுதியாக இருக்கும் அவர், பெரும்பாலான ஸீறா, மகாஸி கிரந்த கர்த்தாக்களின் அபிப்பிராயங்களுடன் இணக்கம் காண்கின்றார். ஹதீஸ் மதிப்பீட்டு உறுதிகளைப் பொறுத்த மட்டில் இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்பினை விட, அப்த் அல்-ரஹ்மான் இப்ன் அப்த்-அல்லாஹ் இப்ன் கஅப்பின் அறிவிப்பு பலம் வாய்ந்தது எனக் கருதுகின்றார் இப்ன் ஹஜர். என்றாலும் பனூ ஆமிரின் இருவர் தற்செயலாகக் கொல்லப்பட் டமைக்கு இரத்த ஈட்டுப் பணம் செலுத்துவதுடன் சம்பந்தப்பட் டது தான் பனூ அல்-நளீர் வெளியேற்றப்பட்டமைக்கான காரணம் என்பதை நிறுவ முடியுமாயின் இப்ன் இஸ்ஹாக்கின் கூற்றை நாம் ஏற்கலாம் எனவும் அவர் கூறுவார். ஏனெனில் பீர்-மஊனா[6] சம்பவங்கள் நிகழ்ந்தது உஹதின் பின்னர் என்பதில் வரலாற்றாசிரியர்கள் உடன்பாடு காண்பர்.*

*படையெடுப்பின் காலம் குறித்த ஏனைய அறிவிப்புகள் மேல்வரும் குர்ஆன் வாசகத்துக்கான விரிவுரைகளில் கொடுக் கப்பட்டுள்ளன:*

*இறை நம்பிக்கையாளர்களே! உங்களின் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடையை நினைத்துப் பாருங்கள்; ஒரு கூட்டத்தினர் உங்களின் பக்கம் தங்களுடைய கைகளை அவர்கள் நீட்ட நினைத்த பொழுது அவர்களுடைய கைகளை உங்களை விட்டும் அவன் தடுத்தான்; அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள் - அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் முழு நம்பிக்கை வைக்கட்டும்இ (5:11)*

*நபிகளாரைக் கொன்றுவிட பனூ அல்-நளீர் முனைவுகள் மேற்கொண்ட நிலையில், அல்லாஹ் தன் அருளினால் அன்*

*6.* بئر معونة

*னாரைக் காப்பாற்றியமை குறித்தே இந்த வாசகம் அருளப் பெற்றதாக அறிவிப்புகள் கூறுகின்றன. இந்த அறிவிப்பில் பல பலவீனங்கள் காணப்பட்டாலும், ஏனைய அறிவிப்புகளுடன் இதனை ஒன்றிணைத்துக் காணும் போது அவை ஒன்றை யொன்று ஆதரிப்பனவாகி இதுவும் ஏற்புக்குரிய ஆதாரமாகி விடுகின்றது. இந்த ஆதாரங்கள் அனைத்தும் இப்ன் இஸ்ஹாக் கின் கருத்தினை ஆதரிப்பனவாக உள்ளன. என்றாலும் தீர்க்க மான பதிலின்றி கேள்வி இன்னமும் தொக்கிக் கொண்டிருக் கின்றது - பனூ அல்-நளீருக்கு எதிரான யுத்தம் நிகழ்ந்தது எப்போது?*

*அறிவிப்புகள் அனைத்தையும்ஆராய்ந்த இப்ன் ஹஜர் எவை பலம் வாய்ந்தன எனக் கூறினாலும் தீர்க்கமான ஓர் அபிப்பிராயத்தை முன்வைக்காது விட்டார். பனூ அல்-நளீ ருக்கு எதிரான படையெடுப்பு பனூ ஆமிரின் இருவர் கொல் லப்பட்டமையுடன் தொடர்பு பட்டது என நிறுவ முடியு மாயின் இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்பு ஏற்கப்படலாம் என வும் கூறுவார் அவர். ஏராளமான அறிவிப்புகள், அவற்றுள் ளான சில பலவீனங்களின் மத்தியிலும் இப்ன் இஸ்ஹாக்கின் அபிப்பிராயத்தை ஆதரித்து நிற்கின்றன என்றே நான் கருது கின்றேன். இப்ன்-ஹஜர் தீர்க்கமான ஒரு முடிவு அளிக்காமைக் கான காரணத்தையும் இது தெளிவு படுத்துகின்றது. வரலாற்று அறிவிப்புகளின் மீது, ஹதீஸ் ஆய்வு சம்பந்தமான நியதிகள் பிரயோகம் செய்யப்படும் போது நெகிழ்வுத் தன்மையை நாம் கண்டுகொள்ளலாம். ஏனெனில் அவற்றில் ஏனைய கிரந்த கர்த்தாக்களின் நிபுணத்துவம், மகாஸி கிரந்த கர்த்தாக்களின் ஆலோசனைகள் என்பவற்றுக்கும் மதிப்பளிக்கப்படுகின்றது.*

## *படையெடுப்புக்கான காரணங்கள்*

*பத்ர் யுத்தத்தின் பின்னர் பனூ அல்-நளீர் நபிகளாரைக் கொல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். மூல ஆதாரங்கள் இரண்டு முனைவுகள் குறித்துப் பேசுகின்றன. முதலாவது முனைவு மேற்கொள்ளப்பட்டது, பனூ அல்- நளீருக்கு, மக்கத்துக் குறைஷியர் அனுப்பியிருந்த செய்தியின்*

பின்னர். அதில், நபிகளாரை எதிர்த்து பனூ அல்-நளீர் போர் தொடுக்காது விடின், நளீர் குறைஷியரால் தாக்கப்படுவர் எனக் கூறப்பட்டிருந்தது. குறைஷியரின் வேண்டுகோளுக்கு இணங் கியவர்களாக பனூ அல்-நளீர் துரோக நடவடிக்கைகளில் ஈடு படலாயினர். யூதர்கள், நபிகள் (ஸல்) அவர்களுக்கு அனுப்பிய ஒரு செய்தியின் மூலம், தமது தோழர்கள் முப்பது பேருடன் தம் மைச் சந்திக்க வரும்படி அழைப்பு விடுத்தார்கள். அதே தொகை யினரான தமது ரப்பிகளுடன், மதீனாவின் மத்திய பகுதியிலுள்ள ஓர் இடத்துக்கு அவர்கள் வருவர். அங்கே நபிகளார் கூறுபவற் றை அவர்கள் செவிமடுப்பார்கள். அவற்றை ரப்பிகள் ஏற்கக் கூடு மாயின் யூதர்கள் அனைவரும் மதம் மாறுவர். இரு சாராரும் நெருங்கி வந்த வேளை யூதர்கள் மற்றொரு செய்தியை அனுப் பினார்கள். அதன்படி, நபிகளார் தமது தோழர்கள் மூவருடன், யூதர்களின் ரப்பிகள் மூவரைச் சந்திக்க வேண்டும்; அம்மூவரை யும் நபிகளார் திருப்தி செய்யக் கூடுமாயின் யூதர்கள் அனை வரும் மதம் மாறுவர். சந்திப்புக்கு என வந்த யூத ரப்பிகள் மூவரும் தமது உடைவாள்களையும் கொண்டு சென்றிருந்தனர். என் றாலும், முஸ்லிமாகிவிட்ட ஒரு சகோதரனைக் கொண்டிருந்த ஒரு யூத மாது, இந்த சதி குறித்துத் தனது சகோதரனிடம் கூறி வைத்தார். அவர், அதனை நபிகள் (ஸல்) அவர்களுக்குத் தெரி யப்படுத்தினார். சந்திப்பைக் கைவிட்டுத் திரும்பிய நபிகளார், பின்னர் பனூ அல்-நளீரை முற்றுகை இட்டார்கள். தாம் அங் கிருந்து முற்றாக வெளியேற் றப்படுவதனை யூதர்கள் ஏற்கும் வரை முற்றுகை தொடர்ந்தது. தமது ஆயுதங்கள் தவிர்ந்து, அவர் களது ஒட்டகைகள் சுமக்கக் கூடிய அனைத்தையும் எடுத்துச் செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். தமது வீடுகளின் கதவுகளைக்கூட எடுத்துச் சென்றார்கள் பனூ நளீர். இந்த அறி விப்பின் இஸ்னாத் நம்பிக் கைக்குரியவர்களைக் கொண்டுள்ளது. நபித் தோழர்கள் அனைவருமே நம்பிக்கைக்குரியவர்கள் என்பதால், நபித் தோழரின் நாமம் குறிப்பிடப்படாவிடினும் இந்த இஸ்னாத்தின் வலு குறைந்துவிடவில்லை.

இரண்டாவது முனைவு இப்ன் இஸ்ஹாக்கினால் அறிவிக் கப்பெற்றுள்ளது. ஸீறா கிரந்த கர்த்தாக்களுள் பெரும்பா

*லோர் இந்த அறிவிப்பினை ஏற்றிருக்கின்றார்கள். அல்-ராஜிஇ நிகழ்வின் பின்னர், அம்ர் இப்ன் உமையா அல்-ளமரீ[7] தவறுதலாக, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்த ஒருகோத்திரத்தின் இரு அங்கத்தவர்களைக் கொன்று போட்டிருந்தார். அவர்களுக்கான இரத்த ஈட்டுப் பணம் செலுத்துவதற்காக அவர்களது நேச கோத்திரத்தோராயிருந்த பனூ அல்-நளீரின் உதவியை நாடினர் நபிகள் (ஸல்) அவர்கள். நளீரிடம் வந்த வேளை அன்னார் சுவரொன்றில் சாய்ந்தவராக அமர்ந்திருந்தார்கள். பாறாங்கல் ஒன்றனை அன்னார் மீது போட்டு அன்னவரைக் கொன்று போடலாம் எனத் தீர்மானித்தனர் யூதர்கள். என்றாலும் இறையுணர்வின் காரணமாக இதனைத் தெரிந்து கொண்ட நபிகளார் அங்கிருந்தும் அகன்று, மதீனா திரும்பி, உடனடியாகவே பனூ அல்-நளீர் முற்றுகையிடப்பட வேண்டும் எனக் கட்டளை பிறப்பித்தார்கள். ஆறு நாட்கள் தொடர்ந்த முற்றுகையின் பின்னர் பனூ-நளீர் தமது ஒட்டகைகள் சுமக்கக்கூடிய அனைத்தையும் கொண்டு செல்லக்கூடிய அனுமதியுடன், சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள இணங்கினார்கள். இந்த அறிவிப்பின் இஸ்னாத், கனிஷ்ட தாபிஇயான யஸீத் இப்ன் ரூமானுடன் முடிவடைகின்றது. என்றாலும் அதே போன்ற ஏனைய அறிவிப்புகளின் மூலம் இது உறுதி பெறுகின்றது. மூஸா இப்ன் உக்பாவின் மகாஸியில், உர்வா இப்ன் அல்-ஸுபைரின் அறிவிப்பு இதனைத் தொடர்ந்து வருகின்றது. மகாஸி கிரந்த கர்த்தாவான மூஸா இப்ன் உக்பா, இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்புக்குத் தான் சேர்த்திருந்தார்: "பனூ அல்-நளீர் குறைஷியருடன் இணைந்து சதி செய்தார்கள்; நபிகளாரை எதிர்த்து யுத்தம் செய்ய அவர்களை ஊக்குவித்தார்கள்; முஸ்லிம்களது பலவீனங்கள் குறித்து குறைஷியருக்கு அறிவுறுத்தினார்கள்."*

*இஸ்னாத்தைப் பொறுத்தளவில் அப்த்-அல் ரஸ்ஸாக்கின் அறிவிப்பு, இப்ன் இஸ்ஹாக்கின் அறிவிப்பிலிருந்தும் பலமானதாக அமைந்திருந்தாலும், ஸீறா கிரந்த கர்த்தாக்கள் பின்னவரையே தேர்ந்து கொண்டனர். இரண்டு அறிவிப்புகளும்,*

*7.* الضمري

நபிகளாரை வஞ்சகமாகக் கொன்றுவிட, பனூ நளீர் செய்த சதியே அவர்கள் முற்றுகை இடப்பட்டதற்கான காரணம் என்பதில் ஒன்றுபட்டிருக்கின்றன. யூதர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகச் சதிசெய்தல்; படையெடுப்புகளை ஊக்குவித்தல்; குறைஷியருக்கு முஸ்லிம் பலவீனங்கள் குறித்து அறிவுறுத்தல் என்பனவற்றைச் சரியாக எப்போது செய்தார்கள் என்பனவற்றைக் கூறாது விட்டு விட்டார் மூஸா இப்ன் உக்பா. முஸ்லிம்களை எதிர்த்துப் போராட, அவிசுவாசியரை அவர்கள் தூண்டி வந்தமை நன்கு அறியப்பட்டதே. அதன் விளைவே உஹுத் யுத்தம். மதீனாவின் சுற்றுப் புறங்களைத் தாக்கும் படி அபூ ஸுஃப்யானைத் தூண்டி வந்தார்கள் பனூ நளீர். இதனாலேயே உஹுதின் பின்னர் அவரைத் தொடர்ந்து சென்று தாக்கும்படி முஸ்லிம்கள் தூண்டப்பெற்றார்கள். இதன் விளைவு - கஸ்வத் அல்-ஸுவைக். முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் புரியக் குறைஷியரை ஊக்குவிப்பனவாக அமைந்த கஅப் இப்ன் அல்-அஷ்ரபின் கவிதைகள் மிக்க பிரசித்தம் பெற்றிருந்தன. இந்த விவகாரங்களை மூஸா இப்ன் உக்பா குறிப்பிட்டதற்குக் காரணம், முஸ்லிம் - பனூ நளீர் உறவுகள் சீர் கேடுற்றுச் சென்று, நளீரின் வஞ்சக நடவடிக்கைகளுடன் உச்சத்தை எட்டியமையைக் காட்டுவதாக இருக்கலாம். அவர்கள் முற்றுகையிடப் பெற்றதற்கான உடனடிக் காரணம் இதுவாயினும், அவர்களது பகை நடவடிக்கைகள் அதற்கு முன்னரும் தொடர்ந்து நிகழ்ந்து வந்தே உள்ளன.

## பனூ நளீர் வெளியேற்றம் பற்றிய நபிகளாரின் எச்சரிக்கைகள்

பனூ அல்-நளீரின் வெளியேற்றம் பற்றிய நபிகளாரின் எச்சரிக்கை குறித்து ஹதீஸ் ஆய்வின் அடிப்படையில் ஸஹீஹ் எனக் கொள்ளக்கூடிய அறிவிப்புகள் கிட்டவில்லை. எவ்வாறாயினும் அவர்களது வெளியேற்றம் பற்றி அப்த்-அல்லாஹ் இப்ன் உமர் அறிவிப்புச் செய்யும் ஒரு ஸஹீஹ் ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நபிகள் (ஸல்) அவர்கள், பனூ நளீரை பத்து தினங்களுக்குள் மதீனாவிலிருந்து

வெளியேறும்படி கூறினார்கள். அதன் பின்னர் காணப்படும் எவரும் சிரச்சேதம் செய்யப்படுவர். அவர்கள் வெளியேறிச் செல்லத் தயாராகினர். என்றாலும் அப்த்-அல்லாஹ் இப்ன் உபை இப்ன் ஸலூல், நபிகளாரின் கட்டளைளை உதாசீனம் செய்து, வெளியேறிச் சென்று விடாமல் அங்கேயே தங்கிவிடும் படி பனூ நளீரைத் தூண்டி, தான் அவர்களுக்கு உதவி நல்கு வதாகவும் கூறினார். இதனை ஏற்ற அவர்கள் தமது மறுப்பைக் கூறவே, முஸ்லிம்களால் அவர்கள் முற்றுகையிடப்பட்டனர். உர்வா இப்ன் ஸுபைர், மூஸா இப்ன் உக்பா ஆகியோருடன் முடிவடையும் இஸ்னாத்களுடன் என்னால் வாழ்க்கைக் குறிப்புகள் கண்டு கொள்ள இயலாது போன சில அறிவிப் பாளர்களையும் கொண்டுள்ள இரண்டு அறிவிப்புகள், பனூ அல்-நளீர் வெளியேற்றப்படக் கூடிய எச்சரிக்கை விடுக்கப் பெற்றமையைக் குறிப்பிடுகின்றன. ஸீறா ஆக்கங்களில் பல, இந்த எச்சரிக்கையை இஸ்னாத்கள் இல்லாமல் அறிவிப்புச் செய்கின்றன. பனூ அல்-நளீரை ஆதரிக்கும் வஞ்சகர்களின் மனப்பாங்குகள் குறித்த அறிவிப்புகள் பலவீனமானவையாக, ஆதாரங்களாகக் கொள்ள இயலாதனவாக அமைந்துள்ளன. என்றாலும்கூட, பல ஸஹீஹ் அறிவிப்புகள் மூலம் இவை பனூ அல்-நளீர் குறித்து அருளப்பட்டன என்பது உறுதியாகின்றது.

## பனூ-அல் நளீர் முற்றுகையும் அவர்களது வெளியேற்ற ஒப்பந்தமும்

பனூ அல்-நளீரை முற்றுகையிட்ட நபிகள் (ஸல்) அவர் கள் மேல்வருமாறு கூறியமை பற்றிய அறிவிப்பினை உறுதிப் படுத்தும் ஸஹீஹ் ஆதாரங்கள் பல இருக்கின்றன: “என்னுடன் ஓர் ஒப்பந்தம் செய்து அதன்படி ஒழுகுவதாக நீங்கள் வாக் களிக்கும் வரை உங்களது பாதுகாப்பை நான் உறுதி செய்ய மாட்டேன்.” ஒப்பந்தம் செய்து கொள்ள மறுத்தனர் யூதர்கள். எனவே நபிகள் (ஸல்) அவர்கள், அன்றைய தினம் முழுவதும் நளீருக்கு எதிரான போராட்டம் நடத்தும்படி பணித்தார்கள். அடுத்த நாள், அன்னார் பனூ நளீரை விடுத்து வீரர்களுடன் குதிரையில் சவாரி செய்தவர்களாக, பனூ குரைளாவை

அடைந்தார்கள். தம்முடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் படி பனூ குரைளாவை நபிகளார் வேண்ட, அவர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவே, அவர்களை விடுத்து அன்னார் சென்று விட்டார்கள். அதற்கு அடுத்த தினம், மீண்டும் பனூ அல்-நளீரிடம் வந்த நபிகளார், பிரஷ்டம் செய்வதை அவர்கள் ஏற்கும் வரை அவர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார் கள். ஆயுதங்கள் தவிர்த்து அவர்களது ஒட்டகைகள் சுமக்க முடிந்த அளவு செல்வங்கள் அனைத்தையும் கொண்டு செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தமது ஒட்டகைகளால் சுமக்க இயன்றன அனைத்தையும் அவர்கள் கொண்டு சென் றார்கள் - தமது வீடுகளின் கதவுகளைக் கூட. தமது வீடுகளை அழித்த அவர்கள் சிறந்த பலகைகளையும் எடுத்துச் சென்றார் கள்.

குர்ஆனிலும், ஹதீஸிலும் பனூ அல்-நளீர் முற்றுகையின் போது அவர்களது பேரீத்த மரங்கள் சில வெட்டி வீழ்த்தப் பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியேற்றம் பற்றிய ஒப்பந்தம் யூதர்களின் உயிர்கள் பறிக்கப்பட மாட்டா என்பதை உறுதி செய்தது. அவர்கள் தத்தம் வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். அவர்களது ஒட்டகைகள் சுமக்கக்கூடிய உடைமைகள் அனைத்தையும் அவர்கள் கொண்டு செல்லலாம் - அவர்களது ஆயுதங்களைத் தவிர. அவை முஸ்லிம்களின் வசமாகும். அவர்கள் சிரியா வுக்குப் பிரஷ்டம் செய்து அனுப்பப்பட்டார்கள் என ஸஹீஹ் அறிவிப்புகள் காட்டுகின்றன. அவர்கள் கைபருக்குச் சென்றார் கள் என்பார் இப்ன் ஸஅத். அவர்களது தலைவர்களான ஹுயை இப்ன் அக்தப், ஸலாம் இப்ன் அபூ அல்-ஹகீக், கினானா இப்ன் அல்-ரபீஇ ஆகியோர் கைபருக்கும், பெரும் பாலானோர் சிரியாவுக்கும் சென்றனர் எனக் காணும் போது, இரு அறிவிப்புகளும் தெளிவாகிவிடுகின்றன. இப்ன் ஸஅத் தின் அறிவிப்பு பலவீனமானது; அத்துடன் அது இஸ்னாத் இல்லாமல் அறிவிக்கப் பெற்றுள்ளது. என்றாலும் அவை பின்னைய நிகழ்வுகளாலும், அந்நிகழ்வுகள் குறித்த அறிவிப்பு களாலும் உறுதி பெறுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன:

*கைபர் யுத்தத்தில் அவர்கள் பங்குபற்றியமை; கினானா கொல்லப்பட்டமை; ஸபிய்யா கைப்பற்றப்பட்டமை; ஸலாம் இப்ன் அபூ அல்-ஹகீக் குறித்த விவரணங்கள் முதலியன. ஆக, பனூ அல்-நளீர் சிரியாவுக்குப் பிரஷ்டம் செய்யப்பட்டனர்; அவர்களுள் சிலர் கைபரில் குடியேறினார்கள் என விளக்கம் கொள்வதன் மூலம் அறிவிப்புகள் குறித்து நாம் சமாதானம் கண்டுகொள்ள முடிகின்றது. இப்ன் இஸ்ஹாக் இவ்வாறே அபிப்பிராயப்படுகின்றார். பனூ அல்-நளீரின் அங்கத்தவர் களுள் இருவர் முஸ்லிம்களாய் விட்டனர். எனவே அவர்கள் தமது உடைமைகளைத் தம் வசம் வைத்துக் கொள்ள முடிந் தது. அவர்கள் யாமீன் இப்ன் உமர் இப்ன் கஅப், அபூ ஸஅத் இப்ன் வஹ்ப் ஆகியோர். செல்வங்களும் பேரீச்சை மரங்களும், குர்ஆன் வாசகங்களின் படி நபிகளாருக்கு மட்டுமே உரிமையா யின.[8] அதிலிருந்து கிட்டிய வருமானத்தின் ஒரு பகுதியை வரு டாந்தம் அன்னார் தமது குடும்பத்தார் மீது செலவழித்தார்கள். மீதியை அல்லாஹ்வின் பாதையிலான போராட்டங்களுக்காக ஆயுதங்களும், குதிரைகளும் வாங்குவதற்குச் செலவிட்டார் கள். நபிகளார் யூதர்களின் நிலங்களை முஹாஜிரூன்களுக்குப் பங்கிட்டார்கள். அன்ஸார்களுள் இருவருக்கு மாத்திரமே அன்னார் நிலம் வழங்கினார்கள். அவர்கள், ஸஹ்ல் இப்ன் ஹனீப், அபூ துஜானா ஸம்மாக் இப்ன் கரஷா[9] ஆகியோர். ஏனெனில் அவர்கள் வறுமைப்பட்டவர்களாக இருந்தார்கள்.*

*பனூ அல்-நளீரின் பிரஷ்டம், மதீனாவில் யூதர்களதும், வஞ்சகர்களதும் செல்வாக்கு தூர்ந்து போகச் செய்தது. பனூ அல்-நளீரின் முற்றுகையின் போது பனூ குறைளா முஸ்லிம் களுடனான தமது ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டனர்.*

---

*8. அவர்களிடமிருந்து அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு (சிரமம் ஏதுமின்றி)க் கொடுத்த பொருள்களுக்காக (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் குதிரையின் மீதேறியோ, ஒட்டகத்தின் மீதேறியோ (போர் புரிந்து) கஷ்டப்படவில்லை. எனினும், அல்லாஹ் தான் நாடியவர்களின் மீது தன்னுடைய தூதருக்கு ஆதிக்கத்தைக் கொடுப்பான். அல்லாஹ் சகலவற்றின் மீதும் பேராற்றல் உடையவன். (ஸூறா அல்-ஹஷ்ர் 59: 6) ஸூறா அல்-ஹஷ்ர் அருளப்பட்டது பனூ அல்-நளீர் சம்பந்தமாகவே என்பர் புஹாரியும் முஸ்லிமும்.*

*9.* خرشة

அவர்கள் அதற்கியைய நடந்து கொள்ளும் சம்மதத்தை ஒழுங் குறக் கடைப்பிடித்து வந்தார்கள் - அகழ் யுத்த காலம் வரை. வஞ்சகர்களாக இருந்தோர் பனூ அல்-நளீருக்கு உதவி செய்வ தாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது விடவே, அவர் களை நம்பி இருப்பதன் பயனின்மையை யூதர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

பனூ அல்-நளீரின் பிரஷ்டம் மூலம் இஸ்லாத்தின் பலம் பெருகலாயது. இதுவரை காலமும் அன்ஸார்களின் நிலங் களையும், வீடுகளையும் நம்பியிருக்க வேண்டியிருந்த முஹா ஜிரூன்களுக்கு, பனூ அல்-நளீரிடமிருந்து கிட்டிய நிலங்கள் வழங்கப்பட்டன.

## பனூ அல்-நளீர் முஷ்ரிகூன்களைத் தூண்டி விட்டமை

முஸ்லிம்கள் மீதான பனூ அல்-நளீரின் பகைமை தொட ரவே செய்தது. அதனால், அவர்கள் குறைஷிய அவிசுவாசி யரையும் ஏனைய கோத்திரத்தோர்களையும் மதீனாவைத் தாக்கும் படியான தூண்டுதல்கள் அளித்து வந்தார்கள். இதுவே பின்னர் அகழ் யுத்தமாகப் பரிணமித்தது. இந்த விடயம் குறித்துப் பல அறிவிப்புகள் காணக் கிடைக்கின்றன. என்றா லும் அவை, முர்ஸல் அல்லது முன்கத்இ யாக இருப்பதால், அல்லது இஸ்னாத்தில் காணப்படும் ஓர் அறிவிப்பாளர் மஜ்ஹூல் ஆக இருப்பதால் பலவீனமானவையாகத் தோற்று கின்றன. என்றாலும் இந்த அறிவிப்புகள் அனைத்தையும் ஒன்று படுத்திப் பார்க்கும் போது கிட்டும் விவரங்கள் அனைத் தும் ஒன்றாலொன்று பலமுறச் செய்யப்படுவதனால் அவற்றை ஆதாரங்களாகக் கொள்ள இயலுமாகின்றது. இந்த அறிவிப்பு களின் வரிசைகள், உர்வா இப்ன் அல்-ஸுபைர், ஆஸிம் இப்ன் உமர் இப்ன் கதாதா, அப்த்-அல்லாஹ் இப்ன் அபூபக்ர் இப்ன் ஹஸ்ம், ஸஈத் இப்ன் அல்-முஸைப், மூஸா இப்ன் உக்பா ஆகி யோர் வரை செல்கின்றன. அவர்களுள் சிலர், பனூ அல்-நளீ ரிலிருந்து, யுத்தங்களுக்கான தூண்டுதல்கள் செய்து வந் தோரின் பெயர்களைத் தருகின்றனர். சிலரை இப்ன் இஸ்ஹாக்

*சுட்டிக் காட்டுவார்: ஸலாம் இப்ன் அபூ அல்-ஹகீக், கினானா இப்ன் அபூ அல்-ஹகீக் அல்-நளரீ, ஹுயை இப்ன் அக்தப் அல்-நளரீ.*

## *பனூ அல்-குறைளாவின் பிரஷ்டம்*

*கதாதா, உர்வா இப்ன் அல்-ஸுபைர், இப்ன் இஸ்ஹாக், அப்த் அல்-ரஸ்ஸாக் ஆகியோரின் அறிவிப்புகளின் படி, பனூ குறைளாவுக்கு எதிரான நடவடிக்கைகள், ஐந்தாம் ஆண்டு துல் கஃதாவின் இறுதி, -துல் ஹிஜ்ஜாவின் ஆரம்ப காலப் பகுதியில் நிகழ்ந்துள்ளது. அதாவது ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு ஷவ்வாலில் நடந்த அகழ் யுத்தத்தின் பின்னர். இமாம் மாலிக்கும், மூஸா இப்ன் உக்பாவும் அகழ் யுத்தம் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஷவ்வாலில் நிகழ்ந்தது எனக் கூறுவர். இப்ன் ஹஸ்மும் அவ் வாறே அபிப்பிராயப் படுவார். இம்மூவரும் தமது அபிப் பிராயத்துக்கு அப்த்-அல்லாஹ் இப்ன் உமரின் ஹதீஸ் ஒன் றனை அடிப்படையாகக் கொள்வர். தான் பதினைந்து வயதி னராக இருந்த வேளையில், அகழ் யுத்தத்தில் பங்கு பெறத் தன்னை நபிகளார் (ஸல்) அவர்கள் அனுமதிக்கவில்லை எனக் கூறுவார் அப்த்-அல்லாஹ் இப்ன் உமர்.*

*இரண்டு கருத்துகளையும் சமனப்படுத்தலாம் எனக் காட்டுவார் அல்-பைஹகீ. அவர் கூறினார்: “உண்மையில் இந்த அபிப்பிராயங்களில் முரண்பாடுகள் இல்லை. ஏனெனில், அது, நான்கு வருடங்கள் கழிந்து, ஐந்தாம் வருடம் முடிவடை யும் முன்னர் நிகழ்ந்தது என்றே அவை கருதுகின்றன.” அகழ் யுத்தம் நிகழ்ந்தது, உஹத் நிகழ்ந்து இரண்டு வருடங்களின் பின் என்பார் அல்-ஸுஹ்ரீ. உஹத் நிகழ்ந்தது, மூன்றாம் ஆண்டு ஷவ்வாலில் என்பதில் அனைவரும் ஒத்த கருத்தினர். சிலர் மாறுபட்ட கருத்துகள் கூறுவர். அவர்கள் ஹிஜ்றாவின் பின் னர் வந்த வருடத்தின் முஹர்ரம் முதற்கொண்டு தான் ஹிஜ்றா கால அட்டவணை ஆரம்பமாக வேண்டும் எனக் கூறி, ஹிஜ்றா நிகழ்ந்த வருடத்தின் ரபீஉல் அவ்வல் முதற் கொண்டு எஞ்சி யிருந்த ஏனைய மாதங்களை எண்ணிக்கையில் கொள்ளாது விட்டார்கள். இவ்வாறுதான் அல்-பைஹகீ கூறுவார். யாகூப்*

*இப்ன் ஸுப்யான் அல்-பஸவீயின்படி, பத்ர் முதலாம் ஆண் டிலும், உஹத் இரண்டாம் ஆண்டிலும், பத்ர் அல்-மவ்இத் மூன்றாம் ஆண்டு ஷஃபானிலும், அகழ் யுத்தம் நான்காம் ஆண்டின் ஷவ்வாலிலும் நிகழ்ந்தன. இது பெரும்பாலான அறிஞர்களின் கருத்துகளுடன் முரண்படுகிறது. ஹிஜ்றா நிகழ்ந்த ஆண்டின் முஹர்ரம் முதற் கொண்டே ஹிஜ்ரி கால அட்டவணை ஆரம்பமாக வேண்டுமென உமர் (ரலி) நியமம் செய்தமை யாவரும் அறிந்ததே. மாலிக்கின் அபிப்பிராயப்படி அந்த வருடத்தின் ரபீஉல் அவ்வலில் இருந்தே அட்டவணை ஆரம்பமாக வேண்டும்.*

*மூன்று அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. என் றாலும் பெரும்பான்மையினரின் அபிப்பிராயம், - அதாவது, உஹத் நிகழ்ந்தது மூன்றாம் வருடம்; அகழ் நிகழ்ந்தது ஐந்தாம் வருடம் ஷவ்வால் என்பது - வலுவானதாகஉள்ளது.*

*அல்-பைஹகீ உட்பட சில அறிஞர்கள், இப்ன்-உமரின் ஹதீஸை விளக்கும் போது உஹத் நிகழ்ந்த வேளை அவர் 14 வயதினராயிருந்தார் என்றும், அகழின் போது பதினைந்தி லிருந்து பதினாறு நோக்கிச் சென்றவராக இருந்தார் என்றும் கூறுவர். இது ஏற்புக்குரியது போலத் தோற்றுகிறது. ஏனெனில், உஹத் முடிந்த வேளை இரு சாராரும் அடுத்த வருடம் மீளவும் ஒரு மோதலுக்காக பத்ரில் சந்திக்க இணங்கினர் - (பத்ர் அல்-மவ்இத்). ஆனால் அது நிகழவில்லை. அல்-பைஹகீ கூறினார்: "இரண்டு மாதங்களில் அவர்கள் மதீனாவைக் கைப்பற்ற வந் தார்கள் எனக் கூறுவது அபத்தமாகும்."*

## *படையெடுப்புக்கான காரணம்*

*படையெடுப்புக்கான காரணம் பனூ குறைளா நபி களாருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொண் டமையிலிருந்து ஆரம்பமாகின்றது. இது சம்பந்தமாக பல அறி விப்புகள் கிட்டியுள்ளன. அனைத்தையும் கூட்டாகப் பார்க்கும் போது, இதனை வலுவான ஆதாரமாகக் கொள்ள முடிகின் றது. பத்தாயிரம் பேர் கொண்ட பல்வேறு கோத்திரங்களின் கூட்டினால் முஸ்லிம்கள் முற்றுகையிடப்பட்டிருந்த வேளை,*

*நபிகளாருடன் தமது ஒப்பந்தத்தை முறித்துவிடும்படி பனூ குரைளாவைத் தூண்டினார் ஹுயை இப்ன் அக்தப் அல்-நளரீ. பனூ குரைளாக்கள் குறித்து அறிந்து வரும் படி ஸுபைர் இப்ன் அல்-அவ்வாம் அவர்களை அனுப்பினர் நபிகள் (ஸல்) அவர்கள். பின்னர் ஸஅத் இப்ன் முஆஸ், ஸஅத் இப்ன் உபாதா, அப்த்-அல்லாஹ் இப்ன் ரவாஹா, கவ்வாத் இப்ன் ஜுபைர் ஆகியோர் அனுப்பப்பட்டனர். பனூ குரைளா இழைத்த துரோகம் உண்மையானது தானா என அறிந்து வர அவர்கள் பணிக் கப்பட்டனர். வதந்திகள் உண்மையே என அவர்கள் உறுதி செய்யவே முஸ்லிம்கள் பாரிய மனக்கிலேசத்துக்குள்ளாயினர்.*

*இப்ன் இஸ்ஹாக், பனூ குரைளாவின் துரோகம், ஒப்பந்த முறிவு என்பன குறித்து விரிவான ஒரு விவரணத்தை - இஸ்னாத் இல்லாமல் - தந்துள்ளார். ஸீறா கிரந்த கர்த்தாக்களுள் பலரும் இதனை இஸ்னாத் இல்லாமலேயே அறிவிப்புச் செய்துள் ளனர்.*

*மூஸா இப்ன் உக்பா - இஸ்னாத் இல்லாமலே - செய் துள்ள அறிவிப்பின்படி, குறைஷியரிலிருந்தும், கதபானி லிருந்தும் 90 பிரமுகர்களைத் தம்மிடம் பிணையாக ஒப்படைக் கும் படியும், முஸ்லிம்கள் முற்றாக அழிக்கப்படும் வரை அவர்கள் மதீனாவை விட்டு நீங்கிச் செல்லாதிருப்பதை அது உறுதி செய்யும் எனவும் குரைளா கூறினர். அதற்கு இணக்கம் தெரிவித்தார் ஹுயை. ஆக, குரைளா, முஸ்லிம்களுடனான தமது ஒப்பந்தத்தை முறித்து விட்டனர்.*

*அகழ் யுத்தத்திலிருந்து திரும்பியதும் பனூ குரைளாவை எதிர்த்துச் செல்லும்படி நபிகளாரை இறைவன் பணித்தான். ஆகவே நபிகள் (ஸல்) அவர்கள், தமது தோழர்களை உடனடி யாகவே பனூ குரைளாவை நோக்கிச் செல்லுமாறும், அவர் களது அரண்களையெல்லாம் தகர்த்து அவர்களது உள்ளங் களில் பீதியை ஏற்படுத்துமாறு ஜிப்ரீல் (அலை) அவர்களை அல்லாஹ் அனுப்பி வைத்துள்ளான் என அவர்களுக்குக் கூறும்படியும் அனுப்பினார்கள். மேலும் பனூ குரைளாவை அடையும் வரை அவர்களில் எவரும் அஸர் தொழக் கூடாது*

எனவும் அன்னார் பணித்தார்கள் எனக் கூறுவார் அல்-புஹாரீ. (முஸ்லிம் அதனை ளுஹர் என்பார்.) அஸர் நேரம் வந்தது. அவர்கள் இன்னமும் பனூ குறைளாவை நோக்கிச் சென்றவர்களாக இருந்தார்கள். சிலர் அஸர் தொழுதார்கள்; சிலர் தொழுகையைத் தாமதித்தார்கள். நபிகள் (ஸல்) அவர்கள் இரு சாராரில் எவரையும் கண்டிக்கவில்லை. ஏனெனில் அவர் கள் செய்ய வேண்டுமென அன்னார் கூறியதை விளங்கிக் கொள்ளப் பிரயத்தனம் எடுத்தவர்களாயிருந்தார்கள் தோழர் கள். அஸர் தொழுகையைத் தாமதித்தவர்கள் இஷாவின் பின்னர் அதனைத் தொழுதார்கள் என்பார் இப்ன் இஸ்ஹாக்.

புஹாரியும் முஸ்லிமும் அறிவித்தவற்றைச் சமனப்படுத் தும் வகையில் அறிஞர்கள் கூறுவார்கள்: "(இறைவனிட மிருந்து) ஆணை வந்து சேரும் முன்னர் சிலர் ளுஹர் தொழு திருந்தார்கள். சிலர் தொழுதிருக்கவில்லை. எனவே நபிகளார் இன்னமும் தொழாதவர்களை தொழ வேண்டாம் எனவும், ஏற்கனவே தொழுதவர்களை அஸர் தொழ வேண்டாம் என் றும் பணித்தார்கள்." இரண்டு குழுக்கள் தனித்தனியே அனுப் பப்பட்டிருக்கலாம். முதலாவது குழு ளுஹர் தொழ வேண் டாம் எனவும், இரண்டாவது குழு அஸர் தொழ வேண்டாம் எனவும் பணிக்கப்பட்டிருக்கக் கூடும்.

பல முர்ஸல் மரபுகள் (ஆஸார்)[10] ஒன்றையொன்று ஆதரிப் பதாகி ஹஸன்-லி-கைரிஹ் தரத்துக்கு உயர்த்தியுள்ள அறிவிப் புகளின்படி, இராணுவத்தின் முன்னால் கொடியேந்தியவராக அலீ (ரலி) அனுப்பப்பட்டார்.

பனூ குறைளாவின் முற்றுகை ஒரு மாத காலம்; 25 தினங் கள்; 15 தினங்கள்; பத்துக்கும் பதினைந்துக்கும் இடைப்பட்ட நாட்கள் நீடித்தன என அறிவிப்புகள் பல்வேறு பட்ட தகவல் களைத் தருகின்றன. பலமான ஆதாரங்கள் இருபத்தைந்து நாட்கள் என்பதையே உறுதி செய்கின்றன. மகாஸி கிரந்த கர்த் தாக்களில் பலர், இப்ன் இஸ்ஹாக்கைத் தொடர்ந்தவர்களாக, இந்தக் காலக் கணிப்பையே ஏற்கின்றனர்.

10. آثار

## முற்றுகையின் வெற்றியும் பனூ குரைளாவின் தலை விதியும்

*முற்றுகை தீவிரமாகி, இனிமேலும் தாங்கிக் கொள்ள இயலாது என்ற நிலையில் பனூ குரைளா சரண் அடைந்து நபிகளார் தம்மீது விதிக்கக் கூடிய எந்த ஒரு தீர்ப்பையும் ஏற்றுக் கொள்ள இணக்கம் தெரிவித்தார்கள். நபிகளாரின் தோழரும், தம்முடன் நேச உறவு பாராட்டியவருமான அபூ லுபாபா அல்-முன்திர் உடன் அவர்கள் ஆலோசனை நடாத்தினார்கள். சரணடைந்தால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என அபூ லுபாபா, அவர்களுக்குச் சைகை மூலம் உணர்த்தினார். தான் தவறு இழைத்து விட்டதாக உணர்ந்து வருத்தத்துக்கு உள்ளான அவர், நபிகளாரின் பள்ளிவாசல் தூண் ஒன்றுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு, பாவ மன்னிப்புக் கிட்டும் வரை அவ்வாறே இருந்தார்.*

*ஸஅத் இப்ன் முஆஸின் தீர்ப்பை ஏற்க இணங்கினர் பனூ குரைளா. அவரது கோத்திரமான அவ்ஸ்களுடன் அவர்கள் முன்னைய காலங்களில் செய்திருந்த கூட்டு ஒப்பந்தங்கள் காரணமாக அவர் தம்முடன் கருணையுடன் நடந்து கொள்வார் என அவர்கள் கருதியிருந்தனர்.*

*அகழ் யுத்தத்தின் போது தனது கையொன்றில் அம்பொன்று தாக்கியதன் காரணமாகக் காயமுற்றிருந்த ஸஅத், நடந்து கொள்ள இயலாத நிலையில் தூக்கி வரப்பட்டார். போராளிகள் அனைவரும் கொல்லப்பட வேண்டும்; அவர்களது சொத்துக்கள் பகிரப்பட வேண்டும் என்றே அவர் தீர்ப்பளித்தார். இதனை உறுதி செய்யும் வகையில் நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இறைவனின் தீர்ப்பின்படி நீர் தீர்ப்பளித்துள்ளீர்." இவ்வாறு தீர்ப்பளிப்பதன் மூலம் ஸஅத் இப்ன் முஆஸ், தாம் குரைளாவுடன் செய்திருந்த ஒப்பந்தங்களைப் புறக்கணித்து விடுகின்றார். பனூ குரைளாவுடன் ஒப்பந்தங்கள் செய்திருந்த நிலையிலும், அண்மையில் தான் இஸ்லாத்தைத் தாம் ஏற்றுக்கொண்டிருந்த நிலையிலும் கூட, அவ்ஸ்கள், ஸஅத்தின் தீர்ப்பினால் கலவரங்களுக்கு உள்ளாக*

வில்லை. அவர்களது தலைவரே இந்த தீர்ப்பை வழங்கியிருந் தமையால் அவர்களால் இதனை இலகுவாக ஏற்றுக்கொள்ள இயலுமாகியது. கொல்லப்பட்ட போராளிகள் தொகை 400. பனூ குரைளாவின் மூவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டமை யால் கொல்லாது விடப்பட்டனர்; அவர்களது செல்வங்கள் கைப்பற்றப்படவில்லை. மேலும் மூவர், முற்றுகையின் போது ஒப்பந்தத்துக்கு மாறு செய்யாமல் நடந்து கொண்டதன் கார ணமாக நபித்தோழர்களால் பாதுகாப்பு அளிக்கப் பெற்றார் கள். இது சம்பந்தமான அறிவிப்புகள் பல காணப்பட்டாலும் அவை வலுவானவையாகத் தோற்றவில்லை. கைது செய்யப் பட்டோர் பின்த் அல்-ஹாரிஸின் இல்லத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். மதீனாவின் சந்தைப் பகுதியில் பெரிய கிடங் குகள் தோண்டப்பட்டன; அவற்றின் அருகில் வைத்துக் கொல்லப்பட்ட கைதிகளின் உடல்கள் கிடங்குகளுள் மொத் தமாகத் தள்ளப்பட்டன. பெண்களுள் ஒருவரே கொல்லப் பட்டார். அந்தப் பெண், கல்லாத் இப்ன் ஸுவைத் எனும் நபித் தோழரின் தலையில் கற்குழவி ஒன்றனைப் போட்டு அவரைக் கொலை செய்திருந்தார்.

பருவ வயதை எய்தாத சிறுவர்கள் விடுவிக்கப்பட்டனர். போராளிகள் கொல்லப்பட்ட பின்னர் நபிகள் (ஸல்) அவர்கள், குரைளாவின் செல்வங்களைப் பங்கீடு செய்தார்கள்; பெண் கள் முஸ்லிம்களின் பொறுப்பில் விடப்பட்டனர். மகாஸி கிரந்தங்கள், பங்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட விவரங்களைத் தருகின்றன. என்றாலும் அவற்றின் அறிவிப்புகளை ஆதார பூர்வமான சான்றுகளாக ஏற்க இயலவில்லை.

இப்ன் இஸ்ஹாக், இப்ன் ஸஅத் உட்பட பலரது அறிவிப்பு களின் படி, நபிகள் (ஸல்) அவர்கள் பெண் கைதியருள் ஒரு வரான ரைஹானா பின்த் அம்ர் இப்ன் கனாபாவைத் தேர்ந்து கொண்டார்கள். அல்-வாகிதீயும், அவரைப் பின்பற்றி அறிவிப் புச் செய்த பலரும் அன்னார் ரைஹானாவை மணந்து கொண் டதாகக் கூறுவர். என்றாலும் முன்னைய அறிவிப்பே பொருத்த மானதாகத் தெரிகின்றது.

*சமகால வரலாற்றாசிரியர்கள் பலர், பனூ குரைளா எதிர் கொண்ட தண்டனைகள் குறித்த அறிவிப்புகளைப் பலவீன மானவை எனக் காட்ட முனைந்துள்ளார்கள். அவற்றை அறி விப்பதும், அவை பலமானவை எனக் கொள்வதும், மானுட உணர்வுகளைப் பாதிப்பனவாகவும், ஸயோனிஸ பிரசாரங் களுக்குத் தீனி போடுவனவாகவும் அமையும் என அவர்கள் கருதுகின்றனர். ஆனால் உண்மையான நிலை அதுவல்ல. இஸ் லாமிய மூலாதாரங்களில் பெரும்பாலானவை இந்த நிகழ் வுகளை உறுதி செய்கின்றன. ஒப்பந்தத்தை முறித்து நடந்த தோடு, முஸ்லிம்களுக்கு இழைத்த பாரிய துரோகத்தின் காரணமாகவே அவர்களுக்கு அத்தகு தண்டனை அளிக்கப் பட்டது. இரு சாரார்க்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, மதீனாவைப் பாதுகாப்பதில் அவர்கள் ஒன்றாகச் செயல் பட்டிருக்க வேண்டும். இன்றைய கால கட்டத்திலும், எதிரி களுடன் கூட்டுச் சேரும் துரோகிகள் கொல்லப்படுவது நிகழ்ந்து வருவதே.*

*பனூ குரைளா இழைத்த துரோகத்துக்கு அவர்களுக்குக் கிட்டியது சரியான தண்டனையே. முஸ்லிம்கள் கொல்லப் படவும், அவர்களது செல்வங்கள் சூறையாடப்படவும், அவர்களது பெண்களும், குழந்தைகளும் சிறைப்பிடிக்கப் படவும் ஆன ஒரு நிலைக்கு அவர்களைத் தள்ளிவிடுவராயினர் பனூ குரைளா. ஆக, அவர்களுக்குக் கிட்டியன தக்க பரிகா ரமே. வரலாற்று மெய்ம்மைகளையோ, ஆதாரபூர்வமான அறிவிப்புகளையோ நாம் மறுத்துரைக்க வேண்டியதில்லை.*

# XII

## கைபரும்[1], ஹிஜாஸில் எஞ்சியிருந்த யூத தலங்களும் கைப்பற்றப்பட்டமை

மதீனாவின் வட பிரதேசத்தில் 165 கிலோ மீட்டர் தூரத்தில்[2], கடல் மட்டத்திலிருந்து 850 மீட்டர் உயரத்தில், விவசாய நிலங்களைக் கொண்டதொரு பாலைச் சோலையாக அமைந்தது கைபர். ஹர்ரா பனீ ஸலீமுக்கு அடுத்தபடியாக அமைந்த அரேபியாவின் மிகப்பெரிய ஹர்ரா இது. நில வளமும் நீர் வளமும் மிகப் பெற்றிருந்த இது, சோளகம், பழவர்க்கங்களுக்கும் மேலாக ஏராளமான பேரீச்ச மரத் தோட்டங்களையும் கொண்டிருந்தது. அதன் பயிர் வளம், மிருக வளம், ஊடுருவ இயலாத தன்மை என்பனவற்றால் அது ஹிஜாஸின் தோட்டம் என வழங்கப் பெற்றது. கைபரின் சந்தைப் பிரதேசம் ஸூக் அல்-நதாஹ் என வழங்கியது. அதனை கதபான் கோத்திரத்தார் காத்து வந்தார்கள். கைபர் தமது எல்லைப் பிரதேசத்துக்குள் ஆனது எனக் கருதியிருந்தனர் கதபான்கள்.

---

1. கைபர் கைப்பற்றப்பட்டமை குறித்த அபூர்வமான அறிவிப்புகளை ‘கைபர் முற்றுகை பற்றிய அறிவிப்புகள்’ எனும் தலைப்பில் அல்-ஷெய்க் அவாத் அஹ்மத் அல்-ஷஹ்ரீ அவர்கள் மதீனாவின் இஸ்லாமியப் பல்கலைக் கழக முதுமானிப் பட்டத்துக்காகச் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளேன். அதன் பரீட்சகர் குழுவில் ஓர் அங்கத்தவராக நான் பணியாற்றியிருந்தேன்.

2. இது நவீன பாதைகள் மூலமான தூரம். நபிகள் (ஸல்) அவர்கள் கைபர் நோக்கிச் சென்ற பாதையிலும் வித்தியாசமானது இது.

கைபரின் பொருளாதார மேன்மை காரணமாக ஏராள மான வர்த்தகர்களும், கை வினைஞர்களும் அங்கு குடியிருந்து வரலாயினர். தாராள பணப்புழக்கம் நிலவியது.

கைப்பற்றப்படும் முன்னர் அரபு, யூத மக்கள் அங்கு கலந் தும் செறிந்தும் வாழ்ந்து வந்தனர். மதீனாவிலிருந்து வெளி யேற்றப்பட்ட யூதர்களும் இங்கு வந்து குடியேறவே கைபர் யூதர்களின் தொகை பெருகலாயது.

பனூ அல்-நளீரின் தலைவர்கள் தம்முடன் வந்து குடி யேறும் வரையில் கைபரின் யூதர்கள் முஸ்லிம்களுடன் பகை மை பாராட்டதவர்களாக, சுமுகமான உறவுகளே பேணி வந்தார்கள். பனூ நளீர் தலைவர்கள், தத்தமது வீடுகளிலிருந் தும் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களாக ஆழ்ந்த மனத்துயருக்கு ஆளாகியிருந்தார்கள். என்றாலும், பிரஷ்டம் எவ்வகையிலும் அவர்களது பலத்தைக் குறைத்து விடவில்லை. ஏனெனில் மதீ னாவை விட்டு நீங்கும் போது தமது பெண்கள், குழந்தைகள், செல்வங்கள் அனைத்தையும் தம்முடனேயே எடுத்துச் சென் றிருந்தனர் நளீர்கள். பாடகர்கள் பின் தொடர, ஊது குழல்கள், முரசுகள் ஒலியெழுப்ப ஆணவமும், பெருமையும் சற்றேனும் குன்றாதவர்களாய்த் தான் அவர்கள் வெளியேறியிருந்தார்கள். அவ்வாறான மாட்சி மிகு காட்சியொன்றனை அக்காலத்திய மக்கள் ஒருபோதும் கண்டிருக்கவில்லை.

கைபரில் வந்து குடியேறிய பனூ அல்-நளீரின் முக்கிய மான தலைவர்கள்: ஸலாம் இப்ன் அபூ அல்-ஹகீக், கினானா அர்-ரபீஇ இப்ன் அபூ அல்-ஹகீக், ஹுயை இப்ன் அக்தப் ஆகி யோர். அவர்கள் கைபருக்கு வந்து சேர்ந்த வேளை மக்கள் அவர்களது தலைமையை ஏற்றுக் கொண்டனர். முஸ்லிம் களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்து வதற்கு, கைபரின் யூதர்களைப் பங்குதாரர்களாகக் கொள்ள இம்மூன்று தலைவர்களதும் பிரசன்னம் போதுமானதாக இருந்தது. உள்ளூர அவர்களுள் அமிழ்ந்திருந்த குரோதம், மதீனாவில் தமது சொந்தக் குடியிருப்புப் பிரதேசங்களுக்குத் திரும்பிச் சென்று விடவேண்டும் என்ற வேட்கை என்பன அவர்களை உந்திக் கொண்டிருந்தன.

அவர்கள் மேற்கொண்ட முதலாவது முனைவு அகழ் யுத்தத்தின் போதாகும். கைபரின் யூதர்கள், பனூ அல்-நளீரின் தலைவர்களின் உந்துதலின் பேரில், முஸ்லிம்களுக்கு எதிராகக் குறைஷியரையும், பாலையின் அரபிகளையும் தூண்டி விடுவதில் முக்கிய பங்கு வகித்தனர்; அதற்கெனத் தமது சொந்த செல்வங்களையும் செலவழித்தனர். பின்னர், முஸ்லிம்களைக் கைவிட்டு விடவும், முஸ்லிம்களது எதிரிகளோடு இணைந்து கொள்ளவும் பனூ குரைளாவைத் தூண்டினர்.

மதீனாவைப் பாதுகாத்துக் கொள்வதிலும், பல்வேறு அரபு நாடோடிக் கோத்திரத் தவர்களைத் தோல்வியுறச் செய்வதிலும் இறைவன் அளித்த உதவிகளின் பின்னர், நபிகள் (ஸல்) அவர்கள், முஸ்லிம்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விட்ட கைபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

இப்ன் இஸ்ஹாக் - மஜ்ஹூல் அறிவிப்பாளர் ஒருவரைக் கொண்டதோர் இஸ்னாத் மூலம் - கூறுவார்: நபிகளார் கைபர் வாசிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பி, அவர்களைஇஸ்லாத்தின் பால் அழைத்தார்கள்; அன்னாரது வருகை குறித்து அவர்களது வேத கிரந்தங்கள் கூறியுள்ளனவற்றை நினைவுறுத்தினார்கள். யூதர்கள், அன்னாரது அழைப்பை ஏற்காது விட்டமை ஒரு புறம் இருக்க, முஸ்லிம்களின் எதிரிகளைத் தூண்டி விட்டமைக்காக வருத்தம் தெரிவிக்கவும் தவறிவிட்டார்கள். எனவே நபிகளார், தமக்கு எதிரான தூண்டுதல்களை மேற்கொண்ட தலைவர்களை அழித்துவிட வேண்டுமென முடிவெடுத்தார்கள். அவர்களுள் ஒருவர், ஸலாம் இப்ன் அப்த் அல்-ஹகீக். நபிகளாரின் பணிப்பின் பேரில் அப்த்-அல்லாஹ் இப்ன் அதீக் சில அன்ஸாரிகளுடன் சென்று அவரைக் கொன்று போட்டார். அல்-புஹாரி இந்தக் கொலை பற்றிய பூரண விவரணம் ஒன்றனைத் தருகின்றார். அப்த் அல்லாஹ் இப்ன் அதீக், மிகத் தந்திரமான ஒரு முறையில் மிக்க பலமான காவலரண்கள் மத்தியில் இருந்த ஸலாமின் வீட்டை அடைந்து அவரது படுக்கையறையிலேயே அவரைக் கொன்று போட்டார். இதன் மூலம் அப்த்-அல்லாஹ் இப்ன் அதீக்

*கொண்டிருந்த தைரியம், தனது விசுவாசங்களுக்காகத் தியாகங்கள் செய்யும் அவரது மனப்பாங்கு, ஆர்வம் எனபன தெளிவாகின்றன.*

*முஸ்லிம்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களை அடக்குவதற்குச் சில யூதர்களை அழித்து விடுவது மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. முஸ்லிம்களுக்கும் குறைஷியருக்கும் இடையில் ஹிஜ்ரி 6-ல் செய்து கொள்ளப்பட்ட ஹுதைபியா உடன்படிக்கை, கைபரைக் கைப்பற்றிக் கொள்ளத் தேவையான அவகாசத்தையும், சந்தர்ப்பங்களையும் அளித்தது. அல்-ஹுதைபியாவிலிருந்து திரும்பி வரும் வேளை அருளப்பட்ட ஸூறா அல்-பத்ஹ் மூலம் இறைவன், முஸ்லிம்கள் கைபரைக் கைப்பற்றுவர், அதன் யுத்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்வர் என வாக்களித்துள்ளதாகவே பெரும்பாலான குர்ஆன் விரிவுரையாளர்கள் கருதுகின்றனர்.*

*(நபியே! அந்த) மரத்தடியில் உம்மிடம் அவர்கள் உடன்படிக்கை செய்த போது விசுவாசிகளை அல்லாஹ் திட்டமாகப் பொருந்திக் கொண்டான். மேலும் அவர்களுடைய உள்ளங்களில் இருப்பதையும் அறிந்து, அவர்கள் மீது அமைதியை இறக்கி வைத்து அண்மையிலான வெற்றியையும் அவர்களுக்கு வெகுமதியாக அளித்தான். இன்னும் எவற்றை அவர்கள் எடுத்துக் கொள்வார்களோ, அத்தகைய ஏராளமான போர்ப் பொருட்களையும் (வழங்கினான்); அல்லாஹ் (யாவற்றையும்) மிகைத்தவனாகவும், ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான். இன்னும் எவற்றை நீங்கள் எடுத்துக் கொள்வீர்களோ அத்தகைய ஏராளமான போர்ப் பொருட்களை அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்துள்ளான்; எனவே இதனை உங்களுக்கு விரைவில் கிடைக்கச் செய்து மனிதர்களின் கைகளை உங்களை விட்டும் தடுத்துக் கொண்டான் - (உண்மை) விசுவாசிகளுக்கு ஓர் அத்தாட்சியாக இது ஆவதற்காகவும், நேரான பாதையில் உங்களை அவன் செலுத்துவதற்கும் - (இவ்வாறு அருள் செய்தான்). (பாரசிகம், ரோமாபுரி முதலிய நாடுகளில் வெற்றியாக) மற்றொன்றும் (உங்களுக்கு இருக்கிறது); அதன் மீது நீங்கள் சக்தி பெறவில்லை; அல்லாஹ் அதனைத் திட்*

டமாக சூழ்ந்து அறிந்துள்ளான் - அல்லாஹ் எல்லாப் பொருட்களின் மீதும் சக்தியுள்ளவனாக இருக்கின்றான் (48: 18-21)

## கைபர் யுத்தத்தின் காலம்

ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் இது நிகழ்ந்ததாகக் கூறுவார் இப்ன்-இஸ்ஹாக். அல்-வாகிதீ, ஆறாம் ஆண்டு துல்-ஹிஜ்ஜாவில், ஹுதைபியாவிலிருந்து திரும்பி வந்ததன் பின்னர், ஏழாம் ஆண்டு ஸபர் அல்லது ரபியுல் அவ்வலில் நிகழ்ந்ததாக அபிப்பிராயப்படுவார். அல்-ஸுஹ்ரீயும், இமாம் மாலிக்கும் இது ஆறாம் ஆண்டு முஹர்ரம் மாதம் நிகழ்ந்ததென்பர். இம்முன்னோர்களைப் பின்பற்றியே வரலாற்றாசிரியர்கள் கைபர் யுத்தத்துக்கான காலத்தை நிர்ணயம் செய்தனர். ஆக, அவர்களது அபிப்பிராயங்களும் வேறுபடுகின்றன. இப்ன் இஸ்ஹாக், அல்-வாகிதீ ஆகியோர்க்கிடையில் பெரு வித்தியாசம் ஏதும் இல்லை. அது மூன்று மாதங்களுக்கும் குறைவானதொரு காலப்பகுதியே. அவர்களுக்கும், அல்-ஸுஹ்ரீ, இமாம் மாலிக் ஆகியோர்க்கும் இடையிலான கால வேறுபாட்டுக்கான காரணம், ஹிஜ்றா கால அட்டவணையை நிர்ணயம் செய்வதில் காணப்பட்ட வேறுபாடாகும். சிலர், ஹிஜ்றா நிகழ்ந்த மாதமான ரபியுல் அவ்வலுக்கு முந்திய மாதங்களையும் சேர்த்துக் கொண்டனர். எனவே நபிகள் (ஸல்) அவர்களது காலத்திய நிகழ்வுகளுக்கு ஒரு வருடத்தைச் சேர்த்துக் கொண்டனர். ஏனையோர் அந்த மாதங்களைப் பொருட்படுத்தாது விட்டார்கள். ஆகவே, ரபியுல் அவ்வலையே கால அட்டவணையின் ஆரம்பமாகக் கொள்கின்றனர். ஆக, நிகழ்வுகளின் காலத்திலிருந்து ஒரு வருடத்தை அவர்கள் கழித்து விட்டனர். இப்ன் ஹஜர், அல்-வாகிதீயின் கருத்துக்கு மேலாக, இப்ன் இஸ்ஹாக்கின் அபிப்பிராயத்தையே ஏற்றுக் கொண்டுள்ளார்.

## கைபர் செல்லும் வழியில்

நபிகள் (ஸல்) அவர்களது தலைமையில் முஸ்லிம்கள் கைபர் நோக்கிச் செல்கையில், 'அல்லாஹு அக்பர்', 'லாஇ

லாஹ இல்லல்லாஹ்' என உரத்த குரலில் கோஷங்கள் எழுப் பியவர்களாகச் சென்றார்கள். அவர்களைச் சற்று அமைதிப் படுத்தியவர்களாக அண்ணலார் கூறினார்கள்: "நன்கு செவி யேற்பவனும், அருகில் இருப்பவனையுமே நீங்கள் அழைக்கின் றீர்கள். அவன் உங்களுடனேயே இருக்கின்றான்." இஸ்லாமிய படையினர் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த உணர்வுகளைத் தெளிவாகக் காட்டுகின்றது இது. அவர்கள் படையெடுப்புக் காகச் சென்ற பிரதேசம் பாதுகாப்பு அரண்கள் பலவற்றையும், ஏராளமான வீரர்களையும், பாரிய ஆயுத பலத்தையும், பெரும் பொருள் வளத்தினையும் கொண்டிருந்தது. என்றாலும் விசு வாசத்தின் உறுதியும் உள்ளத்தின் பலமும் காரணமாக அவர் கள் உற்சாகத்துடன் முன்னேறிச் செல்லலாயினர். தமது உன் னத நோக்கங்களை அடைந்து கொள்வதில் எதிரிகள் பற்றிய பின்னணிகள் எவையும் அவர்களுக்குத் தடையாக அமைய வில்லை.

கைபரை நோக்கிய நபிகளாரின் பாதை பற்றிய விவரமான தோர் அறிவிப்பைத் தருபவர் அல்-வாகிதீ மட்டுமே. செல்லும் வழிகளையும், நிகழ்வுகளின் தலங்களையும் சரிவர நிர்ணயம் செய்து கூறுவதில் அல்-வாகிதீ மிகத் திறமை வாய்ந்தவர். தானே அவ்வந்த வழிகளில் சென்று, அவை குறித்த விவரங் களைத் திரட்டி வந்தவர் அவர். நபிகளார் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்தும் புறப்பட்டு ஸின்யத் அல்-வதாஅ, ஸகபா, நுக்மா, அல்-முஸ்தனா, அல்-வதீ, அஸ்ர், ஸஹ்பாஅ, அல்-ஹரஸா ஆகிய பகுதிகளூடாகச் சென்றார்கள் என்பார் அல்-வாகிதீ. பின், அல்-ஷிக்க், அல்-நதா அல் மன்ஸிலா, அல்-ரஜீஇ ஆகிய இடங்களூடாகக் கைபரைக் கைப்பற்றச் சென்றார்கள். கைபர், அல்-ரஜீஇக்கு வட கிழக்குப் பிரதேசத்தில் அமைந் துள்ளமையால் நபிகளார் (ஸல்) அவர்கள், கைபரை ஸிரியா விலிருந்தும், கதபானிய கோத்திரத்தாரிடமிருந்தும் துண் டித்து விடும் எண்ணம் கொண்டிருக்கலாம்.

## கைபர் கைப்பற்றப்பட்டமை

நபிகளார் முதலில் அல்-நதாவைக் கைப்பற்றினார்கள்; நாயிம், ஸஅப் ஆகிய அரண்கள் முஸ்லிம்கள் வசமாயின.

*அடுத்து அன்னார் கைப்பற்றியது, அல்-ஷிக்க். அதன் இரண்டு அரண்களான அபீ, அல்-நஸார் ஆகியன வீழ்ந்தன. அல்-நதாவும், அல்-ஷிக்க்கும் கைபருக்கு வடகிழக்குப் புறமாக இருக் கின்றன. பின், அன்னார் அல்-கதீபாவைக் கைப்பற்ற அதன் அரண் அல்-மனீ (அல்லது காமூஸ்) வீழ்ந்தது. இதுதான், இப்ன் அல்-ஹகீக்கின் பாதுகாவல் அரணாக இருந்தது. பின்னர் அல்-வதீ, அல்-ஸாலிம் மையும் கைப்பற்ற அவற்றின் அரண்களும் வீழ்ந்தன. இதுவே, அல்-வாகிதீயின்படி, கைபரைச் சூழவுள்ள பிரதேசங்களும், அரண்களும் கைப்பற்றப்பட்ட வரிசைக் கிரமம். இந்த வரிசைக் கிரமத்தில் மாத்திரம் சற்றே வித்தியாசப் படுகின்றார் இப்ன் இஸ்ஹாக். இவர், அல் நதாவின் நாயிம் அரணுடன் கைப்பற்றுதல் ஆரம்பமானது என்பதில் அல்-வாகிதீயுடன் இணைந்து செல்கின்றார். என்றாலும், அல்-ஸஅப்புக்கு முன்னர், அல்-காமூஸ் கைப்பற்றப்பட்டது என் பார்.*

*ஆதாரபூர்வமான ஹதீஸ்கள், நபிகள் (ஸல்) அவர்கள் அதிகாலையிலேயே கைபரை அடைந்து, அதன் அண்மையி லேயே பஜ்ர் தொழுகை தொழுததாகக் கூறுகின்றன. சூரியன் உதயமாகும் முன்னரே அன்னார் தாக்குதலைத் தொடங்கினார் கள். தமது விலங்குகள், விவசாயக் கருவிகள், கூடைகள் சகிதம் தமது அன்றாட வேலைகளுக்கென வெளிவந்த யூத விவசாயி கள், தம் முன்னால் முஸ்லிம்களைக் கண்டு பீதியுற்றவர்களா கக் கூறினார்கள்: "முஹம்மதும் அவருடைய படைகளும்!" நபி களார் பதிலளித்தார்கள்: "அல்லாஹு அக்பர்! கைபர் பாழாகி விட்டது. நாம் ஒரு சமுதாயத்தின் களத்தில் (அவர்களுடன் போரிட) இறங்குவோமாயின், எச்சரிக்கப்பட்ட அவர்களுக்கு அது மிகக் கெட்ட காலையாக அமையும்." யூதர்கள் தமது பாதுகாப்பு அரண்களுள் தஞ்சம் புகுந்து கொள்ள, முஸ்லிம் கள் அல்-நாயிம்மை முற்றுகை இட்டனர். தமது நேசர்களாக இருந்த யூதர்களுக்கு ஆதரவாகப் புறப்பட்டு வந்தனர் கதபான் கள். என்றாலும் அவர்கள் யுத்தத்தில் கலந்து கொள்ளாம லேயே திரும்பிச் சென்றார்கள். முஸ்லிம்களால் தமது வீடுகள் தாக்கப்படலாம் என்ற அச்சம் அவர்களுள் முகிழ்த்தது. கத*

*பான்கள் கைபரை அடையு முன்னரே தம் வீடுகளுக்குத் திரும்பி விட்டார்கள் எனக் கூறுவார் இப்ன் இஸ்ஹாக். கைபரின் ஒரு வருஷத்திய பேரீச்சம் பழ அறுவடையை கதபான்களுக்குத் தருவதாக நபிகள் (ஸல்) அவர்கள் கூறி, கதபான்களை விலகிச் செல்லும்படி கேட்டதாகவும், அவர்கள் மறுத்து விட்டதாகவும் அல்-வாகிதீ மட்டும் அறிவிப்பார். வாகிதீ பலவீனமானவர் என்பதோடு, அவர் மட்டுமே இதனை அறிவிப்புச் செய்துள்ளதனால் அது ஏற்புடைத்ததாக அமையவில்லை.*

*அல்-நாயிம்மின் முற்றுகையின் போது, முதல் இரண்டு நாட்களிலும் முஸ்லிம்களின் கொடியை ஏந்தியிருந்தார் அபூபக்ர் (ரலி). நாயிம் வீழ்ச்சியுறவில்லை. முஸ்லிம்கள் களைப்புக்கும், அசதிக்கும் உள்ளானார்கள். நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நான் நாளை ஒரு மனிதரிடம் இக்கொடியை ஒப்படைப்பேன். அவரை அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் நேசிக்கின்றனர். அவரும் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்கின்றார். இந்த அரண் வீழ்ச்சியுறும் வரையில் அவர் திரும்ப மாட்டார்." புத்துணர்ச்சி பெறலானார்கள் முஸ்லிம்கள். அடுத்த நாள் காலை பஜ்ர் தொழுததன் பின்னர் நபிகளார், அலீ (ரலி)யை அழைத்து அவரிடம் கொடியை ஒப்படைத்தனர். மூன்றாம் நாள் கொடி தாங்கிச் சென்ற அலீ, அல்-நாயிம்மை வெற்றி கொண்டார். ஓர் அறிவிப்பு, அலீயின் முன்னர் கொடியேந்தி நின்றவர், உமர் இப்ன் அல்-கத்தாப் என்றும் அபூபக்ர் அல்ல என்றும் கூறுகின்றது. என்றாலும் இது பலவீனமான ஓர் அறிவிப்பாகும். அறிவிப்பு தங்கி இருப்பது, மைமூன் அல்-பஸரீ மீது. அவர் ளயீப் ஆனவர். மற்றோர் அறிவிப்பு, மூன்றாம் நாள் முறையே அபூபக்ர், உமர், அலீ மூவரும் கொடியை ஏந்தினர் எனக் கூறுகின்றது. இதுவும் ஏற்புக்குரியதாக அமையவில்லை. ஏனெனில் இதன் அறிவிப்பாளர் பரீதா இப்ன் ஸுப்யான் பலவீனமானவர்.*

*நபிகளார் (ஸல்) அவர்கள் கைபரின் யூதர்களை இஸ்லாத்தின் பால் அழைக்கும் படியும், இறைவன் பாலான அவர்களது கடமைகள் என்னவென அவர்களுக்குக் கூறும்படியும்*

*அலீயை அறிவுறுத்திக் கூறினார்கள்: "இறைவன் பேரால், உம் மூலமாக இறைவன் ஒரு மனிதருக்கு (இஸ்லாத்தின் பால்) வழி காட்டக் கூடுமாயின் அது விலையுயர்ந்த ஒட்டகைகளை விட உமக்குப் பெறுமதியானதாக இருக்கும்." இது, நபிகளார், கைப ரின் யுத்தப் பொருட்களைக் கருத்தில் கொள்ளாதிருந்த மையையும், இஸ்லாமிய தூதினைப் பரப்புவதிலும், அதன் ஸ்தாபிதத்துக்கான தடைகளை அப்புறப்படுத்துவதிலுமே கவனமாயிருந்தமையையும் காட்டுகின்றது.*

*"அல்லாஹ்வின் தூதரே! எந்த அடிப்படையில் நான் யுத்தம் புரிய வேண்டும்?" என வினவினார் அலீ (ரலி). அன்னார் கூறினார்கள்: 'வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை; முஹம்மத் அவனது தூதராயிருப்பார்' என அவர்கள் கூறும் வரை அவர்களுடன் யுத்தம் செய்யும். அவ் வாறு அவர்கள் கூறுவார்களானால் அவர்ளது உயிர்களும், உடைமைகளும் உம்மிடமிருந்து பாதுகாக்கப்படும் - அவற்றி லிருந்து எமக்குக் கிடைப்பன (ஸகாத் முதலியன) தவிர. அவர் களது நோக்கங்களை அல்லாஹ் அறிவான்.*

*அல்-நாயிம் அரண் முற்றுகையின் போது, மஹ்மூத் இப்ன் மஸ்லமா அல்-அன்ஸாரீ கொல்லப்பட்டார். அரண் சுவர் களின் மேலிருந்து அவர் மீது கற்குழவி ஒன்றனை எறிந்திருந் தார் மர்ஹப். அலீ, மர்ஹபை மோதலில் சந்தித்து அவரைக் கொன்று போட்டார். யூதர்களின் பெருவீரர்களில் ஒருவரான மர்ஹபின் மரணம், அவர்களது உத்வேகங்கள் அனைத்தையும் முறித்து விட்டன.*

*பல அறிவிப்புகள், தனது கேடயத்தை யூதன் ஒருவன் தட்டி விட்டதன் காரணமாக அலீ, கோட்டையின் கதவொன் றனைக் கேடயமாக ஏந்திப் போராடியதாகக் கூறுகின்றன. இவை ஆதாரங்களில்லாத கூற்றுகள். இவற்றை மறுத்துரைப் பது, அலீயின் பலத்தையும் வீரத்தையும் மறுத்துரைப்பதாகாது. கைபர் நிகழ்வுகளை ஐயங்களேதும் இன்றி உறுதி செய்யும் ஏராளமான வேறு அறிவிப்புகள் காணப்படுகின்றன.*

*நாயிம் முற்றுகை பத்து நாட்களாக நீடித்தது. அதன் பின்னர் முஸ்லிம்கள் அல்-நதா பிரதேசத்தில் ஸஅப் இப்ன்*

மஆஸ் அரண் நோக்கிச் சென்றார்கள். போதியளவு உணவு தானியங்கள் உட்பட ஏனைய வசதிகளுடன் அங்கு ஐந்நூறு யூத போராளிகள் இருந்தனர். இதன் முற்றுகையின் போது கொடியைத் தாங்கிச் சென்றவர், அல்-ஹுப்பாப் இப்ன் அல்-முன்திர். அவர் மிகத் திறமையாக யூதர்களை எதிர்த்துப் போராடினார். மூன்று நாட்கள் நீடித்தது, போராட்டம். பின்னர் முஸ்லிம்கள், கல்அத் அல்-ஸுபைர் கோட்டையைக் கைப்பற்றினர். இது தான் அல்-நதாவின் இறுதி அரண். நாயிம், அல்-ஸஅப் உட்பட, முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்ட ஏனைய பிரதேசங்களில் இருந்தும் தப்பி வந்த யூதர்கள் தஞ்சம் புகுந்து ஒன்று கூடியிருந்தது கல்அத் அல்-ஸுபைரிலாகும். மிக்க பலம் வாய்ந்த, இலகுவில் ஊடுருவ முடியாத ஓர் அரணாக இது விளங்கியது. தமக்கான தண்ணீர் வசதியை முஸ்லிம்கள் துண்டித்து விட்டதால் கீழிறங்கி வந்து யுத்தம் புரிய வேண்டிய நிலைக்கு உள்ளாகினர் யூதர்கள். அவர்களுள் பத்துப் பேர் மரணத்துக்குள்ளாயினர். மூன்று தினங்களாகத் தொடர்ந்த முற்றுகையின் பின்னர் இந்த அரண் கைப்பற்றப் பட்டது. யூதர்களுள் மிக்க பலம் வாய்ந்தவர்களாக இருந்தவர்கள் நதாவின் மக்கள். பின்னர் முஸ்லிம்கள் அல்-ரஜீஇலிருந்து அல்-மன்ஸிலா நோக்கிச் சென்றனர்.

நதாவின் மக்களை வெற்றி கொண்டு, அவர்களது உணவுத் தானியங்கள் உட்பட ஏனைய பொருட்களைப் பெற்றுக் கொண்டமை காரணமாக முஸ்லிம்களின் நிலைமை மேலும் பலம் வாய்ந்தததாக அமைந்தமையில் ஐயங்கள் இல்லை. நதாவின் வீழ்ச்சி கைபரின் ஏனைய யூதர்கள் அனைவரையும் கலக்கத்துக்குள்ளாக்கியது.

தொடர்ந்து, அல்-ஷிக்க்கைக் கைப்பற்றவெனச் சென்றனர் முஸ்லிம்கள். இப்பிரதேசம் அபீ, நஸார் உட்படப் பல கோட்டைகளைக் கொண்டிருந்தது. அபீயை முற்றுகை இடுவதுடன் தொடங்கினர் முஸ்லிம்கள். இந்த அரணின் முன்னால் நிகழ்ந்த தனியார் மோதல்களில் சில யூதர்கள் கொல்லப்பட்டனர். கோட்டையின் உள்ளே நுழைந்த முஸ்லிம்கள், உணவுப் பண்டங்களையும் ஏனைய பொருட்களையும் கைப்பற்றிக்

*கொண்டனர். தப்பிச் சென்ற சில யூத போராளிகள் அல்-நஸார் கோட்டையுள் புகுந்து, அங்கிருந்து, ஈட்டிகள், கற்கள் கொண்டு முஸ்லிம்களைத் தாக்கலாயினர். என்றாலும் முஸ் லிம் முற்றுகையை அவர்களால் சமாளிக்க இயலவில்லை. நஸாரும் வீழ்ந்தது. அல்-ஷிக்கின் ஏனைய மக்கள் தமது அரண் களை விட்டும் தப்பியவர்களாய் கைபரின் தென் மேற்குப் புறமாயிருந்த அல்-கதீபா பிரதேசத்தை அடைந்து, அல்-காமூஸ் (அல்லது அல்-மனீ) கோட்டைக்குள் தம்மைப் பாது காப்பாக இருத்திக் கொண்டனர். தோல்விக்குள்ளான மேலும் பலர், அல்-வதீ, அல்-ஸலாலிம் கோட்டைகளுள் தஞ்சம் கோரினர். இங்கு முஸ்லிம்களின் முற்றுகை 14 நாட்கள் நீடித் தது. போராட்டங்கள் ஏதும் இல்லாமலேயே யூதர்கள் சமா தானத்தை நாடினர். அல்-நஸார் தான் சிறிதளவாவது எதிர்த்து நின்ற இறுதிக் கோட்டையாக இருந்தது. அத்துடன் யூத எதிர்ப்பு முறிந்து போனது. அதன் பின்னர் அவர்கள் ஏதேனும் ஓர் அரணுக்குள் புகுந்து கொள்வதும், முஸ்லிம்கள் முற்று கையிடுவதும், யூதர்கள் சமாதானத்துக்கு இணங்கி வருவது மாக இருந்தது.*

*ஸஅப், அல்-ஸுபைர் ஆகிய அரண்களும், அல்-ஷிக்க், அல்-காதிபா பிரதேசங்களும் கைப்பற்றப்பட்ட விவரணங்கள் அல்-வாகிதீயிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன. இப்பிர தேசங்கள் கைப்பற்றப்பட்டமை குறித்த தெளிவான விவரங் கள் அவரிடமிருந்து மட்டுமே கிடைக்கின்றன. ஹதீஸ் வல் லுனர்களின் கருத்தில் பலவீனமானவராகக் கருதப்பட்டாலும் கூட, அளவிலா விவரங்களைத் தம்மிடம் கொண்ட ஒரு வரலாற்று ஆசிரியர் (அக்பாரீ) இவர். இவரது அறிவிப்புகள் அனுமதிக்கப்படக் கூடியன.*

*கைபரின் பாதுகாப்பு அரண்கள் அமைந்திருந்த தலங்கள் குறித்து இப்ன் இஸ்ஹாக் தரும் விவரங்கள் தெளிவில்லாதன வாகவும், கைபர் வெற்றி பற்றிய அவரது விவரணங்கள் குழறு படிகள் உடையனவாகவும் அமைந்துள்ளன.*

*ஆதாரபூர்வமான ஓர் அறிவிப்பு, நபிகள் (ஸல்) அவர்கள் கைபரின் மக்களை எதிர்த்துப் போராடி, அவர்களது நிலங்*

களையும், பேரீச்சம் தோட்டங்களையும் கைப்பற்றி, அவர்களைத் தமது கோட்டைகளுக்குள் புகுந்து கொள்ளச் செய்தார்கள் எனக் கூறுகின்றது. அவர்கள், தங்கம், வெள்ளி, ஆயுதங்கள், யுத்தோபகரணங்கள் அனைத்தும் நபிகளாருக்காகும் என ஏற்றுக் கொண்டதோடு, தமது விலங்குகள் சுமக்கக் கூடியன அனைத்தையும் கொண்டு கைபரிலிருந்து வெளியேறிச் சென்றுவிடவும் இணக்கம் தெரிவித்தனர். அவர்கள் எதனையும் மறைத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதும் விதியாகியிருந்தது. எதனையும் அவர்கள் ஒளித்தோ மறைத்தோ வைக்கக் கூடுமாயின் அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்பட மாட்டாது; ஒப்பந்தமும் வலுவில்லாததாகி விடும். இவ்வாறிருந்தும், அவர்கள் ஹுயை இப்ன் அக்தப்புக்கு உரிமையான கஸ்தூரியை மறைத்து வைத்தனர். பனூ அல்-நளீர் வெளியேற்றப்பட்ட வேளை தன்னுடன் அக் கஸ்தூரியைக் கொண்டு வந்திருந்த ஹுயை கைபரின் முன்னமேயே கொல்லப்பட்டிருந்தார். ஸஅயா வினவப்பட்டார்: "ஹுயை இப்ன் அக்தப்பின் கஸ்தூரி எங்கே?" அவர் கூறினார்: "அது யுத்தங்களிலும் ஏனைய செலவினங்களிலும் செலவிடப்பட்டு விட்டது." பின் முஸ்லிம்கள் கஸ்தூரியைக் கண்டு பிடிக்கவே, அபூ அல்-ஹகீக்கின் இரு புதல்வர்களும் கொல்லப்பட்டனர். அவர்களது பெண்களும், குழந்தைகளும் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

இப்ன் இஸ்ஹாக் - இஸ்னாத் ஏதும் இன்றி - இந்த செல்வத்தைப் பதுக்கியவரும் அது குறித்து வினவப்பட்டவரும் கினானா இப்ன் அல்-ரபீஇ என்பார். இப்ன் ஸஅத், அது கினானாவும், அவரது சகோதரர் ரபீஇயும் என்பார். இப்ன் ஸஅத்தின் இஸ்னாத், முஹம்மத் இப்ன் அப்த் அல்-ரஹ்மான் இப்ன் அபூ லைலாவையும் உள்ளடக்கியிருக்கின்றது. அவர் 'ஸதூக்'. என்றாலும் அவர் மறதி மிக்கவர்.

அல்-காமூஸ் கோட்டையின் யூதர்கள், நபிகளாருடன் சமாதானத்தை வேண்டி , பின்னர் ஒப்பந்தத்தை முறித்து நடக்கவே, அவர்களது செல்வங்களை நபிகளார் கைப்பற்றிக் கொண்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

*அல்-நதா, அல்-ஷிக்க், அல்-காமூஸ் ஆகியன வீழ்ச்சி யுற்றதன் பின்னர், தாம் இனியும் எதிர்த்து நிற்பது பயனளியாது எனக் கண்ட அல்-வதீ, அல்-ஸலாலிம் அரண்களின் யூதர்கள் தம்மை உயிருடன் விட்டுவிடும் படி நபிகளாரை வேண்டினர். அன்னார் அதற்கு இணங்கினர்.*

*கைபரின் ஏனைய பிரதேசங்கள் முஸ்லிம்கள் வசமாகின. கைபரின் வடபுறமிருந்த பிதக்கின் மக்கள் உடனடியாகவே சமாதானத்தை வேண்டினார்கள். தமது செல்வங்களைக் கைவிட்டுத் தாம் அங்கிருந்து சென்றுவிட அவர்கள் அனுமதி வேண்டி நிற்க, நபிகளார் அதற்கு இணக்கம் தெரிவித்தார்கள். பிதக் நபிகளாருக்கு மட்டுமாக அமைந்தது. ஏனெனில் அதன் மீது அண்ணலார் படையெடுப்பு எதனையும் மேற்கொண் டிருக்கவில்லை. அதன் பின்னர், முஸ்லிம்கள் கைபருக்கும், தைமாவுக்கும் இடையில் சில நாட்கள் பிரயாணத்தின் பின் அடைந்து கொள்ளக் கூடிய வாதி அல்-குரா எனும் கிராமங் களின் கூட்டு ஒன்றனைக் கைப்பற்றிக் கொண்டனர். அங் கிருந்த கிராமங்கள் சரணடையவே, முஸ்லிம்களுக்கு ஏராள மான யுத்தப் பொருட்கள் கிடைத்தன. என்றாலும், நிலங்களை யும், பேரீச்சந் தோட்டங்களையும் அவர்கள் யூதர்களிடமே விட்டுவிட்டனர். கைபர் வாசிகளைப் போலவே இவர்களும் நடாத்தப்பட்டனர். தைமாவும், கைபர், வாதி அல்-குரா வாசி களைப் போலவே சமாதான ஒப்பந்தம் ஒன்றனைச் செய்து கொண்டனர்.*

*இவ்வாறாக, யூத கோட்டை கொத்தளங்கள் யாவும் முஸ் லிம்கள் வசமாகின. அல்-வதீ, அல்-ஸலாலிம், பிதக் யூதர்கள் சமாதானம் வேண்டி நின்றமை பற்றிய அறிவிப்பை, இப்ன் இஸ்ஹாக், ஒரு முன்கத்இ இஸ்னாத் மூலம் அறிவிப்பார். இது இஸ்லாமிய நியாயவியல் விவகாரங்களுக்கு ஏற்புடைத்ததல்ல தாயினும், வரலாற்று விவரணங்களுக்கு ஏற்புடைத்தாகும். இதனை அறிவிக்கும் அப்த் அல்லாஹ் இப்ன் அபூபக்ர் இப்ன் அம்ர் இப்ன் ஹஸ்ம், மகாஸீ விவகாரங்கள் அறிவிப்புச் செய்வதில் பிரசித்தம் பெற்றவர்.*

கைபர் போராட்டத்தில் கொல்லப்பட்ட யூதர்கள் 93 பேர். அவர்களது பெண்களும் குழந்தைகளும் சிறைப்பிடிக்கப்பட்டனர். சிறைப்பிடிக்கப்பட்டவர்களுள் ஒருவர், ஸபிய்யா பின்த் ஹுயை இப்ன் அக்தப். நபிகள் (ஸல்) அவர்கள் அவரை விடுவித்து மணந்து கொண்டார்கள்.

இப்ன் இஸ்ஹாக்கின் படி 20 முஸ்லிம்கள் வீர மரணம் எய்தினர். அல்-வாகிதீ பதினைந்து பேர் எனக் கூறுவார். கொல்லப்பட்ட முஸ்லிம்கள் வெளிப் பிரதேசத்தில் நேருக்கு நேரான போராட்டத்தில் உயிரிழந்திருந்தனர். நன்கு பாதுகாக்கப்பட்ட அரண்களின் உள்ளிருந்து போராடிய யூதர்களுள் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கையின் பெருக்கமானது இறைவன் யூதர்களைக் கைவிட்டு விட்டமைக்கு ஓர் அடையாளமாக விளங்கியது. ஸஹீஹ் ஆன ஓர் அறிவிப்பின் படி, யூதப் பெண்ணொருத்தி, தீயில் தெறல் செய்த ஒரு செம்மறியாட்டினை நஞ்சூட்டி நபிகளாருக்கு அளித்தாள். நபிகளார் செம்மறியின் தோள் பகுதியையே விரும்பி உண்பார்கள் என அறிந்திருந்த அவள், அப்பகுதியிலேயே அதிகளவு நஞ்சை ஊட்டியிருந்தாள். தோள் பகுதியில் வாய் வைத்த வேளை அது நஞ்சூட்டப்படிருந்தமையை உணர்ந்து கொண்ட நபிகளார் உடன் அதனைத் துப்பி விட்டார்கள். தான் இழைத்த குற்றத்தை ஒப்புக் கொண்ட அவளை அன்னார் தண்டிக்காது விட்டு விட்டார்கள். என்றாலும் பின்னர் நஞ்சூட்டப்பட்ட உணவை உட்கொண்டதன் காரணமாக பிஷ்ர் இப்ன் மஃரூர் மரணத்துக்குள்ளாகவே பிரதியாக அவள் கொல்லப்பட்டாள்.

முஸ்லிம்கள் கைபரைக் கைப்பற்றிக் கொள்ளத் துணை பயந்தது, குறைஷியருடன் ஹுதைபியாவில் செய்து கொண்ட ஒப்பந்தமாகும். அதன் மூலம், யூதர்களுக்குச் சார்பாகக் குறைஷியர் போராட இயலாத நிலையில் முஸ்லிம்கள் யூதர்களை எதிர்த்துப் போராட முடிந்தது. கதபான் கோத்திரங்களைச் சார்ந்தோர், தமது சொந்த இல்லங்களை இழந்து விட வேண்டி வரும் என்ற அச்சத்தின் காரணமாகக் கைபர் யூதர்களுடனான தமது நேச உறவைத் துண்டித்துக் கொண்டார்கள். கைபரின் யூதர்கள் மீது முஸ்லிம்கள் கண்ட வெற்றி பற்றிய செய்திகள்

கிட்டிய வேளை, குறைஷியர் திகிலும், சினமும் கொண்டார் கள். முஸ்லிம்கள் ஈட்டிய வெற்றி எதிர்பார்த்திராத ஒன்று. ஊடுருவ முடியாதனவாக இருந்தவை கைபர் யூதர்களது அரண்களும், கோட்டை கொத்தளங்களும். அவர்களது போராளிகள் தொகையும், ஆயுத பலமும் அளப்பரியன. இவை யனைத்தும் நன்கு அறியப்பட்டிருந்த விஷயங்கள். ஏனைய அரபுக் கோத்திரங்கள் மீதும் கைபர் வெற்றி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வைத்தது. திகிலுக்கும், அச்சத்துக்கும் உள்ளான அக்கோத்திரங்கள் தமது பகைமையுணர்வைக் கைவிட்டு உடன்பாடுகள் காண முன்வந்தன. இஸ்லாத்தின் பரம்பலுக் குப் புது வாய்ப்புகள் கிட்டலாகின.

கைபரின் யூதர்கள் நபிகள் (ஸல்) அவர்களது காலத்தில் வெளியேற்றப்படவில்லை. கைபரில் தொடர்ந்து தங்கியிருக் கவும், தமது சொந்த செலவில் தொடர்ந்தும் விவசாய நடவடிக் கைகளில் ஈடுபடவும் அனுமதிக்கப் பெற்றனர் யூதர்கள். அறு வடையில் பாதி முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட வேண் டும் என ஒப்பந்தம் ஆகியது. முஸ்லிம்கள் தீர்மானித்திருந்தால் அவர் களை முற்றாக வெளியேற்றியிருக்கலாம் என்ற நிலையில் அளிக்கப்பட்டிருந்த ஒரு சலுகை இது. யூதர்களே இத்தகைய தொரு பிரேரணையை முன் வைத்தவர்கள்: “உங்களை விட நாம் இந்த நிலத்தை நன்கு அறிவோம்.” நபிகளார், யூதர்களை வெளியேற்றும் எண்ணம் கொண்டிருந்தும் இத்தகு பிரேர ணையை ஏற்று இணக்கம் தெரிவித்தார்கள்.

கைபர் முழுவதும் பலத்தினாலேயே கைப்பற்றப்பட்ட மைக்கு, நபிகளார், யூதர்களை வெளியேற்ற முடிவு செய் திருந்தமை ஓர் அடையாளமாகும். ஏனெனில் அன்னாருடன் சமாதான ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருந்தவர்கள், தாங்கள் கொல்லப்படாமல், தம் பிரதேசங்களிலிருந்து வெளி யேறிச் சென்றுவிடும் அனுமதியின் பேரிலேயே ஒப்பந்தங்கள் மேற்கொண்டிருந்தனர்.

யூதர்கள் கைபரிலேயே வாழ்ந்து வரலாயினர். அறுவடை யை மதிப்பீடு செய்து, முஸ்லிம்களுக்கான பங்கினைப் பெற்று

வரத் தமது சார்பாக ஒருவரை அனுப்பினர் நபிகளார். ஒரு சந் தர்ப்பத்தில் அப்த்-அல்லாஹ் இப்ன் ரவாஹா அனுப்பப்பட் டார். அவர் அறுவடையின் பாதியை இருபதினாயிரம் ஒட்டகச் சுமை (விஸ்க்) பேரீச்சம் பழங்கள் என மதிப்பிட்டார். இரு பங்குகளில் விரும்பியதை எடுத்துக் கொள்ள யூதர்களை அனுமதித்தார் இப்ன் ரவாஹா. அன்னாரின் நேர்மையை மெச்சிய யூதர்கள் கூறினார்கள்: “இது நியாயம். அதன் மீதே வானங்களும் பூமியும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. நீர் கூறியவாறே நாம் அதனை ஏற்றுக் கொள்கின்றோம்.”

என்றாலும் மற்றொரு ஆதாரபூர்வமான அறிவிப்பு, மதிப் பிடப்பட்ட அறுவடை 40,000 ஒட்டகச் சுமையளவு என்றும், அவர்கள் மதிப்பீட்டை ஏற்று, 20,000 ஒட்டகச் சுமையளவு செலுத்த வேண்டியிருந்தது என்றும் கூறுகின்றது. இரண்டு அறிவிப்புகளையும் நாம் சமனப்படுத்துவதாயின், நாற்பது என்பது யூத-முஸ்லிம் இரு சாராரதும் பங்குகள் என்றும் இருபது என்பது இரு சாராரில்ஒருவரது பங்கு எனவும் கொள்ளலாம்.

## கைபர் கைப்பற்றப்பட்டமையின் விளைவுகள்

கைபர் கைப்பற்றப்பட்டமை மூலம் முஸ்லிம்களுக்கு ஏராளமான நன்மைகள் கிட்டின. அவர்களது பொருளாதார நிலைமை ஸ்திரம் பெற்றது; தொடர்ச்சியாகக் கிட்டக் கூடிய வருமானங்களை அது உறுதி செய்தது. கைபர் வெற்றி குறித் துப் பேசும் போது ஆயிஷா கூறினார்: “ கைபர் கைப்பற்றப் பட்டது வரை நாம் வயிறார உண்டதில்லை.”

இந்த விவரணங்கள், கைபர் கைப்பற்றப்படும் முன்னரான முஸ்லிம்களின் பொருளாதார நிலைமையையும், அவர்களது பொருளாதார நிலைமையை உறுதி செய்வதில் கைபர் வெற்றி அளித்த பங்களிப்பையும் தெளிவு படுத்துகின்றன. முஸ்லிம் களது கைபரின் முன்னான நெருக்கடியான நிலைமைகளின் பின்னணியிலும் கூட, யூதர்களிடமிருந்து கிட்டக்கூடிய யுத்தப் பொருட்களிலும் பார்க்க, அவர்கள் முஸ்லிம்களாக மாறு வதனையே நபிகள் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தார்கள்.

இதனையே அலீ (ரலி)க்கான அன்னாரது அறிவுறுத்தல் உணர்த்துகின்றது. மேலும் அன்னார் யூதர்களை அழிக்கவோ, வெளியேற்றிவிடவோ விரும்பவில்லை. எனவே தான் அன்னார், காமூஸ், அல்-வதீ, அல்-ஸலாலிம் யூதர்கள் பிரேரித்த சமாதான ஏற்பாடுகளை ஏற்றுக் கொண்டார்கள். ஒப்பந்தத்தின் பின்னால் - கைபரிலிருந்து தாம் வெளியேற்றப்பட யூதர்கள் இணங்கியிருந்த நிலையிலும் கூட - அவர்களின் வேண்டுதலின் பேரில் அவர்கள் கைபரிலேயே தொடர்ந்து இருந்து வர அனுமதித்தமை அன்னாரின் பொறுமையையும், நீதியுணர்வையும் காட்டுகின்றது. இந்த நடவடிக்கை இஸ்லாமிய அரசின் பொருளாதார, இராணுவ நலன்களுக்குப் பெரும் சாதகங்களை விளைத்தது. இதன் மூலம், முஸ்லிம்களின் இராணுவ பலம், அராபிய தீபகற்பம் முழுவதையும் இஸ்லாத்தின் பாலாக்கிக் கொள்ளும் தொடர்ச்சியான முனைவுகளில் பிரயோகம் செய்யப்பட முடிந்தது. முஸ்லிம்கள் விவசாயத்தின் பால் திரும்ப வேண்டி இருக்கவில்லை. அது, நிலத்தைப் பண்படுத்தி, பயிர்களைப் பராமரிக்கும் தொடர்ச்சியான உழைப்பில் அவர்களது நேரத்தையும், சக்தியையும் பிரயோகிக்கச் செய்திருக்கும். அத்துடன் யூத விவசாயிகளது விவசாய அறிவும், அனுபவமும் காரணமாக விவசாய உற்பத்திகளின் ஒழுங்கான வளர்ச்சி உறுதிப்படுத்தப்படுவதன் மூலம் கிட்டும் பயன்களையும் முஸ்லிம்கள் ஈட்டிக் கொள்ள முடிந்தது. முஸ்லிம்களுக்கு அறுவடைகளின் மூலமான பெரும் பங்கு கிட்டியது. அதனால் அரசு, இராணுவத் தேவைகளையும், ஏனைய செலவினங்களையும் இலகுவாகப் பராமரித்துக் கொள்ள இயலுமாயது.

ஒவ்வொரு மனிதரும் தனக்குத் தேவையான அளவு உணவுத் தானியங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஏனைய முஸ்லிம்களுடன் அவற்றைப் பங்கிட்டுக் கொள்ளவோ, அதன் ஐந்தில் ஒரு பங்கை (கும்ஸ்) அரசுக்குச் செலுத்தவோ வேண்டியிருக்கவில்லை. ஏனெனில் கிட்டியன மிகக் குறைந்த அளவே. இது அல்-வாகிதீயின் அறிவிப்புக்கு முரண்பட்டதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் பெரும் செல்வங்களை

ஈட்டிக் கொண்டதாகவும், அவை கொண்டு தம்மையும் தமது விலங்குகளையும் ஒரு மாத காலம் அல்லதுஅதற்குக் கூடவும் அவர்கள் பராமரிக்க முடிந்தது எனவும் கூறுவார் அவர்.

கைபர் யுத்தப் பொருட்களின் பங்கீடு

கைபரிலிருந்து கிட்டிய யுத்தப் பொருட்கள் அனைத் தும் ஹுதைபியாவில் பங்கு கொண்ட முஸ்லிம்களுக்கு மட்டுமே ஆனவை என்றும், வேறு யாருக்கும் அவற்றில் பங்கு இல்லை என்றும் குர்ஆன் தெளிவுறுத்தியது:

போரில் கிடைத்த பொருட்களுக்காக, அவற்றை எடுப் பதற்கு நீங்கள் செல்லும் போது, "உங்களை நாங்களும் பின் தொடர்ந்து வர, எங்களையும் (அனுமதித்து) விடுங்கள்" என்று (போருக்கு வராமல்) பின் தங்கிவிட்டவர்கள் கூறுகின்றனர். அல்லாஹ்வுடைய வாக்கை மாற்றிவிடலாமென அவர்கள் நாடுகின்றனர். "எங்களை நீங்கள் பின் தொடர்ந்து வரவே கூடாது. இவ்வாறு (இதற்கு) முன்னரே அல்லாஹ் கூறிவிட் டான்" என்று (நபியே) நீர் கூறுவீராக. "அவ்வாறல்ல, எங்கள் மீது நீங்கள் பொறாமை கொள்கிறீர்கள்" என்று அவர்கள் கூறுவார்கள்; எனினும் (மார்க்க விஷயத்தில்) சொற்பமானது தவிர (பெரும்பாலானவற்றை) அவர்கள் விளங்கிக் கொள்ளாத வர்களாகவே இருக்கின்றனர். (48:15)

நபிகள் (ஸல்) அவர்கள், கைபரின் நிலங்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்தார்கள். ஒரு பகுதி இடர்கள் ஏற்படக் கூடிய அவசர, அல்லது அனர்த்த நிலையில் பயன்படுத்தவென சேகரித்து வைக்கவும், மதீனாவை நோக்கி வரக்கூடிய தூதுக் குழுவினர்களை உபசரிக்கவும் என ஒதுக்கப்பட்டது. மற்றப் பகுதி, அல்-ஹுதைபியாவில் பங்கு பெற்ற முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்டது. மொத்தப் பங்குகள் முப்பத்தாறு. இதில் பதினெட்டு ஹுதைபியாவில் பங்கு பெற்றவர்களுக்காகப் பங்கிடப்பட்டது. படையினரில் மொத்தம் 1500 பேர் இருந் தனர். அவர்களுள் 300 பேர் குதிரை வீரர்கள். குதிரை வீரர் இரண்டு பங்குகளும், சிப்பாய் ஒருவர் ஒரு பங்கும் அளிக்கப் பெற்றனர்.

*அல்-ஹுதைபியாவில் பங்கு பற்றியிருந்தும், கைபரில் பங்கு பெறாது விட்டவர் ஒருவர் மட்டுமே. அவர், ஜாபிர் இப்ன் அப்த்-அல்லாஹ். யுத்தத்தில் பங்கு பெறாதிருந்தும் அவர் ஒரு பங்கு அளிக்கப் பெற்றார். எவ்வாறாயினும் இது இஸ்னாத் ஏதும் இன்றி இப்ன்-இஸ்ஹாக் செய்த பலவீன மானதோர் அறிவிப்பாகும்.*

*நபிகள் (ஸல்) அவர்கள், கைபரின் யுத்தப் பொருட்களில் ஒரு பகுதியைக் 'கப்பலின் மக்கள்' (அஹ்ல் அல்- ஸபீனா) என வழங்கப் பெற்றவர்களுக்கு அளித்தமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அபிஸீனியாவுக்குப் புலம் பெயர்ந்து சென் றிருந்த அவர்கள், மதீனாவுக்குத் திரும்பி வந்து, கைபர் கைப் பற்றப்பட்ட பின்னர் கைபரை வந்து சேர்ந்திருந்தார்கள். ஜஅபர் இப்ன் அபூ-தாலிப் (ரலி) அவர்களது தலைமையில் அவர்கள் 52 அல்லது 53 பேர் இருந்தார்கள். அவர்கள் மட்டுமே யுத்தத்தில் பங்கு பெறாமல், யுத்தப் பொருட்களில் ஒரு பங்கினைப் பெற்றுக் கொண்டோர்.*

*இவர்களது விவகாரத்தில் ஒரு விதிவிலக்குக் கடைப் பிடிக்கப்பட்டிருக்கக் கூடும். ஏனெனில் அவர்கள் ஹுதைபி யாவில் பங்கு பெறாமல் விட்டமைக்குத் தக்க காரணம் இருந்தது. இல்லாது விடின் அவர்கள் நிச்சயமாக அதில் பங்கு பெற்றிருப்பார்கள். யுத்தப் பொருட்களின் உடமையாளர் களிடமிருந்து, அவர்களது பொருட்களில் சிலவற்றைக் கொடுக்கும் படி நபிகளார் வேண்டியிருக்கலாம். இவ்வாறே அபூ ஹுரைராவும், தவ்ஸி கோத்திரத்தார் சிலரும், யுத்தத்தில் பங்கு பெறாது விட்ட போதிலும், நபிகளார் வேண்டிக் கொண்டதற்கிணங்க, அவற்றுக்கு உரிமையாளர்களாயிருந் தோரின் அனுமதியுடன் யுத்தப் பொருட்களில் பங்குகள் அளிக்கப் பெற்றனர்.*

## *முஜாஹிதூனின் முன்மாதிரிகள்*

*கைபர் கைப்பற்றப்பட்ட யுத்தத்தின் போது நாடோடி அறபியொருவர் பங்கு பற்றியமை குறித்த அறிவிப்பு ஸஹீஹ் எனக் கொள்ளப் போதிய காரணங்கள் இருக்கின்றன. யுத்தம்*

*நடந்து வந்த வேளை, நபிகள் (ஸல்) அவர்கள், அந்த நாடோடி அறபிக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டுமெனத் தீர்மானித் திருந்தனர். எவ்வாறாயினும் யுத்தப் பொருட்கள் பங்கீடு செய்யப்பட்ட வேளை அவர் பிரசன்னமாக இருக்கவில்லை. பின்னர் வந்த வேளை ஒரு பங்கு கொடுக்கப் பெற்ற அவர் அதனை எடுத்துக் கொண்டு நபிகளாரிடம் சென்று "நான் உம்மைப் பின் தொடர்ந்து வந்தது இதற்காகவல்ல; இங்கே குத்தப்பட்டு சுவனம் எய்தலாம் என்றுதான் நான் வந்தேன்" எனத் தனது கழுத்தைச் சுட்டிக் காட்டினார். நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீர் கூறுவன உண்மையாயின் அல் லாஹ் நீர் நாடுவதைத் தருவான்." காலம் சில கழிய அவர்கள் எதிரிகளை எதிர்த்துப் போராடவென முன் சென்றார்கள். அந்த நாடோடி அறபி நபிகளாரிடம் தூக்கி வரப்பட்டார் - கழுத்தில் அம்பொன்றால் குத்தப்பட்டு இறந்து போனவராக. நபிகள் (ஸல்) அவர்கள், தமது சொந்த மேலாடையால் அவ ரைப் போர்த்தி, ஜனாஸா தொழுகை நடாத்தி அவருக்காகப் பிரார்த்தித்தார்கள்: "யா அல்லாஹ்! இவர் உன்னுடைய அடிமை. உனக்காகவே அவர் புலம் பெயர்ந்து வந்து வீர மர ணத்தை எய்தியுள்ளார். இதற்கு நான் சாட்சியாக இருக் கின்றேன்."*

*இந்த அறிவிப்பு, நாடோடியான ஓர் அறபியின் உள்ளத் தில் கூட, விசுவாசம் எத்தகையதொரு தாக்கத்தை ஏற்படுத்தி வைக்கலாம் என்பதற்குத் தக்கதொரு சான்று. ஜாஹிலிய்யக் காலத்தில் கொள்ளையடித்தலையும், சூறையாடுதலையும் வாழ்வின் சர்வ சாதாரண நடவடிக்கைகளாகக் கொண்ட ஒருவர், தனது ஜிஹாதுக்கு சுவனம் தவிர வேறு எதனையும் ஏற்கத் தயாராயில்லாத நிலை எப்படி ஏற்படலாம்? அவ்வாறா யின் நபிகளாரது முக்கியமான தோழர்களது உள்ளங்களில் விசுவாசம் எத்தகையதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்? நிலங்கள், செல்வங்கள் மீதான வேட்கையினால் தான் அவர்கள் யூதர்களின் பிரதேசங்களைக் கைப்பற்றினார் கள் எனக் கூறலாமா? யூதர்களை வெளியேற்றுவதற்குக் காரணமாயமைந்தது, அவர்களது மத வெறி என யாரும்*

*கொள்ளலாமா? போராட்டத்தின் முன்னர் அவர்கள் யூதர் களை இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள்; முற்றுகையின் பின்னர் அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தார் கள்; யூதர்கள் சரணடைந்த பின்னர் அவர்கள் தொடர்ந்தும் கைபரிலேயே வாழ்ந்து வர அனுமதித்தார்கள்.*

*உமர் (ரலி) அவர்களின் கிலாபா வரையும் தொடர்ந்து கைபரில் வாழ்ந்து வந்த யூதர்கள், வெறுப்பும் பகைமையும் பூணத் தொடங்கி முஸ்லிம்களுக்குத் துரோகம் இழைக்கலா னார்கள். முஸ்லிம்களில் ஒருவரைக் கொன்று போட்ட அவர் கள், கைபரில் தனது வாசஸ்தலத்தில் உறங்கிக் கொண்டிருந்த அப்த்-அல்லாஹ் இப்ன் உமரின் கைகளையும் கால்களையும் வெட்டி விட்டார்கள். உமர், யூதர்களைக் கைபரிலிருந்து முற்றாக வெளியேற்றி விட்டார். பேரீத்தம் பழங்களுக்கான அவர் களது கொடுப்பனவை, உமர் (ரலி), பணம், ஒட்டகைகள், கயிறுகள், சேணங்கள் ஆகக் கொடுத்தனுப்பினார்.*


*இவ்வாறாக ஹிஜாஸில் யூதர்களின் இராணுவ, பொருளா தார மேலாண்மை முற்றுப் பெற்றது. முஸ்லிம்கள், விசுவாசம் கொண்டில்லாத நாடோடி அராபியரை நேர்வழி செலுத் தவும், அரேபியத் தீபகற்பம் முழுமையையும் இஸ்லாத்தின் பாலாக்கவும் தமது காலங்களைச் செலவழிக்க முடிந்தது.*

இறைதூதர் காலத்து மதீன சமூகம், ஆரம்ப முஸ்லிம் சமூக வாழ்வின் மிக முக்கியமான அம்சங்களை வெளிக்கொண்டு வருகின்றது. கலாநிதி அக்ரம்-ளியா-அல்-உமரீ, ஸுன்னா, உஸூல்-அல்-ஹதீஸ் துறைகளின் வல்லுனர்கள் வகுத்தளித்த முறைமைகளையும் நவீன வரலாற்றுத் திறனாய்வு நெறிகளையும் ஒரு சேர்த்துக் காண்பதில் கண்டுள்ள வெற்றி, இஸ்லாமிய வரலாற்றியல் முறைமை ஒன்றினை உருவாக்கம் செய்ய வழியமைத்துக் கொடுக்கின்றது. லௌகீக, ஆன்மீக இலட்சிய வாழ்வொன்றினை யாசித்து நிற்கும் முஸ்லிம் தலைமுறையினர் அவாவுகின்ற உன்னத வாழ்வமைப்பின் ஆரம்ப அத்திவாரங்களை விளங்கிக் கொள்வதில் பெரும் பயன் நல்குவது இந்த நூல்.



ஈராக்கின் மோஸூல் நகரில் 1942 ஆம் ஆண்டு பிறந்த பேராசிரியர் அக்ரம்-ளியா-அல்-உமரீ, பக்தாத் பல்கலைக்கழகத்தின் கலைமானி, முதுமானிப் பட்டங்களைப் பெற்று அங்கேயே விரிவுரையாளராகப் பணி யாற்றினார்.

1974 ஆம் ஆண்டு கெய்ரோவின் அய்ன்-ஷம்ஸ் பல்கலைக் கழக கலாநிதிப் பட்டம் பெற்ற அன்னார், மதீனாவில் இஸ் லாமியப் பல்கலைக்கழக ஸுன்னா வரலாற்றுத் துறைப் பேராசிரியராகவும், கற்கைநெறித் துறைத் தலைவராகவும் நீண்ட காலம் பதவி வகித்துள்ளார். இஸ்லாமிய வரலாறு குறித்து இருபதுக்கும் அதிகமான நூல்களை யாத்தும், பதிப்பித்தும் பெருந் தொண்டாற்றியுள்ள பேராசிரியர் உமரீ, நபிகளாரின் ஸீறா கற்கை நெறியில் கொண்டுள்ள ஆழ்ந்த புலமையும் ஆளுமையும் அறிஞர்கள் மத்தியில் பெரும் பாராட்டுதல்களை ஈட்டிக் கொண்டுள்ளன.




Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-55-5